
ஊற்றுக்களும் ஓட்டங்களும்

(மீனாட்சியம்மாள் முதல் மார்க்லிம் கார்க்கி வரை)



லெனின் மதிவானம்

ஊற்றுக்களும் ஓட்டங்களும்

மீனாட்சியம்மாள் முதல் மார்க்ஸிம் கார்க்கி வரை

லெனின் மதிவானம்

வெளியீடு
பாக்யா
பதிப்பகம்

நூல் தரவு

தலைப்பு	:	**ஊற்றுக்களும் ஒட்டங்களும்**
விடயம்	:	திறனாய்வு கட்டுரைகள்
ஆசிரியர்	:	லெனின் மதிவானம்
உரிமை	:	ஆசிரியருக்கே
வெளியீடு	:	பாக்யா பதிப்பகம் இல.10, 2வது ரோகிணி ஒழுங்கை கொழும்பு 11, இலங்கை.
அச்சாக்கம்	:	தாரணி அச்சகம், 4A, ஸ்டார் சதுக்கம், ஹற்ட்டன்.
வடிவமைப்பு	:	லங்கா பிரிண்ட்
அட்டை வடிவமைப்பு	:	திலகர்
பக்கத்தின் அளவு	:	150x210 mm
பக்கங்கள்	:	xxviii+221 (249)
சரவதேச புத்தக நியம எண்	:	978-955-1805-03-6
முதல் பதிப்பு	:	2012 ஒக்டோபர்
விலை	:	ரூ. 450/=

Bibiliography

Title	:	OOTTRUGALUM OATTANGALUM
Author	:	Lenin Mathivanam
©	:	Author
Published by	:	Bakya Pathippagam, #10, 2nd Rohini Lane, Colombo 11, Sri Lanka Email : thilagar@malliyappusanthi.com
Printed by	:	Tharani Printers, #4 A, Star Square, Hatton
Layout	:	Lanka Print
Wrapper Design	:	Thilagar
Page Size	:	150x210 mm
No of Pages	:	xxviii+221 (249)
ISBN	:	978-955-1805-03-6
First Edition	:	2012 October
Price	:	Rs.450/=

பதிப்புரை

பாக்யா பதிப்பகத்தின் ஊடாக லெனின் மதிவானம் அவர்களின் "ஊற்றுக்களும் ஓட்டங்களும்" என்ற நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இது பாக்யா பதிப்பகத்தின் நேரடி வெளியீடாக வரும் நான்காவது நூல். நேரடியாக நூல் வெளியிடுவது தவிர கலை, இலக்கிய அமைப்புகளுடன் இணைந்த வெளியீடுகளிலும் இலக்கியக் களங்களிலும் பாக்யா பதிப்பகம் பங்களிப்புச் செய்து வருகின்றது. அத்துடன் நூல்கள் வெளியீடு செய்யப்பட்ட பின்னரும் பதிப்பகங்களில் தேங்கிக் கிடக்கும் நூல்களை வாசகர்களுக்கு விநியோகிக்கும் பணியிலும் எமது பதிப்பகம் ஈடுபட்டு வருகின்றது. நூல் பதிப்பாளர்களும், எழுத்தாளர்களும் பொருளாதார ரீதியில் விழுந்து விடாமல் இருக்க எடுக்கும் முயற்சியாக இதனை மேற்கொண்டு வருகின்றோம். மறுபுறத்தில் வாசகர்களுக்கும் கணிசமான அளவில் வெளிவரும் நூல்கள் சென்று சேர வேண்டும் என்ற அடிப்படையிலும் எமது பணி தொடர்கின்றது.

லெனின் மதிவானம் அவர்களின் இந்த நூலை வெளியிட முன்வந்தமை கூட, இந்த நூல் எமது பதிப்பகத்தின் இலக்குகளுக்குத் துணை வருவதனாலாகும் என்று கூறுவது பொருந்தும். காரணம், இலக்கியத்தில் திறனாய்வை தனது துறையாகக் தெரிவு செய்து கொண்டுள்ள திரு.லெனின் மதிவானம் அவர்கள் வெறுமனே விமர்சன அல்லது திறனாய்வு உரையை மேடைப் பேச்சுக்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளாது அதனை எழுத்தில் பதிவு செய்து கட்டுரைகளாக இதழ்களிலும், தினசரிகளிலும், இணையத்தளங்களிலும் வெளியிட்டு வருகின்றார்.

ஒரு நூல் சார்ந்த தனது நுகர்வுப் பணி முடிந்ததன் பின்னர் அதனை அலுமாரிகளுக்குள் அடு(ட)க்கி வைத்துவிடாமல் இன்னும் பலரை அந்த நூலினை நுகரச் செய்யும் முயற்சியாகவும் இவரின் செயற்பாடு அமைந்து வருகிறது. திரு.லெனின் மதிவானம் அவர்களின் இந்தப் பண்பு பரந்து விரிந்ததாக அமைவது சிறப்பு. தான் சார்ந்த கோட்பாட்டின் அடிப்படையில் தான் வாசிக்கும் ஆக்கத்தைப் பற்றிய திறனாய்வு குறிப்பு ஒன்றை எழுதுவதில் அவருக்குள்ள ஆர்வமும் ஆற்றலும் அலாதியானது.

அத்தகைய அவரது பதிவுகள் தொடர்பாக வெளிக்கிளம்பும் விமர்சனங்களுக்கு காத்திரமான பதிற்குறியை தனது தொடர்ச்சியான இலக்கிய செயற்பாடுகள் மூலம் பதிவு செய்பவராகவும் லெனின் திகழ்கின்றார்.

இந்த நூலை வாசிக்கும் வாசகனை இன்னும் பல நூல்களைத் தேடி வாசிக்கச்செய்யும் அதேவேளை பல இலக்கிய ஆளுமைகளைத் தெரிந்து கொள்ளும், புரிந்து கொள்ளும் ஆர்வத்தை திரு.லெனின் மதிவானம் தூண்டி விடுகிறார் என்பது இந்த நூலின் மிகமுக்கிய சிறப்பு எனக்கொள்ளலாம். இந்த கருத்தை முன்னிறுத்தியே எமது பதிப்பகம் இந்த நூலை வெளியிட முன்வந்திருக்கிறது.

மல்லியப்பு சந்தி திலகர்
பாக்யா பதிப்பகம்

29.09.2012
www.malliyappusanthi.info

அணிந்துரை

லெனின் மதிவானம் ஈழத்து இலக்கியத்தில் திறனாய்வுத் துறையில் வெகு வேகமாக முத்திரை பதித்து வரும் ஒரு இளம் எழுத்தாளராவார். பொதுவாக ஈழத்து இலக்கியம் பற்றியும் சிறப்பாக ஈழத்து இலக்கியத்தின் ஒரு கூறான மலையக இலக்கியம் பற்றியும் திறனாய்வு செய்து வரும் இவர் அவ்வப்போது பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிய இருபது கட்டுரைகளின் தொகுப்பே ஊற்றுக்களும் ஓட்டங்களும் என்ற இந்நூலாகும்.

இவ்விருபது கட்டுரைகளில், மலையகம் குறித்து எட்டும், ஈழத்து இலக்கியம், பண்பாடு தொடர்பாக ஏழும் தென்னிந்திய இலக்கியம் சார்பான மூன்றும் சர்வதேச இலக்கியம் பற்றிய இரண்டும் அடங்குகின்றன. இக்கட்டுரைகள், நூல்கள் மற்றும் பிரபலமான எழுத்தாளர்கள், திறனாய்வாளர்கள் பற்றியதாக அமைந்துள்ளன. இலக்கியம் குறித்த ஒரு குறுக்குவெட்டுமுகத் தோற்றப்பாட்டினை இந்நூல் வெளிப்படுத்துகிறது எனக் கூறலாம். வரலாற்று நோக்கில், முற்போக்கு பிரதேச, தேசிய மற்றும் சர்வதேசிய பார்வை கொண்ட இவரது கட்டுரைகள் பல்வேறு சிறப்பம்சங்களைப் பதிவு செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

மலையக இலக்கியத்தின் தோற்றுவாயாக அமைந்துள்ள மலையக நாட்டார் இலக்கியம் பற்றி ஈடுபாடு காட்டிய ஆரம்ப கால எழுத்தாளரான திருமதி. மீனாட்சியம்மாள் நடேசையர் பற்றியும், பின்னர் ஸி.வி.வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோசப், சிவனு மனோஹரன் ஆகிய எழுத்தாளர்கள் பற்றிய அவரது கட்டுரைகள், மலையக இலக்கிய வரலாற்றை - 1930 களிலிருந்து 2010 வரைக்குமான 80 ஆண்டுகால பரப்பை சுட்டிக் காட்டுகிற ஒரு வரலாற்றுப் பார்வையாக அமைகிறது. இவ் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் பற்றிய தனது பார்வையோடு ஒட்டி பேராசிரியர் கைலாசபதி பற்றிய இவரது பார்வை மலையக இலக்கியம் பற்றிய ஒரு கூறாக எவ்வாறு பரிணாமமடைந்தது என்பதைப் பற்றி விளக்குகிறது. நந்தினி சேவியர், டொமினிக் ஜீவா போன்ற படைப்பிலக்கிய ஆளுமைகள் பற்றிய குறிப்புகளும் கைலாசபதி, சிவத்தம்பி ஆகிய இருவர் பற்றிய கட்டுரைகளும், ஈழத்து தமிழிலக்கியத்தில் இவருக்குள்ள ஈடுபாட்டினை காட்டுகிறது. ஈழத்து இலக்கிய பரப்பில் திறனாய்வு துறையில் சர்வதேசமட்டத்திற்கு புகழ் பெற்ற

பேராசிரியர்கள், கைலாசபதி மற்றும் சிவத்தம்பி பற்றிய கட்டுரைகள், தான் ஏற்றுக்கொண்ட கொள்கை நிலைப்பாட்டினை எடுத்துக் காட்டுகின்றது. லெனின் மதிவானம் ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் பிதா மகன்களாக திகழ்ந்த இவ்விரு பேராசிரியர்களைத் தன்னுடைய வழிகாட்டிகளாக ஏற்றுக்கொண்டு அவர்கள் வகுத்துக்காட்டிய முற்போக்கு பாதையில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டமை மலையக இலக்கியத்தைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தென்னிந்திய எழுத்தாளரான ஆதவன் தீட்சண்யா பற்றிய அறிமுகம் மலையக எழுத்தாளர்களோடு ஆதவன் தீட்சண்யாவின் கலந்துரையாடல் பற்றிய கட்டுரையும், மலையக இலக்கிய கர்த்தாக்கள் தென்னிந்தியாவோடு கொண்ட தொடர்பைக் காட்ட முயல்கின்றது. தகழியின் செம்மீன் பற்றிய பார்வை, மார்க்ஸிம் கார்க்கி பற்றிய கட்டுரை, சீனாவின் இளமையின் கீதம் என்ற கதை பற்றிய இம்மூன்று ஆக்கங்களும் தென்னிந்தியா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் இலக்கியப் பண்புகளைத் தொட்டுக்காட்டுகிறது. இது, மலையகத்தை ஈழத்து இலக்கியத்தோடு தொட்டு ஒரு சர்வதேசப் பார்வையை வாசகர் முன் கொண்டு வந்து நிறுத்துவதைப் பார்க்க முடிகிறது. மலையகத்துக்குப் புறம்பாக இவருடைய சர்வதேச, தேசியப் பார்வையானது முற்போக்கு என்று வகைப்படுத்தப்படுகிற பார்வைக்குள் அடங்குகிறது.

1960களில் உடைப்பெடுத்த மலையக இலக்கியப் பிரவாகம், 1980களில் சற்றே தேங்கி நின்று 1990களில் மீண்டும் பொங்கிப் பிரவகித்த வேளையில் முகிழ்த்தெழுந்தவர் லெனின் மதிவானம். 1990 களின் ஆரம்பத்தில் இலக்கியத் துறையில் காலடி எடுத்து வைத்த இவர் மலையகத் திறனாய்வுத் துறையில் தன்னுடைய திறமையை வெளிக்காட்டும் வகையில் அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினர் நடாத்திய கட்டுரை போட்டியிலே "ஈழத்து தமிழ் இலக்கிய பரப்பில் மலையக இலக்கியம்" என்ற கட்டுரைக்கு 2000ம் ஆண்டில் 2ம் பரிசினை பெற்றவராவார்.

இப்பரிசுக்கட்டுரையைத் தொடர்ந்து, இவர் பல்வேறு கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி உள்ளார். இவ்வாறு வெளிவந்த தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளில் சிலவே இந்நூலில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. இவர் திறனாய்வுத்துறையில் தடம் பதித்து பல்வேறு வகைப்பட்ட நூல்களைத் திறனாய்வு செய்து வரும் சிறப்பான

பேச்சாளராவார். பொதுவாக ஈழத்து இலக்கியத்திற்கும், குறிப்பாக மலையக இலக்கியத்திற்கும், இவரது திறனாய்வுத் துறைசார் பங்களிப்பு பெருமைக்குரிய விடயமாகும். இவரது திறன், ஈடுபாடு காரணமாக, அமரர் இர.சிவலிங்கம் 8வது நினைவுப்பேருரை நிகழ்த்துமாறு இவருக்கு சிவலிங்கம் ஞாபகார்த்த குழு அழைப்பு விடுத்து, அவரை உரிய முறையில் கௌரவித்தது.

மலையக இலக்கியத் திறனாய்வுத் துறையில் ஈடுபட்டோர் பட்டியல் நீண்டது. ஆனால் அதில் நிலைத்து நின்றவர்கள் மிகச் சிலரே. இவர்களில் நண்பர்கள் பீ.மரியதாஸ், மு.நித்தியானந்தன், எல்.சாந்திகுமார் போன்றவர்கள் குறிப்பிடக்கூடிய சிலராவர். எனினும், இவர்களது முழுமையானபங்களிப்பு இலக்கியத்திறனாய்வுத்துறைக்குக்கிடைக்காமல் போனது ஒரு துர்ப்பாக்கியமே. இந்த முற்போக்கு வழித்தோன்றல்களில் ஒருவராகவே லெனின் மதிவானத்தை என்னால் பார்க்க முடிகிறது. திறனாய்வாளர்களே ஓர் இலக்கியப் படைப்பினது சிறப்பு, பங்களிப்பு பற்றி இலக்கிய உலகிற்கு எடுத்தியம்பி அதன் அங்கீகாரத்திற்கு வழிகோலுகின்றனர். மலையக இலக்கியப் படைப்புகள் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்தியம்புகின்ற சீரிய பணியை லெனின் மதிவானம் மிகச்சிறப்பாகவும் மிகத்திறனாகவும் செய்துவருகிறார் என்பதற்கு இந்த நூலும், இந்த நூலில் எடுத்தாளப்பட்ட மலையக எழுத்தாளர் வரிசையும் சிறந்த அத்தாட்சியாகும். மீனாட்சியம்மாள் முதல் சிவனு மனோஹரன் வரையான, இவரது வரலாற்றுப் பார்வை இப்பணியினைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது.

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற இலக்கியத் திறனாய்வாளர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு, அவர்கள் வளர்த் தெடுத்த முற்போக்கு இலக்கிய நோக்கிற்குப் புதிய பரிமாணங்களை சேர்க்க முயலுகின்ற லெனின் மதிவானம் அவர்களின் பங்களிப்பு நிச்சயம் ஈழத்து தமிழ் மற்றும் மலையக இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் ஆழமாகப் பதிவு செய்யப்படும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. எதிர்காலம் அவருக்கு இப்பணியை ஆற்றுவதற்கு வாய்ப்புகள் மற்றும் வளங்கள் மிக்கதாக அமையவேண்டுமென வாழ்த்துகிறேன்.

மலையக மக்களின் வரலாறு பல்வேறு சக்திகளால் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அதற்கேற்பவே மலையக இலக்கியபோக்கும், ஒடுக்கப்பட்டோரின் குரலாக அமைந்திருக்கின்றது. அந்தச் செல்நெறியை மேலும் வலுப்படுத்தி, அந்த

மக்களின் விடுதலைக்கான முன்னெடுப்புகளில் லெனின் மதிவானம் அவர்களின் இலக்கிய பங்களிப்பு மேலும் தொடரவேண்டும் என்பதே சமூக மற்றும் இலக்கிய ஆர்வலர்களின் எதிர்பார்க்கையாகும்.

எம்.வாமதேவன்

01/08/2012 **தலைவர்-இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு**

இல. BQ 2/2,
மெனிங்டவுன் வீடமைப்புத்திட்டம்
மங்களா வீதி,
கொழும்பு 8

முன்னுரை

இந்த நூலின் வழியாகப் பல்வேறு விடயங்கள் பற்றியதான ஆய்வறிவியற் கட்டுரைகளைத் தேர்ந்த இலக்கிய வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றார் லெனின் மதிவானம். எல்லாக் கட்டுரைகளிலும் உண்மையைத் தேடும் முயற்சியும் அறிவியல் அணுகுமுறையும் இணைந்து செயற்படுகின்ற விதம் வியப்பைத் தருகின்றது.

இலக்கியத் திறனாய்வு, இலக்கியத்தின் சமூகவியல் வாழ்க்கை மற்றும் சமூக வரலாறு நாட்டாரியல் போன்ற இன்னோரன்ன கட்டுரைகள் இந்த நூலின் முக்கியத்துவத்துக்குத் துணையாக நின்கின்றன.

இந்த நூல் இருபது கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது.

- நூல்களைப் பற்றிய திறனாய்வு
- படைப்பாளிகள் பற்றிய நினைவுக்குறிப்புகள்
- ஒரு குறிப்பிட்ட படைப்பினூடாக அந்த படைப்பாளி பற்றிய தேடலும், அறிமுகமும், ஆய்வும்
- தேடப்படாத ஆளுமைகள் பற்றிய தேடல்களும் அவர்களின் பங்களிப்புப் பண்பாட்டுக் கூறுகளின் வெளிக்கொணர்வும்.
- தன்நோக்குக் கட்டுரைகள்
- பேராசிரியர் அமரர் கைலாசபதியின் கருத்தியல் முக்கியத்துவங்கள் பற்றிய எடுத்துக்கூறல்கள்
- மலையக நாட்டார் இலக்கிய மரபு பற்றிய ஆய்வு

என்று நாம் இந்த இருபதுகளையும் வகைப்படுத்திக் கொள்ளலாம். வகைப்படுத்திக் கொள்ளல் என்பதுகூட ஒரு வசதி கருதித்தான். முதல் கட்டுரையான "மலையக நாட்டார் இலக்கியம்-மரபும் மாற்றமும்" என்பதாகும். இந்தத் தலைப்பு எனக்குப் பழைய ஒரு நினைவைத் தந்தது. பதுளை மாவட்டத்தில் உள்ள நியூபர்க் தமிழ் வித்தியாலயம் சில காலங்களின் முன் ஒரு ஆய்வரங்கம் நடத்தியது. என்னையும் அழைத்திருந்தார்கள். விழா அழைப்பிதழில் ஆய்வரங்கப் பிரிவில் முதல் அரங்கு மலையக நாட்டாரியல் ஆய்வு. ஆய்வாளர், லெனின் மதிவானம். தலைப்பு, மலையக நாட்டாரிலக்கியம் - மரபும் மாற்றமும் என்பதுவே அந்த நினைவு.

லெனின் மதிவானம் அவர்கள் எந்த ஒரு நிகழ்விலாவது உரையாற்ற ஒப்புக்கொண்டால் தனது உரைக்கான விஷயம் பற்றியதொரு தெளிவான தேடலுடன், ஆய்வறிவு பூர்வமான உரைக்கான தயாரிப்புக்களுடன், குறிப்புக்களுடன் தான் சபை முன் நிற்பதுண்டு. அந்தச் சபை என்பது ஒரு சாதாரணக் கலந்துரையாடலாக இருக்கலாம் கூட்டமாக இருக்கலாம், ஆய்வரங்கமாக இருக்கலாம் அல்லது ஒரு மாபெரும் விழாவாகக்கூட இருக்கலாம். ஆனாலும் நண்பர் மதிவானம் அந்தத் தயார் நிலையிலேயே வந்திருப்பார். வெகு சிலரிடமே காணப்படும் இந்தப் பொறுப்பு நிறைந்த சிறப்புநிலை லெனினிடம் மிகையாகவே இருப்பது எனக்கு அவர் மேல் ஒரு மதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் எல்ல, நியூபர்க் தமிழ் வித்தியாலய குறிஞ்சிப்பேரவை விழாவுக்கு ஒரு சில அவசர அசௌகரியங்களால் பங்கு கொள்ள முடியாமைக்கான வருத்தத்துடன் லெனினின் தொலைபேசிச் செய்தி விழாக்குழுவினருக்கு வந்து சேர்ந்தது. அவருக்கு வரமுடியாமற் போய்விட்டாலும் அந்த ஆய்வரங்கிற்கான உரைக்காக அவர் எத்தனை அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளார், தன்னை தயார் படுத்திக் கொண்டுள்ளார் என்பதை இந்த முதற்கட்டுரை உணர்த்துகிறது.

இந்தத் தேடல் முயல்வும், அர்ப்பணிப்பும், தமிழின் பல்வேறு துறைகள் சார்ந்த பயில்வும் இவரை ஈழத்து இலக்கிய உலகின் ஒரு முக்கியமான ஆய்வாளராக இன்று இனம் காட்டுகின்றன, அடையாளப் படுத்துகின்றன.

இந்த நூலின் முதற் கட்டுரையே மிகவும் முக்கியமானது. மலையக நாட்டார் இலக்கியம் பற்றியது. இருபதாம் நூற்றாண்டின் பிற்கூற்றை நாட்டாரியல் பற்றிய ஆய்வு யுகம் என ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இன்று நாட்டுப்புற இயல் பல்கலைக்கழகங்களில் தனித்துறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. முதுகலையில் பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. நாட்டாரியல் துறையில் இருபதுக்கு மேற்பட்டவர்கள் டாக்டர் பட்டம் பெற்றுள்ளர். (பேராசிரியர் லூர்து நாட்டார் வழக்காறுகள்)

1950–60 களில் தான் 'வெறுப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளான ஒரு துறையான நாட்டார் இலக்கியத்துறை பற்றிய கரிசனையும் அக்கறையும் தமிழ் இலக்கிய உலகில் மேலெழுந்தது என்கையில் மலையக நாட்டாரிலக்கியம் பற்றிப் பேசவே தேவையில்லை.

லெனின் மதிவானம் ஒரு இடத்தில் குறிப்பிடுவதைப்போல் 'மலையக மக்களின் கல்வித் தகுதியில் எழுத்தறிவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முந்திய மலையக மக்களின் நாட்டார் பாடல்களைச் சேகரித்து வைத்திருக்கக் கூடிய வசதியோ வாய்ப்போ கிடைத்திருக்காது.

மலையக நாட்டார் பாடல்களை ஏட்டிற்குக் கொண்டு வருகின்ற முயற்சிகள் மிகவும் அரிதாகவே உள்ளன. ஸி.வி.வேலுப்பிள்ளை மலையக மக்களிடையே வாய்மொழியாகக் காணப்பட்ட நாட்டார் பாடல்கள் சிலவற்றினைத் தொகுத்து வெளியிட்டமை ஒரு முக்கியமான சாதனையாக அமைந்துள்ளது'.

ஸி.வி. அவர்களின் இந்த சாதனை மிக முக்கியமானது. ஒரு கனத்துடனும், கவனத்துடனும் பதியப்பட வேண்டிய ஒன்றாகும். அதை இந்த நூல் செய்துள்ளது. ஸி.வி.க்கு நாட்டாரிலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. இந்த நாட்டாரிலக்கிய ஈடுபாடும், ஒரு கவிஞனின் மனநிலையுமே அவருடைய உரைநடை வெற்றிக்கான காரணங்கள். இகழ்வுகளுக்கு உள்ளாக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் அந்நியப்படுத்தப்பட்டும் கிடந்த இந்த மலைகளிடையே, மலையக மக்களிடையே இப்படியும் ஒரு புதையல் ஆழத்தில் புதைந்து கிடக்கிறது என்பதை அடி எடுத்துக்காட்டிய முதல்வர் என்ற பெருமையும் ஸி.வி. அவர்களையே சேர்கின்றது.

இதே நூலின் பிரிதோர் கட்டுரையிலும் (ஸி.வியின் எழுத்துப் பணிகள் பற்றியது) 'சமூக உணர்வுடனும் நாட்டார் பாடல்கள் குறித்த சரியான பார்வையுடனும் ஸி.வி. இம்முயற்சியினை மேற்கொண்டுள்ளார். இத்தொகுப்பில் அடங்கிய பாடல்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம்' என்று மிகவும் சரியாகவே குறிக்கின்றார் நூலாசிரியர் லெனின் மதிவானம் அவர்கள்.

ஸி.வியுடன் மிக நெருக்கமாகப் பழகிய ஒரு சில நண்பர்கள் 'அவருக்கு குஷி வந்துவிட்டால் அமைதியாகப் பாட்டுப்பாடியபடி இடுப்பை நெளித்து நெளித்து ஆடுவார் என்றும் ஆட்டத்துக்காக அவர் பாடிக்கொள்ளும் பாட்டு ஒரு மலையக நாட்டார் பாடலாகவே பெரும்பாலும் இருக்கும்' என்று என்னிடம் கூறியது என் நினைவில் எழுகிறது.

அந்த ஐம்பது அறுபதுகளில் மலையகத்தில் மட்டுமின்றி இலங்கையின் தமிழ் கூறும் மற்றைய பகுதிகளிலும் கூட நாட்டாரிலக்கியம், நாட்டார் பாடல்கள் பற்றிய தேடுதலோ அக்கறையோ இல்லாதிருந்த அந்த நாட்களில் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் என்பவர் ஏடுகள், சஞ்சிகைகள் என்று சகல அச்சு ஊடகங்களிலும் நாட்டார் இலக்கியம், நாட்டார் பாடல்கள் பற்றியே எழுதியும், பாடல்கள் சிலவற்றை தொகுத்தும் தந்து கொண்டிருந்ததை நினைவு கூர்தல் அவசியமாகிறது.

ஸி.வியைப் போலவே ஆங்கில மொழிக்கல்வியும் தமிழ், ஆங்கில மொழிப்புலமையும் மிக்கவரான மு.இராமலிங்கம் அவர்களின் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆக்கங்களை தமிழகப் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன. உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் ஒரு வருமான வரி உயர் அதிகாரியாகப் பணியாற்றிய திரு.மு.இராமலிங்கம் வெள்ளவத்தையில் வசித்தவர். ஆரம்பத்தில் வெள்ளவத்தை மு.இராமலிங்கம் என்றே எழுதியவர் ஓய்வு பெற்று யாழ்ப்பாணம் சென்றபின் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் என்று எழுதி வந்தார். மக்கள் கவிமணி என்ற அடைமொழியுடனேயே மு.இராமலிங்கம் அழைக்கப்பட்டார்.

1982 ல் ஸி.வி அவர்களுக்கும் மக்கள் கவிமணி என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டுவிழா நடத்திக் கௌரவித்தது அந்தனி ஜீவாவின் மலையகக் கலை இலக்கியப் பேரவை. இந்த விழாவில் ஸி.வி பற்றிய சிறப்புரையை ஆற்றியவர் பேராசிரியர் கைலாசபதி. 1972 ல் இலங்கைக் கலாசாரப் பேரவை யாழ்ப்பாணத்தில் நடாத்திய தமிழ் இலக்கிய விழாவிலும் ஸி.வி. உட்பட எழுவர் கௌரவிக்கப்பட்டனர். கௌரவம் பெறுவோர் பற்றிய உரையையும் எழுவர் நிகழ்த்தினர். ஸி.வி பற்றிய உரையை நிகழ்த்தியவர் பேராசிரியர் கைலாசபதி என்பது குறிப்பிடக்கூடியது.

வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் பற்றி பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடும்போது 'பொதுவாகவே ஈழத்தில் நாட்டுப் பாடல்களைச் சேகரிப்போரும் தொகுத்து வெளியிடுவோரும் அருந்தலாகவே உள்ளனர். விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே இத்துறையில் இடைவிடாது உழைத்து வருகின்றனர். இச்சிறு குழுவினருக்குள் மக்கள் கவிமணி மு.இராமலிங்கம் விதந்து குறிப்பிடத்தக்கவர்' என்று எழுதுகின்றார்.

இந்த இரண்டு மக்கள் கவிமணிகளையும் அவர்களது மக்கள் இலக்கிய செயற்பாடுகளை அடையாளம் கண்டு அட்டையில் படம் பிரசுரித்துக் கனம் பண்ணியுள்ளார் 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள்.

1969 ஆகஸ்ட் மல்லிகை - மக்கள் கவிமணி மு.இராமலிங்கம்
1979 மே மல்லிகை - மக்கள் கவிமணி ஸி.வி வேலுப்பிள்ளை

இந்த ஆய்வுக் கட்டுரைகளடங்கிய நூலில் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பற்றியதொரு நினைவுக் குறிப்பும் இருக்கிறது. "இங்கிவரை யான் பெறவே என்ன தவம் செய்தேனோ!" என்னும் தலைப்புடன். 'கைலாசபதி போன்று வளரக்கூடிய ஆய்வாளனொருவனை இன்று மலையகம் பெற்றிருக்கிறது' என்னும் லெனின் மதிவானம் பற்றிய ஜீவாவின் கூற்றுக்கான சிலரின் எதிர்வினைகள் தனக்கு வேதனை தந்ததாக லெனின் ஓரிடத்தில் குறிக்கின்றார். இது வேதனையை விடவும் எனக்கு சுகம் தரும் விடயமாகவே தெரிகின்றது. ஆய்வறிவுடைமைக்குச் சான்று கருத்தொற்றுமை அல்லவே!

'சுந்தரம்பிள்ளையிலிருந்து வரதராசனார் ஊடாக வரும் புகழ்பெற்ற தமிழறிஞர்கள் தமிழாய்விலும் பார்க்க தமிழபிமானத்தையே ஏற்புடைமைக்கு அளவுகோலாகக் கொண்டியங்கினர். மாறுபட்ட கருத்துடையோரை மாற்றார் என்றும் திறனாய்வுப் போக்குடையோரை துரோகிகள் என்றும் பகுத்தாயும் பண்புடையோருக்குப் பலவாறான பட்டங்கள் சூட்டுவதும் இவர்களது பழக்கம்' என்றெழுதி வைக்கின்றார் பேராசிரியர் கைலாசபதி. (கோ.கேசவனின் 'மண்ணும் மனித உறவுகளும்' நூல் முன்னுரை)

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தந்த' நந்தினி சேவியர் போன்றவர்கள் பற்றிய நூலாசிரியரின் நினைவுகள் மொழியியல், மானிடவியல், மக்கட்பண்பாட்டியல் போன்ற துறை சார்ந்த ஆய்வுப் பெருவெளிகள். உழைப்பும், அர்ப்பணிப்பும், தேடலும் வாசிப்பும் இல்லாமலே உயர்வு பெற விரும்பும் எவரையுமே இலக்கிய உலகம் புறக்கணித்தே வந்துள்ளது என்பது தான் வரலாறு. 'நீங்கள் ஒவ்வொருநாளும் எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும்' என்றார் லெனின்.

நமது லெனின் மதிவானம் அவர்களும் வாசிப்பிலும், தேடுதலிலும், அறிந்து கொள்வதிலும் அறிந்து கொண்டதை பகிர்ந்து கொள்வதிலும் அதையே கொண்டிருக்கின்றார் என்பது இந்த நூலின் வழியாகவும் ஊர்ஜிதம் பெறுகின்றது. தமிழியல் ஆராய்வும் உண்மையைத் தேடுகின்ற முயல்வும் இந்நூலின் ஆக்கங்களுக்குள் இணைந்து செயற்படுகின்றன என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். உண்மையைத் தேடுதல் என்பது திறனாய்வுச் செயற்பாட்டின் இன்னொரு முக்கிய பரிமாணம்.

'எம்முன்னால் தரப்பட்டு இருக்கின்ற ஒன்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அது எப்படி என்று நமது மூளை கேள்வி எழுப்பும்போது மறுக்கத் தொடங்கும்போது மெய்யியல் திறனாய்வு தொடங்கி விடுகின்றது' என்கின்றார் திறனாய்வு மெய்யியலாளரான ஜிஜெக் (Salvoj Zizek). ஜிஜெக் அவர்களின் எழுத்துக்கள் எண்பதுகளை அடுத்தகாலப்பகுதிகளில் சோர்ந்திருந்த மார்க்சியர்களையும், இளம் இடதுசாரி அறிவு வட்டத்தினரையும் புத்தூக்கம் கொள்ளச் செய்தது. உளப்பகுப்பாய்வையும் மாக்சியத்தையும் சேர்த்து அவர் பயன்படுத்தியமையும் தனது மெய்யியல் கருத்துகளை விவரிக்க பொதுப்பண்பாட்டிலிருந்து அவர் உதாரணங்கள் எடுத்துக்காட்டியதும் பலருக்கும் ஈர்ப்புடையதாய் இருந்தது. என்கின்றனர் பிரித்தானிய திறானாய்வாளர்கள். (ரஃபேல் - கனடாவின் 'காலம்' இதழ் 39 - ஜிஜெக் பற்றிய கட்டுரை) இதை அப்படியே லெனின் மதிவானம் அவர்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம் என்று நினைக்கின்றேன்.

இலக்கிய வரலாறும் இலக்கிய ஆளுமைகள் பற்றிய ஆய்வுகளும், நவீன இலக்கியங்கள் பற்றிய சமூகவியல் அடிப்படையிலான திறனாய்வுகளும் அறிமுகமும் என விரிவடையும் இவரது ஆக்கங்கள், எழுத்துக்கள், உரைகள் என்பன மேலும் பல இளம் திறனாய்வாளர்களை உற்சாகத்துடன் உருவாக்கும் ஆதர்சமாகத் திகழும்.

நான் எழுத ஆரம்பித்த அறுபதுகளைத் தொடர்ந்த காலங்களில் எனக்கு ஒரு கனவு இருந்தது. ஈழத்து நவீனத் தமிழ் இலக்கியத்தின் ஒரு சிறப்புமிக்க காலம் அது.

இந்தச் சிறப்புக்கான காரணிகள் பலவாறாக இருந்தாலும் முக்கியமான காரணியாகத் திகழ்ந்ததும் அடையாளப்படுத்தப்பட்டதும் பல்கலைக்கழகத் திறனாய்வுப் பயிற்சிகளும் செல்நெறிகளுமாகும்.

தமிழ் இலக்கியத் திறனாய்வுத்துறைக்கும் ஆய்வறிவுத் துறைக்கும் ஒரு புதிய ஒளியையும் புதிய செயல்நெறியையும் புகுத்திய பேராசிரியர் கைலாசபதியின் சுவடுகள் பல்கலைக்கழகத்தில் பதியத்தொடங்கிய காலம் அது.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவச் சிறப்புகளை தமிழ் இலக்கிய உலகுக்குக் கொண்டு சென்ற, முன்னிறுத்திய பெருமையும் அவருக்குரியது. பல்கலைக்கழகங்களுக்கும் சமூகங்களுக்குமிடையிலான ஒரு உறவுப் பாலமாகவும் திகழ்ந்த பேராசிரியரின் பலவீனமாகத் திகழ்ந்தது அவருடைய குழுமனப்பாண்மை. தன்னணி சாராத மற்றையோரை அவர் மிக மூர்க்கமாக மறுதலித்தார்.

'மெய்யியல் ஆய்வு பூர்வமானதும், விஞ்ஞான ரீதியிலானதுமான இலக்கியத்திறனாய்வினை நாங்கள் கற்றுக் கொண்டதே பேராசிரியர் கைலாசபதியவர்களிடம் தான் என்று விதந்துக் கூறும் தமிழகத் திறனாய்வாளர் தமிழவன் கூட 'அவர் சுட்டிக் காட்டும் சில படைப்பாளர்களும் அவர்தம் படைப்புகளும் எனக்குப் பொருத்தமாகப்படாதது மட்டுமல்லாமல் ஏமாற்றத்தையும் தந்தது' என்கின்றார்.

'கைலாசபதியின் உரைநடை விதந்து குறிப்பிடத்தக்கது. அவரது ஆற்றலையும் ஆளுமையையும் புலப்படுத்தத்தக்க வகையில் தனித்துவம் வாய்ந்ததாக அது உள்ளது. பேராசிரியர் கைலாசபதியிடம் காணத்தக்க பிறிதொரு சிறப்பம்சம், எழுத்தாளரை, இளம் ஆய்வாளரை திறனாய்வாளரை ஊக்கமூட்டி உழைக்கச் செய்யும் பண்பாகும். இத்தனை சிறப்பும் ஆற்றலும் மிக்க திறனாய்வாளர் கைலாசபதியிடம் குறைபாடுகளும் இல்லாமலில்லை. அவரை ஓரளவுக்குக் குழு மனப் பான்மை பாதித்திருந்தது' எனக்குறிப்பிடுகிறார் கலாநிதி துரை. மனோகரன். (இளங்கதிர் - பேராதனைப் பல்கலைகழகம் - 1992).

இளம் ஆய்வாளர்களை ஊக்குவித்து உழைக்கச் செய்து உற்சாகப்படுத்தும் அவருடைய பண்பும் பணிகளும் மலையகத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்றவர்களில் ஒரு சிலரையாவது ஒரு திறனாய்வாளராக முகிழச் செய்யாதா? நம்மத்தியிலிருந்தும் ஆய்வாளர்கள், விமர்சகர்கள் தோன்ற மாட்டார்களா என்பதே எனது அந்தநாளையக் கனவு. அந்த கனவில் முகம் காட்டியவர்களில் சிலர், எம்.வாமதேவன், பி.மரியதாஸ், எல்.சாந்திகுமார், மு.நித்தியானந்தன் போன்றோர். மு.நித்தியானந்தன்

நிர்பந்தம் காரணமாகப் புலம் பெயர்ந்து விட்டார். மற்றவர்கள் வெவ்வேறு துறைகளைக் கொண்டு விட்டனர்.

அறுபதுகளின் அந்தக் கனவை தொண்ணூறுகளின் பின் நனவாக்கிக் கொண்டிருப்பவர் லெனின் மதிவானம் அவர்கள். ஆய்வு ரீதியான திறனாய்வியலையே தனக்கான துறையாகக் கொண்டு கற்றலும், தேடலுமாக அதன் ஆழ அகலங்களுடன் லயித்தும் உழைத்தும் கிடப்பவர் லெனின். ஒரு உவகையுடன் அவர் ஏற்றுக் கொண்டுள்ள இந்த திறனாய்வுத் துறையை ஒரு தமிழியல் ஆய்வாகவும் எமது சூழலுக்கும் தற்காலப் பண்புகளுக்கும் ஏற்ற முறையில் அணுகி ஆராயும் விதம் அவரை ஒரு வித்தியாசமான, தனித்துவமான திறனாய்வாளராக இனம் காட்டுகிறது; அடையாளப்படுத்துகின்றது.

இந்த நூலின் ஆக்கங்கள் மட்டுமின்றி அவருடைய உதிரியான கட்டுரைகளையும் இவைகளை உறுதி செய்வனவாகவே கொள்ளலாம். உதாரணத்துக்கு 'செக்கோஸ்லவேக்கியாவின் சிந்தனையாளர் ஜூலியஸ் பூசிக்கின் தூக்கு மேடைக் குறிப்பு' பற்றிய கட்டுரையைக் குறிப்பிடலாம் (மல்லிகை ஆகஸ்ட் 2003). பின்னாளில் லெனின் மதிவானத்தின் 'மலையகம் தேசியம் சர்வதேசம்' எனும் நூலில் இந்தக்கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளதாக ஞாபகம்.

'சூழலின் தளம் திறனாய்வின் ஆக்கத்தோடு தொடர்பு கொண்டுள்ள நிலையில் எமது சூழலுக்குரிய திறனாய்வுக் கோட்பாடுகளின் ஆக்கம் அறிகை நிலையில் முன்னிலை கொண்டெழுகின்றது. திறனாய்வுக் கோட்பாட்டின் பலம், சமூக வாழ்வின் கூர்ந்த நுண்ணலகுகளையும் பற்றிப் பிடித்தலோடு தொடர்புடையது' என்கின்ற பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களுடைய கூற்று (மல்லிகை 2012 ஆண்டு மலர் கட்டுரை) இந்நூலில் வரும் ஆக்கங்களுடன் வெகுவாகப் பொருந்தியே வருகின்றது.

இடதுசாரி சிந்தனைகளுடனும் பேராசிரியர் கைலாசபதியின் செயற்பாடுகளின் மீது அளவற்ற ஈர்ப்பும், பேராசிரியர் மீது பெரு மதிப்பும் பற்றும் கொண்டவர் லெனின் மதிவானம் என்பதை அவருடைய சகல செயற்பாடுகளும் ஊர்ஜிக்கும். 'பேராசிரியர் கைலாபதிபோல்' என்றும் 'அவருக்குப் பின்' என்றும் 'பேராசிரியர் மறைந்து கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் இன்றுவரை அவருடைய ஆய்வுகளுக்கு மேலாக எவரின் பணிகளையும் ஒப்பிட்டோ மேம்பட்டோ கூறுவர் இல்லை'

என்றும் வருகின்ற ஒப்பியல்களுக்கும் அப்பால் லெனின் அவர்களது திறனாய்வுச் செயற்பாடுகள் காலத்தின் தேவைப்பாடு கருதும் வளர்ச்சி கொண்டவைகளாகவே திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

'மலையகம் என்ற பின்புலத்தில் கைலாசபதி' என்றும் இலங்கையில் உலக மயமாக்கல்களின் ஊடுருவலும் தேசிய இனப்பிரச்சினையும் பற்றி கைலாசபதி' என்றும் பேராசிரியர் பற்றிய இரண்டு ஆக்கங்களை இத்தொகுதி கொண்டுள்ளது. கைலாசபதி அவர்களின் தமிழியல் துறை சார்ந்த பங்களிப்புக்கள் வெளிக்கொணரப்பட்ட அளவுக்கு அவரது அரசியல்துறை சார்ந்த பங்களிப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படவில்லை என்னும் ஆதங்கத்துடன் அவருடைய சர்வதேச அரசியல் விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் புதிய பூமி தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக வந்திருப்பது பற்றிய குறிப்புடன் பேராசிரியரின் செம்பதாகைக் கட்டுரைகளைக் கவனத்திற் கொண்டு அவைகளும், தொகுக்கப்பட்டால் அவருடைய தமிழ்த்தேசியம் பற்றிய காத்திரமான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவாவுருகின்றார் நூலாசிரியர்.

கைலாசபதி என்பது வெறுமனே ஒரு நாமம் மட்டுமல்ல அவர் இயங்கு சக்தி என்று கூறும் லெனின் மதிவானம் அவர்கள் தன்னுடைய இயக்கங்களுக்கும் அவரையே சக்தியாகவும் கொள்கின்றார் என்பது வாதிட்டு நிறுவ வேண்டியதொன்றல்ல. 'பாரதி போல் புதுமைப்பித்தன் போல் கைலாசபதியும் ஒரு ஆளுமை ஒரு யுகபுருஷர்' என்பதில் எனக்கும் எதுவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. என்னுடைய எழுத்துக்களிலும் அவற்றை நான் பதிந்துமுள்ளேன். (மலையக சிறுகதை வரலாறு பக்கம் 100) அதற்காக அவருடைய அதிகாரங்களை, பலவீனங்களை, குறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் நான் தயார் இல்லை. கைலாசபதி அவர்களுடைய குறைகளையும் நியாயப்படுத்தும் ஒரு தற்காப்புக் குறையை லெனின் மதிவானம் கொண்டிருந்தது, கொண்டிருப்பது மட்டுமே இவரின் மீதான எனது குறை.

மார்க்சியத்தை தற்கால சமுதாய மாறுதல்களுக்கேற்றவாறு கட்டமைத்துக் கொள்ளும் லெனின் மதிவானம் அவர்களது திறனாய்வு சிந்தனை வீச்சுக்கள் ஈழத் தமிழ் இலக்கிய உலகில் ஒரு புத்துயிர்ப்பே; [illegible] வைப்பே. எழுத வருபவர்களுக்கு இலக்கியத்தின் வரலாற்றில் [illegible]ம் இருந்தாக வேண்டும்.' என்கின்றார் மாக்சிம் கார்க்கி ('நான் [illegible]ாறு எழுதக் கற்றுக் கொண்டேன் - கார்க்கி - NCBH).

அந்தவகையில் 'இளமையின் கீதம்' நாவல் பற்றிய கட்டுரையும் முக்கியமானது. 'இளமையின் கீதம்' என்னும் பெயரைப் பார்த்தவுடன் எனக்கு செ.கணேசலிங்கன் அவர்களே நினைவில் வந்தார். ஆனால் இந்த இளமையின் கீதம் அவருடைய நாவல் பற்றியதல்ல. சீனப் பழமைச் சமூகத்தை எதிர்த்துப் போராடிய ஒரு சீனப் பெண்ணின் கதை. மயிலை பாலு மொழி பெயர்த்துள்ள ஆசிரியர் யங்மோவின் சீன நாவல் பற்றியது.

'செம்மீனை முன்வைத்து தகழியின் படைப்பாளுமை' பற்றிய கட்டுரையும் 'உலக இலக்கியத்தில் ஆழத்தடம் பதித்த மாக்ஸிம் கார்க்கி' என்னும் கட்டுரையும் இலக்கிய வரலாற்று அறிவுக்கான முக்கிய மீள் வாசிப்புக்கள்.

இந்தத் தொகுதியின் கணிசமான ஆக்கங்கள் நவீன இலக்கிய நூல்கள் பற்றிய திறனாய்வுகளே.
சிவனு மனோகரன் - கோடாங்கி (சிறுகதைத் தொகுதி)
கலாநிதி ந.இரவீந்திரன் - திருக்குறளின் கல்விச் சிந்தனைகள் (ஆய்வு)
தெளிவத்தை ஜோசப் - குடை நிழல் (நாவல்)
பேராசிரியர் சி.மௌனகுரு - அரங்கியலுக்குப் புதிய பார்வை (ஆய்வு)
கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் - நகைச்சுவை ஆளுமைகள் (தொகுப்பு)
முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் -
வடபுலத்து இடதுசாரி முன்னோடிகள் (கட்டுரைத் தொகுப்பு)
ஆதவன் தீட்சன்யா சிறுகதைகள் - (சிறுகதைத் தொகுதி)

திறனாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள இந்நூல்கள் கூட லெனின் அவர்களின் நடுநிலைச் சிந்தனைக்கான சான்றாகவே அமைகின்றது. 'விமர்சன மூர்க்கத் தனத்தையும் வக்கிரத்தையும் அவரிடம் என்னால் காணமுடியவில்லை என்னும் நந்தினி சேவியர் அவர்களின் கூற்று நினைவில் எழுந்து நிற்கின்றது. லெனின் மதிவானம் அவர்கள் திறனாய்வியலில் ஒரு அடையாள ஆளுமை என்பதற்கான சாட்சி இந்த நூல்.
வாழ்த்துக்கள்.

இந்த நூலை வெளியிட முன்வந்திருக்கும் மல்லியப்பு சந்தி திலகருக்கும் எனது பாராட்டுக்கள்.

என்றும் அன்புடன்
தெளிவத்தை ஜோசப்

291 / 12 / A நீர் கொழும்பு வீதி,
வத்தளை. 28/08/2012

இந்நூலை வெளியிடுவதற்கான காரணம் எனது இருபது ஆண்டுகால எழுத்து அனுபவமே! திறனாய்வு என்பது படைப்பிலக்கியத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் என்பதால், தொண்ணூறுகளிலிருந்தே திறனாய்வின் பக்கம் என் கவனம் திரும்பியது.

எழுத்துத் துறையில் என்னை ஈடுப்படுத்தியவர் இலங்கை திராவிட இயக்க முன்னோடிகளிரொருவரான தோழர். ஏ.இளஞ்செழியன் அவர்கள். திறனாய்வுத் துறையில் எனக்கான ஆர்வத்தை வளர்த்தவர் என் அன்பிற்குரிய தந்தை ஜெயராமன். இவர்களினூடாக அறிமுகமாகியிருந்த மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், கார்க்கி, பாரதி, பெரியார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கைலாசபதி, சிவத்தம்பி இன்னும் இது போன்ற சிந்தனையாளர்களின் கருத்துகள் எனக்கு 'மார்க்சிய திறனாய்வு' குறித்து வெளிச்சம் தந்தன.

இவ்வாறான சூழலில் நான் பெற்றிருந்த அறிவை தமிழ்ச் சூழலுக்கும் மரபிற்கும் ஏற்ப பொருத்திப் பார்த்து எமக்கான ஒரு விமர்சனப் பார்வையை உருவாக்கத் துணை நின்றவர் கலாநிதி ந.இரவீந்திரன். அவர் இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு - பயன்பாடு குறித்து பல கோணங்களிலிருந்தும் தளங்களிலிருந்தும் புரிந்து கொள்வதற்கான அடிப்படையை எனக்கு வழங்கி வழிகாட்டினார். நான் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளை ஒன்றுபடுத்தி அவருடன் கலந்துரையாடியபோது இத்தொகுப்பு வெளிவர வேண்டியதன் அவசியத்தை உணர்த்திய அவர் அக்கட்டுரைகளில் முனைப்புற்றிருந்த உலக நோக்கு, அதனடியாக மலையக இலக்கியத்தில் ஏழுந்துள்ள புதிய பரிமாணங்கள் பற்றியும் எடுத்துக் காட்டினார். ஆரம்ப காலங்களில் மலையக இலக்கியத்தில் முனைப்புற்றிருந்த சமூகவுணர்வு-போர்க்குணம் எவ்வாறு படிப்படியாகத் தோய்ந்து இன்றைய உலகமயமாதல் சூழலில் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது என்பதை இயக்கவியல் அடிப்படையில் புரிந்து கொள்வதற்கு மீனாட்சியம்மாள் முதல் சிவனுமனோஹரன் வரையிலாக எழுதிய கட்டுரைகள் எடுத்துக் காட்டுகின்றது என்பதையும், ஏனைய கட்டுரைகள் மலையக சமூக தளத்தில் நின்று, அதன் பின்னணியில் தேசிய, சர்வதேச இலக்கியம் எவ்வாறு நோக்கப்படுகின்றது என்பதையும் உணர்த்தினார். வாசகர்களின் நலன்கருதி அவரது விமர்சனக் குறிப்பைப் பின்னுரையாக இணைத்துள்ளேன்.

இத்தோழரிடமிருந்து பெற்ற புதிய கண்ணோட்டங்கள் தவிர, நான் ஏற்கனவே கொண்டிருந்த கலை இலக்கியம் குறித்த கருத்துகளும் அவரின் அங்கிகரிப்பின் மூலம் வலுவடைந்தன. எனவே வறட்டு தத்துவ ரிதியான பார்வைகளைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவது அவசியம் என்பதை உணர முடிந்தது.

இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் வெவ்வேறு சந்தர்ப் பங்களில் எழுதப் பட்டவையாக உள்ளமையால் கூறியது கூறல் என்ற வழு பரவலாகக் காணக்கூடும். இந்நூலில் கூடிய வரையில் அதனை தவிர்க்க முயன்றுள்ளேன்.

எம் மக்கள் கல்வியறிவு இல்லாதிருந்த காலத்தில், அவர்களின் கல்வியுரிமைகள் மறுக்கப்பட்ட சூழலில் அவர்கள் தமது பெறுமதிமிக்க உணர்வுகளை நாட்டார் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளார்கள் என்பதை மலையக நாட்டார் இலக்கிய ஆய்வின்போது அறிய முடிந்தது. இதனூடான தேசிய, சர்வதேச இலக்கியம் பற்றிய தேடுதலின் விளைவே இந்நூல். என் தலைமுறையினரின் கண்ணீர், கூடவே அவர்களின் தன்மானம் கலந்த மூச்சுக்காற்று-அது தேற்றுவிக்கக் கூடிய வெப்பம் இவைகளே என் எழுத்துக்களின் ஆதாரமாக அமைந்திருப்பதாக உணர்கின்றேன். இதற்கப்பால் எனது எழுத்துக்களின் ஊடாக நான் எதனையும் எதிர்பார்க்கவில்லை என்பதை ஒரு துளியும் கர்வம் இல்லாமல் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்நூலில் இடம் பெறுகின்ற கட்டுரைகளில் அதிகம் விவாதிக்கப்பட்ட கட்டுரை ஸி.வி. வேலுப்பிள்ளை பற்றியதாகும். மலையக நாட்டார் இலக்கியத்தின் தொடர்ச்சியாக மலையக வாழ்வியலை படைப்பாக்கித் தந்ததில் ஸி.வி வேலுப்பிள்ளைக்கு முக்கிய இடமுண்டு என்பதை எடுத்துக்காட்டிய அக்கட்டுரை, அவரது காலத்தில் நடைப்பெற்ற அரசியல் போராட்டங்களையும் கொந்தளிப்புகளையும் பொருளாகக் கொள்ளவில்லை என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியிருந்தது. மனிதர்களுக்குரிய மறதியுணர்வினாலும் சில மனிதர்களுக்குரிய மறைப்பு வேட்கையாலும் மலையக இலக்கிய வரலாற்றின் செல்நெறிகள் கவனத்திலெடுக்கப்படாமல் போய் விடக்கூடாது என்ற ஆர்வம் ஒரு புறமாகவும், ஸி.வி பற்றிய காய்த்தல் உவத்தல் அற்ற நடுநிலையான ஆய்வு ஆர்வம் இன்னொரு புறமாகவும் என் உணர்வில் எழுந்தபோது, சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரையை இந்நூலில் சேர்த்துள்ளேன்.

இக்கட்டுரை 1994 ஆம் ஆண்டு சரிநிகர் பத்திரிகை சர்வதேச ரீதியாக 'வானமே எல்லை' என்ற தொனிப்பொருளில் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றது.

இவ்வாறே எனது பேராசிரியர் கைலாசபதி- சமூகமாற்றத்திற்கான இயங்காற்றல் என்ற நூல் வெளிவந்த காலத்தில் அது பல முற்போக்கு மார்க்சிய இலக்கிய கர்த்தாக்களின் வரவேற்பையும் அங்கீகாரத்தையும் பெற்றது நம்பிக்கை தரக் கூடியதாக இருந்தது. அந்நூல் குறித்து விமர்சித்த நண்பர்கள், இந்நூலில் மலையக இலக்கியத்தில் பேராசிரியர் கைலாசபதியின் தாக்கம் குறித்து ஏற்கனவே நான் எழுதிய கட்டுரையையும், அவ்வாறே பேராசிரியர் கைலாசபதி புனைப்பெயரில் எழுதிய அரசியல் கட்டுரைகள் பற்றி ஆய்வையும் அத்தொகுப்பில் சேர்த்திருந்தால் முழுமையடைந்திருக்கும் எனக் கூறினார்கள். அவ்விரு கட்டுரைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலில் இடம்பெறுகின்ற கருத்துகள் யாவும் இலக்கிய கருத்தாடல்களின் போதும், தனிப்பட்ட உரையாடல்களின் போதும் விவாதிக்கப்பட்டவையாகும். விவாதத்தில் கலந்து கொண்ட சகலருடைய பெயர்களையும் இங்கு குறிப்பிடுதல் சாத்தியமில்லை. அதற்கான அவசியமும் இல்லையென்றே கருதுகின்றேன். இருப்பினும் முக்கியமாக சிலரின் பெயர்களை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. திருவாளர்கள் டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், நந்தினிசேவியர், தெணியான், ஆதவன் தீட்சண்யா, பேராசிரியாகள் சோ. சந்திரசேகரன், அ. மார்க்ஸ், சி.மௌனகுரு, சபா.ஜெயராசா கலாநிதிகள் துரை மனோகரன், வ. மகேஸ்வரன், திருவாளர்கள் சுதாராஜ், இதயராசன், எம். ஜெயகுமார், எஸ்.ஏ. உதயன், சிவலிங்கம் சிவகுமாரன் (சூரியகாந்தி) முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கட்டுரைகளை தொகுக்கின்ற போது எதிர்பராதவிதமாக எனது உடல் நலம் பாதிப்படைந்தது. மருத்துவம் பார்த்ததோடு மட்டுமன்று தொடர்ந்து எழுதுவதற்கான நம்பிக்கையையும் தந்த டாக்டர் உமாபதிசிவம் என் நன்றிக் குரியவர்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதவிருந்தவர் என் மதிப்பிற்குரிய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, எதிர்பாராதவிதமான அவரது மரணம் மிகுந்த மன அழுத்தத்தை தந்தது. கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும் சோர்வின்றி எழுதுவதற்கான உந்துதலைத் தந்த பேராசிரியரின் இறப்பு இந்நூலின் வரவையும் தாமதப்படுத்தியது. அவர் பொறுத்த அன்பான நினைவுகளுடன் சிறு குறிப்பொன்றினை இந்நூலில் சேர்த்துள்ளேன் என்பதில் ஓரளவு திருப்தி.

இந்த இழப்பின் இடைவெளியை நிரப்புவதற்காக இந்நூலுக்கான முன்னுரை கேட்டு மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்புடன் தொடர்பு கொண்ட போது மிகுந்த வேலைப்பளுவுக்கு மத்தியிலும் இவ்வுரையை வழங்கினார். இந்நூலுக்கான முதல் அங்கீகாரம் அவரது பெறுமதிமிக்க முன்னுரையினூடாக கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி. திரு. தெளிவத்தை ஜோசப் அவர்கள் சுகயீனமுற்று சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருந்த வேளையில் கூட அவர் எனது நூலுக்காக எழுதிக்கொண்டிருந்த முன்னுரை பற்றியே கதைத்தார். இவ்வம்சம் ஓர் இளம் தலைமுறையினர் பற்றி அவர் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துவதாக மட்டுமன்றி, நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு இட்டுச் செல்வதாகவும் அமைந்திருந்தது. வழமையான முன்னுரை என்றில்லாமல் ஒரு விமர்சனமாகவும் அவ்வுரை அமைந்திருந்தது. பல விடயங்களில் எனது கருத்துகளை வரவேற்கின்ற அவர் என்னுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

அவ்வாறே மலையக கலை இலக்கியம் அரசியல் சமூகம் தொடர்பில் உணர்வுடனான சமூகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் கலாநிதி எம். வாமதேவன் தொடர்ந்து எனது ஆய்வு முயற்சிகளில் ஈடுபாடு கொண்டு வருகின்றவர். இந்நூலுக்கு அவரே அணிந்துரை வழங்க வேண்டும் என எதிர்பார்த்தேன். அது அவரது கடமை என்ற வகையில் அணுகியபோது, பல வேலைப்பளுக்களுக்குள் அல்லாடிக் கொண்டிருந்த அவர் எனது நூலை முழுமையாக வாசித்து சிறப்பானதோர் அணிந்துரையை எழுதி தந்தார். இவர்களுக்கெல்லாம் எவ்வாறு நன்றி கூறுவது? உபசாரத்திற்கு அப்பாற்பட்ட உள்ளங்களுக்கு நட்பு வார்த்தைகள் ஏது?

எனது நீண்டகால நண்பரான கவிஞர் மல்லியப்புசந்தி திலகர் இந்நூலைத் தொகுப்பதில், உறுதுணையாக விளங்கியவர். விடாப்பிடியாக நின்று வேலை வாங்குவதில் கைதேர்ந்தவர். அவரது பாக்யா பதிப்பகத்தின் மூலமாக அழகிய முறையில் இந்நூலை வெளியிடுவதையிட்டு மன நிறைவடைகின்றேன்.

பல்வேறு அலுவலகப் பணிகளுக்கு மத்தியிலும் இந்நூலின் கையெழுத்துப் பிரதிகளை வாசித்து அதில் பல திருத்தங்களை மேற் கொண்ட செல்வி.என். சகிலாவின் பங்களிப்பு விலைமதிப்பற்றது.

இந்நூலின் அட்டைப்படத்திற்காக எனது நிழற்படத்தை கணினியில் வடிவமைத்து வழங்கிய நண்பர் சரவணன் அவர்களையும் அவ்வாறே சமூகமாற்றச் செயற்பாடு, அதற்கான தேடுதல், எழுத்து வேலைகள் என்பனவற்றில் என்னை உலாவவிட்டு அதனை சாத்தியமாக்குகின்ற என் குடும்பத்தினர், முச்சந்தி இலக்கிய வட்ட, இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்ற நண்பர்கள் யாவரினதும் ஆதரவும் பங்கேற்பும் இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது.

இந்நூல் குறித்த காத்திரமான விமர்சனத்தை எதிர்பார்த்து விடைபெறுகின்றேன்.

லெனின் மதிவானம்

19/10, திம்புல வீதி,
ஹட்டன்

01-06-2012

சமர்ப்பணம்

மனிதர்களுக்கிடையிலான காதலே உலகை இயக்கிக்
கொண்டிருக்கின்றது என்பதற்கு சாட்சியாய் அமைந்த
என் தாய்வழி தாத்தா, பாட்டி
முருகன், கதிராய் ஆகியோரிடமிருந்து
உழைப்பின் - உண்மையின் மகத்துவத்தைக்
கற்றிருக்கின்றேன்.

எப்போதும் நெஞ்சிலிருக்கும்
அவர்களின் அன்புக்கு...!

பொருளடக்கம்

01	மலையக நாட்டார் இலக்கியம் மரபும் மாற்றமும்	01
02	மறைக்கப்பட்ட ஆளுமைகள் : திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யரை முன்னிறுத்தி..!	19
03	திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யர் : சமூகமும் அரசியலும்	30
04	கவிஞர் ஸி.வி. யின் இலக்கிய நோக்கு (காலமும் கருத்தும்)	42
05	மலையகம் என்ற பின்புலத்தில் கைலாசபதி என்ற மனிதர்	59
06	மலையக இலக்கியத்தில் புதிய போக்கைக் காட்டி நிற்கும் 'குடை நிழல்'	71
07	சிவனு மனோஹரனின் 'கோடாங்கி': ஒரு மதிப்பீடு	76
08	முச்சந்தி இலக்கிய வட்ட ஏற்பாட்டில் ஆதவன் தீட்சண்யாவுடனான இலக்கிய சந்திப்பு	86
09	புத்துலகப் படைப்புக்கான ஒரு ஆளுமை ("கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நகைச் சுவை ஆளுமை தீர்க்கதரிசனம்" என்ற நூலை முன்னிறுத்தி..!)	90
10	ஆன்மாவை விலைபேசாத ஆளுமைகள் வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள் என்ற நூல் பற்றிய நோக்கு	92
11	இலங்கையில் உலகமயமாக்கலின் ஊடுருவலும் தேசிய இனப் பிரச்சினையும் பற்றி கைலாசபதி	103
12	பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி: சில நினைவுகள்	116
13	இங்கிவரை யான் பெறவே என்ன தவம் செய்தேனோ..! (மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 85 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எழுந்த நினைவுகள்)	125
14	நந்தினி சேவியர் - எதிர் நீச்சல் போடும் படைப்பாளி	130

15 அரங்கியலுக்கு புதிய பார்வை, புதிய பங்களிப்பு
('மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்'
என்ற நூல் பற்றி சில அறிமுக குறிப்புகள்) 138

16 திருக்குறளுக்கும் கல்வியியலுக்குமான
புதிய பார்வை - புதிய பங்களிப்பு 143

17 தகழியின் படைப்பாளுமை:
"செம்மீன்" என்ற நாவலை முன்னிறுத்தி...! 150

18 ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகளில்
விரிவு பெறும் எல்லைகள் 167

19 உலக இலக்கியத்தில் ஆழத்தடம் பதித்த
மார்க்ஸிம் கார்க்கி 186

20 இளமையின் கீதம்
(சீன பழைமை சமூகத்தை எதிர்த்துப் போரிட்ட
ஒரு இளம் பெண்ணின் கதை) 200

பின்னுரையாக ஒரு விமர்சனக் குறிப்பு -
கலாநிதி ந. இரவீந்திரன் 204

மலையக நாட்டார் இலக்கியம் மரபும் மாற்றமும்

ஒவ்வொரு மொழியிலும் எழுத்து இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னர் வாய்மொழிப் பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கி விட்டன. அவ்விலக்கியத் தொகுதியானது வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக எடுத்துக் கூறுகின்றவையாகவும் சில வேளைகளில் அவ்வனுபவங்களைப் பின்னணியாகக் கொண்ட புராண இதிகாசக் கதைகளாக-கூத்துக்களாகப் பல வடிவங்களில் காணப்படுகின்றன. எழுத்திலக்கியமானது நாட்டார் இலக்கியத்திலிருந்து தோன்றியதொன்று என்றபோதிலும் அது தோன்றி வளர்ச்சி அடைந்த பின்னர் நாட்டார் இலக்கியத்திலிருந்து பிரிந்து விட்டது. அதேவேளை எழுத்திலக்கியம் தேக்கம் பெற்ற காலங்களிலெல்லாம் நாட்டார் இலக்கியத்தின் துணையுடனேயே ஜீவ சக்தி பெற்று வளர்ச்சி அடைந்தது. அந்தவகையில் மனித குலத்தின் தலை சிறந்த படைப்புகள் யாவும் சாதாரண மக்கள் சாரிகளால் உருவாக்கப்பட்டவையாகும். தனியொருவரின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் கலைப்படைப்பை விட, கூட்டுப் படைப்பு இலக்கிய நயம் கொண்டதாக மட்டுமன்று நமது மக்களின் மனதில் நெடுநாள் நின்று நிலைக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதுடன் சமூகப் புரட்சியைத் தூ ண்டும் சக்தியாகவும் அமைந்திருக்கும் என்பது சமூக நியதி . இத்தகைய சிறப்புகளைக் கொண்டதாக நாட்டார் பாடல்கள் விளங்குகின்றன.

நாட்டார் இலக்கியம் பற்றி நாட்டாரியல் ஆய்வாளர்கள் பல கோணங்களில் வரையறை செய்துள்ளனர். அவற்றினைத் தொகுத்து நோக்கி பின்வரும் விடயங்களை நாட்டார் இலக்கியத்தின் பொதுப் பண்புகளாக எடுத்துக் கூறலாம்:

- கூட்டுப் படைப்பாக அமைந்தது,
- பரம்பரை பரம்பரையாகக் கையளிக்கப்படுவது,
- ஆசிரியர் பெயரில்லாதது,
- இலக்கண வரையறைக்குட்படாதது,
- பேச்சு வழக்கிலானது,
- வாய்மொழியாகப் பரவுவது,
- எழுதப்படாதது,
- அச்சிடப்படாதது,
- பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது,
- குறித்த மக்கள் குழுவினரால் பகிர்ந்து கொள்ளப்படுவது,

இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்க முக்கிய விடயம் ஒன்றுள்ளது. அதாவது மிக அண்மைக் காலம் வரை நாட்டார் இலக்கியம் "எழுதப் படாதது", "அச்சிடப்படாதது" எனத் தமிழக மற்றும் இலங்கை நாட்டாரியல் ஆய்வாளர்கள் கருதினர். இது தவறான புரிதல் என்பதை வரலாற்றடிப்படையில் சில நாட்டாரியல் ஆய்வாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்த பேராசிரியர் நா. வானமாமலை இது விடயத்தில் தெளிவானதோர் நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார். இவ்விடத்தில் அவரது பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்:

> "ஒரு நாட்டுப்பாடல் எப்படி உருவாகிறது? தொழில் களங்களில் ஒரு பாட்டை பலர் உருவாக்கலாம். ஏற்றம், நடுகை முதலிய தொழில் பாடல்கள் தொழிலாளரது பொதுவான உணர்ச்சியால் இசையாகி வெளிப்படுவன. அதுவல்லாமல் ஒரு சமூக நிகழ்ச்சியை வர்ணிக்கவும், சிக்கலான கதையமைப்பையுடைய கதையைப் பாடலாகப் பாடவும் இந்த முறை உதவாது. சிவகாசிக் கலகத்தை எடுத்துக் கொள்வோம். இத்தொகுப்பிலே நாலைந்து பாடல்கள் உள்ளன. அவற்றில் இரண்டில் எழுதியவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எழுதப்பட்டால், எழுதியவர் பெயர் தெரிவதால் மட்டும் அது நாட்டுப்பாடல் தன்மையை இழந்து விடாது."

இரத்தினச் சுருக்கமான இவ் வரிகளை நோக்குகின்ற போது ஓர் உண்மை வெளிப்படுகின்றது. அதாவது நாட்டார் இலக்கியம் என்பதே ஒரு நிகழ்வின் மீது பொது மக்கள் கொண்டிருக்கின்ற உணர்வினைப் பிரதிப்பலிப்பதாகவே அமைந்துள்ளன. எழுதப்பட்ட இலக்கியம் மக்களின் உணர்வுடன் சம்பந்தப்பட்டு நாட்டார் பண்பாட்டு மதிப்புகளுக்கேற்ப அது பரவுமாயின் அது நாட்டார் இலக்கியமாகும். மலையகக் கூத்துகளில் பாடப்படுகின்ற பெரும்பாலான பாடல்கள் அச்சிடப்பட்டு நூல்களாக (உதாரணமாக, காமன் கூத்துப் பாடல்களில் பெரும்பாலானவை நவரத்தின ஒப்பாரி என்ற தொகுப்பில் அடங்கியவையாகும்) வெளிவந்தவையாகும். எனவே நாட்டார் இலக்கியத்தின் பொதுத் தன்மை என்பது அதன் படைப்பில் இல்லை. அதன் பரவுந் தன்மையிலே தங்கியிருக்கின்றது என்பதை நாட்டார் இலக்கியத்தை நுண்ணயத்துடன் நோக்குபவர்களால் உணர முடியும்.

இவ்விடத்தில் ஓர் உதாரணத்தை நோக்குவோம் :

"தண்டுக்கலா தோட்டத்திலே
திண்டு முண்டு கணக்கப்பிள்ளை
துண்டு துண்டா வெட்டிட்டாங்க
யாரோ தாங்க
கண்ட துண்டமாக போச்சிங்க
கழுத்து முண்டம்
கைலாசம் சேர்ந்திருச்சிங்க"

இப்பாடல் ஹட்டன் பகுதியில் அமைந்துள்ள தண்டுகலா என்ற தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு எழுந்த பாடலாகும். இப்பாடல் ஜில் சுல்த்தான் என்பரால் எழுதப்பட்டுள்ளது. மலையக மக்களிடையே இப்பாடல் செல்வாக்குப் பெற்று பரவியிருக்கின்றது. இப்பாடலை சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் யாரைக் கேட்டாலும் பாடிக் காட்டுவர். ஆனால் அம்மக்களுக்கு பாடியவர் பெயர் தெரியாது. பாடலின் வடிவம், மெட்டு என்பன நாட்டார் பாடல் வடிவத்திலே அமைந்திருப்பதைக் அறியலாம். எனவே இப்பாடல் மலையக நாட்டார் பாடல் என்ற தகுதியைப் பெறுகின்றது.

நாட்டார் இலக்கியம் என்பது சமுதாயத்தின் ஓர் அம்சம். கலையாக்க மரபுகள், விழுமியங்கள் என்பனவற்றின் களஞ்சியமாகவும் உள்ளன. ஆகவே மனிதன் படைக்கும் ஏனைய பொருட்களைப் போலவே நாட்டார் இலக்கியமும் கால, தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டது. சமுதாய மாறுதல்களுக்கு ஏற்ப நாட்டார் இலக்கியமும் மாற்றமடைகின்றது. இம் மாறுதலைப் பிரதிப்பலிக்கும் வகையில் புதிய சிந்தனைகளும் உணர்ச்சிப் போக்குகளும் தோன்றுகின்றன. எழுத்தறிவற்ற பாமர மக்களிடையே வாய்மொழியாகப் பரவிய இலக்கியத் தொகுதியே நாட்டார் இலக்கியம் எனத் தவறாகக் கருதுவோரும் உளர். அத்தகைய பார்வை கொண்டிருந்த சில ஆய்வாளர்கள் எழுத்தறிவு குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பெற்ற புதிய சூழலில் தோன்றிய பாடல்களைக், கதைகளை நாட்டார் இலக்கியமாக ஏற்கத் தவறினர். மலையக நாட்டார் இலக்கிய ஆய்வுகளில் இத்தகைய தவறான பார்வை மலிந்து கிடக்கின்றது.

மலையக நாட்டார் இலக்கியத்தில் காலத்திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. சில சமயங்களில் சில நாட்டார் பாடல்கள் கதைகள் வழக்கொழிந்து சென்றுள்ளன. உதாரணமாக இன்று

மலையகத்தில் ஒப்பாரிப் பாடல்களும் நலங்குப் பாடல்களும் மறைந்து வருகின்றன. பல இடங்களில் ஒப்பாரி வைத்தல் என்ற நிகழ்வு "கூலிக்கு மாரடித்தல்" என்ற நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் சில நாட்டார் பாடல்களும் கதைப்பாடல்களும், கூத்துகளும் மறைகின்றன என்பதற்காக, அவை முழுமையாக மறைகின்றன என நாம் ஒப்பாரி வைக்க வேண்டியதில்லை. மலையகத்தில் இப்போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை மு. சிவலிங்கத்தின் "மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்" என்ற தொகுப்பு எடுத்துக் காட்டுகின்றது. இத் தொகுப்பில் எழுதப்பட்டு பின் மலையக நாட்டார் பாடல் தகுதியைப் பெற்ற சில பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் தொண்ணூறுக்குப் பின் எழுத்துலகில் தம்மை இணைத்துக் கொண்ட லெனின் மதிவானம் தனது எழுத்துக்களில் தொடர்ந்து இப்பார்வையை வலியுறுத்தி வந்துள்ளமையும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

நாட்டார் இலக்கியம் தொடர்பில் இன்னொரு தவறான புரிதலும் காணப்படுகின்றது. அதாவது நாட்டார் பாடல்கள் வாய்மொழித் தொடர்பு பட்டவையெனவும் அவற்றை எழுத்து வடிவிற்குக் கொண்டு வருகின்றபோது அதன் பண்பை இழந்து விடுகின்றது எனவும் கருத்தாடல்கள் முன்வைக்கப்படுகின்றன. மலையக மக்களின் கல்வித் தகுதியை எடுத்து நோக்குகின்றபோது எழுத்தறிவு மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த எழுத்தறிவு மட்டத்தில் இந்த நிலையை நினைத்துப்பார்த்திருக்கக் கூட முடியாது. இந்நிலையில் மலையக மக்களின் நாட்டார் பாடல்களைச் சேகரித்து வைத்திருக்கக் கூடிய வசதியோ வாய்ப்போ கிடைத்திருக்காது. மேலும் மலையக நாட்டார் பாடல்களை ஏட்டிற்குக் கொண்டு வருகின்ற முயற்சிகள் மிகவும் அரிதாகவே காணப்பட்டது. இவ்வாறான சூழலில் ஸி.வி. வேலுப்பிள்ளை மலையகமக்களிடையே வாய்மொழியாகக் காணப்பட்ட நாட்டார் பாடல்கள் சிலவற்றினைத் தொகுத்து வெளியிட்டமை இத்துறையில் மிக முக்கியமான சாதனையாக அமைந்தது. ஸி.வி.க்குப் பின்னர் இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் இடம்பெறவில்லை என்றே கூறவேண்டும். இருப்பினும் மு.சிவலிங்கத்தின் மலையக நாட்டார் பாடல்கள் தொகுப்பு பயனுள்ள முயற்சியாகக் காணப்படுகின்றது. இவை தவிர மலையக நாட்டுப்புறவியல் குறித்த பாடல்கள், கதைகள், மற்றும் அது தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டு வருவதில் பேராசிரியர்கள் ந.வேல்முருகு, க.அருணாசலம், கலாநிதிகள் துரை.மனோகரன், காரை.எஸ். சுந்தரம்பிள்ளை திருவாளர்கள் ஏ.பி.எம். கோமஸ், சாரல் நாடன், அந்தனி ஜீவா, வ.செல்வராஜா, சு.முரளிதரன், லெனின் மதிவானம், ஸ்டாலின்

சிவஞானஜோதி, பெ.சரவணகுமார், கோணேஸ்வரன், திருமதிகள். அம்பிகை வேல்முருகு, ஆர்.ஜோதிமலர், சோபனாதேவி முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மலையக மக்கள் தென்னிந்திய தமிழ் கிராமப் பின்னணியைத் தமக்குத் தாயகமாகக் கொண்டவர்கள் என்ற போதிலும் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முறையின் கீழான புதிய சூழல், உற்பத்தி முறை, உற்பத்தி உறவு என்பனவற்றுக்கேற்றவகையில் ஒரு பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர். தென்னிந்தியாவில் பாடப்பட்ட நாட்டார் பாடல்கள் எவ்வாறு இலங்கையின் பெருந்தோட்டச் சூழலுக்கு ஏற்ற வகையில் மாற்றமடைந்தது என்பதைப் பின்வரும் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தென்னிந்தியாவில்.

ஏத்தமடி தேவிகுளம்
எறக்கமடி மூணாறு
தூரமடி நைனாக்காடு
தொடந்துவாடி நடந்துபோவோம்

எனப் பாடப்பட்ட பாடல் இலங்கையில்

ஏத்தமடி பெத்துராசு
இறக்கமடி ராசாத்தோட்டம்
தூரமடி தொப்பித் தோட்டம்
தொடந்துவாடி நடந்து போவோம்.

என மாற்றமடைந்துள்ளது.

தென்னிந்தியாவில்

ஓட்டவரத பாருங்கடி
ஓட்ட ஒசந்து வரத பாருங்கடி
ஓட்ட மேலே நம்மையா முதலாளி
ஒசந்த சம்பளம் கேளுங்கடி

என பாடப்பட்ட பாடல் இலங்கையில்

குதிரவரத பாருங்கடி
குதிர குணிஞ்சி வரத பாருங்கடி
குதிர மேலே நம்மையா கங்காணி
கும்பிட்டு சம்பளம் கேளுங்கடி

என மாற்றமடைந்துள்ளது.

மேற்குறித்த பாடல்கள் தென்னிந்திய வாழ்கையைப் பிரதிபலிப்பதாக மாத்திரமன்று புதிய சூழ்நிலைக்கேற்ப அவர்களது வாழ்முறைகள் மாற்றமடைந்து உள்ளதைக் காட்டுகின்றது. இவ்வாழ்நிலை மாற்றம் என்பது மேல்வாரியானதொன்றாக அல்லாமல் அடிப்படையான மாற்றமாகவும் அமைந்து காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் நிலவுடைமை சமூகவமைப்பில் விவசாயிகளாகக் கட்டுண்டு கிடந்த மக்கள் நிலம் பற்றிய சிந்தனையுடன் இருந்தனர். இதனைப் பின்வரும் பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன:

ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாய நாமறந்தேன்.

பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிருருக்க
ஏன்டி வந்தே கண்டிச் சீமை

மேற்குறிப்பிடப்பட்ட இவ்வரிகள் தாயக நினைவுகளை மீட்பதாக மட்டுமன்றி தமது உடமை குறித்த சிந்தனையையும், நிலம் குறித்த சிந்தனையையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. ஆனால் இலங்கையின் பெருந்தோட்டத் துறையில் இம்மக்கள் உடமைகள் ஏதும் அற்ற அதே சமயம் தமது உழைப்பை சுதந்திரமாக விற்கக் கூடிய புதியதோர் பாட்டாளி வர்க்கமாக மாற்றமடைந்துள்ளனர். இதனை மலையக நாட்டார் பாடல்கள் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றியும் நோக்க வேண்டியுள்ளது. மலையகத்தில் ஆரம்பத்தில் அறிமுகம் செய்யப்பட்ட

கோப்பிப் பயிர்ச்செய்கை பருவகாலப் பயிர்ச்செய்கையாக அமைந்தமையினால் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு வேலையில்லாத காலங்களில் இந்தியாவிற்குச் சென்று வந்தனர். தேயிலை உற்பத்தி தொடங்கிய பின்னர் இந்நிலைமை மாற்றமடைந்தாலும் 1957 இல் திருச்சிராப்பள்ளியில் இருந்த இலங்கையின் குடியகல்வு அலுவலகம் மூடப்படும் வரையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்குப் போய்வந்து கொண்டிருந்தனர் என்பதை திரு. பி.ஏ. காதர் தமது ஆய்வுகளில் பதிவாக்கியிருக்கின்றார். இந்நிலையில்- இக்காலங்களில் மலையக மக்களிடையே தமது இருப்பு மற்றும் தேசியம் குறித்த சிந்தனை ஆரம்ப நிலையிலிருப்பதைக் காணலாம்.

பிறந்த மண்ணைத் துறந்து புகுந்த மண்ணில் தம் வாழ்வை அமைத்த போது அவர்களின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொண்டன.

"கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்தமலை
அந்தா தெரியுதடி

எண்ணிக் குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கயிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலை யத்த கங்காணி

அந்தமுனா தோட்டமினு
ஆசையாத் தானிருந்தேன்
ஓர மூட்டத் தூக்கச் சொல்லி
ஓதைக்கிறாரே கண்டாக்கையா

காலையிலே நெர புடிச்சு
காட்டுத் தொங்க போய் முடிச்சு
கூட நெறயலையே- இந்தக்
கூனபய தோட்டத்திலே

கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கையா பொல்லாதவன்
மொட்ட புடுங்குதின்னு
மூணாள விரட்டி புட்டான்

கோனக்கோன மலையேறி
கோப்பிப் பழம் பறிக்கையிலே
ஒரு பழம் தப்பிச்சினு
ஒதைச்சானய்யா சின்ன தொரை

போன்ற பாடல் வரிகள் ஒரு முதலாளித்துவ சமூகமைப்பில் மலையகத் தொழிலாளர்கள் தம் உழைப்பை சுதந்திரமாக விற்கக் கூடிய பாட்டாளி வர்க்கமாக எவ்வாறு மாற்றமடைந்தார்கள் என்பதனையும், அம் மக்களின் மீதான உழைப்புச் சுரண்டலையும் இழப்புகளையும் வேதனையோடு எடுத்துக் காட்டுகின்றன. இப்பாடல்களில் அவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்த பெரியாங் கங்காணி, கங்காணி, கணக்கப்பிள்ளை, கண்டக்டர், துரை (தோட்ட நிர்வாகி) ஆகியோர் பற்றியும் அவர்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் பற்றிய அம்சங்களே முனைப்புற்றுக் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கின்ற போது மலையக நாட்டார் பாடல்கள் மலையக மண்ணின் தனித்துவங்களை உள்வாங்கி தனித் துறையாகவே விளங்குகின்றது.

இவ்வாறாக, தமது துன்ப துயரங்களைப் பாடிய அம்மக்கள் தமது ஒடுக்கு முறைகளுக்கு எதிராகத் தமது போர்க் குணத்தையும் வெளிக்காட்டத் தவறவில்லை. பின்வரும் பாடல்கள் இதற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாகும்.

கங்காணி கங்காணி
கருத்தச்சட்டை கங்காணி
நாலு ஆளு வரலேன்னா
நக்கிப் போவான் கங்காணி

கங்காணின்னா கங்காணி
கறுப்புச் சட்டை கங்காணி
சஞ்சிகையிலே கூட்டி வந்து
சாகடிக்கும் கங்காணி

ஆனை வாரத பாருங்கடி
ஆனை அசைந்து வரதபாருங்கடி
ஆனை மேலே வர சின்னத்தொரய
அதட்டி சம்பளம் கேளுங்கடி

போன்ற பாடல்கள் தம்மை ஈவிரக்கமற்ற வகையில்

கொடுமைப்படுத்திய நிர்வாக அதிகாரிகள் பற்றிய பாடல்களாக அமைந்துள்ளன. தங்களை ஒடுக்கி, உழைப்பைச் சுரண்டுகின்ற ஆதிக்க வர்க்கத்தினரை விமர்சித்தும் பகிடி செய்தும் இம்மக்களிடையே புழங்கும் பழமொழிகள், பாடல்கள், மரபுக்கதைகள் சிறுவர் விளையாட்டுகள் என்பனவற்றையும் மலையக நாட்டரிலக்கியத்தில் காண முடிகின்றது. இத்தகைய அடித்தள மக்களின் இலக்கியங்களில் காணப்படுகின்ற எள்ளல் உணர்வுகளையும் கலக குரல்களையும் 'நலிந்தோர் ஆயுதம' என்பார் ஆய்வாளர் அ.இருதயராஜ்.

மலையக நாட்டார் பாடல்களைக் கூர்ந்து நோக்குகின்ற போது ஒருண்மை புலனாகாமற் போகாது. இம்மக்கள் எங்கிருந்தோ வந்து தயாராக இருந்த பொருளாதாரத்தை கபளீகரம் செய்து கொண்டவரல்லர். மாறாக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இம்மண்ணுக்குத் தாரைவார்த்து இப் பூமியைப் பசுமை நிறைச் சோலைகளாக்கினர். ஒரு புறமான சுரண்டலும் மறுபுறமான ஒடுக்குமுறைகளும் இம்மக்கள் இம்மண்ணுக்குரியவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தியது. இந்தப் பின்னணியில் எழுந்த தேசிய உணர்வுகளையும் நாம் மேற்குறித்த நாட்டார் பாடல்களில் காணக் கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலில் இவ்வுணர்வு வளர்ச்சி பெற்று வருவதனைக் காணலாம்:

"கூனியடிச்ச மலை
கோப்பிக் கன்று போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி"

இப்பாடல் வரிகள் குறித்து மலையகப் பெரும் கவிஞர் ஸி.வி. வேலுப்பிள்ளையின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொள்கின்றது. "காடுகளை அழித்து புதிய மலைகளை உருவாக்கும் போது சாவு என்பது சர்வ சகஜமானது. மலையகத்தின் ஒவ்வொருவரும் நிச்சயம் சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்தத் தக்க யாரோ ஒரு தங்கையின் அண்ணனைத் தோத்த மலைகளாகத் தானிருக்கும். மலையகத்தின் மலைகள் மீது உங்களுக்கு ஏறிடும் சந்தர்ப்பங்கள் கிடைத்தால் உங்கள் காலடிகளைக் கவனமாக எடுத்து வையுங்கள். ஏனெனில் அவை அண்ணனைத் தோத்த மலைகள்". (மலைநாட்டு மக்கள் பாடல்கள் ப. 96)

இவ்வாறு மலையகம் என்பது தமது உழைப்பால்; உயிர்த் தியாகத்தால் உருவானது என்ற உணர்வின் பின்னணியில் தாம் இம்மண்ணுக்குரியர்கள் என்ற பிரக்ஞை உருவாகி வந்திருப்பதை மலையக நாட்டார் பாடல்கள் சிறப்பாகவே வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாட்டார் இலக்கியம் என்பது உழைக்கும் மக்கள் திரளினரின் படைப்பு என்பதற்காக அவற்றில் இடம்பெறுகின்ற அனைத்து அம்சங்களும் கலகக்குரலாகவோ அல்லது எதிர்க் கதையாடல்களாகவோ கொள்ள வேண்டியதில்லை. கிராமப்புறத்தை அல்லது தோட்டப்புறத்தை இன்பலோகமாகக் காணுவதும், அங்கு முரண்பாடுகள் இல்லையெனப் பார்ப்பதும் ஒருவித "உல்லாசப் பிரயாணிகள்" மனோபாவமாகும். அவ்வாழ்க்கையை உள்நின்று பார்ப்பவர்களுக்கு அங்கும் சூது, களவு, பொறாமை, சமரசம் முதலிய மனோபாவங்கள் நிறைந்திருப்பதை அவதானிக்கலாம். இவ்வாழ்க்கையின் அடியாகத் தோன்றுகின்ற நாட்டார் இலக்கியத்திலும் இவ்வம்சம் விரவிக் கிடக்கும். கதைப்பாடல்களில் இப்போக்கு முனைப்புற்றிருப்பதைக் காணலாம்.

> "கட்டபொம்மு, கான்சாகிபு, முத்துப்பட்டன், காத்தவராயன், குலசேகர பாண்டியன் போன்றோர் மேலாதிக்கத்தை எதிர்த்து முரண்பட்டு மடிந்து நாட்டார் மனத்தில் இடம் பெற்றுவிட்ட வீரத்தியாகிகள் ஆவர். கட்டபொம்முவும் கான்சாகிபும் வெள்ளை மேலாதிக்கத்தையும், பட்டனும் காத்தவராயனும் நிலப்பிரபுத்துவத்தையும், குலசேகரன் கன்னடிய மேலாதிக்கத்தையும் எதிர்த்து மடிந்தார்கள். இவர்களது வீரத்தையும் தியாகத்தையும் வெகுவாகப் புகழ்கின்ற கதைப்பாடல்கள், இவர்கள் எதிர்த்து நின்ற மேலாதிக்கங்களைக் கடுமையாகச் சாடாதது குறிப்பிடத்தக்கது. சொல்லப் போனால் சில சமயங்களில் இவ்வீரர்களுக்குச் சமமாக இம் மேலாதிக்கங்களும் புகழப்பட்டிருக்கின்றன என்பதே உண்மை. கண்டவர் நெஞ்சு திடுக்கிடும் தோக்கலவார் குலப் பாத்திபனாகிய கட்டபொம்முவின் வீரத்தைப் போற்றும் கதைப் பாடல்தான் சென்னையிலுள்ள மேலான துரைமார்களையும் பணிவுடன் புகழ்கின்றது. கட்டபொம்முவின் கதையைச் சொல்லுகிற கதைப்பாடல்கள் எதுவுமே வெள்ளையர்களின் கொடுமையான சுரண்டலை எங்குமே சுட்டிக்காட்டவில்லை." (மார்க்ஸ்.அ, 1991, மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும், பொன்னி புத்தக மையம், சென்னை.பக். 116,117.)

மலையகத்தில் கதைப்பாடலாகக் காணப்படுகின்ற மதுரைவீரன் கதை இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சாதியினரான மதுரைவீரன் நாயக்க மன்னனின் மகள் பொம்மியைக் காதலித்து சிறைப்பிடிக்கின்றான். பொம்மியின் தந்தையும் அவர்களது உறவினர்களும் மதுரை வீரனை எதிர்த்துப் போரிட்டு மடிகின்றனர். மதுரைவீரன் திருமலைநாயக்கனிடம் பணியாற்றும் போது நாயக்க மன்னனின் அந்தப்புர மகளிருள் ஒருத்தியான வெள்ளையம்மாளை சிறையெடுக்க முனைந்த போது மன்னனால் பிடிக்கப்பட்டு மாறுகை மாறுகால் வாங்கப்பெற்றான் எனக் கதை அமைந்துள்ளது. அதே கதை பின்வருமாறு உயர் வர்க்கச் சார்பில் மறுவாசிப்புச் செய்யப்பட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளது.

மதுரைவீரன் காசி அரசனின் மகன் என்றும் விதிவசமாக அருந்ததியர்களால் வளர்க்கப்பட்டான் எனவும் பிற்காலத்தில் கதை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஓர் உயர்சாதிப் பெண்ணை- உயர்வர்க்க ஆடவன் ஒருவன் தான் காதலிக்கவோ மணக்கவோ முடியும் எனும் சாதிய வர்க்க தர்மத்தைப் பாதுக்காப்பதற்காக இக்கதை இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது. இறுதியாக அவனைத் தெய்வமாக உயர்த்துவதும் இத்தகைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் என்பதனையும் அறியமுடிகின்றது. இன்னொருபுறத்தில் தாழ்த்தப்பட்டவர் ஒருவர் மக்கள் மத்தியில் உயர் செல்வாக்கு பெறுகின்ற போது அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாது தமது சாதிக்குரியவராக வர்க்கத்தினருக்குரியவராக மாற்றியமைக்கின்ற நிலையினையும் நாம் இங்கு காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறே மலையகத்தில் நிகழ்த்தப்படுகின்ற கூத்துக்கலையான காமன் கூத்தில் சிவனுக்கு எதிரான (மாயவரை தம்மோடு இணைந்த கடவுளாக கொண்டிருப்பினும்) பாடல்களும் உணர்வுகளும் (சில சமயங்களில் சிவன் கஞ்சா குடித்து மயக்க நிலையில் இருப்பதாகவும் சித்திரிக்கப்படுகின்றது) முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் இறுதியாக சிவனை யாராலும் வெல்ல முடியாது என்ற சைவ மேலாதிக்கம் வெற்றி பெறுவதனை அவதானிக்கலாம்.

இவ்விடத்தில், நாட்டார் பாடல்களுடன் கதைப்பாடல்களை ஒப்பு நோக்குகின்ற போது ஓர் உண்மை வெளிப்படுவதனை அவதானிக்கலாம். கதைப்பாடல்களில் தான் அதிகமாகச் சமரசப் 'ாக்குகள் முனைப்புற்றிருக்கின்றன. கதைப்பாடல்களைப் படைப்பவர் ர், அதன் நுகர்வோர் யார், என நோக்குகின்ற போது சமூகத்தில் உயர் நிலையிலுள்ளள அல்லது உயர்நிலையிலுள்ளவர்களை அண்றிப்

பிழைக்கின்றவர்களாலுமே இப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஓய்விலிருந்தும் யோசிப்பதிலிருந்தும் உருவான இக்கதைப்பாடல்களில் தனிமனித ஆற்றல்களை மட்டுமே குவித்துக்காட்டுகின்ற செவ்வியல் மரபின் தாக்கத்தையும் அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. பாடலாசிரியருக்கும் நுகர்வோருக்கும் இடையிலான தொடர்பும் இங்கு செல்வாக்குச் செலுத்துவதையும் அவதானிக்க முடிகின்றது. நாட்டார் பாடல்கள் உழைக்கும் சூழலில் பாடப்படுவதால் அவற்றில் சூழலின் நேரடியான தாக்கம் இருப்பதனால் சமரசப் போக்குகள் குறைவாகக் காணப்படுகின்றன. உழைப்பிலிருந்து பிறந்த இந்தப் பாடல்கள் தங்களது ஒட்டு மொத்தமான சமூகத்தின் கூட்டுச்செயற்பாடாக- அனைவரையும் உள்ளடக்கியதாக-அனைவருக்கும் சமவாய்ப்பு அளிப்பதாக அமைந்துள்ளமை அதன் பலமாகும். இருப்பினும் அவற்றிலும் சமரசப் போக்குகள் இல்லை என்று கூறுவதற்கில்லை. எடுத்துக் காட்டாக கங்காணி, கணக்கபிள்ளை, சின்னத்துரை முதலானோர் பற்றிய பாடல்களில் இப்பண்பினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சில பாடல்களை நோக்குவோம்!

திண்ணயத் திண்ணையை கூட்டுங்கடி- அந்த
தெருவு திண்ணைய கூட்டுங்கடி
நம்மையா கங்காணி சாஞ்சிருக்கிற
சருகை திண்ணைய கூட்டுங்கடி

பாகை படந்ததை பாருங்கடி- அது
பத்திப் படந்ததைப் பாருங்கடி
பாகை விதைபோல நம்மையா கங்காணி
பல்லு வரிசையைப் பாருங்கடி

ஆறடிதான் வங்களாவாம்
அறுவதடி பூந்தோட்டம்
பூஞ்செடிக்கு தண்ணிபோடும்
புண்ணியரே என் பொறப்பு

சாமித் தொரை பங்களாவில்
தாராவும் கோழியும் மேயுதாம்
தோட்டத்தை சுத்தி பூஞ்செடியாம்
சுத்தி வளைஞ்சு பாருங்கடி

பொட்டுப் பொட்டா கையெழுத்தாம்
பொன் பதிச்ச பேனாவாம்
ஆதரிச்சு பேரு போடும்
நம்மையா கணக்கபிள்ளை

தம்மை இழிவாக நோக்கி அவர்களின் உழைப்பைச் சுரண்டுகின்ற இதர வர்க்கங்களுடன் இம்மக்கள் சமரசம் செய்துக் கொள்கின்ற பண்பினை நாட்டார் பாடல்களில் காணக் கூடியதாக உள்ளது.

எழுத்திலக்கியமோ கல்வெட்டு ஆதாரமோ கிடைக்கப் பெறாத நிலையில் அவற்றினைத் தேடி ஆராய்வதற்கும்- தமது இருப்பினை நிலைநிறுத்துவதற்கும் நாட்டார் இலக்கியம் குறித்த தேடல், ஆய்வு என்பன அவசியமாகக் காணப்பட்டன. நவீன காலத்தில் நாட்டார் இலக்கியத்தின் ஊடாக சமூக வரலாற்றைத் தேடுவதற்குப் பதிலாக உழைக்கும் மக்களின் சமூகமாற்றப் போராட்டத்தின் ஒர் அங்கமாக நாட்டர் இலக்கிய சேகரிப்பு ஆய்வு முயற்சிகள் நடைபெறுகின்றன. அம் முயற்சி இரு தளங்களில் இடம்பெற்று வருவதனைக் காணலாம்.

நாஜி ஜேர்மனியில் ஹிட்லர் மக்களிடையே இனத்தூய்மையை வளர்க்கவும் அதனூடாக மக்களை ஆரிய இனவெறியர்களாக மாற்றுவதற்கும் ஏற்ற சாதனமாக நாட்டாரியலை துணையாக்கிக் கொண்டான். இவ்வாறே ஆதிக்க அரசியல் சக்திகள், நாட்டார் வழக்காறுகளில் செவ்வியல் கூறுகளை இணைத்து அதன் ஆன்மாவை சிதைக்கின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்தளவில் நாட்டார் வழிபாட்டு முறைகளில் மத அடிப்படைவாத அரசியலின் ஊடுருவல் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. நாட்டார் தெய்வங்கள் பிறப்பு மாற்றம் செய்யப்பட்டு அவை வடமொழியாக்கம் பெறுகின்றன. பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டார் வழிபாட்டு முறைகள் ஒழிக்கப்பட்டு ஒரேவகையான நிறுவன சமய வழிபாட்டு முறை திட்டமிட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது. (சிவசுப்பிர மணியம். ஆ.-2005, நாட்டார் வழக்காற்றியல் அரசியல், கங்கு வெளியீடு, சென்னை, ப. 58.)

இதற்கு மாறாக, சோவியத் இரசியாவில் நாட்டார் இலக்கியத்தின் சமூக பயன்பாடு என்பது வேறுவிதமாக அமைந்திருந்தது. வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்கு வதற்கான போராட்டத்தில் நாட்டார் இலக்கியத்தைத் துணையாகக் கொண்டனர். நாட்டார் இலக்கியத்தில்

காணப்பட்ட தொழிலாளர் விவசாயிகளின் எழுச்சிகளையும் போராட்டங்களையும் கவனத்திலெடுத்தனர். உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டங்களை முன்னெடுக்கின்ற போது அம் மக்களின் விருப்பு, வெறுப்பு, அவர் தம் உறுதிப்பாடு, போராட்டங்கள், எழுச்சிகள் முதலியன பற்றிய தேடல்கள் அவசியமாகும். இதனை நாட்டாரியலில் இருந்தே தேடினர். மக்களின் எதிர்க் குரலையும் எதிர்த்து இயங்கும் மரபையும் வெளிப்படுத்தும் நாட்டார் இலக்கியங்களை சமூகமாற்றப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டது.

நவீன காலத்திலும் நாட்டார் இலக்கியம் என்பது தமது சமூக வர்க்கத் தேவைகளுக்கு ஏற்றவகையில் மறுவாசிப்புச் செய்யப்பட்டுள்ளன. பின்நவீனத்துவவாதிகள் உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிரான வகையில் நாட்டார் இலக்கியத்தை மறுவாசிப்புச் செய்துள்ளனர். இவர்களின் ஆய்வுகளில் தலித்தியம், பெண்ணியம், தேசியம் (குறுந்தேசிய வாதம்) முதலிய போக்குகள் பிரதானப் படுத்தப்பட்டுள்ளன. மறு புறத்தில், பொது மக்கள் சார்பான கண்ணோட்டத்தில் நாட்டார் இலக்கியத் தொகுதி மறு வாசிப்பு செய்யப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். பாரதியின் பாஞ்சாலி சபதம், பிரளயனின் உபகதை நாடகம் முதலியவற்றை இங்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

அவ்வகையில் நாட்டார் இலக்கியத் தொகுதியை அரசியல் தளத்தில் பயன்படுத்துகின்ற போக்கு 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே இடம்பெற்று வந்துள்ளதை அவதா னிக்கலாம். அப்போக்கு முனைப்படைந்து இன்று உலகளவில் முக்கியத்துவம் பெற்று வருவகின்றது. நாட்டார் விளையாட்டுகள் எவ்வாறு அரசியலுக்கு (பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வதிகாரியாகத் திகழ்ந்த மார்கோஸ் என்பருக்கு எதிராக அவனால் கொல்லப்பட்ட தளபதி அக்வினோவின் மனைவி கோரி அக்வினோ அதிபர் தேர்தலில் போட்டியிட்ட போது) பயன்படுகின்றது என்பதற்கு 1980 களில் பிலிப்பைன்ஸ் நாட்டில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் நாட்டார் விளையாட்டுகளில் ஒன்றான சேவல் சண்டையை எவ்வாறு தமக்குச் சார்பாக தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதைப் பின்வரும் உதாரணம் மூலமாக அறியலாம்.

"இரண்டு நிஜமான கோழிகளை மோத விடுவதற்குப் பதிலாக அக்வினோ மாதிரி முகமூடி அணிந்த சேவல், மார்க்கோ முகமூடி

அணிந்த இன்னொரு சேவல் என்ற இரண்டு மனித உருவங்களை மோத விட்டார்கள். இந்தச் சண்டைக்கு நடுவராக இருந்து தீர்ப்பு வழங்குபவராக அப்போது அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ரெனால்ட் ரிகனின் முகமூடி அணிந்த இன்னொருவர்.

நாடகமாக மாற்றப்பட்ட இவ்விளையாட்டை மக்கள் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சுற்றிலும் அக்வினோ வென்றாலும் தீர்ப்பு மார்க்கோஸிற்குச் சாதகமாக வழங்கப்படுகிறது. மக்கள் வெளியில் இருந்து கூச்சலிடுகிறார்கள். ஆனால் ரிகன் திருந்துவதாயில்லை. திரும்பவும் அடுத்த சுற்றில் அக்வினோ தான் வெல்கிறார். ஆனால் தீர்ப்பு மார்க்கோஸிற்குச் சாதமாக வழங்கப்படுகின்றது. திரும்பவும் மக்கள் கூச்சலிடுகிறார்கள். ரிகன் திருந்துவதாய் இல்லை. அடுத்தும் இது போல் பாதகமான தீர்ப்பு வழங்கப்படுகிற சமயத்தில் ஆடுகளத்தில் புகுந்து ரிகனை தூக்கிப் போட்டு விட்டு மக்கள் தீர்ப்பு வழங்குகின்ற பொறுப்பினைக் கையில் எடுக்கிறார்கள். நாடகமும் நாட்டார் விளையாட்டும் இங்கு மக்கள் பங்கேற்பினை உருவாக்கியது. நாட்டில் அந்தந்த ஊரில் ஒரே நாளில் பலவிதமான குழுக்கள் இதனைச் செய்ததால் மக்களை வாக்களிக்கும் முன் சிந்திக்கின்ற நிலைக்குக் கொண்டு போய் விட்டது. இதற்குப் பின்புலத்தில் இருந்த இயக்கத்தின் பெயர் 'PETA' (Phillipines Educational Theatre Association). *(மு.கு நூ.பக்.41,42.)*

மலையக நாட்டர் பாடல்களை ஊன்றிக் கவனிக்கின்ற போது ஓர் உண்மை தெளிவாகத் தெரிய வரும். நாட்டாரியல் ஆராய்ச்சிக்கே உரிய சில சிறப்பு நெறிமுறைகள் இருப்பினும் ஏனைய துறைகளில் பயின்றுவரும் ஆய்வுநெறிகளும் அணுகுமுறைகளும் தவிர்க்கவியலாதவாறு அதற்குப் பொருத்தமானவையாக அமைந்து காணப்படுகின்றன. உதாரணமாக மலையக மக்களின் வரலாறு தொடர்பான நம்பகமான சான்றுகள் இல்லாத போது அல்லது தெரியாத காலகட்டத்தில் - சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொதுவாக மலையக நாட்டார் பாடல்கள் தொகுப்பு முயற்சிகளும் அவற்றிக்கு விளக்கமளிப்பதுமே தேவையாக இருந்தது. அவ்வாறாக நாட்டார் பாடல்களுக்கு விவரண விளக்கம் அளிப்பது கூட மொத்தப்பெரும் சாதனையாக அமைந்து காணப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. அதற்குப் பிற்பட்ட காலங்களில் மலையக

மக்களின் வரலாற்றை அறிவதில் -அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதிலும் மலையக நாட்டார் இயல் ஆய்வாளர்கள் முக்கிய கவனமெடுத்து வந்துள்ளனர். அவ்வகையில் மலையக மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் தேடிப் பெறுவதில் இவ்விலக்கியத் தொகுதி முக்கியமான ஆவணமாகத் திகழ்ந்துள்ளது.

தற்காலத்தில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வானது பண்பாட்டுக் கலசமாகப் பாதுகாக்கின்ற அல்லது இரசனை வழி மதிப்பீடுகளாகவோ, வரலாற்றைத் தேடும் ஆய்வு முயற்சிகளாகவோ அல்லாமல், சமூகமாற்றத்திற்கான போராட்டத்தில் அதன் பயன்பாடு குறித்த ஆய்வுகளாகவே அவை வளர்ந்துள்ளன. "நாட்டார் இயல் ஆய்வு சேகரிப்பு என்பது வெறும் ஏட்டுச் சுரக்காயாக அல்லாமல் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமாக அது திகழ வேண்டும்" என்பார் பேராசிரியர் க.கைலாசபதி. அத்தகைய இயங்காற்றலைச் சாத்தியப்படுத்துவதற்கான நாட்டாரியல் தேடலே காலத்தின் தேவையாக உள்ளது. உழைக்கும் மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக இருக்கும் நாட்டார் வழக்காற்றியலே குறிப்பிட்ட சமுதாயத்தின் உற்பத்தி முறை, உற்பத்தி உறவு அதனடியாக எழுகின்ற வர்க்க முரண்பாடுகளையும் கருத்தோட்டங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. வர்க்க உணர்வுடன் தான் வரலாறு எழுதப்படுகின்றது என்பது மார்க்சியத்தின் அடிப்படை. அவ்வகையில் ஒவ்வொரு காலகட்டத்தின் வரலாறும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே முகிழ்ந்து வந்துள்ளதை வரலாறு எமக்கு எடுத்துக் காட்டியுள்ளது. இத்தகைய சூழலில் வெளிப்படுகின்ற நாட்டார் பாடல்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ குறிப்பிட்ட வர்க்கத்தின் கலகக்குரலையோ சமரசத்தையோ வெளிப்படுத்தி நிற்கும். சமூகமாற்றத்திற்கான இயக்கங்கள், புத்தி ஜீவிகள் நாட்டார் இலக்கியத்தில் காணப்படும் பலத்தை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படுவது பின்னடைவிற்கும் பலவீனத்தை மாத்திரம் கவனத்திலெடுத்துச் செயற்படுவது விரக்திக்கும் வழிவகுக்கும் என்பதைக் கடந்தகால அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றினை நாட்டார் இலக்கியத் தொகுதி யதார்த்தமாகவே பிரதிப்பலித்து நிற்கின்றது. அந்தவகையில் நாட்டார் இலக்கியம் கடந்தகாலத்தைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக மாத்திரமன்று நிகழ் காலத்தின் உரத்த குரலாகவும் அமைந்து காணப்படுகின்றது. இன்னொரு புறத்தில் வர்க்க மோதலின் பிரதிப்பலிப்பாகவும் ஆயுதமாகவும் திகழ்கின்றது. இந்த பின்புலத்தில் மலையக நாட்டார் பாடல்களின் சேகரிப்பும் ஆய்வுகளும் இடம்பெற வேண்டும்.

மலையக நாட்டார் இலக்கியம் குறித்து நோக்குகின்றபோது அவ்விலக்கியத் தொகுதி மலையக மக்களின் வாழ்க்கையையும் கலாசார, பண்பாட்டுக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டதொரு துறையாகக் காணப்படுகின்றது. மலையகத்தைப் பொறுத்த மட்டில் நாட்டார் இலக்கியத்தில் இத்தகைய முயற்சிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இருப்பினும் நாட்டார் பாடல்களை மாற்றம் செய்தும் , மாற்றம் செய்யாமலும் புதிய பாடல்களை நாட்டார் இசையில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சி. சிவசேகரம் மலையக நாட்டார் இலக்கிய வடிவ மெட்டினைப் பயன்படுத்தி பின்வரும் கவிதையை எழுதியுள்ளார்:

கும்மியடி தோழி கும்மியடி- மலை
நாடு விழித்தெழக் கும்மியடி
நம்மை உறுஞ்சி கொழுத்திட்ட அட்டைகள்
காலில் நசித்திடக் கும்மியடி

கொழுந்து கிள்ளிய கைகளிற் செங்கொடி
கொள்ளை ஒளிதரக் கும்மியடி
அழுது வற்றிய கண்களிலே சினம்
அனல் எழுப்பிடக் கும்மியடி

பள்ளிப்படிப்புக்கும் பட்டம் பதவிக்கும்
பிள்ளைகட்குத் தரம் இல்லையென்றார்
கள்ளத் தனங்களைக் கண்டுகொண்டா யெங்கள்
கல்வியுரிமைக்குக் கும்மியடி

....

கூடுகள் போல் லயன் காம்பராச் சீவியம்
கூலி அடிமைக்குப் போதுமென்றார்
வீடு வளவுகள் வீதிகள் தோட்டங்கள்
வேண்டுமெமக்கென்று கும்மியடி

இப்பாடல் வரிகளில் மலையக நாட்டார் இலக்கியத்தின் தாக்கம் காணப்படுவதனைக் காணலாம். இத்தகுதியை மாத்திரம் கொண்டு இதனை நாட்டார் பாடல்களாகக் கொள்ள முடியாது. இப்பாடல் மலையக மக்களிடையே பரவி நாட்டார் இலக்கியத் தன்மையைப் பெறுமாயின் அவற்றை நாட்டார் பாடலாகக் கொள்ள முடியும்.

முடிவுரை

மலையக நாட்டார் வழக்காற்றியல் நீரோட்டமானது அரசியல், சமூக, பொருளாதார நோக்கில் ஆய்வு செய்யப்படல் வேண்டும். ஆய்வுத் தேடல் மூலமாக கிடைக்கின்ற முடிவுகள் பொதுமைப்படுத்தப்படல் வேண்டும். நாட்டார் இலக்கியத்தில் உழைக்கும் மக்களின் கலகக்குரல் சற்றுத் தூக்கலாக வெளிப்படும். இதனை ஆதாரமாகக் கொண்டு அவ்விலக்கியத் தொகுதியில் சமரசப் போக்குகள் இல்லை என்ற முடிவுக்கு வரவேண்டியதில்லை. நாட்டார் இலக்கியத்திலும் சமரசங்கள், மௌனங்கள், குறிப்பிட்ட கால கட்ட கருத்து நிலைகளில் உருவாகும் ஆதிக்கக் கருத்துகள் என்பன இடம்பெறும். இவற்றினையும் கவனத்திலெடுத்துக் கொள்ளல் அவசியம்.

சூரியகாந்தி -2010

மறைக்கப்பட்ட ஆளுமைகள்
திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யரை முன்னிறுத்தி..!

மனித சமூக வளர்ச்சிப் போக்கிலே ஒவ்வொரு சமூகமும் காலத்தின் தேவைக்கேற்றவகையில் இயக்கங்களையும் அறிஞர்களையும்-புத்திஜீவிகளையும் - சமூகச் செயற்பாட்டாளர்களையும் உருவாக்கிக் கொள்கின்றது. காலத்தின் தோற்றுவாய்களான இவ்வியக்கங்கள், அதனடியாக உருவாகின்ற ஆளுமைகள் காலத்தின் உற்பத்திப் பொருளாக மட்டுமன்று காலத்தை உட்புவிப்பவையாகவும் அமைந்திருக்கின்றன. தம் காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிப்பலிக்கும் ஆளுமைகளே காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலினையும் பெற்றுவிடுகின்றன. இவ்வகையான சமூக ஆளுமைகள் தமது விசேட ஆற்றல் செயற்திறன் போன்றவற்றால் சமூக வளர்ச்சிக்கு விசைகொடுத்து தகுந்த பங்களிப்பையும் வழங்கிச் செல்கின்றனர். அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் தோன்றிய சிந்தனையாளர், சமூகச் செயற்பாட்டாளர் என்ற வரிசையில் தனித்துவமான முத்திரையைப் பதித்துச் சென்றவர் திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர். ஆற்றல் மிக்க அரசியல்வாதியாக, கவிஞராக, பத்திரிக்கையாளராக, வெளியீட்டாளராக இருந்ததுடன் களத்தில் இறங்கிச் செயற்பட்ட வீரருமாவார். இவர் குறித்த கட்டுரைகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன என்றபோதினும் அவை அம்மையாரின் ஆளுமையை முழுமையாக வெளிக் கொணரவில்லை என்றே கூறவேண்டும்.

திருமதி மீனாட்சியம்மையார் எழுதிய அனைத்தும், குறிப்பாக பத்திரிகைகளில் அவர் தமது சொந்தப் பெயரிலும் புனைப்பெயரிலும் (இதுவரை எந்த தகவலும் இல்லை) எழுதிய கட்டுரைகள் யாவும் இதுவரை நூலுருப்பெறவில்லை. மீனாட்சியம்மாள் எழுதிய நூல்களாவன **'இந்தியத் தொழிலாளர் துயரச்சிந்து'** - இரண்டு பாகங்கள் (1931-சகோதரி அச்சகம், அட்டன்), **'இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை'** (1940-கணேஸ் பிரஸ், அட்டன்). இரண்டாவது நூல் பெண்கள் ஆய்வு வட்டத்தினரால் மறுப்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டாவது தொகுப்பே இன்றைய ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்றது. இதனை ஆதாரமாக கொண்டே மீனாட்சியம்மாளின் ஆளுமையை மதிப்பிட

முனைந்துள்ளனர். இவர்களின் ஆய்வுகள் கவனத்தில் கொள்ளத்தக்கது என்றபோதிலும்அம்மையாரைவெறும்கவிஞராகமட்டுமேகண்டுஅமைதி காணும் மயக்கம் தொடர்ந்தும் நிலவி வருவதை அவ்வெழுத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. சாரல் நாடன், சித்திரலேகா மௌனகுரு, லெனின் மதிவானம் முதலானோர் மீனாட்சியம்மாள் பற்றி எழுதிய கட்டுரைகளில் தேசபக்தன் பத்திரிகையில் வெளிவந்த அம்மையாரின் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருந்தனர். இவ்வம்சம் அவரைக் கவிஞராகப் பார்ப்பதற்கு அப்பால் தொழிற் சங்கவாதியாக, அரசியல்வாதியாக, பத்திரிகையாளராக, சமூக செயற்பாட்டாளராகப் பார்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன. அண்மையில் இக்கட்டுரையாசிரியர் மீனாட்சியம்மையார் தேசபக்தனில் எழுதிய கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றினைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இத்தொகுப்பு மீனாட்சியம்மாள் பற்றிய ஆய்வுகளுக்குச் சிறப்பான பங்களிப்பினை நல்கும் என்ற போதிலும் இதுவே முடிந்த முடிபாகவும் ஆகிவிடாது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவற்றை ஆதாரமாகக் கொண்டு நோக்குகின்றபோது மீனாட்சியம்மாளின் முழு ஆளுமையையும் வெளிக்கொணரத்தக்க வகையிலாக பன்முக ஆய்வொன்று இதுவரை வெளிவராமை துரதிஷ்டவசமானதொன்றே. நடேசய்யரின் பங்களிப்புகள் வெளிக் கொணரப்பட்ட அளவு அம்மையாரின் பங்களிப்பு வெளிக் கொணரப்படவில்லை என்றே கூற வேண்டும். அந்தவகையில் மீனாட்சியம்மாள் பற்றிய ஆய்வுகள் தொடக்கநிலையில் கூட இல்லை என்றே கூறத் தோன்றுகின்றது. எனவே மீனாட்சியம்மாள் மறைக்கப்பட்ட ஆளுமையாகவே உள்ளார். இது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அத்தகைய தேடுதல் முயற்சியும் சிந்தனையும் மறைக்கப்பட்ட பல ஆளுமைகளை வெளிக் கொணருவதற்கான உந்துதலாகவும் அமையும்.

அரசியல், பொருளாதாரத் துறையில் எவ்வாறு ஆதிக்க சக்திகளின் ஆதிக்கம் நிலவுகின்றதோ அவ்வாறே சிந்தனைத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் அதன் பாதிப்பினைக் காணலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆதிக்கச் சிந்தனைகள் பொருளாதார அரசியல் பலத்தினைக் கொண்டு அவை தமது சிந்தனைகளை; பண்பாடுகளை மக்கள் மத்தியில் நிலைநிறுத்தி வருகின்றனர். மனித வரலாற்றில்

தனிச்சொத்துரிமை தோன்றிய பின்னர் வர்க்கச் சமுதாயத்தில் அதன் பக்க விளைவுகளான சுரண்டலும் வர்க்க முரண்பாடுகளும் தோன்றி சிந்தனைத் துறையிலும் தாக்கம் செலுத்தியது. அதிகார வர்க்கம் பொருளாதாரப் பலத்தினைக் கொண்டு தமக்குச் சாதகமான கல்வெட்டுகளையோ சாசனங்களையோ ஆக்கினார்கள். இந்தச் சூழலில் இலக்கிய கர்த்தாவோ, அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளனோ தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரச - பொருள் படைத்தவர்களின் நிழலில் நின்று தமது இலக்கிய அரசியல் பணிகளை முன்னெடுத்தனர். இது தொடர்பில் சுவாரசியமான கதையொன்றும் உள்ளது. சங்க காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கதையொன்றில் நாட்டில் போர் தலை விரித்தாட அதனையொட்டிய ஊர்கள் எரியூட்டப்பட்டு அதன் வெளிச்சத்தில் கொள்ளையடிக்கப்படுகின்றது. அரண்மனைகளை அலங்கரிப்பதற்காக குடும்பக் கொழுந்துகளையெல்லாம் இழுத்துச் செல்லும் காட்சிகள் ஒருபுறம்; கூடவே பிள்ளைகளின் கதறல்கள், விதவைகளின் - மக்களின் மரண ஓலங்கள்; இவை யாவற்றையும் கண்ணால் பார்க்க முடியாத செவியால் கேட்க முடியாத புலவனொருவன் ஏனையோரையும் கூட்டி மன்னனின் மனைவியின் கூந்தலில் நறுமணம் உண்டா இல்லையா எனத் தமிழாராய்ச்சி செய்துகொண்டிருந்தானாம். இன்றுவரை இவ்வராய்ச்சிகள் வெவ்வேறு வடிவங்களில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு மாறாகப் பொது மக்கள் சார்பான எழுத்தாளர்களும் கலைஞர்களும் காலத்திற்குக்காலம் தோன்றாமலில்லை. கல்வெட்டுகளும் சாசனங்களும் மக்களுக்கு எதிரானவையாகத் தோன்றிய போது அவற்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து உடைத்தும் உள்ளார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் எத்தனையோ எழுத்தாளர்கள் கலைஞர்கள் பத்திரிகையாளர்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்தப் பின்னனியில் தான் மனித குலத்தின் பயணங்கள் தொடர்கின்றன, ஓர் இடைவிடாத போராட்டமாய்..!

இத்தகைய புரிதலுடன் மக்கள் சார்பாகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்த ஆளுமைகள் குறித்து நோக்குகின்றபோது அவை வெறும் நாமம் மட்டுமல்ல. இயங்கு சக்திகளாகும். ஒவ்வொரு காலகட்டத்திலும் உழைக்கும் மக்கள் நலன்சார்ந்த பதாகைகளை உயர்த்திய அவர்களின் வெற்றிகள், சவால்கள், விருப்பு வெறுப்புகள், தோல்விகள் இன்னும் இது போன்ற எண்ணுக்கணக்கற்ற அனுபவங்கள் அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமைந்திருக்கின்றன. இவ்விடத்தில் நாம் பிறிதொரு

விடயம் குறித்தும் தெளிவு பெற வேண்டியுள்ளது. அதாவது இவ்வாளுமைகளின் வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகள்கூட அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்ஷனமாக அமைந்துள்ளன. இவ்வகையான ஆய்வுகளை ஆழமான - நுட்பமான - மார்க்சிய ஆய்வுகளின் ஊடாகவே வெளிக் கொணர முடியும்.

இலங்கையுடன் இந்தியாவை ஒப்பிட்டு நோக்குகின்றபோது சமூக ஆளுமைகள் ஓரளவு வெளிக் கொணரப்பட்டுள்ளன என்றே கூறத்தோன்றுகின்றது. பாரதி, அம்பேத்கர், அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், கோதாவரி பாருலேகர் முதலான ஆளுமைகள் பற்றிய தேடுதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனூடாகப் பல விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

அந்தவகையில் மலையக ஆளுமைகள் குறித்து நோக்குகின்றபோது அது குறித்த தேடுதல் முயற்சிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற எண்ணமே தோன்றுகின்றது. மலையக சமூக வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியவர்களான கோ. நடேசய்யர், திருமதி மீனாட்சியம்மையார் அமரர்கள் கே. இராஜலிங்கம், சௌமிய மூர்த்தி தொண்டமான், ஏ.அஸிஸ், ஏ.இளஞ்செழியன், ஸி.வி வேலுப்பிள்ளை, வீ.கே.வெள்ளையன், வீ.ரி. தர்மலிங்கம் இன்னும் இது போன்ற ஆளுமைகள் குறித்த கனதியான ஆய்வுகள் இதுவரை வெளிவராமை பெரும் துரதிஷ்டமே. இவற்றுக்கு அப்பால் மலையக சமூகம் பற்றிய ஆய்வுகள் வெளிவந்திருப்பினும் அவை இவ்வாளுமைகள் குறித்து ஆழ்ந்த கரிசனைக்காட்டத்தவறிவிட்டனஎன்றேகூறத்தோன்றுகின்றது. அரசியல், கலை, இலக்கியத் துறைகளில் காணப்படுகின்ற குழு இழுபறி நிலையும் இவ்வாளுமைகளை ஆய்வு செய்வதில் பல தடைகளை ஏற்படுத்தியுள்ளன. இது இவ்வாறிருக்க இன்று இவ்வாளுமைகள் படிப்படியாக மறக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழல் மலையகத்திற்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. பொதுவாக நூல்ப் பதிப்பில் முக்கிய கவனமெடுத்து வந்த இலங்கையின் வடக்கில் கூட சில ஆளுமைகள் மறைக்கப்பட்டவையாகவே காணப்படுகின்றன. நீர்வை பொன்னையன் அவர்களின் வழிகாட்டலுடன் இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் **'வடபுலத்து இடதுசாரி முன்னோடிகள்'** என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளனர். இந்நூலாக்க முயற்சியில் ஈடுப்பட்டளபோது வட புலத்தைக் களமாகக்

கொண்டு இயங்கிய சில இடதுசாரி முன்னோடிகள் குறித்த தகவல்களைப் பெறமுடியாது உள்ளது என நீர்வை பொன்னையன் இக்கட்டுரையாசிரியரிடம் வேதனையோடு தெரிவித்துக்கொண்டார். திரு. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருந்தவர். இராமசாமி ஐயர், எஸ். கே. கந்தையா இவ்விருவரும் தான் 'கம்யூனிட் கட்சி அறிக்கை' என்ற நூலை முதன் முதலில் (இந்தியாவிலும் பூரணமாக மொழிமாற்றம் செய்திருக்கவில்லை) தமிழில் மொழிமாற்றம் செய்தவர்கள். காதர் இன்னொரு இடசாரி இயக்க முன்னோடியாகத் திகழ்ந்தவர். இலங்கையில் இடதுசாரிகளால் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்டத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியவர் கே. ஏ. சுப்பிரமணியம். இலங்கையின் வடபுலத்துச் சமுதாயச் சூழலை உணர்ந்து அதற்கேற்றவகையிலான போராட்டங்களை மார்க்சிய நிலைப்பாட்டில் நின்று முன்னெடுத்ததில் தோழர் கே.ஏ. சுப்ரமணியம் அவர்களுக்கு முக்கிய இடமுண்டு. அவர் பொறுத்து வெளிவந்த நினைவு மலர் அவருடைய பங்களிப்பைக் கூறினும் அது முழுமையடையவில்லை என்றே கூறவேண்டும். இவ்வாறே கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கிய சில இடதுசாரி முன்னோடிகள் ஆய்வுகளும் நம்மிடையே இல்லை. கேரளாவைச் சேர்ந்த தோழர் கே.வி. கிருஸ்ணக்குட்டி, சுபத்திரன், சாருமதி முதலானோர் குறித்த தேடல்கள் இன்று அவசியமானவையாக இருக்கின்றன. இவ்வகையில் பார்க்கின்றபோது மானுட நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட பல ஆளுமைகள் மறைக்கப்பட்டவையாகவே உள்ளன. இந்தப் புரிதலோடு மீனாட்சியம்மாள் பற்றிய தேடுதல்களை முன்னெடுக்கின்ற போது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

- மலையக ஆளுமைகள் பற்றி முழுமையாக விபரப் பட்டியலோ, சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகளோ பூரணத்துவமாக இல்லை.
- மலையக எழுத்தாளர்களின் படைப்புகளில் அனேகமானவை நூலுருப் பெறவில்லை. மூத்த எழுத்தாளர் பலரின் ஆக்கங்கள் கூட இதுவரை நூலுருப் பெறவில்லை. அவ்வாறு நூலுருப் பெற்ற படைப்புகளைக் கூட இன்று பெற முடியாத நிலை காணப்படுகின்றது.
- மலையக ஆளுமைகள் தொடர்பாகச் சேகரித்து வைத்திருந்த பல ஆக்கங்கள், ஆய்வுகள் என்பன மலையகத்தில் இடம் பெற்ற இன வன்முறைகளின் போது அழிந்து விட்டன.
- மலையக ஆளுமைகள் தொடர்பாகச் சேகரித்து வைத்துள்ள பத்திரிகைத் துணுக்குகளைத் தேடிப் பெறுவதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள்.

- மலையகப் படைப்புகள், எழுத்தாளர்களின் விபரங்களை உள்ளடக்கிய ஆவணக் காப்பகம் ஒன்றில்லாமை.
- மலையகத்திலுள்ள பெரும்பாலான வாசிகசாலைகள் ரமணிச்சந்திரன், பாலகுமாரன் போன்றோர்களின் நூல்களினால் நிரப்பப்பட்டுள்ளன. மலையகம் சார்ந்த நூல்களை இங்கு பெற முடியாது உள்ளது.
- மலையக அரசியல், சமூக, இலக்கிய வரலாறு பற்றிய பூரணத்துவமான ஆய்வு நூல் ஒன்று இதுவரை காலமும் எழுதப் படவில்லை.

இந்நிலையில் மீனாட்சியம்மாள் பற்றிய தேடுதலுக்கு ஏற்ற இடமாக இலங்கையின் தேசிய சுவடிகள் திணைக்களம் (தே.சு.தி) மாத்திரமே அமைந்து காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தமட்டில் எழுத்தாளர்கள் ஆய்வு அறிஞர்கள் தே.சு.தி உபயோகிக்கின்ற நிலை மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது. தே.சு.தி. யைப் பிரயோகித்து கனதியான தகவல்களை வெளிக் கொணர்ந்ததில் சாரல் நாடனுக்கு முக்கிய இடமுண்டு. இத்தகைய அனுபவங்களுடன் மீனாட்சியம்மாள் குறித்த தேடுதலை இக்கட்டுரையாசிரியர் மேற்கொண்ட போது ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களையும் இவ்விடத்தில் பகிர்ந்து கொள்வதும் அவசியமானதாகும்.

தே.சு.தி. இல் தமிழ் அலுவலகர்கள் (அடிநிலை ஊழியர்கள் கூட) இல்லாத நிலையில் தமிழறிவையோ ஆங்கில அறிவையோ மட்டும் அறிந்து வைத்திருப்பவரால் - சில சமயங்களில் சிறிதளவு சிங்கள அறிவுடையவர்களாலும் இத்திணைக்களத்தில் தொழில் புரியும் அலுவலகர்களுடன் கலந்துரையாடி ஆவணங்களைப் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. சட்டதிட்டங்களும் கடுமையானதாக இருப்பதனால் ஆய்வு அல்லது தகவல்களைத் தொகுக்கும் ஆர்வம் கொண்டவர்கள் யாவரும் இந்நிறுவனத்திற்குள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள ஆவணங்கள் மிகவும் பழுதடைந்து எளிதில் சேதப்பட்டு அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றன. எனவே அவற்றை வாசிக்கின்ற போதும் அவற்றைப் பிரதியெடுக்கும் போது காணப்படுகின்ற தெளிவின்மைகள் காரணமாகவும் உரிய தகவல்களைத் தேடிப் பெற முடியாத நிலை உள்ளது. இதற்கு அப்பால் இத்துறையில் தேடலையும் ஆய்வுகளையும் மேற் கொண்டவர்கள் தங்கள் மீது கொண்ட அளவுக்கதிகமான காதல் காரணமாக, தமக்குப்

பின் இத்துறையில் வேறுயாரும் ஆய்வுகளைத் தொடரக் கூடாது என்ற எண்ணத்தில் பழுதடைந்திருக்கின்ற அவ் ஆவணங்களைச் சிதைத்து, அதன் பக்கங்களை மாற்றி அல்லது சில பக்கங்களே இல்லாதளவிற்கு அவற்றை மறைத்து விடுகின்ற பணியினையும் செய்திருக்கின்றார்கள். மீனாட்சியம்மாள் போன்ற மறைக்கப்பட்ட ஆளுமைகள் தொடர்பில் ஆவணங்களைப் பெறக் கூடியதாக உள்ள ஒரே இடமான தே.சு.தி.யிலும் இவ்வாவணங்களைப் பெற முடியாதுள்ளது.

நடேசய்யர் இலங்கைக்குக் குடியேறிய பின்னர் ஒன்பது தமிழ் நூல்களையும் இரண்டு ஆங்கில நூல்களையும் எழுதிப் பிரசுரித்தார். இவைகளுள் 'அழகிய இலங்கை' என்ற நூல் இந்தியாவில் அச்சிடப்பட்டது. மலையகத்தில் அட்டன் நகரில் கணேஸ் பிரஸ், சகோதரி அச்சகம் என்ற இரு நிறுவனங்களை ஏற்படுத்தி, தனது மனைவியை வெளியீட்டாளராகக் கொண்டு இவைகளை இவர் வெளியிட்டிருந்தார். இவைகளுள் 'நரேந்திரபதியின் நரக வாழ்க்கை' என்ற நூல் 226 பக்கங்களில் இரண்டு ரூபா விலைக்கு அச்சிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. 1933 இல் வெளியான இந்த நூல் பிரசுரத் துறையில் ஒரு சாதனையாகும் மலையகம் வளர்த்த தமிழ், (சாரல் நாடன் -1997, துரைவி வெளியீட்டகம், கொழும்பு, ப.44) இவ்வாறு வெளிவந்த நூல்கள் யாவற்றையும் இப்போது பெற முடியாதுள்ளது. மேலும் இது தொடர்பான தகவல் தெரிந்தவர்களைத் தேடியறிவதும் சிரமமாக உள்ளது. அவர்களில் சிலர் இன்று மறைந்து விட்டமை இன்னொரு துரதிஷ்டவசமான நிகழ்வாகும். அம்மையாரின் புனை பெயர்கள் பற்றிய எந்த விதமான தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை. கைலாசபதி, செ.கணேசலிங்கம் முதலானோரின் ஆக்கங்கள் வெளிவந்த பிரசுரங்கள், காலம், வெளியீட்டாளர்கள்- சில சமயங்களில் ஆக்கங்கள், நூல்கள் பற்றிய தகவல்களுடன் நூலகவியலாளர் என். செல்வராஜா தொகுத்துள்ளார். இவை சமூக ஆளுமைகள் பற்றிய ஆய்வுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளன. மீனாட்சியம்மாள் உட்பட மலையக எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இவ்வாறு பட்டியற் படுத்தப்படவில்லை.

மீனாட்சியம்மாள் தேசபக்தன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் அம்மையாரின் எண்ணங்களையும் கருத்துகளையும் பிரதிபலிக்கின்றன. அந்தக் கால அரசியல் - தொழிற்சங்க நடைமுறைகளையும் அரசியல் தலைவர்களின் ஒழுக்கத்தையும், நேர்மையையும் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

மற்றும் சமூகத்தில் பெண்களுக்குரிய ஸ்தானம் எத்தகையது என்பதையும் பெரியாங்கங்காணி சம்மேளனத்துக்கு எதிரான போராட்டங்கள், தொழிலாளர் நலன்சார்ந்த முன்னெடுப்புகள், சர்வசன வாக்குரிமை பற்றிய அம்மையாரின் பார்வையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அவர் தேசபக்தன் பத்திரிகை ஆசிரியராகவும் சில காலம் கடமையாற்றியிருந்தார். பத்திரிகையாளருக்குரிய நேர்மை, அர்ப்பணிப்பு, திறமை எவ்வாறு அம்மையாரிடம் காணப்பட்டது என்பதையும் இவ்வாறான தேடுதல்களின் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

சமூக ஆளுமைகள் குறித்த தேடுதலை மேற்கொள்கின்ற போது கவனத்தில் கொள்ளத்தக்க விடயங்கள் பற்றியும் இவ்விடத்தில் சிந்தித்தல் அவசியமானதாகின்றது.

அம்மையாரின் ஆக்கங்களைத் தொகுப்பதற்கு முன்னர் அவரது புனைபெயர்கள் (இருந்திருப்பின்), அவரது ஆக்கங்கள் வெளிவந்த பிரசுரங்கள் பற்றிய தேடுதல் அவசியமானதும் பயன்மிக்கதுமாகும். அதன் பின்னணியில் அவரது ஆக்கங்களைத் தொகுப்பதற்கான 'மீனாட்சியம்மாள் பதிப்புக் குழு' ஒன்றினை அமைத்தல் காலத்தின் தேவையாகும். தனியொருவரின் முயற்சியை விடக் கூட்டு முயற்சி பயன்மிக்கதாகவும் பணியை இலகுபடுத்துவதாகவும் அமையும். இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள ஆர்வலர்கள், அறிஞர்கள் ஒன்று கூடி இம் முயற்சியினை மேற்கொள்ளவது சிறப்பானது. 1950 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ' பாரதி பதிப்புக் குழு' பாரதி பற்றிய ஆக்கங்களை தொகுப்பதில் பங்காற்றியுள்ளமையை நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

அந்தவகையில் அம்மையாரின் ஆக்கங்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அடக்கத் தொகுப்பொன்று வெளிவருகின்றபோது காலக் குறிப்பும் பின்குறிப்பும் அவசியமானதொன்றாகும். ஒரு ஆளுமையின் ஆத்ம விகர்சிப்பைப் புரிந்துக் கொள்வதற்கும் காலச் சூழலில் வைத்து அவ்வாளுமைகளை ஆய்வு செய்வதற்கும் அத்தகைய பதிப்புகள் அவசியமானவையாகின்றன. பதிப்பு முயற்சிகளின் போது முந்திய பதிப்புகள் மட்டுமன்றி கையெழுத்துப் பிரதிகள் வெளிவந்த பத்திரிகைத் துணுக்குகள் என்பனவும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். மீனாட்சியம்மையாரின் படைப்புகளைப் பொறுத்த மட்டில் கையெழுத்துப் பிரதிகளைப் பெறுவது சாத்தியமற்றதாகவே உள்ளது. ஆனால் ஏனைய விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் முக்கியமானதாகும்.

மீனாட்சியம்மாள் போன்ற ஆற்றல் மிக்க ஆளுமைகளின் எழுத்துக்கள் பல நிலைகளில் பயன்படுவன. எனவே பல வகையான பதிப்புகள் அவசியமாகின்றன. இவை யாவற்றுக்கும் மூலாதாரமான "சுத்தப் பதிப்பு" ஒன்று முதலிலே வரவேண்டியது மிக மிக அவசியமானதாகும். மேலும் பல வகையான பதிப்புகளும் வேண்டப்படுவனவாகும். ஆராய்சியாளருக்குப் பெரிதும் பயன்படும் வகையிலான கால அடைவுப் பதிப்புகள், பாடபேதவளப் பதிப்புகள், பொருளடிப்படையிலான பதிப்புகள், இலக்கிய சுவைஞர்களுக்கான தேர்ந்தெடுத்த பதிப்புகள்- பொதுமக்களுக்கு ஏற்றவாறு பொருள் விளங்கும்படியிலான பதிப்புகள் வெளிவர வேண்டியது அவசியமானதாகும். இப்பதிப்புகளைத் தொடர்ந்து சொல்லடைவு, அகராதிகள் போன்ற அடிப்படை நூல்களை ஆக்கலாம்.

இவ்வாறு புதிதாய்க் கண்டெடுக்கப்படும் மீனாட்சியம்மாளின் படைப்புகள் தக்கபடி பரிசோதிக்கப்பட்டும், அவற்றின் நம்பகத் தன்மை ஐயத்திற்கிடமின்றி நிறுவப்பட்டும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். வரலாற்றுச் சுருக்கங்கள், குறிப்புரைகள், சில முக்கிய தகவல்கள் என்றவகையில், சில தகவல்கள், பயனுள்ள சங்கதிகளையும், செய்திகளையும் தொகுத்தளித்தலும் வேண்டப்படுவதாகும். இவ்விடத்தில் பிறிதொரு முக்கிய விடயம் பற்றிச் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. 'பழந்தமிழ் இலக்கியங்களைப் பதிப்பிக்கும் முன்னோடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் சி.வை.தாமோதிரம்பிள்ளை, உ.வே. சாமிநாத ஐயர் முதலியோருக்கே பழந்தமிழ் நூல்கள் சிலவற்றின் பெயர்கள் சரிவரத் தெரியாத நிலையிலே, சில தமிழ் 'ஆர்வலர்கள்' வினோதமான பெயர்களுடன் சிலபல 'பழந் தமிழ்' நூற்பிரதிகளைப் பற்றிப் பேசலாயினர். உதாரணமாக த. மு. சொர்ணம்பிள்ளை என்பவர் 'இன்னிலை', 'ஊசிமுறி' முதலிய நூல்களைத் தாமே இயற்றிப் பழந்தமிழ் நூல்கள் எனப் பறைசாற்றினார். பிற்பட்ட ஆராய்ச்சிகளினால் இப்பொய்மை ஐயத்திற்கிடமின்றி அம்பலப்படுத்தப்பட்டதெனினும், இலக்கிய உலகிலே சிலகாலம் குழப்பத்தையும் மயக்கத்தையும் உண்டாக்கியது என்பதில் ஐயமில்லை. (கைலாசபதி.க. 1974, இலக்கியச் சிந்தனை).

இந்நிலையில் மீனாட்சியம்மையாரின் படைப்புகளைத் தொகுக்கின்ற போதும் மூலப் பிரதிகளை மிகக் கவனமாகப்

பரிசீலனை செய்ய வேண்டும். மூலங்களை விபரிக்கும் மனப்பாங்கும் அவசியமானதாகும். எவ்வித தகவல்களும் இன்றி மொட்டையாக ஆக்கங்களைப் பிரசுரிப்பது பல மயக்கங்களையும் குழப்பங்களையும் தோற்றுவிக்கும். மேலும் இத்தகைய பதிப்புகளை மேற்கொள்கின்ற போது ஏற்படக் கூடிய முக்கிய தவறுகள் தான் அப் பதிப்புகளில் அடங்கியுள்ள ஆக்கங்களைப் பற்றிப் பல்வேறு கோணங்களிலிருந்தும் நோக்கு நிலைகளிலிருந்தும் பலர் கண்டு காட்டியிருக்கின்றனர். இவ்வகையான பாரதி பற்றிய ஆய்வுகளில் பாரதியின் சொற்களையே ஆதாரமாகக் கொண்டு தமது கருத்துகளைக் கூறியுள்ளனர். அச்சொற்கள் ஐயத்திற்கிடமானவை என்றால் அதன் முடிவுகள் என்னவாகும்?

'ஒரு சிறு உதாரணம். முப்பெரும் பாடல்களில் ஒன்று குயில் பற்றியது. இப்பாடலின் தலைப்பு , குயில் பாட்டு, குயிலி, குயிலின் கதை, குயிற்பாட்டு என்றெல்லாம் வேறுப்படப் பல்வேறு பதிப்புகளிலும் குறிக்கப்பட்டிருத்தலைக் காணலாம். பாரதியார் குறித்த தலைப்பு யாது? 'குயிற் பாட்டு' என்ற தொடர் கவிஞரை 'இலக்கண சுத்தமான' எழுத்தாளராய்க் காட்டும்: 'குயில் பாட்டு' என்ற தொடர் கவிஞரை 'இலகு தமிழ்' எழுத்தாளராய்க் காட்டும். எது சரி? பெரும்பாலான மலிவுப்பதிப்பு நூல்களில் சந்தி பிரித்தே பாரதியார் கவிதைகள் அச்சிடப்பட்டுள்ளன. இதனாற் பாரதியாரது மூலப் பாடத்தைத் திடமாக அறியும் வாய்ப்பு பலருக்குக் கிடைப்பதில்லை.

மறைக்கப்பட்ட ஆளுமைகளின் படைப்புகளைத் தொகுக்கின்ற போது இத்தகைய குறைபாடுகள் மீண்டும் மீண்டும் தலைக்காட்டாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். பெரும் பாலும் இத்தகைய பதிப்புகளில் ஏற்படுகின்ற தவறுகள் தற்செயற், குறிக்கோட் பிழைகளால் ஏற்படுகின்ற குழப்பங்களாகும். தற்செயற் பிழை என்பது தற்செயலாக ஏற்படுகின்ற எழுத்துப் பிழைகள், அச்சுப் பிழைகளால் ஏற்படுகின்றன. குறிக்கோட் பிழை என்பது ஆசிரியர் இவ்வாறுதான் எழுதியிருப்பார் என்ற நோக்கில் எழுதுவதாகும். உதாரணமாக கோ . நடேசய்யரின்

"இந்து மக்கள்
சிந்தும் வேர்வை
ரெத்தக்காசு தானே - அடா
இரவு பகல்
உறக்கமின்றி
ஏய்த்துப் பறிக்கலாமா?"

என வரும் கவிதையில் 'இந்து' என்ற சொல்லுக்கு பதிலாக 'இந்த' ானும் சொல்லை அந்தனி ஜீவா தமது கட்டுரைகளிலும் தாம் பதித்த சஞ்சிகைகளின் அட்டைகளிலும் பிரசுரிந்திருந்தார். இதனை அடியொட்டி எழுதிய ஆய்வாளர்கள் மூல கவிதையைப் பார்ப்பதற்கு பதிலாக அந்தனி ஜீவாவின் பதிப்பையே ஆதாரமாக கொண்டனர். சில வேளைகளில் இந்தத் தவறு தற்செயற் பிழையாக இருந்திருக்கலாம். ஆனால் அவை குறிக்கோட் பிழையாகவே ஆய்வுகளில் இடம் பெற்று வந்திருக்கின்றன. இவ்விடத்தில் பின்வரும் விடயம் தொடர்பிலும் கவனமெடுக்க வேண்டியுள்ளது:' நடேசய்யர் அவர்களிடம் இந்து சமயம் சார்ந்த எதுகை மோனை சார்ந்த சொற்பிரயோகமாகவே இதனைக் கொள்ள வேண்டியுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையினர் என்றவகையில் கையாளப்பட்டாலும் இந்து என்ற சொற்பிரயோகம் இந்தியாவைச் சேர்ந்த மக்கள் என்போருக்குரியது. பாரதி கூட இந்துக் கிறிஸ்தவர், இந்து முஸ்லிம் என்ற பிரயோகத்தை இப்பொருளில் பாவித்துள்ளார். மலையக மக்களின் நலன் குறித்த ஆழ்ந்த அக்கறையே இக்கவிதையில் முனைப்பு பெற்றிருக்கின்றது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது (லெனின் மதிவானம் (2010), மலையகம் தேசியம் சர்வதேசம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு).

மீனாட்சியம்மாள் போன்ற சமூக ஆளுமைகளின் எழுத்துக்கள், அவரது சமூகப் பங்களிப்புப் பற்றிய ஆய்வுகள் பல நிலைகளில் பயன்படுத்தப்படுவன. எனவே பல வகையான பதிப்புகளும் அவை பற்றிய ஆய்வுகளும் வேண்டப்படுகின்றன. இதுவரை நடந்த ஆக்கபூர்வமான முயற்சிகளை உறுதிப்படுத்தி இனிமேலும் முன்னேறுவது நமது கடமை. இதற்கு மீனாட்சியம்மாளின் ஆக்கங்கள் நேர்மையாகவும் விஞ்ஞான பூர்வமானதாகவும் பதிப்பித்து வெளியிடல் முதல் தேவையாகும்.

அறியப்படாத ஆளுமைகள்
புதிய புத்தகம் பேசுது 2012

திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யர் : சமூகமும் அரசியலும்

சமூக வரலாற்றை ஊன்றிக் கவனிக்கின்ற போது ஒருண்மை தெளிவாகத் தெரிய வரும். எந்தவொரு சமூகவளர்ச்சியும் அதற்குப் பின்னணியாகவுள்ள சில முன்னோடிகளின் முயற்சிகளையும் உழைப்பினையும் அடிப்படையாகக் கொண்டே முகிழ்ந்து வந்திருக்கின்றன. அத்தகைய முன்னோடிகளின் வெற்றிகள் மாத்திரமல்ல தோல்விகள் கூட அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமைந்திருக்கின்றன. தமது காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிப்பலிக்கும் ஆளுமைகளே காலம் கடந்தும் வாழ்கின்றனர். அக்காலச் சூழலின் சமூகதேவையை அறிந்து அவர்கள் வழங்கிய சாதாரண பங்களிப்புகள் கூட மொத்தப் பெரிய சாதனைகளாக அமைகின்றன. மலையக சமூக வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய திருமதி. மீனாட்சியம்மாள் நடேசய்யர் இத்தயை சமூக ஆளுமைகளில்-முன்னோடிகளில் ஒருவராவார்.

இவ்வாறாக, மலையக சமூக வரலாறு குறித்த ஆய்வில் அதன் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்த திருமதி மீனாட்சியம்மாள் நடேசய்யர் பற்றியும் அக்காலகட்டத்து சமூக இயக்கங்கள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மீனாட்சியம்மாள் பற்றிய ஆய்வுகள் ஆங்காங்கே சிறு சிறு குறிப்புகளாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. திரு. சாரல் நாடன், கோ. நடேசய்யர் பற்றிய ஆய்வின் போது மீனாட்சியம்மாளின் பங்களிப்புப் பற்றியும் எழுதியுள்ளார். திருமதி. சித்திரலேகா மௌனகுரு 'மீனாட்சியம்மாள் நடேசையர்' என்ற தலைப்பிலும் மற்றும் பெண் ஆளுமைகள் குறித்து எழுதிய பல கட்டுரைகளிலும் மீனாட்சியம்மாளின் பங்களிப்பு குறித்துச்சுட்டிக்காட்டத்தவறவில்லை. திரு மு.நித்தியானந்தன் 'மீனாட்சியம்மாளும் மேடைப்பாடல்களும்' என்ற தலைப்பில் சிறப்பானதொரு ஆய்வுக்கட்டுரையை எழுதியுள்ளார். பேராசிரியர் செ. யோகராசா 'ஈழத்து முதல் பெண் கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரையொன்றினை எழுதியுள்ளார். இவை தவிர திரு. அந்தனி ஜீவா தமது உரைகளிலும் கட்டுரைகளிலும் மீனாட்சியம்மாளின் பங்களிப்பினை வெவ்வேறு வகையில் வெளிக்கொணர்ந்துள்ளார். இது போன்று பலர் மீனாட்சியம்மாள் பற்றி எழுதியுள்ளனர். ஆயினும் அம்மையாரின்

முழு ஆளுமையையும் வெளிக்கொணரத்தக்க வகையிலாக பன்முக ஆய்வொன்று இதுவரை வெளிவராமை துரதிஷ்டமானதொன்றே. திரு. நடேசய்யரின் பங்களிப்புகள் வெளிக் கொணரப்பட்ட அளவு அம்மையாரின் பங்களிப்பு வெளிக் கொணரப்படவில்லை என்றே கூற வேண்டும்.

மீனாட்சியம்மாளும் அவரது கணவர் கோ. நடேசய்யரும் ஒரே அரசியல் அணியில் செயற்பட்ட அபூர்வமான தம்பதிகளாவர். 1905 ஆம் ஆண்டளவில் இந்தியாவில் வங்கப் பிரிவினைக்கான போராட்டம் நடந்தது. வங்கப் பிரிவினையை ஆட்சேபித்து தீவிரவாதிகளின் பகிஷ்காரம், சுதேசிய இயக்கம் ஆகியவற்றின் தாக்கம் இந்தியாவெங்கும் பரவியது. அத்தகைய தேசிய உணர்வினால் உந்தப்பட்டு அரசியலுக்குள் நுழைந்தவர் நடேசய்யர். இளமைக்காலம் முதலாகவே வணிகத் துறையில் ஆர்வமும் தேர்ச்சியும் பெற்றிருந்த நடேசய்யர் "வர்த்தகமித்திரன்" என்ற சஞ்சிகை நடாத்தியுள்ளார். அச்சஞ்சிகைக்கு ஆதரவு தேடியே இலங்கை வந்ததாக சாரல் நாடன் முதலானோரின் ஆய்வுகளின் ஊடாக அறிய முடிகின்றது. இவரது இலங்கை வருகை அவரது வாழ்வில் முக்கிய திருப்பு முனையாக அமைந்தது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது தமது காலனித்துவத்திற்குட்பட்ட நாடுகளில் அறிமுகம் செய்த பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையை அறிமுகம் செய்தனர். அப்பயிச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான தொழிலாளர்களைத் தமது காலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தனர். இவ்வாறு ஒப்பந்தப் பிணைப்புச் செய்து கொண்டு தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து குடியேறிய தொழிலாளர்களும் அவர்களுடன் இணைந்து வந்த வர்க்கமுமே 'மலையகத் தமிழர்கள்' என்ற பதம் கொண்டு அழைக்கப்படுகின்றனர். மலையகத் தொழிலாளர்கள் சந்திக்க நேர்ந்த துன்ப துயரங்களைக் கண்டு கொதிப்படைந்த நடேசய்யர் அம்மக்களின் விடுதலைக்கான பயணத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டார். மலையக மக்களின் துன்பம் தோய்ந்த வாழ்வை எண்ணி அவர்களிடையே விடுதலையுணர்வை ஏற்படுத்தியதுடன் அம்மக்களை ஸ்தாபனமயப்படுத்தும் பணியிலும் ஈடுபாடு கொண்டு உழைத்தார். இவ்வாறு சமூக வாழ்வையும் தமது சொந்த வாழ்வையும் ஒன்றாகச் சேர்த்து நேசிக்கின்ற பண்பினை நாம் நடேசய்யரில் காண்கின்றோம். இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆதர்சனமாக அமைந்த நடேசய்யரின் காதலியே - இரண்டாவது

மனைவியே மீனாட்சியம்மாள் ஆவார். இவர்களது திருமண வாழ்வு எவ்வாறு சமுதாயம் சார்ந்ததாக அமைந்திருந்தது என்பதனை நோக்குவதற்கு இந்தியப் பழங்குடி மக்களிடையே செயற்பட்டு பாரிய புரட்சிக்குத் தலைமை தாங்கிய சாம்ராவ் பாருலேகர் கோதாவரி தம்பதிகளின் வாழ்கையுடன் ஒப்பு நோக்குவது பொருத்தமானதாக அமையும். சமூக வாழ்வில் நேர்மையுடனும் சமூகவுணர்வுடனும் செயற்படுவோர்களுக்கு குடும்ப வாழ்வு தடையாக இருக்காது என்பதற்கு இவர்களது வாழ்வு உதாரணமாக அமைகின்றது. பாருலேகர் கோதாவரி தம்பதிகள் ஏற்படுத்திய தாக்கத்துடன் ஒப்பிடுகின்ற போது நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினர் அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றபோதிலும் பல ஒற்றுமைகள் இவ்விருதம்பதிகளிடமும் இருப்பதை அவதானிக்கலாம். அக்காலச் சூழல், இயக்கங்களின் வளர்ச்சி, என்பனவும் சமூகப் போராட்டத்தில் தாக்கம் செலுத்தும் என்பதனையும் இவ்விடத்தில் மனங்கொள்ளல் வேண்டும். இருப்பினும் இவ்வகையான ஒப்பியல் ஆய்வுகள் செய்யப்படல் வேண்டும். அவை சுவை பயப்பதாக மட்டுமன்று பயன்மிக்கதாகவும் அமையும்.

கோ.நடேசய்யர் மலையகத்தில் தமது அரசியல் தொழிற்சங்கப் பணிகளை முன்னெடுத்த போது அவருக்குப் பக்க பலமாக சிலர் வந்தமைந்தனர். அவ்வாறு அரசியல் தொழிற்சங்கப் பணிகளை முழுநேரத் தொழிலாகக் கொண்டு செயற்பட்டவர்களில் முதன்மையானவர் மீனாட்சியம்மாள்.

மலையக மக்களிடையே அரசியல் தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபட்ட மீனாட்சியம்மாள் தவிர்க்க முடியாதவகையில் இலக்கியத் துறையிலும் பிரவேசித்தார். அரசியல் களத்திலிருந்து தமது படைப்புகளைப் பட்டைதீட்ட முனைந்த நாகரிகத்தை அவரது கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன. மீனாட்சியம்மையாருக்கு இவ் ஆற்றல் எங்கிருந்து வந்தது என்பதும் சுவாரசியமானதொரு தேடலாகும். அம்மையாருக்கு ஆரம்ப கால முதலாகவே பாரதியின் கவிதைகளில் ஈடுபாடு இருந்து வந்திருக்கின்றது என்பதை அவரது அரசியல் தொழிற்சங்க இலக்கியச் செயற்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன.

மலையகத்தில் பாரதியார் பாடல்கள் முப்பதுகளின் பிற்பகுதியிலும் நாற்பதுகளின் ஆரம்பத்திலும் பரவத்தெடங்கியிருந்தன. தமிழகத்தில் தேசப்பற்று உணர்வு மிக்க சிலர் பிரித்தானிய எதிர்ப்புணர்வு கொண்டு தேச பக்திப் பாடல்களை இசைத்தனர். அவர்கள்

பொதுவாகவே பாரதியாரின் பாதிப்பிற்கு உட்பட்டிருந்தனர். பாரதியாரின் பாடல்களையோ அல்லது பாரதி பாடல்கள் மெட்டில் தாம் இயற்றிய பாடல்களையோ மக்கள் மத்தியில் பாடி வந்தனர். அத்தகையவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர் என்.என்.விஸ்வநாததாஸ். "தேசவிரோத பாடல்களினால் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவர்" என பிரித்தானிய அரசினால் அடையாளப்படுத்தப்பட்டவர். தமிழக மக்களிடையே பிரபல்யம் அடைந்திருந்த பாஸ்கரதாஸின் பாடல்களை மக்கள் மத்தியில் பரப்பியதில் விஸ்வநாததாஸிற்கு முக்கிய இடமுண்டு. பாரதியின் பாடல்கள் மற்றும் விடுதலையுணர்வு கூடிய பாடல்கள் இலங்கைக்கு வருகை தந்த யாத்திரிகர்கள், பக்தர்கள் மூலமாக மலையக தோட்டங்களில் பரவியிருந்தன.

1930களுக்கு முன்னர் இலங்கையில் வெளிவந்த தமிழ் சிறுபத்திரிகைகள் விரல்விட்டு எண்ணக் கூடியவையாகவே காணப்பட்டன. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த தாகூர், சரோஜினி, பாரதி, நாமக்கல் கவிஞர் போன்றோர் பாடிவந்த சுதந்திர உணர்வுமிக்க பாடல்கள் மற்றும் வேதநாயகம்பிள்ளை, சங்கரதாஸ் சுவாமி, உடுமலைக் கவிராயர் முதலானோரின் படைப்புகள் மலையகத்தில் ஓரளவு வசதியும் வாய்ப்பும் பெற்றவர்களையே வந்தடைந்தன. மலையக தோட்டத் தொழிளாலர்களைப் பொறுத்த மட்டில் எழுத்தறிவு மிகக் குறைவாகக் காணப்பட்டமையால் இவ்வாக்கப் படைப்புகள் அவர்களை எட்டவில்லை. இதற்கு மாறாக மலையக மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய நாட்டார்பாடல்களும் கதைப்பாடல்களுமே அவர்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்தச் சூழலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடையே பாரதியின் பாடல்கள் மற்றும் விடுதலை உணர்வுமிக்க பாடல்களைக் கொண்டு சென்றதில் மீனாட்சியம்மாளுக்கு முக்கிய இடமுண்டு. ஈழத்தில் மலையக மக்களின் சமூக எழுச்சிக்கு இலக்கியத்தை ஊடகமாகப் பயன்படுத்தி மக்கள் நலன் சார்ந்த அரசியல் தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி பெண் ஆளுமையாக திகழ்ந்தவர் மீனாட்சியம்மாள் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. ஈழத்துச் சிறுகதை முன்னோடியாக கோ. நடேசய்யர் திகழ்ந்தது போன்று ஈழத்தின் முதல் பெண் கவிஞர் என்ற பெருமைக்குரியவர் மீனாட்சியம்மாள் என்பது ஆய்வாளர்களால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என செ.யோகராசா 'ஈழத்து முதல் பெண் கவிஞர்' என்ற கட்டுரையில் இது குறித்து எழுதியுள்ளார்.

மீனாட்சியம்மாளின் செயற்பாடு, சிந்தனை என்பன மலையக தோட்டத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டே அமைந்திருந்தமையால் அவரது கவிதைகளும் மக்களைத் தழுவியதாக மக்களின் மொழியில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கலை இலக்கியத்தை சமுதாய முரண்பாடுகளினின்றும் பிரச்சினைகளிலிருந்தும் பிரித்துப் பார்த்தவர்கள் கலை இலக்கியத்தை "உயர்ந்தோர் மேற்றே" எனக் கொண்டு இலக்கியத்திலினின்றும் பொது மக்களைத் தூர விலக்கி வைத்தனர். கலை இலக்கியம் யதார்த்ததிற்கு அப்பாற்பட்டது எனவும், கலைஞன் தமது சுய சிந்தனை உணர்வால் இலக்கியத்தைச் சிருஷ்டிக்கின்றான் என்பதை அழகியல்வாதிகள் ஆரம்ப முதலாகவே கூறி வந்துள்ளனர்-வருகின்றனர். இதற்கு நேர்மாறான கண்ணோட்டமும் உண்டு. கலை இலக்கியம் என்பது மனித வாழ்வில் இருந்து தோன்றி அது மனித வாழ்வை செழுமைப்படுத்துகின்றது. ஆகவே இலக்கியம் என்பது பரந்துபட்ட வெகுசனங்களைத் தழுவியதாக இருப்பதுடன் அது அம்மக்களுக்கு சமூகம் பற்றிய புரிதலை உணர்த்தி வைக்கும் ஆற்றலினையும் பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். இது பற்றி மக்கள் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான பாரதியின் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்தினுடைய நயங்கள் குறைபடாமலும் நடத்துதல் வேண்டும்."

பொதுமக்கள் சார்பும் ஜனரஞ்சகத் தன்மையுமே இலக்கியத்தின் உயிர் நாடி எனக் கொண்டு செயற்பட்டவர் பாரதியார். 'அதாவது இலக்கியச்சிறப்பும்ஜனரஞ்சகத்தன்மையும்ஒன்றுக்கொன்றுமுரணாகவோ, ஒன்றையொன்று விலக்குவதாகவோ இருக்கவேண்டியதில்லை. ஆனால் இலக்கிய உலகில் கடந்த சில காலங்களாக இப்பிளவு இருந்து வருகின்றது. நமது சமுதாயத்திற் கைப்பணிக்கும் கலைக்கும் உடல் உழைப்பாளர்களுக்கும் புத்தி ஜீவிகளுக்கும், பேதமும் ஏற்றத்தாழ்வுகளும் இருப்பதைப் போலவே இதுவும் சமுதாய அமைப்பில் காணப்படும் சிற்சில முரண்பாடுகளின் பிரதிபலிப்பேயாகும்."(கைலாசபதி.க. 1986, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை.ப.50)

பாரதியில் மீனாட்சியம்மாள் முழு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்குப் பல சான்றாதாரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த பெண்ணொருவர் தமது மரபு சார்ந்த தடைகளையெல்லாம் தகர்த்துக் கொண்டு மக்கள் மத்தியில் தொழிற்சங்க அரசியல் பணி புரிவதை தமது வாழ்க்கையாகக் கொண்டு செயற்பட்டமை. தான் தேர்தெடுத்துக் கொண்ட வாழ்க்கைக்குப் பொருத்தமான கணவரைக் காதல் திருமணம் கெண்டமை என்பன பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக அம்மையார் வாழ முற்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றன.

தமது தொழிற்சங்க அரசியல் கூட்டங்களின் போது அம்மையார் பாரதியாரின் பாடல்களைப் பாடிய பின்னரே அக்கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைப் பலர் பதிவாக்கியுள்ளனர். அத்துடன் தாம் இயற்றிய பாடல்களையும் மக்கள் மத்தியில் பாடி அவர்களை விழிப்புக் கொள்ளச் செய்துள்ளார். இவ்வாறாக மலையக மக்கள் பற்றியும் பல பாடல்களை இயற்றி மக்கள் மத்தியில் பாடி வந்திருக்கின்றார். "இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை" என்ற தலைப்பில் அவர் இயற்றிய பாடல்களின் தொகுப்பை பெண்கள் ஆய்வு வட்டத்தினர் மீள் பதிப்பித்து வெளிட்டுள்ளனர். அம்மையார் பற்றிய ஆய்வுகளுக்கு இத்தொகுப்பு பெரிதும் துணையாக அமைந்துள்ளது.

அவர் இயற்றிய பாடல்களில் சிலவற்றினை நோக்குவோம்:

"பாய்க் கப்பல் ஏறியே வந்தோம்- அந்நாள்
பலபேர்கள் உயிரினை யிடைவழி தந்தோம்
தாய்நாடென் றெண்ணி யிருந்தோம்- இவர்கள்
தகாத செய்கை கண்டு மனமிக நொந்தோம்"

"சட்டமிருக்குது ஏட்டிலே - நம்மள்
சக்தியிருக்குது கூட்டிலே
பட்டமிருக்குது வஞ்சத்திலே- வெள்ளைப்
பவர் உருக்குது நெஞ்சத்திலே
வேலையிருக்குது நாட்டிலே- உங்கள்
வினையிருக்குது வீட்டிலே"

இந்நாட்டின் அதிகார வர்க்கமும் பேரினவாதிகளும் இம்மக்களை அடிமைக் கூலிகளாகவும் இந்தியாவிலிருந்து வந்தேறு குடிகளாகவும்

கருதியதுடன் இவர்களின் இனத்தனித்துவத்தைச் சிதைக்கும் வகையிலான சட்டங்களையும் கொண்டு வந்தனர். இவ்வாறானதோர் சூழலில் அரசியல் தொழிற்சங்க இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்த அம்மையாரின் கவிதைகளில் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, தொழிலாளர் ஒற்றுமை, தொழிலாளர் உரிமைகள் என்பன குறித்து தம் கவி வரிகளைத் தீட்டியுள்ளார்.

யாவற்றுக்கும் மேலாக, இலங்கையில் பேரினவாதத்தைச் சாடிய முதல் பெண் அம்மையார் ஆவார். இக்காலப்பகுதில் வட-கிழக்கு சார்ந்த அரசியல் தலைவர்களும் புத்திஜீகளும் இலங்கைத் தேசியம் குறித்துக் கவனம் செலுத்தியிருந்தமையினால் பேரினவாதம் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டனர். சேர்.பொன். அருணாசலம் போன்றோர் பேரினவாத்தை அடையாளம் கண்டிருந்த போதும் அதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்னர் அவர் இறந்து விடுகின்றார். பின் வந்த தலைவர்கள் அதனைக் கவனத்திலே எடுக்கவில்லை. உயர் மத்திய தர வர்க்க வாழ்க்கை முறைகள், அரசியல் சிந்தனைகள், அரச சலுகைகள் காரணமாகப் பேரினவாதம் குறித்து அவர்கள் சிந்திக்கத் தவறிவிட்டனர். பேரினவாதத்தை அரசியல் தளத்தில் சரியாக அடையாளம் கண்டவர்கள் நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதிகளாவர். இந்தப் போக்கினை மீனாட்சியம்மாளின் பாடல்களிலும் காணக் கூடியதாக உள்ளது. அந்தவகையில் மலையக சமூக வரலாறு குறித்த ஆய்வில் அதன் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்த திருமதி மீனாட்சியம்மாள் பற்றியும் அக்காலக்கட்டத்து சமூக இயக்கங்கள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்தப் போக்கினை மீனாட்சியம்மாளின் பாடல்களிலும் காணக் கூடியதாக உள்ளது. உதாரணம் தேடி வெகுதூரம் செல்ல வேண்டிய அவசியமில்லை. பின்வரும் வரிகள் அதனை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

"சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி
சேதியில்லாமல் வேறில்லை காட்சி
பொங்கவே தொழிலாளர் ஒற்றுமை மாட்சி
பொலிவு கொண்டாடுவர் அடைகுவர் தாட்சி"
"சிங்கள மந்திரிகள் கூற்று- மிக
சீருகெட்டதென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று-திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று"

"நன்றி கெட்டு பேசும் மந்திரிமாரே-உங்கள்
நியாயமென்ன சொல்லு வீரே
இன்றியமையாத வொரு பேரே செய்ய
இடமுண் டாக்ககின்றீர் நீரே"

அந்தவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் பேரினவாதத்திற்கு எதிரான பார்வையை அரசியல் தளத்தில் முதன் முதலில் முன்னெடுத்தவர்கள் நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதிகளாவர்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்த பார்வையும் முக்கியமானது. மலையக இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்ற ஸி.வி. யின் முக்கிய படைப்பு "In Ceylon Tea Garden" என்ற கவிதைத் தொகுப்பாகும். 1948களில் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப் பட்ட போது அத்தகைய ஜீவகாருணியமற்ற செயலுக்கெதிராக இலங்கை-இந்திய காங்கிரஸ் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஒழுங்கமைத்திருந்தது. அச்சத்தியாக்கிரக போராட்டத்தில் ஸி.வி.யும் கலந்து கொண்டார். அப்போராட்டம் ஏற்படுத்திய உந்துதலினால் பிரவாகம் கொண்டதே மேற்குறித்த கவிதைத் தொகுப்பாகும். அந்தவகையில் மலையக மக்களின் வாழ்வு, இருப்பு என்பன குறித்து அக் கவிதைத் தொகுப்பு அழகுற வெளிக் கொணர்கின்றது. அதேசமயம், மலையக மக்களின் வாக்குரிமைப் பறிப்பு தொடர்பாகவோ அல்லது சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பாகவோ எந்தப் பதிவும் அக்கவிதைத் தொகுப்பில் அடங்கியிருக்காதது துரதிஷ்டவசமானதொன்றாகும். மீனாட்சியம்மாளைப் பொறுத்த மட்டில் மலையக மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும் சட்டங்களையும் நேரடியாகச் சாடுகின்றார். தமது பாடல் தொகுப்பின் முன்னுரையில் அவரது பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

> "இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிக் கொண்டே வருகிறது. இலங்கைவாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தீரமுடன் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே அதிலும் முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அத்தகைய பிரச்சாரம் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாட்டுக்களின் மூலம் எடுத்துக் கூற முன் வந்துள்ளேன். இந்தியர்களைத் தூக்கத்தில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்குத் தீவிரமாகப் போராடும் அவர்களை இப்பாட்டுகள் தட்டியெழுப்பும் என்பதே என் அவா."

அம்மையாரின் பாடல்கள் தொழிலாளர்களைச் சார்ந்ததாகவும் அவர்களை விடுதலை உணர்வு கொள்ள வைப்பதாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில் ஸி.விக்கு வந்தமையாத ஆற்றல் மீனாட்சியம்மாளுக்கு வாய்க்கப் பெற்றுள்ளமை திடுக்கிட வைக்கும் அளவுக்கு அவரது அரசியல் தொழிற்சங்க இலக்கிய செயற்பாடுகளுக்கு வளம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. அம்மையாரின் பாடல்கள் பொதுவாகவே கூத்து மெட்டுகளிலும், சினிமாப் பாடல் மெட்டுகளிலும் அமைந்துள்ளன. அம்மையாரே தமது பாடல்களுக்கான மெட்டுகளையும் தமது நூலில் தந்துள்ளார் (ஜெ மாயாவதாரன், சந்திர சூரியர், நந்தவனத்தில் ஓர் ஆண்டி, ஆடுபாம்பே, அய்யா ஒரு சேதி கேளுமே, தங்க குடமெடுத்து, கும்மி, கல்லார்க்கும் கற்றவர்க்கும், அய்யோ இதென்ன அநியாயம், போன்ற பாடல் மெட்டுகளை ஒவ்வொரு பாடலும் தொடங்குவதற்கு முன் குறிப்பிடுகின்றார்). இவ்வாறு தமது கவிதையில் இசை மெட்டு என்னும் உத்தியைக் கையாண்டுள்ள அம்மையாரின் கவிதைகள் பாரதியின் நவீன உத்திகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. அம்மையாரின் பாடல்களை பாரதியாரின் பாடல்களோடு ஒப்பு நோக்குகின்ற போது பொருளமைதி, சொற்கள் என்பனவற்றில் பெரிதும் ஒற்றுமையிருப்பதனைக் காணலாம். ஒருவகையில் பாரதியாரின் பாடல்களை மலையகச் சூழலுக்கு ஏற்றவகையில் மாற்றியமைத்ததாகவும் அவரது பாடல்கள் அமைந்துள்ளன. பராசக்தியை, பாரததேவியை வணங்குகின்ற போதும், இடம்பெறுகின்ற சொற்களான "செய்வோம்", "நடப்போம்", "கொண்டாடுவோம்" முதலிய போர்க்குணமுள்ள சொற்கள் இருவரின் கவிதைகளிலும் தாராளமாக இடம்பெறுவதைக் காணலாம்.

மலையகத்தில் தொழிலாளர் வர்க்கம் சார்ந்த அரசியல் தொழிற்சங்கப் பணிகளையும் அவர்தம் நலனுக்கான போராட்டங்களையும் முன்னெடுத்ததில் பிரஸ்கெடிலுக்கு (Bracegirdle) முக்கிய இடமுண்டு. உழைக்கும் மக்கள் சார்ந்த அவரது செயற்பாடுகளும் அமைப்பாக்கப் பணிகளும் வெள்ளைத்

துரைமார்களையும் ஏகாதிபத்தியவாதிகளையும் ஆத்திரங்கொள்ளச் செய்தது. இதன் காரணமாக பிரேஸ்கேடிள் தமது துரை (தோட்ட முகாமையாளர்) பதவியிலிருந்து நீக்கப்பட்டதுடன் அவரை நாடு கடத்துவதற்கான உத்தரவும் இலங்கை அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்டது. இவ்வாறானதோர் சூழலில் தொழிலாளர் நலன் சார்ந்த பணிகளிலும் அமைப்பாக்கப் பணிகளிலும் முழு ஈடுப்பாட்டுடன் செயற்பட்டு வந்த பிரஸ்கெடில் மற்றும் என்.எம். பெரேரா, கொல்வின். ஆர். டி. சில்வா போன்ற இடதுசாரித் தலைவர்களுடனும் ஐக்கியப்பட்டு மீனாட்சியம்மையார் செயற்பட்டுள்ளார். இவர்கள் ஒழுங்கமைத்திருந்த கூட்டங்களில் கலந்து உரை நிகழ்த்திய நிகழ்வுகள் தன்முனைப்பற்ற அவரது நாகரிகத்தை மட்டுமன்று பெண்மைக்கே உரித்தான கம்பீரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. அம்மையாரின் ஒட்டு மொத்தமாக ஆளுமையை மதிப்பீடு செய்த கலாநிதி என்.எம்.பெரேரா

> "இலங்கையில்இந்தியர்களுக்காகஅநீதிகள்இழைக்கப்படுமானால் அந்த அநீதிக்கு எதிராகப் போராடும் போராளிகளின் முன் வரிசையில் திருமதி மீனாட்சி அம்மையாரைக் காணலாம்"

என மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமூகத்தைப் புரிந்து கொள்ளாமல் அச்சமூகம் சார்ந்த விடுதலையைத் தோற்றுவிக்க முடியாது என்பது வரலாற்றின் நியதி. மார்க்சியம் அதன் தோற்றக் கால முதலாகவே சகலவிதமான ஒடுக்கு முறைக்கும் எதிரான தத்துவார்த்தத் தளத்தினை வழங்கி வந்திருக்கின்றது. இந்தச் சூழலில் மார்க்சியத்தை காலாவதியான தத்துவமாகக் காட்ட முனைந்த சிலர் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளின் ஆசீர்வாதத்துடன் பல குழப்பகரமான சிந்தனைகளை மக்கள் மத்தியில் முன் வைத்து அவர்களின் சமூமாற்றத்திற்கான செயற்பாடுகளையும் இயக்கங்களையும் இல்லாதொழிக்கத் தலைப்பட்டனர். இந்தப் பின்னணியில் மார்க்சியம் பெண்விடுதலை சார்ந்த சிந்தனைகளை முன் வைக்கத் தவறி விட்டது என்ற பிரச்சாரத்தை நவீன பெண்ணியவாதிகளும் மார்க்சிய எதிர்ப்பு அறிவுஜீவிகளும் முன்னெடுத்தனர். மார்க்சியத்தைக் கோராமல், மார்க்சிய வழி அல்லாமல் எந்த வகையிலும் பெண் விடுதலையை முன்னெடுக்க முடியாது என்பதை வரலாறு நிரூபித்திருக்கின்றது. மீனாட்சியம்மாளைப் பொறுத்தமட்டில் பெண்களைச் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்ததுடன் பெண்விடுதலையின் தேவையைச் சமூகவிடுதலையுடன் இணைத்தே முன்னெடுத்தார்.

டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது தொடர்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட விவாதத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதற்கு எதிரான கருத்துகள் சேர். பொன். இராமநாதன் முதலானோரால் முன்வைக்கப்பட்டன. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து பெண்கள் வாக்குரிமைச் சங்கம்(Women Franchise Union) என்ற அமைப்பு லேடி டயஸ் பண்டாரநாயக்காவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பைச் சார்ந்த திருமதி. நல்லம்மாள் சத்தியவாகீஸ்வர ஐயர், திருமதி ஈ.ஆர். தம்பி முத்து முதலிய தமிழப் பெண்கள் அங்கம் வகித்தனர். மீனாட்சியம்மாளைப் பொறுத்தமட்டில் இவ்வமைப்பில் அங்கத்துவம் பெறவில்லை என்றபோதிலும் பெண்களின் வாக்குரிமையை ஆதரித்துப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இச் சங்கம் குறித்த அம்மையாரின் பார்வை இவ்வாறு அமைந்திருந்தது:

> "இச்சங்கமானது டொனமூர் கமிஷன் இலங்கைக்கு வந்த காலத்தில் ஆரம்பிக்கப் பெற்றதெனினும் தங்கள் வேலையைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும். இச்சங்கத்தினர் இதுவரை செய்துள்ள வேலை எப்படியிருந்த போதிலும் இனித்தான் அதிக வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேற்படி சங்கத்திற்கு வருஷ சந்தா ரூபா 50 ஆக வைத்திருக்கின்ற படியால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இதில் சேர்ந்துழைக்க வசதியிராது. பணம் படைத்தவர்கள் மாத்திரம் தங்கள் காரியத்தைச் செய்து முடிப்பது போதுமானதாகாது. எல்லாச் சகோதரிகளும் கலந்துழைக்க வேண்டிய வேளையில் பணம் படைத்தவர்கள் மாத்திரம் தலையிடுவதைக் கொண்டு அதிக பலன் கிடையாது. ஆகவே சகோதரிகள் தாங்கள் கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால் ஆங்கிலம் தெரியாத சகோதரிகளிடத்தும் பிரச்சார வேலைகளைத் துவக்க வேண்டும்" தேசபக்தன் *(26-01-1929)*.

என பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதுடன், அவ்வியக்கம் உழைக்கும் மக்களிலிருந்தும் அவர்களின் நலனினின்றும் எந்தளவு அந்நியப்பட்டிருந்தது என்பதனையும் அம்மையார் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இவ்வியக்கத்தின் சித்தாந்தத் தளம், செயற்பாடு என்பன அம்மையாரின் சித்தாந்தத் தளம், நடைமுறை என்பனவற்றிலிருந்து முரண்பட்டிருந்தமையும் அவர் இவ்வியக்கத்தில்

அங்கம் வகிக்காததற்கு ஏதுவான காரணமாக அமைந்திருக்கும் என எண்ணத்தோன்றுகின்றது. இவ்வாறே பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதைக் கடுமையாக எதிர்த்த சேர். பொன்.இராமநாதன் போன்றோரைக் கடுமையாக விமர்சனத்திற்குட்படுத்துகின்ற அதே சமயம் பெண் ஆளுமையின் மகத்துவம் குறித்துச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றார்.

1929 ஆம் ஆண்டில் தேசபக்தன் பத்திரிக்கைத் தினசரியாக வெளிவரத் தொடங்கியது. நடேசய்யரின் அரசியல் தொழிற்சங்க பொறுப்பு அதிகரித்ததால் அவர் அடிக்கடி வெளியூர் சென்று வந்தார். இதன் காரணமாகப் பத்திரிக்கைப் பொறுப்பினை ஏற்க வேண்டிய நிலை அம்மையாருக்கு ஏற்பட்டது. அம்மையார் இப்பொறுப்பினை ஏற்று செயற்பட்ட காலத்தில் அதிகமான பெண்கள் இவரோடு இணைந்து செயற்பட்டமை பற்றிச் சாரல் நாடன் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இக்காலத்தில் தேசபக்தன் பத்திரிகையில் அம்மையார் நிறையக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சில இதழ்களுக்கு ஆசிரியர் தலையங்கமும் எழுதியுள்ளார். "ஸ்திரிபக்கம்"என்றபகுதிக்குத்தானேபொறுப்பாகவிருந்து பெண்கள் தொடர்பில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மலையகத்தில் மீனாட்சியம்மாள் அதன் சமூக வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பினை நல்கியுள்ளார். அம்மையாரின் ஒருமுகப்படுத்தப்பட்ட மக்கட்சார்பு, நாட்டு நல நாட்டம், இலக்கிய நோக்கு என்பன மலையகத்தில் புதிய மரபொன்றினைத் தோற்றுவித்திருக்கின்றது. அம்மரபு இன்றைக்கும் வாய்ப்புள்ள சில ஆக்கக் கூறுகளைக் கொண்டுள்ளது. அம்மரபின் வரலாற்றினையும் தொடர்ச்சியினையும் நன்கு விளங்கிக்கொள்வதற்கு மீனாட்சியம்மாள் பற்றிய முழு நிறைவாக ஆய்வு அவசியமாகும்.

சூரியகாந்தி -2010

கவிஞர் ஸி.வி. யின் இலக்கிய நோக்கு (காலமும் கருத்தும்)

மனுக்குலத்தின் வரலாறு என்பது பல்வேறுபட்ட போராட்டங்களுக்கும், முரண்பாடுகளுக்கும், மாற்றங்களுக்கும் மத்தியில் சென்றுகொண்டிருக்கின்றது. மனிதர்கள் தாம் வாழும் காலகட்டத்தில் அம்முரண்பாடுகளையும் மாற்றங்களையும் எதிர்கொள்ளுகின்றனர். அவர்கள் அவ்வாறு எதிர்கொள்வதை மூன்று நிலைகளில் அவதானிக்கலாம்.

1. முதலாவது பிரிவினர், சூழலில் காணப்படும் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் கண்டு, "இது இவ்வாறு தான் நடக்கும்" என அடங்கிப் போவர். இங்கு ஊழ்வினை, விதி, மரபு, தர்மம், முன்னோர் வழி என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பெரும்பாலாக பொதுமக்களை இந்நிலைப்பாட்டில் காணலாம்.

2. இரண்டாவது பிரிவினர் சூழலில் காணப்படும் பிரச்சினைகள், முரண்பாடுகள் என்பவற்றிலிருந்து விடுபட்டு சமூகத்தைத் துறந்து போகின்றவர்கள். சமூகத்தைத் துறந்து தவம் செய்யும் ஞானியர், யோகிகள் முதலியோரை இந்நிலைப்பாட்டில் காணலாம். (இல்லற பந்தத்தில் கட்டுண்ட நிலையிலும் இக் கருத்தியலுடன் வாழ்வோர் உண்டு. துறவு பூண்டு தனித்து வாழ்ந்த போதிலும் சமூக அக்கறையுடன் சிந்தித்துச் செயலாற்றியவர்களும் இருந்துள்ளனர்).

3. மூன்றாவது பிரிவினர் சமூகத்தின் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் கண்டு அவற்றினை எதிர்கொள்வதுடன் அவற்றுக்கான தீர்வினையும் முன்வைக்கின்றனர். தன் காலகட்டத்தில் காணப்படும் முற்போக்கு அல்லது பிற்போக்கு இயக்கங்களில் ஏதாவது ஒன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சமூக மாற்றத்திற்காக உழைக்கின்றவர்களாகக் காணப்படுவர்.

இந்நிலைப்பாட்டில் அரசியல்வாதி, இலக்கியகர்த்தாக்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் முதலியோரைக் காணலாம்.

ஒருவருடைய வாழ்க்கை அவரது குடும்ப மட்டத்துக்கு மேலாக சமூக வாழ்க்கையின் யாதேனும் ஒன்றின் மட்டத்தில் நிலைக்கப்படுகின்ற தேவை ஏற்பட்டுவிட்டதென்றால், அம்மனிதனின் வாழ்க்கை ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் சமூகப் பயன்பாடு மிக்கதாகின்றது. அவர்களின் சிந்தனையில் கொள்ள வேண்டியவற்றை தம் தேவைகளுக்கேற்ப கொள்ள முயற்சிக்கின்றார்கள். இதனால் அத்தகையோரின் வாழ்வும், பணியும் இன்றைய நிகழ்வாகின்றது.

கவிஞர் ஸி.வி.வேலுப்பிள்ளை இவ்வாறுதான் இன்றைய நிகழ்வாகி விடுகிறார். இறந்த மனிதனின் வாழ்வும் பங்களிப்புகளும் இன்றைய பிரச்சினைகளோடு இயைபுடையதாகின்ற போது அவர்கள் பற்றிய தேடல், ஆய்வுகள், மதிப்பீடுகள் என்பன முக்கியத்துவம் உடையதாகின்றது. அவ்வடிப்படையில் கவிஞர் ஸி.வி.யைப் பொறுத்தவரையில் ஆசிரியர், பத்திரிகையாளர், அரசியல்வாதி, இலக்கியகர்த்தா எனப் பல்துறை சார்ந்த ஆளுமைகளை உடையவர். இவ்வாளுமைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் காத்திரமான சில தகவல்களை வெளிக்கொணர முடியும் என்ற போதும், இவை அனைத்தும் ஒருங்கிணைந்ததாகவே ஸி.வி. என்ற மனிதரின் சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன எனலாம். அந்த வகையில் ஸி.வி.யின் இலக்கிய நோக்கிலும், போக்கிலும் இவ்வாளுமைகள் ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் தாக்கம் செலுத்தியுள்ளன.

சமூகம் பற்றிய அவரது கணிப்பு அக்காலச் சூழலினை அவர் எதிர்கொண்ட விதம், அவரது சிந்தனைகள் என்பன அவரது இலக்கியப் படைப்புக்களில் எவ்வாறு வெளிப்பட்டதென்பது இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. இதற்கு முன்தேவையாக அதற்கு ஆதாரமாக உள்ள மலையக சமூகவமைப்பு குறித்த தெளிவு அவசியமானதாகின்றது. அதுபற்றி இந்நூலில் இடம்பெறுகின்ற "மலையக நாட்டார் பாடல்கள் மரபும் மாற்றமும்" என்ற கட்டுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால் இங்கு நேரடியாக ஸி.வி.யின் காலத்தில் மலையகத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் குறித்த விடயங்களுக்குச் செல்வோம்.

ஸி.வி. யின் காலத்தில் மலையகத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் (1934 - 1984)

சுமார் 50 ஆண்டு காலமாக (1934 - 1984) எழுத்துலகில் பணியாற்றிய ஸி.வி. யின் இலக்கிய நோக்கினைத் துணிவதற்கு அக்காலத்தில் இடம்பெற்ற சமூக, அரசியல், கலை, இலக்கிய நிகழ்வுகள் குறித்த தெளிவு அவசியமாகின்றது.

1939களில் மலையகத் தமிழர்களிடையே ஸ்தாபனப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு அதற்கான செயற்பாடுகள் இடம் பெற்றது. 1939இல் இலங்கை - இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இது பெரும்பான்மை தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டதாக இருந்தமையினால் ஓர் பலம் வாய்ந்த ஸ்தாபனமாகக் காணப்பட்டது. இவ்வமைப்பு மலையக மக்களை ஸ்தாபனப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போது அதற்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வமைப்பில் தீவிரமாக செயற்பட்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அத்துடன் ஸ்தாபன பணிகளுக்காக தொழிலாளர்களின் குடியிருப்புக்குச் (லயன்கள்) சென்றவர்கள் அத்துமீறி ஆர்ப்பாட்டத்திற்கு துணைநின்றவர்கள் என்ற வகையில் கைது செய்யப்பட்டார்கள். பல போராட்டங்கள் மலையகத்தில் இடம்பெற்றன. பல தொழிலாளர்களின் உயிர்த் தியாகங்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஓர் அமைப்பாகவே இலங்கை - இந்திய காங்கிரஸ் காணப்பட்டது.

1940இல் சம்பள உயர்வுகள் கோரிய போராட்டங்கள் மலையகத்தில் வலுப்பெற்றன. இவற்றில் முல்லோயா தோட்டப் போராட்டம் குறிப்பிடத்தக்கது. இப்போராட்டத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

தொடர்ந்து வந்த காலங்களில் மலையக மக்களிடையே மலையக தேசிய உணர்வும் வளர்ச்சியடையத் தொடங்கிற்று. மலையகத் தமிழர் வளர்ந்து வரும் ஒரு தேசிய சிறுபான்மை இனத்துக்குரிய சமூகவுருவாக்கத்தைக் கொண்டிருப்பதனாலும், இவர்கள் சிங்களத் தொழிலாளர்களுடன் இணைந்து உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்தைத் தொடரக் கூடியவர்களாக இருந்ததனாலும் பேரினவாதிகளை அச்சங்கொள்ளச் செய்தது. இந்த அச்சத்தின் காரணமாகப் பேரினவாதிகள் இம்மக்களைச் சிங்களத்

தொழிலாளர்களிலிருந்து பிரித்து வைக்கும் நடவடிக்கைகளிலும் அவர்களை நாடற்றவர்களாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அதன் வெளிப்பாடாகவே இம்மக்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டு குடியுரிமைப் பறிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போது மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்பாக இலங்கை இந்திய காங்கிரஸ் இருந்தது. குடியுரிமைப் பறிப்பு சட்டத்திற்கு எதிராகப் பரந்துபட்ட, போராட்டத்தை நடத்தவில்லை என்ற போதும் இதற்கு எதிரான போர்க்குணத்தைக் கொண்டிருந்தமை அதன் முற்போக்கான அம்சமாகும். இவ்வமைப்பில் ஸி.வி.யும் முக்கியமான உறுப்பினர்களில் ஒருவர்.

மேலும், குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு கூடிய லாபத்தைப் பெறும் நோக்குடனும், இம்மக்களின் சமூகவுருவாக்கத்தைச் சிதைக்கும் நோக்குடனும் கொண்டு வரப்பட்ட ஒப்பந்தமாக ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் (1965) அமைந்திருந்தது. இந்த ஜீவ காருணியமற்ற செயலால் மலையகச் சமூகம் மேலும் வதைக்குள்ளாக்கப்பட்டதுடன் பல குடும்பங்கள் சிதைக்கப்பட்டன. கணவனைப் பிரிந்த மனைவி, நண்பர்களைப் பிரிந்த நண்பர்கள், காதலனைப் பிரிந்த காதலி என ஏராளமானோர் வேர்கள் பிடுங்கப்பட்டவர்களாய் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களை ஏற்றிச் சென்ற புகையிரதம் "அழுகை கோச்சி" என அழைக்கப்பட்டது.

இலங்கை இந்திய காங்கிரஸ் பின்னர் இந்நாட்டுச் சூழலுக்கு ஏற்றவகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக மாற்றமடைந்தது. காலப் போக்கில் இவ்வமைப்பில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக திரு. வீ.கே. வெள்ளையன் போன்றோர் இவ்வியக்கத்திலிருந்து விலகிப் புதிய அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்தப் பின்னணியில் 1965 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதே தொழிலாளர் தேசிய சங்கம் என்ற அமைப்பாகும். மலையக மக்கள் தொடர்பில் மனிதாயம் சார்ந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்ததில் இவ்வமைப்பிற்கு முக்கிய இடமுண்டு. ஸி.வி. வேலுப்பிள்ளை இவ்வமைப்பில் முக்கிய உறுப்பினராக இருந்தார் என்பதும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கதொன்றாகும்.

இக்காலப்பகுதியில் மலையகத்தில் திரு. ஏ.இளஞ்செழியன் தலைமையிலான இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி வளர்ந்திருந்தது. இதன் காரணமாக மலையக மக்களிடையே தி.மு.க

கருத்துகள் பரவி ஜனரஞ்சகம் அடைந்திருந்தது. இதில் அங்கம் வகித்த பலர் பின்னாட்களில் இடதுசாரி இயக்கங்களில் இணைந்தனர். இது இதன் முற்போக்கான அம்சமாகக் காணப்பட்டது. மலையகத்தை அடித்தளமாகக் கொண்டு இவ்வியக்கம் செயற்பட்டதால் இந்திய திராவிட முன்னேற்றக் கழகப் போக்கிலிருந்து அந்நியப்பட்டதாகவும் அதே சமயம் உழைக்கும் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. இதன் பின்னணியில் தான் இப்போக்கு சார்ந்த பண்பாட்டு இயக்கங்களும் இலக்கியங்களும் தோன்றின. இவ்வியக்கம் மலையக மக்கள் தனித்துவமிக்க தேசிய இனம் என்ற சிந்தனைப் போக்கை அங்கீகரித்ததுடன் அதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களையும் முன்வைத்தது.

இன்னொரு புறத்தில் இதே காலத்தில் பண்பாட்டு ரீதியாகக் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட்டன. மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்திற்கூடாக மலையக இலக்கியம் வளர்க்கப்பட்டது. அவ்வமைப்பின் தலைமை, பாட்டாளி வர்க்க இலக்கியம் என்பதை அதன் கருத்தியலாக ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் அதனால் தொழிலாளர்களின் பிரச்சினைகளை இலக்கியப் பரப்பில் நிராகரிக்க முடியவில்லை. எனவே, மனிதாபிமான அடிப்படையிலான இலக்கிய நடவடிக்கைகளே இவர்களில் முதன்மை பெற்றுக் காணப்பட்டன.

இதே காலச் சூழலில் தோழர் சண்முகதாசன் தலைமையிலான இடது சாரி இயக்கமானது புதியதோர் பரிணாமத்தை எட்டியிருந்தது. இவ்வியக்கம் மலையக மக்களிடையே வேர் கொண்டு கிளை பரப்பிய போது தொழிலாளர்கள், புத்திஜீவிகள், மாணவர்களெனப் பல்வேறுபட்ட ஆளுமைகளைத் தன் நோக்கி ஆகர்சித்திருந்தது. உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்ட முனைப்பை இவ்வியக்கம் உணர்த்தி இருந்தது. இக்காலகட்டத்தில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிக்கு மடக்கும்புர, மேபீல்ட், பதுளை கீனாகலை ஆகிய இடங்களில் இடம்பெற்ற போராட்டங்களை உதாரணமாகக் கூறலாம்.

மலையகத் தமிழர் ஒரு சமூகமாகக் கூடி வாழ்வதனைச்சிதைக்கும் முகமாக பல குடியேற்றவாதத் திட்டங்களை அரசு அவ்வப்போது மேற்கொண்டு வந்துள்ளது. 1977ம் ஆண்டு நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் 700 ஏக்கர் காணியைச் சுவீகரித்து தமது குடியேற்றவாத

நடவடிக்கையை மேற்கொள்ள அரசு முயற்சித்தது. இதற்கு எதிரான போராட்டம் கிளர்ந்தெழுந்ததுடன் இப்போராட்டத்தில் டெவன் தோட்டத்தைச் சேர்ந்த சிவனு லட்சுமணன் என்ற இளைஞர் பலியானார். இதனை எதிர்த்து மலையகத்தில் தொழிலாளர்கள், புத்திஜீவிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலதரப்பட்டோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை இப்போராட்டத்திற்கான பலமான அம்சமாகும்.

தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் கேவலமானதோர் அரசியல் பின்னணியில் மோசமான இன வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. மலையகத் தமிழர்கள் தங்களது உடைமைகளை இழந்ததுடன் தமது கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் இழந்தனர். பலர் புலம் பெயர்ந்து இந்தியாவிற்குச் சென்றனர். அந்நாட்டிலும் இன்று வரை தமது இருப்பையும் அடையாளங்களையும் இழந்து பல்வேறு விதமான அடக்கு முறைகளுக்கும் சுரண்டலுக்கும் உட்பட்டு வருகின்றனர். இவ்வகையில் உடமை இழப்பு, புலப் பெயர்வு என்பன ஒரு சமுதாயத்தின் இருப்பு என்ற வகையில் பல்வேறுவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது.

ஸி.வி. யின் எழுத்துகள்

ஸி.வி.யை நாம் புரிந்து கொள்வதற்கும் ஆராய்ச்சிக்குட்படுத்தவும் எம் முன்னுள்ளவை அவரது எழுத்துக்கள் தான். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவரது கடிதங்கள், குறிப்புக்கள் நூல்வடிவம் பெறாத கட்டுரைகள், ஆக்கப் படைப்புக்கள், வரைந்த கேலிச் சித்திரங்கள் என்பன முறையாகக் கிடைத்திருப்பின் அவர் குறித்த பூரணத்துவமான ஆய்வினை வெளிக்கொணர முடியும். மேற்குறிப்பிட்ட சில விடயங்கள் அவர் பற்றிய ஆய்வுகளுக்குத் தடையாக உள்ள காரணிகளாகும். எனினும் கிடைக்கப்பெற்ற சில ஆதாரங்களை ஒழுங்குபடுத்தி அவரது சமூக நோக்குப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வோம். அவ்வகையில் இக்கட்டுரை ஓர் ஆரம்ப முயற்சியே தவிர முடிந்த முடிவல்ல என்பதையும் கூறவிழைகின்றேன்.

ஆய்வு வசதிக்காக அவரது எழுத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்வது சிறப்பான ஒன்றாகும்.

1. நாட்டார் பாடல்கள் சேகரிப்பு
2. கவிதை
3. நாவல்
4. பிற முயற்சிகள்

நாட்டார் பாடல்கள் சேகரிப்பு

ஸி.வி. பெரியாங்கங்காணியான தனது தாத்தாவின் வீட்டில் வசித்ததனால் நாட்டார் பாடல்களை இரசிக்கவும், அவற்றினைச் சேகரிப்பதற்குமான சூழ்நிலை கிடைத்தது. தோட்டத் தொழிலாளர்கள் விசேட தினங்களில் பெரிய கங்காணியின் வீட்டிற்குச் சென்று நாட்டார் பாடல்களைப் பாடிப் பரிசு பெற்றனர். மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான சேகரிப்பு, ஆய்வு என்பன ஆங்காங்கே திட்டுக்களாகவும், தீவுகளாகவும் இடம்பெற்ற போதிலும் அவை முழுமை அடையவில்லை எனலாம். ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் மலையக நாட்டார் பாடல்கள் சிலவற்றைச் சேகரித்து 'மலைநாட்டு மக்கள் பாடல்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டமை இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனையாக அமைந்து காணப்படுகிறது.

உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இம்மக்களின் நம்பிக்கைகள், விருப்பு-வெறுப்புக்கள், மகிழ்ச்சி, துன்பம், அவர்தம் உறுதிப்பாடு என்பவற்றைப் பிரதிபலிக்கும் நாட்டார் பாடல்கள் தொடர்பான சேகரிப்பு, ஆய்வு என்பன முக்கியத்துவமுடையவையாகின்றன. அத்துடன் இன்றைய மக்கள் இலக்கியம் யாவும் மக்களிடம் காணப்படும் நாட்டார் வழக்காறுகளும், உரையாடல்களும் வளமிக்க மொழியில் பட்டை தீட்டப்பட்டே உருவாக்கமடைகின்றன. இத்தகைய பின்னணியில் தான் பாரதியின்-கார்க்கியின் படைப்புக்கள் உருவாக்கமடைந்தன.

சமூகவுணர்வுடனும் நாட்டார் பாடல்கள் குறித்த சரியான பார்வையுடனும் ஸி.வி. இம்முயற்சியினை மேற்கொண்டுள்ளார். இவருக்குப் பின்னர் மலையக நாட்டார் பாடல்கள் சேகரிப்பில் ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகின்றமை கவனிப்புக்குரியது.

இத்தொகுப்பில் அடங்கிய பாடல்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம். மேடைகளில் பேசும் போதும், சாதாரண உரையாடல்களின் போதும் இந்நாட்டார் பாடல்களை மேற்கோள் காட்டியே பேசுவார். அவர் உழைக்கும் மக்களை நேசித்தவர். இதன் வெளிப்பாடாகவே இந்நாட்டார் பாடல்களையும் நேசித்தார்(தகவல்: திருமதி. தவமணி ஜெயராமன்). ஸி.வி.யின் இம்முயற்சி மலையக இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய முக்கிய பங்களிப்பாக அமைந்து காணப்படுகின்றது.

மிக அண்மையில் மு.சிவலிங்கம் ஸி.வி. யின் தொகுப்பில் அடங்காத சில மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். இந்நூல் மலையக நாட்டார் இலக்கியத்திற்கான புது வரவாகக் காணப்பட்ட போதினும், அவற்றில் சில விரசம் மிக்க பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களெல்லாம் ஸி.வி.க்கு தெரியாது என்பதல்ல. ஸி.வி. மிக நிதானத்துடனும் சமுதாயப் பார்வையுடனும் தொகுத்தமையினாலேயே அவற்றைத் தமது தொகுப்பில் தவிர்த்திருக்கின்றார் எனக் கருத இடமுண்டு.

கவிதை

கவிஞரின் ஆளுமையை மதிப்பிடுவதற்கு அவரது கவிதைப் படைப்புக்கள் மிக முக்கியமானவையாகும். கவிதைத்துறைதான் அவரை இலக்கிய உலகில் கணிப்புக்குரியவராக்கியது. இவரது கவித்துவ ஆளுமையை விஸ்மாஜினி (Vismajini) என்ற கவிதை நாடகம் மூலமும் வேஃவேயர் (Wayfarer) என்ற வசன கவிதைத் தொகுப்பு மூலமாகவும் அறியலாம். "'விஸ்மாஜினி', 'வேஃவெயர்' என்ற இரண்டு நூல்களிலும் ஸி.வி.யின் சொல்லாட்சிகளைக் காணலாம்" என்பார் சாரல் நாடன். எனினும் அவரது கவித்துவ ஆளுமையின் உன்னத அறுவடையாக அமைந்தது In Ceylon Tea Garden என்ற தொகுப்பாகும். ஏனைய கவிப்படைப்புக்கள் யாவும் இத்தொகுப்பை எழுதுவதற்கான படிக்கற்கள் எனக் கூறின் அது மிகையாகாது. இத்தொகுப்பு முதலில் இரசிய மொழியிலும், பின்னர் தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. முதலில் இத்தொகுப்பின் மொழிபெயர்ப்புப் பற்றி நோக்கி பின்னர் கவிதை பற்றி நோக்குதல் பயன்மிக்க ஒன்றாகும்.

ஸி.வி. வேலுப்பிள்ளையின் படைப்புகளில் In Ceylon Tea Garden என்ற கவிதைத் தொகுப்பும் Born to Labour என்ற விவரணத் தொகுப்பும் முக்கியமானவையாகும். அவரது ஆங்கிலக் கவி வரிகள் இவ்வாறு பிரவாகம் கொண்டிருந்தன:

"To the tom – tom's throp
The dawn lies started;
Trembling upon the tea;
The last dew bead is fresh,
Before the morning treads

On this mating hour
Where suffering and pain
Decay and death are one
In the life- throp
In the breathing of men."

சக்தீ பால ஐயாவின் மொழிபெயர்ப்பு இவ்வாறு அமைந்து காணப்படுகின்றது:

"பேரிகைக் கொட்டெழு
பேரொலித் துடிப்பும்
புலர்த லுணர்த்தப்
புரளுமாம் வைகறை
பாரிலே கதி ரொளி
பன்நடம் பயிலுமுன்
பசுந்தளிர் தேயிலைப்
பள்ளி கொள் துரய

எஞ்சிய முத்தாம்
எழில் மிளிர் பனித்துளி
எழுலான் இறைக்கும்
இதயார்ப் பணமுற
சஞ்சலம் வேதனை
சாதல், அழிவு,
சகலமும், ஒன்றென
சாந்தவ் வேளைக்கண்"

இம்மொழிபெயர்ப்பில் ஸி.வி.யின் கவிதைகளில் காணப்பட்ட இயல்பான மண்வாசனைப் பண்பும் அவற்றோடு இணைந்த சொற்களும் காணப்படவில்லை. சக்தீ பால ஐயாவின் கவிதைத் தொகுப்பினை மொழிபெயர்ப்பு என்று கூறுவதை விட தழுவல் எனக் கூறுவதே பொருந்தும் (இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தபோது, ஸி.வி. யின் படைப்பின் தாக்கத்தினால் தனது ஆக்கம் வெளிப்பட்டதேயன்றி மொழிபெயர்ப்பென தாம் குறிப்பிடப்படவில்லை என்று சக்தீ பால ஐயா தனிப்பட்டவகையிலும் சில கூட்டங்களிலும் கூறியதைக் கேட்டிருக்கின்றேன்). ஸி.வி. அவர்கள் அரசியல்வாதியாக தொழிற்சங்கவாதியாக இருந்தவர். இலக்கியத் தளத்தில் மட்டுமே

இயங்கியவரான சக்தி.பாலையா இத்தகைய உணர்வுகளை எவ்வாறு எதிர் கொண்டார் என்பதும் சுவாரசியமானதோர் வினாதான். நந்தலாலா சஞ்சிகைக் குழுவினரும் ஸி.வி.யின் கவிதை மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அம் மொழிப்பெயர்ப்பு வரிகள் பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றது.

பிரட்டின் அதிர்வில்
விடியலே அதிர்ந்து போய்
தேயிலை மீது
சரிந்து கிடந்தது.

விடியல் பொழுதின்
ஆக்கிரமிப்பின் முன்னர்
இறுதியாய் சொட்டும் - இப்
பனித்துளி புதிது.

பொருந்தும் இந்த
பொழுதின் கணத்தில் தான்
துயரும் நோவும்
நசிவும் இழப்பும்

இம் மக்களின் மூச்சில்
இவ்வாழ்கையின் முகிழ்ப்பின்
அம்சம் ஒன்றென
ஆகிப் போயின.

இம்மொழிபெயர்ப்பு உள்ளடகத்திலும் உருவகத்திலும் சிதைவடையாது காணப்படுகின்றது.

மல்லியப்பு சந்தி திலகர் தொகுத்து வெளியிட்டுள்ள ஸி. வி. யின் **In Ceylon Tea Garden** (2007 பாக்யா பதிப்பகம்) கவிதைத் தொகுப்பு (ஆங்கிலத்தில் ஸி.வி. எழுதிய ஆங்கிலக் கவிதைகளையும் மொழிபெயர்ப்பையும் சேர்த்து) இத்தகைய ஆய்வுகளுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளது.

ஸி.வி.யின் படைப்புகள் மலையக மக்களின் பிரச்சினையை உள்நின்று நோக்குவதுடன், மலையக வாழ்க்கை முறையின்

நடப்பியலைப் புரிந்துகொண்டு நியாயத்தின் பக்கம் நின்று கவிதைகள் எழுத முனைந்தமையின் வெளிப்பாடுகள் எனலாம். பெரும்பாலும் இவரது கவிதைகள் நாட்டார் இலக்கியத்தின் இன்னொரு வடிவமாக அமைந்து காணப்படுகின்றன.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மலையக கலாசாரத் தளத்தையும் மக்களின் உணர்வுகளையும் ஒன்றாக இணைத்துக் காதலிக்கின்ற பண்பினை நாம் ஸி.வி.யில் காணலாம்.

நாவல்

ஸி.வி. எழுதிய நாவல்களில் 'எல்லைப்புறம்', 'பார்வதி', 'வாழ்வற்ற வாழ்வு', 'காதல் சித்திரம்', 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்' ஆகிய நாவல்கள் நேரடியாகத் தமிழில் எழுதப்பட்டவை. ஏனையவை யாவும் பொன். கிருஷ்ணன் சுவாமியால் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டவை.

இவற்றில் 'காதல் சித்திரம்', 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்', 'வாழ்வற்ற வாழ்வு' ஆகிய நாவல்கள் நூலுருப் பெற்று விட்டன. ஏனையவை யாவும் நூலுருப் பெறவில்லை. இவரது நாவல்களில் 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்', 'வாழ்வற்ற வாழ்வு' ஆகிய நாவல்கள் எனது பார்வைக்குக் கிட்டியதால் இந்நாவல்களில் அவரது உலக நோக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை ஆராய முற்படுகின்றேன்.

'வீடற்றவன்' இவரது மிக முக்கிய நாவல்களில் ஒன்றாகும். மலையக மக்களிடையே தொழிற்சங்க அமைப்பை உருவாக்கி, அவற்றினை ஸ்தானப்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைச் சித்திரிக்கும் நாவலாக அமைந்து காணப்படுகின்றது. நாவல் தோற்றம் பெற்ற காலத்தில் (1960களில்) மலையக மக்களிடையே வீறு கொண்டெழுந்த எழுச்சிகள், போராட்டங்கள் போன்றவற்றை இந்நாவல் உள்வாங்கத் தவறி விடுகின்றது. மலையக வரலாற்றில் மறக்க முடியாத போராட்டங்களான மடக்கும்பர, மேல்பீல்ட், பதுளை கீனாகலை முதலிய தோட்டங்களில் இடம்பெற்ற போராட்டங்களைக் குறிப்பிடலாம். ஸி.வி. வாழ்ந்த மடக்கும்பர தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தைக் கூட அவரது படைப்பில் வெளிக் கொணர முடியாது போனமை துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இதற்கு மாறாக கோர்ட்,

வழக்கு முதலியவற்றின் மூலமாக இம்மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கலாம் என்ற பார்வையை அவரது படைப்பு முன்வைக்கின்றது. இப்போக்கு அக்காலத்தில் பாரம்பரியமான தொழிற்சங்க இயக்கங்களின் நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. அந்தவகையில் ஒரு போக்கினைச் சுட்டிக் காட்டுகின்ற நாவலாசிரியர் அதன் மறுபக்கத்தைச் சுட்டிக் காட்டத் தவறி விடுகின்றார். நாவலின் கதாநாயகன் இராமலிங்கம் இறுதியில் பலாங்கொடை காட்டில் "கடவுளே எனக்கு போகும் வழி தெரியவில்லையே" எனப் புலம்புவது இந்நாவலின் சோர்வு வாதத்திற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். 'வீடற்றவன்' மட்டுமன்றி, அவரது ஏனைய படைப்புகளும் தோட்டத் தொழிலாளர்களின் போர்க்குணத்தைக் காட்டத்தவறுகின்றன என்பதே விமர்சனத்திற்குரியது.

'இனிப்படமாட்டேன்' இவரது இறுதி நாவலாகும்; 1984இல் வெளிவந்தது. இந்நாவலையும் ஸி.வி.யின் வாழ்க்கையையும் உற்று நோக்குகின்றவர்களுக்கு இது ஓர் சுயசரிதையாக அமைந்த நாவல் என்பது புரியும். தமிழர் ஒருவர் சிங்களப் பெண்ணை மணம் முடித்து வாழுகின்ற போது ஏற்படுகின்ற முரணையும் அவ்விருவருக்கும் பிறக்கும் மகனுக்கு சமூகத்தில் ஏற்படுகின்ற முரணையும் சித்திரிப்பதாக இந்நாவல் அமைகின்றது. குறிப்பாக 80களில் தோற்றம் பெற்ற இந்த நாவல் இக்காலகட்டத்தில் மலையகத்தில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகளைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றது என்றபோதிலும் அதன் மறுபுறமாக மலையக சமூக இருப்புக்கான உணர்வு எவ்வாறு நிலை கொள்ளப்படுகின்றது என்பதை வெளிக் கொணரத்தவறிவிடுகின்றது. இதனை இக்காலகட்டத்தில் வெளிவந்த ஆனந்த ராகவனின் "நண்பனே என்றும் உன் நினைவாக" என்ற சிறுகதை மிக நேர்த்தியுடன் சித்திரிக்கின்றது எனலாம்.

ஸி.வி. யின் படைப்புக்கள் அனைத்திலும் சிலாகித்துப் பேசப்படுகின்றதொரு விடயம் மலையக மண்ணின் மணம் கமழும் பேச்சு வழக்கு முறையைத் தனது படைப்புக்களில் சிறப்பாகக் கையாண்டுள்ளமையாகும். இவர் நாவல் எழுதத் தொடங்கிய காலகட்டத்தில் தேசிய இலக்கியக் கோட்பாடு, இலங்கை தேசிய இயக்கம் என்பன தத்துவார்த்தப் போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னதாக கோ.நடேசய்யரால் இலங்கைத் தேசியத்தின் தனித்துவமிக்க கூறாக மலையக மக்கள் உணர்வு கொள்ள வழிப்படுத்தியமை, வேறொரு கருத்தியல் தளத்தில் இளஞ்செழியனால் தொடரப்பட்டிருந்தது; மார்க்சியர்கள் இதனைப் புதிய பரிமாணத்தில்

விருத்தி செய்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் மொழித் தூய்மை வாதத்திற்கு எதிராகப் பேச்சு மொழி இலக்கியத்தில் கையாளப்பட்டது. இத்தகைய காலப் பின்புலத்தில் ஸி.வி. யின் படைப்புக்களும் இத்தகைய மக்கள் சார்பு பண்பினை ஆதரித்தமை அவரது எழுத்துருக்களின் தனிச் சிறப்பாகும். இத்தகைய பேச்சு மொழியினைக் கையாண்டமை அவரது படைப்புக்களை அழகுபடுத்தியது எனலாம்.

ஸி.வி.யின் பிற முயற்சிகள்

மேற்குறிப்பிட்டவை தவிர ஸி.வி.யின் இலக்கிய நோக்கினை மதிப்பிடுவதற்கு 'முதற்படி' (கட்டுரைத் தொகுப்பு) 'உழைக்கப் பிறந்தவர்கள்' (விவரணத் தொகுப்பு) ஆகிய நூல்களும், அவ்வப்போது பத்திரிகைகளில் வரைந்து வெளியிட்ட கேலிச்சித்திரங்களும் முக்கியமானவைகளாகும்.

முதற்படி என்ற நூல் மலையகத் தமிழர் பற்றிக் கூறுகின்ற சிறிய கட்டுரைத் தொகுதியாகும். மலையகத் தமிழர்களிடையே இலங்கை-இந்திய காங்கிரஸ் உருவாகியது பற்றியும், அது இம்மக்கள் குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. இனக் குரோதமின்றிச் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்துகின்ற ஸி.வி காலணித்துவ எதிர்ப்புக் கொண்டவராய்க் காணப்படுகிறார் என்பதைப் பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன:

"ஆரிய திராவிடர்களாகிய நாம் சிங்கள சகோதரர்களுக்கு ஆங்கில மோகம் தணியலாயிற்று அறிவு புலர்ந்தது"

"நாமிருக்கும் நாடு நமதென்ப
தறிந்தோம் - இது
நமக்கே யுரிமையா மென்ப
தறிந்தோம்"

என்ற நாதத்தின் எதிரொலி இங்கு பிறந்தது. என்றாலும் ஆங்கில மோகம் நம் சுய அறிவைக் கொலை செய்வது வழக்கம். இதிலிருந்து சுகமடைவது சற்றுக் கஷ்டமாவதால் சிங்களவர்களுக்கு வாழ்க்கைப் போராட்டத்தில் அயர்வும், ஏமாற்றமும் ஏற்பட்டது. இது மட்டுமா? மூலதனமும் வியாபாரமும் இந்திய வர்த்தகர்களிடம் பொன் விளையும் இறப்பர் -

தேயிலை தோட்டங்களின் வெள்ளையர் கையில் அந்நியர் இலங்கையில் நடத்திவரும் சுரண்டல் கைங்கரியத்திற்கு ஆயுதமாக இருப்பவர்கள் இந்தியத் தொழிலாளர்கள் என்பது தான் இவரின் அபிப்பிராயம். மற்றொரு புறத்தில் யாழ்ப்பாணத் தமிழர்கள் அயர்வு தெரியாத் திறமையால் கோட்டை பிடிப்பது போல எல்லா உத்தியோகங்களையும் கவர்ந்து வந்ததிலிருந்து சிங்களவர்கள் மனம் வெதும்பி இருக்க வேண்டும். இந்நிலையில் நாமிருந்தால் எப்படி நடந்து கொண்டிருப்போம் என்பதற்குச் சிங்களவர்கள் இந்தியராக இருந்தால் உடன் பதில் சொல்வார்கள். (முதற்படி பக் 10)

இதன் மூலம் சிங்கள மக்களுக்கு இம்மக்களின் நிலைமைகளைத் தெளிவுபடுத்தி ஐக்கியப்பட வேண்டியதால் ஆரியரும் காலனித்துவத்திற்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியம் இவ்வரிகள் மூலமாக எடுத்துக் காட்டப்படுகின்றது. அவ்வாறே அவரது Birth of Ceylon Indian Congress என்ற கட்டுரை இலங்கை- இந்திய காங்கிரஸின் தோற்றம், உழைக்கும் மக்கள் தொடர்பில் அவ்வமைப்பு மேற் கொண்ட போராட்டங்கள் பற்றி விபரிக்கின்றது. மேலும் அவரது The C.I.C Union becomes the C.W.C என்ற கட்டுரை இலங்கை- இந்திய காங்கிரஸ் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்றவகையில் எவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாறியது என்பதை இக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவுப்படுத்துகின்றார்.

ஸி.வி, "வழிப்போக்கன்" என்ற புனைபெயரில் எழுதிய தேயிலைத் தோட்டத்திலே என்ற தொடர் சித்திரத்தில் தான் மலைநாடு என்ற சொல் முதன் முதலாகப் பயன்படுத்தப்படுகின்றது எனச் சிலர் கூறுகின்றனர். இக் கூற்றில் பல வாதப்பிரதிவாதங்கள் காணப்பட்ட போதும் அவர் மலையகம் என்ற சொல்லை வெறும் புவியியல் அர்த்தத்தில் மாத்திரம் பயன்படுத்தியவர் அல்லர். அதன் உள்ளார்ந்த அர்த்தத்தையும் உணர்ந்தே பயன்படுத்தியுள்ளார். இம்மக்களின் தேசிய உணர்வை- இருப்பை கவனத்திலெடுத்தே அத்தகைய சொல்லைப் பாவித்துள்ளார். இந்த உணர்வை அவரது படைப்புகளிலும் சிறப்பாகக் காண முடிகின்றது.

ஸி.வி.யின் முக்கியமான பிறிதொரு நூல் Born to Labour என்ற விவரணத் தொகுப்பாகும். இதனை மாவலி பத்திரிகையில் திரு.பி.ஏ. செபஸ்டியன் தமிழில் மொழிபெயர்த்து தொடராக வெளியிட்டுள்ளார். குழந்தை பிறப்பு முதல் இம்மக்களின் வாழ்க்கை, மக்களிடையே

காணப்பட்ட கலை, கலாசார நிகழ்வுகள், அவர்களுடன் உறவு கொண்ட மனிதர்கள், உறவுத்தன்மை என்பன சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றன. ஆங்கிலத்திலும், மலையக மண்வாசனை மிக்க நடையை ஸி.வி. கையாண்டுள்ளார். அந்த வகையில் 'In Ceylons Tea Garden' என்ற கவிதைத் தொகுப்பினைப் போல இந்நூலும் முக்கியத்துவமும் சிறப்பும் உடையதாகும். மலையக மக்களின் துன்பம் தோய்ந்த வரலாற்றினை எடுத்துக் கூறும் இவரின் பிறிதொரு நூல் "நாடற்றவர் கதை" ஆகும்.

ஸி.வி. யின் இலக்கிய நோக்கு

அறுபதுகளில் மலையகத்தில் மக்கள் இயக்கம் புதிய பரிணாமத்தை எட்டியதுடன் அது அம்மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடத் தூண்டியது. அதன் முதல் வெளிப்பாடாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக மற்றும் தொழிலாள பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கணக்குப்பிள்ளைமார்கள், கங்காணிகள், கண்டக்கையாக்கள் ஆகியோரின் கொடுமைகளை எதிர்த்துப் போராடினர். தொழிலாளர்களுக்கு எதிராக நின்ற தோட்ட உத்தியோகத்தர்கள் (குறிப்பாக கணக்குபிள்ளைமார்கள்) பலரின் கைகள் வெட்டப்பட்டன. பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர்(மலையக நாட்டார் பாடல் மரபும் மாற்றமும் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்ட ஜீல். சுல்தானின் கவிதை தக்க எடுத்துக் காட்டாகும்). இது அக்காலகட்டத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் கொந்தளிப்பையும் எழுச்சியையும் காட்டுகின்றது.

இத்தகைய போராட்டங்கள், எழுச்சிகள் என்பன ஸி.வி. யின் படைப்புகளில் காணமுடியாதிருப்பது அவரது உலக நோக்கின் துரதிஷ்டவசமே ஆகும். அவரது உலக நோக்குக் குறித்து மதிப்பீடு செய்வதற்கு ஹார்க்னெஸ் எனும் பெண்மணியின் City Girl என்ற நாவலை வாசித்து விட்டு ஏங்கெல்ஸ் எழுதிய குறிப்பினை இவ்விடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"விமர்சனம் என்று நான் கூற வேண்டியது எதுவென்றால், கதை போதியளவிற்கு யதார்த்த பூர்வமானதாக இல்லை என்பது தான். என்னைப் பொறுத்தவரையில் யதார்த்தவாதம் என்பது உண்மையான விபரங்களைத் தருவது மட்டுமல்லாது வகை மாதிரியான கதாபாத்திரங்களை மறுசிருஷ்டி செய்வதாகும். நீங்கள் படைத்துள்ள பாத்திரங்கள் போதியளவிற்கு வகைமாதிரியானவையாக உள்ளன.

ஆனால், அவர்களைச் சூழ்ந்துள்ள, இவர்களை இயக்குகின்ற சூழல்கள் அந்தளவிற்கு வகைமாதிரியானவையாக அமையவில்லை. நகரத்து பெண்ணில் தொழிலாளர் வர்க்கமானது தனக்குத் தானே உதவி செய்ய இயலாத, அப்படி செய்யக்கூட முயற்சிக்காத கையறு நிலையில் உள்ள ஒரு கூட்டமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. தாங்கவொண்ணாத அத் துன்பத்திலிருந்து அவர்களைக் கை தூக்கிவிடும் முயற்சிகள் எல்லாம் அந்த மக்களுக்கு மேலிருந்து வருகின்றனவேயொழிய அவர்கட்கு மத்தியிலிருந்து வரவில்லை. செயின்ட் சைமனும், ரொபட் ஓவனும் வாழ்ந்த அந்த 1800 அல்லது 1810 இல் கதை நடப்பதாக இருந்தால் அது சரிதான். ஆனால் 1887ல் தீவிரமான பாட்டாளி வர்க்கப் போராட்டங்கள் பலவற்றையும் கடந்து 50 ஆண்டு காலமாகப் பங்கு கொண்ட ஒருவருக்கு இது யதார்த்தமானதாக இருக்க முடியாது. தங்களைச் சூழ்ந்துள்ள ஒடுக்குமுறை இயந்திரத்திற்கு எதிராகத் தொழிலாள வர்க்கம் கண்டனம் முழங்குவதும், தாங்களும் மனிதப்பிறவிகள் தாம் எனும் நிலையினை மீட்டுக் கொள்ளக் கொந்தளித்து கிளம்பி, அரைகுறை உணர்வு பூர்வமாகவோ அல்லது முழு உணர்வு பூர்வமாகவோ முயல்வதும் வரலாற்றில் யதார்த்த உலகில் (Domain of Realism) நாங்கள் இடம்பெற வேண்டும் எனக் கேட்க அவற்றிற்கு இடமுண்டு. (அருணன், மார்க்சிய அழகியல், சிட்டு பதிப்பகம், சென்னை. பக். 46)

மேற்குறிப்பிட்ட ஏங்கல்சின் இரத்தினச் சுருக்கமான இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மலையக மக்களின் வாழ்வியலைப் படைப்பாக்கித் தந்த ஸி.வி. யின் எழுத்துக்கள் அன்றைய காலச்சூழலில் தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறுபட்ட எழுச்சிகளையும் இயக்கங்களையும் பொருளாகவும், பின்னணியாகவும் கொள்ளவில்லை. அவரது 'In Ceylon Tea Garden' என்ற கவிதைத் தொகுப்பு 1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பு பற்றிய சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது எழுதப்பட்டதாகக் குறிப்பிடுவர். மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் அவர்களது வரலாறு, இருப்பு தொடர்பாக இக்கவிதைத் தொகுப்பு கூறினாலும் சமகாலப் பிரச்சினைகளை அவை தொடவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கதொன்றாகும். இது தொடர்பில் இர. சிவலிங்கம் அவர்களின் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

"இக்காலகட்டத்தில் இந்த ஆத்திரத்திலும், இந்த அநீதி, இந்தக் கொடுமை, கவிதைகளில் தீப்பிழம்புகளாய் தகதகத்திருக்க வேண்டுமே!

ஸி.வி.யின் கவிதைகளில் இந்த உணர்வு பிரதிபலிக்கவில்லை. ஆனால் அவர் ஆத்திரம் ஆழ்ந்த சோகத்துடன் இணைந்து கனன்றது." (ஸி.வி. 'நாடற்றவர் கதை' என்ற நூலின் முன்னுரையில், ஐலண்ட் அறக்கட்டளை வெளியீடு, கொழும்பு)

அவ்வகையில் நோக்குகின்ற போது, ஸி.வி. யின் எழுத்துக்கள் தான் எடுத்துக் கொண்ட காலத்தினை யதார்த்தமாகச் சிந்திக்கவும் அந்தச் சூழலில் இயங்கக்கூடிய உண்மையான மாந்தர்களைச் சித்திரித்துக் காட்ட அவரது எழுத்துக்கள் தவறிவிடுகின்றன.

முடிவுரை

சுமார் 50 ஆண்டு காலமாக எழுத்துலகில் திகழ்ந்த ஸி.வி. மலையக மக்களின் வாழ்வியலைப் படைப்பாக்கித் தந்தார் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. எனினும் அவரது காலத்தில் நிகழ்ந்த முனைப்புற்ற போராட்டங்களையும் எழுச்சிகளையும் இலக்கியமாக்கத் தவறிவிடுகின்றார். இது இவரது இலக்கிய நோக்கின் பலவீனமாகும். இவ்வாறாக ஸி.வி. யின் எழுத்துக்களை நோக்குகின்ற போது கொடுமைகளைக் கண்டு குமுறுகின்ற ஒரு மனிதாபிமானியின் நெஞ்சம் தெரிகின்றது. ஆனால் இம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் தத்துவார்த்தப் பார்வை இல்லை என்பதும் தெரிகின்றது. முடிவாக ஸி.வி. பற்றிய ஆய்வுகளை சமூகவியல் பார்வைக்கு உட்படுத்துகின்ற போது அவரது வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகளும் அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமையும்.

தாயகம் 1994(ஆவணி- புரட்டாதி)

மலையகம் என்ற பின்புலத்தில் கைலாசபதி என்ற மனிதர்

'மலையகம் என்ற பின்புலத்தில் கைலாசபதி என்ற மனிதர்' எனும் இத்தலைப்பு இரு முக்கிய விடயங்களைத் தன்னுள் அடக்கி நிற்கிறது.

1. மலையக இலக்கியத்திற்கான சமூகப் பின்புலம்.
2. மலையக இலக்கியத்தில் கைலாசபதியின் பங்களிப்பு.

மலையக இலக்கியத்திற்கான சமூகப் பின்புலத்தினையும், அதற்குக் கைலாசபதியின் பங்களிப்பினையும், இணைந்து நோக்குவதன் மூலம் ஏற்படும் எதிர்பார்ப்புகள், தாக்கங்கள் பற்றி அறிந்து கொள்வது கலை, இலக்கியம் பற்றிய ஆர்வமுள்ள எழுத்தாளர், வாசகர், விமர்சகர் ஆகியோருக்கு அத்தியாவசியமானதாகும்.

மலையக இலக்கியம் பற்றிய கைலாசபதியின் நோக்கு:

மலையக கலை இலக்கியம் குறித்து ஆராய்வதற்கும் அவை தொடர்பான கைலாசபதியின் பார்வையை மதிப்பிடுவதற்கும் மலையகம் பற்றிய தெளிவுணர்வு அவசியமானதொன்றாகின்றது.

இது தொடர்பில் கலாநிதி துரைமனோகரன்:

'மலையகம் என்பது இன்று வெறும் புவியியல் அர்த்தத்தை மாத்திரம் குறிப்பதாக அன்றி, தன்னளவில், தனித்துவமான மக்கள் வாழ்நிலைகளையும் அதற்கு ஆதாரமான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையையும், அதன் பக்க விளைவான சிறு முதலாளித்துவச் சுரண்டலையும் புலப்படுத்தி நிற்கின்றது' என்கின்றார்.

அவ்வகையில், மலையக சமூகவமைப்பில் நிலவும் ஒரு கூட்டு அமைப்பானது உழைப்புடன் அல்லது உற்பத்தியுடன் தம்மை சம்பந்தப்படுத்திக் கொள்ளும்போது அதன் விளைபொருளாகப் பீறிடும் கலை இலக்கிய உணர்வுகளும் இக்கூட்டு அமைப்பினைப் பிரதிபலிப்பதாகவே அமைந்து காணப்படுகின்றது. எனவே

ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதோர் சமூகத்திலிருந்து ஜீவிதம் பெறுகின்ற கலை இலக்கியப் படைப்புகளும் பாட்டாளிவர்க்க உணர்வையே வெளிக் கொணர்வதாக அமையும். பேராசிரியர் கைலாசபதி இந்நிலைப்பாட்டிலிருந்தே மலையக இலக்கியத்தை நோக்கியுள்ளார் என்பதை 'தோட்டக்காட்டினிலே' (சிறுகதைத் தொகுப்பு 1980) 'மலைநாட்டு மக்கள் பாடல்கள், (மலையக நாட்டார் பாடல் தொகுப்பு 1983) ஆகிய நூல்களுக்கு எழுதிய முன்னுரைகள் எடுத்துக் காட்டுகின்றன.

மலையக மக்கள் குறித்தும் மலையக இலக்கியம் குறித்தும் கைலாசபதி ஆழ்ந்த அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். ஓர் உதாரணத்திற்காக 'தோட்டக்காட்டினிலே' சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் இடம்பெற்ற பந்தியொன்றை வாசகர்களின் நலன்கருதி இங்கொருமுறை குறித்துக் காட்டவேண்டியது அவசியமானதொன்றாகின்றது.

> 'மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கையிலிருந்தே பெரும்பாலான கதைகள் முகிழ்த்திருக்கின்றன. அந்த வாழ்க்கை அவலம் நிறைந்ததாகவும், பலவிதமான சுரண்டல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்பட்டதாகவும் சோகமே நித்தியமாகவும், நிரந்தரமாகவும் இருந்து வந்திருப்பது உலகறிந்த உண்மையாகும். அத்தகைய வாழ்க்கையைச் சிறிதேனும் சிந்திக்க முற்படும் கதைகளில் துன்பச்சுவை இழையோடுவது எதிர்பார்க்கக் கூடியதே. துன்பத்திற்கு மத்தியிலும் வாழத்துடிக்கும் மனிதத்துவத்தையும், ஆங்காங்கு காட்டுகின்றார்கள் கதையாசிரியர்கள்'.

பேராசிரியர் கைலாசபதி, தான் வாழ்ந்த காலகட்டத்தில் மலையகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் இடம்பெற்ற இலக்கிய நிகழ்வுகள் குறித்துத் தேடலை மேற்கொண்டவராகவும், ஆழ்ந்த அக்கறை கொண்டவராகவும் காணப்பட்டார். 'இலங்கை கண்ட பாரதி' என்ற கட்டுரையில் 'மலைநாட்டைப் பொறுத்தவரையில் முப்பதுகளின் பிற்பகுதியிலும், நாற்பதுகளிலும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் உழைத்து வந்த சில தொழிற்சங்கவாதிகளின் மூலம் பாரதி பாடல்கள் ஓரளவு அறியப்பட்டிருந்தன. குறிப்பாக எப்.ஜி. நடேசய்யர் பாரதி பாடல்களில் நிரம்பிய ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பின்னர் பாரதி

சஞ்சிகையை நடாத்திய கே.கணேஷ், கே.ராமநாதன் ஆகிய இருவரில் கே.கணேஷ் மலையகத்தை வாழிடமாகக் கொண்டவர் என்பதும் மனங்கொள்ளத்தக்கது, என மலையக மண்ணில் பாரதி வேர்கொண்டு கிளைபரப்பியதைக் குறிப்பிடும் பேராசிரியர் 1956ஆம் ஆண்டு பாரதி விழாவிற்காக இலங்கை வந்திருந்த எழுத்தாளர் சிதம்பர ரகுநாதன், பதுளையில் இடம்பெற்ற பாரதி விழாவில் கலந்துகொண்டமை பற்றியும், அவரது உரையின் கனதி குறித்தும் மேற்குறிப்பிட்ட தமது கட்டுரையில் குறிப்பிடத்தவறவில்லை. மலையக கலை இலக்கியத் தொடர்பில் பேராசிரியர் கொண்டிருந்த நுண்ணயத்துடன் கூடிய பார்வைக்கு இவை தக்க எடுத்துக்காட்டாகும்.

தேசிய இலக்கிய செல்நெறியில் மலையக இலக்கியம் பற்றிக் கைலாசபதியின் மதிப்பீடு.

இலங்கையில் வாழ்ந்து வருகின்ற மலையகத் தமிழரைப் பொறுத்த மட்டில் இவர்களது இலக்கிய முயற்சிகள் 1930க்குப் பின்னரே தொடங்குகின்றது. குறிப்பாக 1954க்குப் பின்னரே மலையகத் தமிழரது இலக்கியப் படைப்புக்கள், சிந்தனைகள் ஈழத்துத் தேசிய இலக்கியத்துடன் இணைகிறது என்பதை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். 1960களில் இலங்கையில் மாத்திரமன்று, உலகளாவிய ரீதியில் இடதுசாரி இயக்கங்கள் வளர்ச்சியடைந் திருந்ததுடன், அவை பரந்துபட்ட உழைக்கும் மக்களை நோக்கிச் சென்றது. இந்த உணர்வின் வெளிப்பாடாகவே தேசிய இலக்கியம், இயக்கம் என்பன தோற்றம் பெற்றுத் தத்துவார்த்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 'தேசியம்' என்ற பதத்தினை மேலோட்டமாக அர்த்தப்படுத்திப் பார்க்கும்பொழுது குறுகிய வாதமாகத் தென்படலாம். ஆனால் சற்று ஆழ்ந்து நோக்கினால்தான் தேசிய இனங்களினதும் தேசிய சிறுபான்மை இனங்களினதும், சமூக உருவாக்கத்தையும் வளரச்சியையும் குறிப்பாக இக்குரல் அமைந்து காணப்படுவதனை உணரமுடியும். இக்கால கட்டங்களில் 'தேசியவாதம்' என்ற சிந்தனை முற்போக்கு, மார்க்ஸிய தளங்களிலிருந்து நோக்கப்பட்டமையே அதன் பலமான அம்சமாக அமைந்து காணப்பட்டது எனலாம்.

இவ்விடத்தில் மிக முக்கியமான விடயம் பற்றிச் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. இக் காலப்போக்கில் எழுந்த 'தேசியம்' பற்றிய சிந்தனையானது மனிதகுல விடுதலைக்கு

எதிராகப் பாவிக்கும் கபடத்தனங்களிலிருந்து விடுபட்டு, அதனைச் சர்வதேசக் கண்ணோட்டத்துடன் நோக்கும் நிலைப்பாட்டினை அது கொண்டிருந்தது. கார்ல்மார்க்ஸ் தமது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் பாட்டாளி இலக்கியம் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார். 'மிகப்பல தேசிய இலக்கியங்களிலிருந்தும் பிரதேச இலக்கியங்களிருந்தம் ஓர் உலக இலக்கியம் உதயமாகின்றது'. பேராசிரியர் கைலாசபதி அவர்களும் இச்சிந்தனை நிலைநின்றே தேசிய இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்தார்.

பேராசிரியர் பார்வை!

'குறிப்பிட்ட காலத்தில் காணப்படும் சமூகவமைப்பை அப்படியே பாதுகாக்கவோ, மாற்றியமைக்கவோ, சீர்திருத்தவோ முயற்சிகள் நடைபெறலாம். இங்கே தேசிய இலக்கியம் தோன்ற இடமுண்டு. ஏனெனில் வெறுமனே ஒரு நாட்டைப் பிரதிபலிப்பது தேசிய இலக்கியமாகாது. தேசிய இலக்கியம் என்று நாம் கூறும்பொழுது இலக்கியம் படைப்பவர்களின் இலட்சியம், நோக்கம் முதலியவற்றையும் சேர்த்தே எடை போடப்படுகின்றது. சுருங்கக்கூறின் தேசிய இலக்கியம் என்பது ஒருவிதப் போராட்ட இலக்கியமாகும்'. (மரகதம் - *1961*)

இவ்வாறான தேசிய இலக்கியக் கோட்பாட்டினை வரித்து நின்ற பேராசிரியர் வடகிழக்கு, மலையகம் என அவ்வப் பிரதேசங்கள் சார்ந்த மண்வாசனைமிக்க இலக்கியப் படைப்புகள் தோன்ற துணைபுரிந்தார். தேசம் தழுவியதோர் அவரது நிதானித்த பார்வையே இதற்கான அடிப்படையாகும். ஈழத்தில் தோற்றம் பெற்று வளர்ந்துவந்துள்ள தேசிய இலக்கியக் கொள்கையின் உடன் விளைவாக மலையகத்திலும், மண்வாசனை மிக்க இலக்கியப் படைப்புகள் தோற்றம் பெற்றன. இவ்வம்சம் குறித்துப் போராசிரியர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

> "இலங்கையிலே கடந்த மூன்று தசாப்தங்களாக இலக்கியக் கோட்பாடு, இயக்க வடிவம் பெற்றமையும், அவ்வுணர்வின் விளைவாகவும், வெளிப்பாடாகவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவ்வப்பகுதி மண்வாசனை கமழும் ஆற்றல்மிக்க ஆக்கங்கள் உருவாகி வந்துள்ளமையும், இவற்றின் உடன் நிகழ்ச்சியாக மொழிநடை, இலக்கியப் படைப்புகள் முதலியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு

வந்துள்ளதும் இப்போது இலக்கிய வரலாறாகிவிட்டது. பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புகளில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குக் காரணமாக உள்ள மலைநாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருப் பனவற்றிற்குத் தனியிடமுண்டு". (1980)

தேசிய இலக்கியப் போக்கின் பரிணமிப்பில், மலையக மண்வாசனையையும், சமகாலப் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்ட ஆக்கங்கள் இயக்கரீதியான போராட்டங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. அதன் வளர்ச்சிப் போக்கினை இனங்கண்டதுடன் அத்தகைய இலக்கியப் படைப்புகள் தோற்றம்பெற ஆக்கமும் ஊக்கமும் அளித்த பேராசிரியரின் பங்கு முக்கியமானதொன்றாகும்.

மலையக இலக்கியவாதிகளுடன் கைலாசபதி அவர்கள் கொண்டிருந்த உறவு:

பேராசிரியருக்கு இளமைக் காலம் தொடக்கமே மலையகத்துடன் தொடர்பு இருந்ததென்பதற்கு 1953ம் ஆண்டு பதுளையில் இருந்த தனது கல்லூரி நண்பரான சிங்காரத்துக்கு எழுதிய கடிதம் (இரு பக்கங்களிற்கு மேற்பட்டது) சான்றாக அமைகின்றது. இதுபற்றி என்.கே.ரகுநாதன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> "சொந்த விவகாரங்கள் எதுவுமில்லை. படித்த இலக்கியங்களிலிருந்து குறிப்புக்கள், விசேட ரசனைகள், பல புத்தகங்களைப் பற்றி அறிமுகக் குறிப்புக்கள், ஆங்கில நூல்கள் உட்பட சிங்காரம் சொல்வார். நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு விரைவில் முடித்துக் கொண்டு, ஏதாவதொரு குறைப்புத்தகத்தைப் படிக்க ஓடிவிடுவாராம். கடிதங்களிலும் அந்தப் புத்தகம் கிடைத்துள்ளது, இந்தப் புத்தகம் வாங்க வேண்டும் படித்ததும் அதையிட்டு எழுதுகின்றேன்" இப்படியெல்லாம் பிற்கால இலக்கிய ஆதர்சனங்களுக்கு அடிகோலினார் போலத் தெரிகின்றது. (மேற்கோள் - சி.தில்லைநாதன் - 1982).

அவ்வகையில் மலையக நண்பருடன் கொண்டிருந்த உறவும், ஒரு சமூக உறவாகவே அமைந்து காணப்படுகின்றது. மலையக

இலக்கிய முன்னோடிகளான ஸி.வி.வேலுப்பிள்ளை, என்.எஸ். எம்.ராமையா முதலானோரின் படைப்புகளுக்கு பத்திரிகைத் துறையில் களம் அமைத்துக்கொடுத்ததுடன் அவை தொடர்பான விமர்சனங்களையும் முன்வைத்து நெறிப்படுத்தியமை பேராசிரியரின் முக்கியமான பங்களிப்புக்களில் ஒன்றாகும். பேராசிரியர் இவ்விரு படைப்பாளிகளையும் முற்போக்கு இலக்கியத்தின் நேச சக்திகளாகவே கண்டார்.

ஸி.வி.க்கும் பேராசிரியருக்கமான உறவு மிக நெருக்கமானதாகும். "வேலுப்பிள்ளை அவர்களை வேறிரு விதங்களில் ஓர் அரிய சேர்வையாகக் காண்கின்றார் பேராசிரியர் கைலாசபதி. ஒன்று சுதேசிய மேற்கத்தைய வீச்சுக்களின் சேர்வை, மற்றது யதார்த்தத்தினதும், இலட்சியவாதத்தினதும் சேர்வை" (தங்கதேவன் - 1979). இவ்வகையில் ஸி.வி.யின் ஆளுமையை மிகச் சிறப்பாகவே கைலாசபதி இனங்கண்டுள்ளார். 1982ஆம் ஆண்டு நடைபெற்ற பேராசிரியரின் அஞ்சலிக் கூட்டத்தில் 'கலாநிதி கைலாசபதிக்குச் சொந்தமானவர்' என்ற தலைப்பில் உரையாற்றிய ஸி.வி.யின் உணர்வுகளில் கைலாசபதி இவ்வாறு பிரவாகம் கொண்டிருந்தார்:

> "அரசியல் அனாதைகளாகப் புழுங்கிக் கொண்டிருந்த எங்களை உள்ளங்கனிந்து அன்புடன் நேசித்தவர் கைலாஸ். எங்கள் பெருமகன் அவர்".

ஸி.வி. அவர்கள் தன்னால் எழுதமுடியம் என்ற நம்பிக்கையைத் தன்னுள் வளர்த்து, எழுதவும் தூண்டிய முறையை பேராசிரியரின் அஞ்சலி உரையில் குறிப்பிட்டமை (நா.இரவீந்திரன் 1992) இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கதொன்றாகும். மேலும் ஸி.வி.யின் நாட்டார் பாடல்கள் சேமிப்புக் குறித்துப் பாராட்டியதுடன் சிறப்பானதொரு முன்னுரையையும்,, சமூகவியல் அடிப்படையில் எழுதியுள்ளமை மலையக நாட்டாரியல் துறை ஆய்விற்கான முன்னோடி முயற்சியாக அமைந்துள்ளது.

ஸி.வி. அவர்களைப் போலவே பேராசிரியர் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த பிறிதொரு மலையக எழுத்தாளர் கே.கணேஷ் ஆவார். தினகரனுக்குப் பொறுப்பாக இருந்த காலத்தில் பேராசிரியர் எழுத்தாளர்களை அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் பல ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

அத்தகைய கலந்துரையாடல்களில் பங்குபற்றியவர்களான இளங்கீரன், கா.சிவத்தம்பி, சி.தில்லைநாதன், பிறேம்ஜி, சில்லையூர் செல்வராசன், இ.முருகையன் போன்றோருடன் கே.கணேஷ் அவர்களும் கலந்து கொள்வார். குறுகிய பிரதேச உணர்வுகளைக் கடந்து நின்ற பேராசிரியர் ஈழத்தின் சகல பிரதேசம் சார்ந்த புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும், கருத்துகளையும் உள்வாங்கித் தமது சித்தாந்தத்தையும், பத்திரிகைத் துறை சார்ந்த பணிகளையும் பட்டை தீட்டிக் கொண்டதுடன், அதனை மாறிவருகின்ற சமூகச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவகையிலும் பிரயோகித்தார்.

தினகரன் பத்திரிகையில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலகட்டத்தில் மலையக வேலை நிறுத்தங்கள், தொழிற்சங்கப் போராட்டங்கள், மலையக அரசியல்வாதிகள் பற்றிக் கேலிச் சித்திரங்கள் என்பவற்றை உண்மையின் பக்கம் நின்று கரிசனையுடன் பிரசுரித்தமை மலையகத்தின் பால் அவர் கொண்டிருந்த பற்றினை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்விடத்தில் ஒரு செய்தி கூறவேண்டியுள்ளது. எழுபதுகளின் பிற்பகுதிகளிலிருந்து தொண்ணூறுகளின் நடுப்பகுதிவரை மலையகப் பகுதிகளில் சமூக மாற்றத்தினை கலை இலக்கியப் பணிகளைத் தேசிய கலை இலக்கியப் பேரவை முன்னெடுத்தது. இவ்வமைப்பு சார்ந்த பணிகளினூடாக ஈடுபாடு செலுத்தி வந்த திரு.ந.இரவீந்திரன் ஆற்றல்மிக்க விமர்சகராகவும், புனைகதை இலக்கியவாதியாகவும் திகழ்ந்தார். இரவீந்திரன் மலையகத்தில் தங்கியிருந்தவரை மார்க்சியம் பற்றியும் கைலாசபதி பற்றியும் பொதுவுடமைக் கண்ணோட்டத்தில் நிறையப் பேசினார். மலையக இலக்கிய கர்த்தாக்கள் கைலாசபதியைத் தரிசிக்கவும் அதன்வழி இலக்கியங்களை மார்க்சியத்தின் ஒளியில் வைத்து நோக்கவும் வழிகாட்டியவர் அவர். அவ்வகையில் மலையகத்தில் முற்போக்கு மார்க்சியத் தளத்தில் நின்று அமைப்புச் சார்ந்த பணிகளை முன்னெடுத்ததில் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு முக்கிய இடமுண்டு. ஆனால் பிற்பட்ட காலங்களில் இதன் பணிகள் விமர்சனத்திற்குரியதாகும்.

மலையக கலை இலக்கியச் செயற்பாடுகளை முற்போக்கு உணர்வுடன் முன்னெடுப்பதில் மலையக கலை இலக்கியப் பேரவைக்கும், அதன் செயலாளரான அந்தனி ஜீவாவுக்கும் முக்கிய இடமுண்டு. திரு.அந்தனி ஜீவாவை ஆர்வமூட்டிக் கலை

இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதில் பேராசிரியர் கரிசனை கொண்டவராகக் காணப்பட்டார். "கைலாசபதி அவர்கள் தன்னைக் காணும் போதெல்லாம் மலையகத்தில் இடம்பெறும் இலக்கிய நிகழ்வுகள் குறித்தும், சஞ்சிகைகள் வெளியீட்டு முயற்சிகள் குறித்தும் ஆர்வத்துடன் வினவி. பல ஆலோசனைகளையம் வழங்கிச் செல்வார்" என அந்தனி ஜீவா குறிப்பிடுகின்றார். (தகவல்: அந்தனி ஜீவா) அத்துடன் மலையகக் கலை இலக்கியப் பேரவையின் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்துள்ளார். மலையக கலை இலக்கிய பேரவையினால் கண்டியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ஸி.வி.க்குக் கவிமணிப் பட்டம் வழங்கும் நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக பேராசிரியர் கலந்து கொண்டமை இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கதொன்றாகும். இவ்வாறு மலையகப் புத்திஜீவிகளுடனும் இலக்கிய அமைப்புகளுடனும் நேசபூர்வமான உறவுகளைக் கொண்டிருந்தார்.

மலையக இலக்கியத்தில் கைலாசபதியின் தாக்கம்:

மலையக இலக்கியத்தில் பேராசிரியரின் தாக்கம் ஏதோ ஒரு வகையிலும், அளவிலும் இடம்பெற்றுள்ளது. அவரது இலக்கியக் கோட்பாட்டின் தாக்கம் பின்வரும் இருநிலைகளில் இடம்பெற்றுள்ளன.

1. முற்போக்குச் சிந்தனை நிலைநின்று கைலாசபதியின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள்.

2. மார்க்சியச் சிந்தனை நிலைநின்று கைலாசபதியின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள்.

இவ்விடத்தில் 'முற்போக்கு வாதம்', 'மார்க்சியச்' சிந்தனைத் தொழிற்பாடுகள் பற்றிய தெளிவு அவசியமாகின்றது.

முற்போக்கு வாதம் பற்றிய ஆய்வு அது ஒரு சிந்தனைத் தெளிவு நிலை (மாத்திரமே) என்பதனை நிலைநிறுத்துகின்றது. மார்க்சியத்தை விபரிக்கும் அறிஞர்கள் அதனை (மார்க்சியத்தை) அரசியல் நடவடிக்கைக்கான வழிகாட்டி அன்றேல் அரசியல் நடவடிக்கைக்கான ஆற்றுப்படை என்பர். மார்க்சியத்தை திரிகரசுத்தியாக ஏற்றுக்கொள்ளும் போது, அவ்வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு உலகை மாற்றி மனித சமதாயத்தின் முற்போக்குப் பாதையினை உறுதிப்படுத்தும்

அரசியல் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் இயல்பாகின்றது. ஆனால் முற்போக்கு வாதம் பற்றிய எண்ணத்துய்வு நிலை அத்தகைய நேரடி நடவடிக்கை நிலையினைச் சுட்டி நிற்பதில்லை. மார்க்சியவாதிகள் முற்போக்குவாதிகளே. ஆனால் அனைத்து முற்போக்கு வாதிகளும் மார்க்சியவாதம் வற்புறுத்தும் உலக மாற்றத்திற்கான அரசியல் மாற்றத்தினை நேரடி இயக்க முறைகள் மூலம் நிலைநிறுத்துவதன் மூலம் இயக்க ரீதியாகத் தொழிற்படுவதில்லை. முற்போக்குவாதம் பற்றிய எண்ணத்துய்ப்பும் செயற்பாடும் ஒருவரை அதனைப் பூரணமாக நடைமுறைப்படுத்தும் அரசியல் நடவடிக்கையாளராக மாற்றலாம். முற்போக்கு வாதநிலை அந்நிலையினைக் குறிக்காது (கா.சிவத்தம்பி, புதுமை இலக்கியம் இதழ் -20, 1994, ஜன- மார்ச்)

முதலாவது பிரிவில் மலையக இலக்கியத்தில் முற்போக்குணர்வுடன் ஆக்க இலக்கியங்களையும், ஆய்வுகளையும் வெளிக்கொணர்வதில் முக்கியத்துவம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பிரிவில் சாரல்நாடன், தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா, சு.முரளிதரன் முதலானோரைக் குறிப்பிடலாம். தமது முற்போக்குப் பார்வைக்குச் சாதகமான வகையில் கைலாசபதியினை உள்வாங்கி இருப்பதனையும், அவரது கருத்துகளை மேற்கோளாகக் காட்ட முனைவதனையம் இவர்களின் எழுத்துக்களில் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

இரண்டாவது பிரிவினர் மார்க்சியச் சிந்தாந்தத்தை அடிநாதமாகக் கொண்டு இலக்கியப் படைப்பாளிகளாக, விமர்சகர்களாக விளங்குகின்றனர். மார்க்சியத்தின் உள்ளடக்ககக்கூறுகள் பற்றி லெனின் கூறியதை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

> 'வரலாற்றுத்துறை பொருள் முதல்வாதமென்று தத்துவம் காட்டுவது என்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து இதைவிட உயர்தரமான சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை அது காட்டுகிறது. இயற்கை என்பது அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கும். பருப்பொருள் என்பது மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் மனிதனின் சமுதாய அறிவு எனப்படுவதும் (அதாவது தத்துவவியல், மதம், அரசியல் முதலானவை

சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துகளும் போதனைகளும்). சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கின்றது; அரசியல் ஏற்பாடுகள் என்பவையெல்லாம் பொருளாதார அத்திவாரத்தின் மீது நிறுவப்பட்ட மேல்கட்டுமானமேயாகும்'.

இவ்வாறானதோர் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு பேராசிரியரின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள் மார்க்சியத்திலிருந்தும், கைலாசபதியிலிருந்தும் இத்தகையப் பார்வையினைப் பெற்றுக்கொண்டு, அதனை மாறி வருகின்ற மலையகச் சூழலுக்கு ஏற்றவகையில் பிரயோகித்தனர். பி.மரியதாஸ், எம். முத்துவேல், எல்.சாந்திக்குமார் (இன்று இந்நிலைபாட்டுக்கு எதிரானவராக மாறிவிட்டார்) எல்.ஜோதி குமார், சிவ.இராஜேந்திரன், வ.செல்வராஜா போன்றோருடன் அடுத்தகட்ட பரிணாமத்தை தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மலையக இலக்கியத்தில் பிரவேசித்த லெனின் மதிவானம், ஜெ.சற்குருநாதன், ஜெ.ட்றொட்ஸ்கி முதலானோர் இடத்திலும் காணக்கூடியதாக உள்ளது. இவர்களிடையே சிற்சில நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும் பொதுவுடமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு அதன்வழி பேராசிரியரை ஏற்றுக்கொண்டதில் ஒற்றுமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

மலையக இலக்கியம் பிரமாண்டமானதோர் பாட்டாளி வர்க்கத்தைத் தமது தளமாகக் கொண்டுள்ளமையினால் கைலாசபதியின் கருத்துகள் வேகமாகவும் ஆழமாகவும் மலையக புத்திஜீவிகளின் சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. கைலாசபதியின் இலக்கியக் கோட்பாட்டை நிராகரித்த அல்லது அதற்கு எதிரான குரல் மலையகத்தில் தோன்றாமல் இருப்பது தற்செயல் நிகழ்ச்சியல்ல; அவரது சில விமர்சனக் குறிப்புகள் தொடர்பில் அவ்வப்போது அதிருப்தி தெரிவிப்பது இவற்றின் பாற்பட்டதல்ல.

கைலாசபதி தொடர்பான மலையக எழுத்தாளர்களின் முக்கியமான சில ஆக்கங்களை ஆய்வுத்தேவை கருதி இங்கு ஒருமுறை குறித்துக்காட்ட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

கலாநிதி கைலாசபதி காலத்திற்குச் சொந்தமானவர்
(அஞ்சலி உரை. 1982), ஸி.வி.வேலுப்பிள்ளை
பழைய அலைகளும் புதிய சமர்களும்
எஸ்.ஜோதிகுமார் (தீர்த்தக்கரை . 1980 யூன்)

இலக்கியத்தில் சமூகக் கட்டுப்பாடுகள் குறித்துப்
பேராசிரியர் கைலாசபதியின் கருத்துகள்
சி. இராஜேந்திரன்
பன்முக ஆய்வில் கைலாசபதி-ஆய்வு நூல் 1992

எஸ். சந்திரபோஸ்
கலாநிதி கைலாசபதியின் கல்விச் சிந்தனைகள் (மே.கு.நூ)

கூ. முரளிதரன்
மலையக இலக்கியமும் சைலாசபதியும் (மே.கு.நூ)

ஜெ. சற்குருநாதன்
இலக்கிய வரலாற்றுத் துறையும் கைலாசபதியும் (மே.கு.நூ)

கைலாசபதி பற்றிய (லெனின் மதிவானம்) இந்நூலாசிரியரின் ஆய்வு முயற்சிகள்:

பேராசிரியர் கைலாசபதியின் அழகியல் நோக்கு
(பன்னிரெண்டாவது நினைவுப் பேருரை- கொழும்புத் தமிழச் சங்கம், ஏற்பாடு: தேசிய கலை இலக்கியப் பேரவை-1994)

இலக்கியத்தில் உள்ளடக்கத்தை நிராகரித்தவர்களுக்கு எதிராக..!
(வீரகேசரி- 11.12.1994)

பேராசிரியர் கைலாசபதியின் கலை இலக்கியப் பணிகள்
(வீரகேசரி-1995)

மஹாகவி குறித்துக் கைலாசபதியின் மதிப்பீடு
(மூன்றாவது மனிதன்-1996)

பேராசிரியர் கைலாசபதி பற்றிய ஆய்வுகளும் வக்கிரங்களும்
(தாமரை: மார்ச் - 1999)
தேசிய இலக்கியக் கோட்பாடும் பேராசிரியர் கைலாசபதியும்
(இருபத்து மூன்றாவது நினைவுப் பேருரை- கொழும்புத் தமிழ்ச் சங்கம், ஏற்பாடு: தேசிய கலை இலக்கிய பேரவை-2005)

பேராசிரியர் கைலாசபதி சமூகமாற்றத்திற்கான இயங்காற்றல்
(ஆய்வு நூல்), குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

இவைதவிர தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன், அந்தனி ஜீவா முதலியோர் மலையகம் சம்பந்தப்பட்ட வெவ்வேறு ஆய்வு முயற்சிகளை மேற்கொண்ட போது மலையக இலக்கியத்தில் கைலாசபதியின் பங்களிப்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். பொதுவாக இவ்வாய்வு முயற்சிகள் யாவும் முன்னர் குறிப்பிட்டது போன்று கைலாசபதியை இரு நிலைகளிலிருந்து (முற்போக்கு-மார்க்சியம்) புரிந்துகொள்ள முனைவதைக் காணலாம்.

முடிவாக நோக்குகின்ற போது மலையக இலக்கியத்தில் கைலாசபதி பல்வேறு விதங்களில் தாக்கம் செலுத்தியுள்ளார். இவரது இலக்கியக் கொள்கையின் செல்வாக்கை மலையகத்தில் தோன்றிய ஆக்கவிலக்கியப் படைப்புகளிலும் காணக் கூடியதாக உள்ளது. ஒருவகையில் புதிய ஆய்வுப் பார்வைகளும் புதுமை இலக்கியங்களும் தோன்றி வளர்வதற்கு வெவ்வேறுவகைகளில் கைலாசபதி உதவியுள்ளார். இதனை மனங்கொண்டு தொடர்ந்து ஆக்கபூர்வமான முயற்சியினை மேற்கொள்வது நமது தலையாய கடமையாகும். கைலாசபதி வெறுமனே ஒரு நாமம் மட்டுமல்ல. அவர் ஓர் இயக்க சக்தி. அதனை மலையக இலக்கிய கர்த்தாக்கள் விளங்கிக் கொள்ளும் விதமும் தமதாக்கிக் கொள்ளும் வகையும் தனித்தன்மை வாய்ந்ததாய் இருக்க முடியும்; இருக்க வேண்டும்.

மல்லிகை 35வது ஆண்டு மலர் - 2000
(பின்னர் மேலதிக சில தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன).

மலையக இலக்கியத்தில் புதிய போக்கைக் காட்டி நிற்கும் 'குடை நிழல்'

மலையக இலக்கியத்தில் தனித்துவமான ஆளுமைச் சுவடுகளைப் பதித்தவர் தெளிவத்தை ஜோசப். அவர் சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், விமர்சகர் எனப் பல்துறை சார்ந்த பங்களிப்பினை மலையக இலக்கியத்திற்கு வழங்கியவர். இன்று இருக்கக் கூடிய மலையக எழுத்தாளர்களுள் தெளிவத்தை ஜோசப் அவர்களை சிரேஷ்டராய்க் கருதிக் கொள்ளும் மரபு இயல்பாகவே தோன்றியுள்ளது.

ஈழத்து எழுத்தாளர் மத்தியில் தெளிவத்தை ஜோசப் என்ற பெயருக்குத் தனி மதிப்புண்டு. அப்பெயரானது ஒருவருக்குப் பரிவு, பாசம், பயம், மதிப்பு முதலியவற்றைத் தோற்றுவிக்கும் தன்மையுடையது. கனிவுள்ள இடத்தில் தான் கண்டிப்பும் இருக்கும் என்பதற்கமைய இயல்பாகவே எளிமையாகவும் இனிமையாகவும் பேசிப் பழகும் தெளிவத்தை ஜோசப், ஆழமான - கனதியான விடயங்களைக் கூறும் போதும், அநீதிகளை எதிர்க்கும் போதும் ஆவேசத்துடன் பேசித் தனது கருத்துகளை நிறுவுவார். இத்தகைய பண்பினை அவரது படைப்புகளிலும் காணலாம்.

அண்மைக் காலத்தில் மலையக இலக்கியத்தில் ஏற்பட்ட புதியதொரு போக்குதான் அதன் தனித்துவம் பிரதேச மண்வாசனை, சமகால வாழ்க்கைப் பிரச்சினை என்பவற்றினை வலியுறுத்துகின்ற அதே சமயம் அது தமிழ் இலக்கியத்தின் பொதுமையையும் வலியுறுத்தி நிற்கின்றது.

தென்னாபிரிக்காவில் தோற்ற விடுதலையுணர்வு மிக்க இலக்கியங்களும் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் முகிழ்ந்த பாரதியின் படைப்புகளும் அவ்வக் காலச் சூழலைப் பிரதிபலித்து நின்ற அதே சமயம், அவை ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் உணர்வுகளைப் பிரதிப்பலித்து நிற்பதனைக் காணலாம்.

இந்த அடிப்படையில் நோக்குகின்ற போது மலையகப் படைப்பாளிகள் இன்று ஈழத்துப் படைப்பாளிகளாகப் பார்க்கின்ற

நிலை தோன்றி வளர்ந்துள்ளது. இந்தப் பின்னணியில் தான் தெளிவத்தை ஜோசப் இன்று ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான படைப்பாளியாகக் கொள்ளப்படுகின்றார். மலையக இலக்கியத்தின் ஆழ அகலப்பாட்டை நுண்ணியத்துடன் நோக்குபவர்களால் இந்தப் புதிய மாற்றங்களையும் போக்குகளையும் உணர்ந்துகொள்ள முடியும்.

இந்தப் பின்னணியில் நின்றுகொண்டே தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. இக் கட்டுரையும் அவரது "குடை நிழல்" என்ற நாவல் குறித்த அறிமுகத்தினை வழங்க முற்படுகின்றது.

மலையகத் தமிழர்கள் பல்வேறுபட்ட தடைகளுக்கும் தர்மயுத்தத்திற்கும் பின்னர் தம்மை தேசிய சிறுபான்மைக்கான அடையாளத்துடன் இனக்குழுமமாக வளர்ந்த போது தொழில் நிமிர்த்தம் கொழும்பிற்குப் புலம்பெயரத் தொடங்கினர். அவர்கள் கொழும்பைத் தொழிலுக்கான இடமாகவும் மலையகத்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்தனர். ஆரம்பத்தில் சாதாரண கூலி வேலை, வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றவர்களாகக் காணப்பட்டனர். காலப்போக்கில் ஏற்பட்ட சமூகப் பெயர்ச்சியின் காரணமாகப் பல தொழில்களில் ஈடுபடக் கூடிய மத்தியதர வர்க்கமொன்று கொழும்பில் தொழில் நிமிர்த்தம் வசிக்கின்றவர்களானார்கள்.

இத்தகைய சூழலில் இலங்கையில் ஏற்பட்ட இனமுரண்பாடுகள் அதனையொட்டி எழுந்த இனவிடுதலைப் போராட்டங்கள் - கைதுகள், தனிமனிதப் பழிவாங்கல்கள் மலையகத் தமிழரையும் பாதிக்கத் தொடங்கியது. குறிப்பாகக் கொழும்பை வாழ்விடமாகவும் தொழிலிடமாகவும் கொண்டவர்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உட்பட்டனர். இந்தச் சூழலில் மலையகத் தமிழர்கள் அனுபவித்த இன்னல்களை இந்நாவலின் பிரதான பாத்திரம் மூலமாகத் தரிசிக்கின்றோம். இந்நாவல் பேரினவாதத்தைப் பெரிதும் சாடுவதாக அமைந்திருக்கின்றது. இதுவரை வெளிவந்த படைப்புகளில் இந்நாவலே இந்த நிலைமையை ஓரளவு எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

அத்தியாயம் 5ல் மலையக வாழ்க்கை எடுத்துக் கூறப்படுகின்றது. பெரியாங்கங்காணி காலத்தில் மலையகத்தில் காணப்பட்ட நிலைமைகள், சுரண்டல், ஒடுக்கு முறை என்பன வெளிக் கொணரப்படுகின்றன.

யாவற்றுக்கும் மேலாக ஆண்களின் உரோமம் அடர்ந்த கரங்களின் ஆதிக்கத்தை, பெண்களின் நிலையை பெரியாங்கங்காணியின் மனைவி, அவரது வைப்பாட்டிகள் மூலமாக ஆசிரியர் எடுத்துக் காட்டத் தவறவில்லை. ஒரு புறத்தில் பெரியாங்கங்காணி வாழ்க்கை முறையை அழகுபடுத்திக் காட்டியிருப்பினும், அதன் சிதைவும் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

மலையக வாழ்வில் தாக்கம் செலுத்துகின்ற பிறிதொரு போக்குத் தான் யாழ்ப்பாண மேட்டுக் குடித் தளத்தின் அதிகார மனோபாவமாகும். இலங்கைத் தமிழர்களில் யாழ்ப்பாணத்தவர்களே மேலானவர்கள் எனவும், அவர்களே கல்வி அறிவுமிக்கவர்கள் என்ற வகையிலுமான சிந்தனைப் போக்கு இன்றுவரை இருந்து வருகின்றது. மலையகத்தின் அபிவிருத்தி குன்றிய நிலை- கல்வியில் போதிய வளர்ச்சியின்மை இந்தச் சிந்தனையை வலுப்படுத்தியுள்ளது. மலையகத்தில் தோன்றிய புதிய மத்தியதர வர்க்கமும்(குறிப்பாக எண்பதுகளில்) யாழ்ப்பாணத் தமிழர்களாகப் பாவனை செய்தல், அவர்களின் மொழி நடையைக் கையாளுதல், படித்த இளைஞர்கள் யாழ்ப்பாணப் பெண்களைத் திருமணம் செய்தல் முதலிய அம்சங்களினூடாக தமக்கான அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்ற போக்கு (இயல்பான காதல், திருமணம் என்பது வேறு) இச்சமூகவமைப்பில் வளர்ந்திருந்தது. இந்நாவலில் வருகின்ற சட்டத்தரணியின் போலி வாழ்க்கை குறித்தும், அதனால் ஏற்படுகின்ற கருத்தோட்டங்கள் குறித்தும் எடுத்துக் காட்டுவதில் இந்நாவல் ஆசிரியர் வெற்றி பெறுகின்றார். இதனை யாழ்ப்பாண வெறுப்புணர்வுடன் படைப்பாக்காது அதனை இயல்பான சமூகச் சிதைவின் பின்னணியில் சித்திரித்துக் காட்ட முனைவது இந்த நாவலின் தனித்துவமான அம்சமாகும்.

தொழிலாளர் வர்க்கத்திலிருந்து வளர்ந்து தமது கல்வி மேம்பாட்டின் மூலமாக மத்திய தர வர்க்கமாக மாறியவர்கள் கிளாக்கர், கணக்கப்பிள்ளை போன்றோரின் பிள்ளைகளைத் திருமணம் செய்து அதனூடாகத் தமது வாழ்க்கைப் போக்குகளை மாற்றிக் கொண்டவர்கள் பற்றியே மலையகத்தில் அனேக படைப்புகள் வெளிவந்துள்ளன. ஆனால் யாழ்ப்பாண மேட்டிமைத்தனத்திற்கு தமது தன்மான உணர்ச்சிகளை அடமானம் வைத்து, மானுடம் இழந்து அம்மணமாக நின்றவர்கள் குறித்துக் காட்டியதில் இந்நாவலுக்கு முக்கிய இடமுண்டு. இந்நாவலில் கருத்து முழக்கங்களையோ உணர்ச்சிமயமான சன்னதங்களையோ காணமுடியாதுள்ளது. கருத்து நிலைக் கோட்பாடாக விபரிக்கப்படாமல்

மனிதவுறவுகளின் அடிப்படையில் அவற்றினைப் படைப்பாக்க முனைந்துள்ளமை இந்நாவலின் வெற்றிக்கு வழிவகுக்கின்றது. காலவோட்டத்தில் இடையீடின்றி மாறிக் கொண்டிருக்கும் வாழ்நிலைகளின் இயக்கத்திசைகளை நுணுக்கமாக நோக்குவதற்கு இந்நாவல் துணை நிற்கின்றது.

இந்நாவலில் மலையக மண்வாசனை மிக்க மொழிநடை கையாளப்பட்டாலும் அது இடம், பொருள், காலம், வர்க்க, தொழில் நிலைகளுக்கேற்ப அமைந்திருப்பதைக் காணலாம். எடுத்துக் காட்டாக பெரியங்கங்காணி தமக்கு வீட்டு வேலைகளைச் செய்கின்ற கிருஷ்ணாவிடம் உரையாடுகின்ற பாங்கு, மொழிநடை நாவலின் கதாநாயகன் தமது சட்டத்தரணி நண்பன், மற்றும் பொலிஸ்காரர்களிடம் உரையாடுகின்ற மொழிநடையும் வித்தியாசப்படுகின்றன. இவ்வாறு நாவல் முழுவதிலும் தேவைக்கேற்ற வகையில் மொழி நடை கையாளப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தொகுத்து நோக்குகின்ற போது, நாவலின் இறுதி வரிகள் இப்படியாக அமைந்து காணப்படுகின்றன:

> "குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊரும் இவர்களுக்கு நடை மெலிந்து நலிவுறும் எங்கள் நிலை எங்கே தெரியப் போகிறது. அதனால்தான் சொல்கின்றோம் குடையைப் பிடுங்க வேண்டும் என்று"

> "குடையை மட்டுமல்ல குஞ்சரத்தையும் சேர்த்து என்கிறது மனம்"

"குடையை மட்டுமல்ல குஞ்சரத்தையும் சேர்த்து" என்ற வரிகள் புதியதோர் அரசியல் மாற்றத்திற்கான தேவையை உணர்த்துகின்றது. இக் கூற்று சோகத்தை இசைத்தாலும் அவைகூட சமூக அசைவியக்கத்தை முன்னெடுத்துச் செல்வதாகவே அமைந்திருக்கின்றது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்டிருக்கின்ற இந்நாவலில் மலையகத் தமிழர்களை இந்திய வம்சாவளித் தமிழர் என்ற பதம் கொண்டு அழைக்க முற்படுகின்றார் தெளிவத்தை ஜோசப். மலையகத் தமிழரின் வரலாறு-இருப்பு, அவர் தம் உறுதிப்பாட்டுக்கென நடாத்திய போராட்டங்கள் யாவற்றையும் சிதைக்கும் வகையில் தான் இந்திய

தமிழர்கள் என்ற அடையாளம் பாவிக்கப்படுகின்றது. ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் நலனில், பின்னணியில் உருவாகியிருக்கின்ற மலையகத்தமிழர் என்ற அடையாளத்தை மறுத்து இந்தியத் தமிழர் என்ற அடையாளம் பிரயோகிக்கப்படுவது எமது வரலாற்றை பின்னோக்கித் தள்ளுவதாக மட்டுமன்று, இந்திய ஆதிக்கச் சக்திகளின் கைக்கூலியாக எம்மை ஆக்கிக் கொள்ளக் கூடிய நிலையையும் உருவாக்கும்.

எமது யாசிப்பு இது போன்ற காத்திரமான படைப்புகளை மேலும் தெளிவத்தை ஜோசப் வெளிக்கொணர வேண்டும் என்பதாகும்.

முச்சந்தி.புளோக்ஸ்போட்.கொம்-2011
தினக்குரல் - 2012

07

சிவனு மனோஹரனின் 'கோடாங்கி': ஒரு மதிப்பீடு

திரு. சிவனுமனோஹரனின்சிறுகதைகளைஅவ்வப்போதுபத்திரிகையிலும் சஞ்சிகைகளிலும் வாசித்திருக்கின்றேன். நிகழ்வுகளை அவர் பார்க்கின்ற கோணமும் அதனை அவர் வெளிப்படுத்தும் மொழியும் சற்றே மாறுபட்டதாய் இருந்தன. இன்று மலையக இலக்கியத்தில் புதிய வரவாக உள்ள பிரமிளா பிரதிபன் இவர் போன்ற படைப்பாளிகளின் வரிசையில் அவரது கதைகளை வைத்து இனங்காணக் கூடியதாக இருந்தது. ஆனால் அவரது முக்கிய கதைகள் சிலவற்றைத் தொகுப்பாக நோக்குகின்ற போது சில அம்சங்கள் தெளிவாகத் தெரிகின்றன. அவ்வகையில் இக்கட்டுரையின் வாயிலாக சிவனுமனோஹரனின் கதைகள் பற்றிய விமர்சனத்தை விட மலையக இலக்கியத்தில் இன்று முனைப்புற்று வருகின்றதோர் போக்கை விமர்சனத்திற்குட்படுத்தவே முனைகின்றேன்.

இவ்விடத்தில் முக்கிய விடயம் ஒன்றும் அழுத்திக் கூறவேண்டியுள்ளது. அதாவது மலையக இலக்கியத் தொகுதி இரு வகைப்பட்டோரால் எழுதப்பட்டு வந்துள்ளது. அவை வருமாறு:

1. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டவர்கள். அந்தப் பண்பாட்டுக்குள்ளிருந்து தோன்றிய படைப்பாளிகள் - மலையக மண்ணின் மைந்தர்கள்.

2. மலையகத்தோடு தொடர்பு கொண்ட அதே சமயம் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத படைப்பாளிகள்.

இவ்விரு வகைப்பட்ட எழுத்தாளர்களினாலும் மலையக இலக்கியம் செழுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளது என்ற போதினும், இவ்விரு பகுதி எழுத்தாளர்களுக்கிடேயேயும் சிற்சில வேறுபாடுகள் கண்டு கொள்ளத்தக்கதாய் உள்ளது என்பது பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மலையக வரலாற்றினையும் அதன் அபிவிருத்தி குன்றிய நிலையினையும் நோக்கும் போது இந்நிலை ஒருவகையில் தவிர்க்க முடியாதது என்பார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

மலையகப் பெருந்தோட்டப் பண்பாட்டுக்குள் நின்று அம்மக்கள் பற்றிய இலக்கியம் படைத்தவர்கள் மலையக வாழ்வியலை உள்நின்று சிந்திக்க முனைவதைக் காணலாம் (இவ்வகைப் பாட்டினுள் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைத்து எழுத்தாளர்களையும் கொள்ள முடியாது). யதார்த்த நோக்கு, சமூக அசைவியக்கம், வர்க்க முரண்பாடு என்பவற்றை சித்திரிப்பதில் இவர்களிடையே நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறானதோர் சூழலில் மலையக மக்களின் பிரச்சினைகளை உள்நின்று சிறுகதை எழுத முனைந்த படைப்பாளிகளில் சிவனு மனோகரனுக்கு முக்கிய இடமுண்டு.

உலகமயத்தின் பின்னணியில் இன்று உலகில் இடம்பெற்றுவரும் அட்டூழியங்கள், மனித அழிப்புக்கள், வதைகள், மரண ஓலங்கள்-பிள்ளைகளின் கதறல்கள் இவை ஒருபுறமிருக்க இவற்றையெல்லாம் மூடி மறைத்து சந்தைப் பொருளாதாரத்தின் ஊடாக அவற்றை சமன் செய்து விடலாம் என நம்பவைத்து கூத்துக்களை முன்நின்று நடாத்தும் கோமாளிகள், இவையெல்லாம் மலையகச் சமூகத்திற்கு அந்நியமானதொன்றல்ல.

இந்த வகையில் உலகமயமாதலும் நவீன முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் என்றுமில்லாதவாறு சுரண்டலின் தளத்தையும் விரிவுபடுத்தியிருக்கின்றன. இதன் பின்னணியில் முனைப்புற்றிருக்கின்ற பின்நவீனத்துவம், அமைப்பியலியம், இருத்தலியம்முதலிய கோட்பாடுகள் உலகமயத்தை நியாயப்படுத்தி அதற்குச் சாதகமான கோட்பாட்டுத் தளத்தை நிலைநிறுத்தி வருகின்றன. குறிப்பாக, இருத்தலியக் கோட்பாட்டைத் தமிழில் முன்வைத்தவர்கள் பொரும்பாலும் இயற்பண்பு வாதத்தையே இலக்கியத்தில் நிலைநிறுத்த முயன்றனர். வரலாற்று அடிப்படையில் இயற்பண்புவாதம் யதார்த்தவாதத்திற்கு முற்பட்டது என்ற போதிலும் இன்றைய உலகமயமாதல் சூழலில் அதன் தேவை, சுரண்டும் வர்க்கத்தின் நலனையொட்டி அக்கோட்பாடு மறுகண்டுபிடிப்புச் செய்யப்படுகின்றது.

சமுதாயத்தில் கீழ்த்தட்டிலிருக்கும் மாந்தரைச் சித்திரிக்கும் எழுத்துக்கள் யாவும் "யதார்த்தம்", "முற்போக்கு" என்ற அடைகளைப் பெற்றாலும் கூர்ந்து நோக்கின் அவை யாவும் அத்தகைய பண்புகளைப் பெற்றிருக்காது என்பதை நாம் அறியலாம். யதார்த்தவாதம், இயற்பண்புவாதம் என்பன பற்றிய தெளிவின்மையே இத்தகைய குழப்பங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. சில நேரங்களில் இவ்விரண்டு

கோட்பாடுகளையும் ஒன்றெனக் கருதி மயங்குகின்ற நிலையும் காணப்படுகின்றது. இயற்பண்புவாதம் என்பது உள்ளதை உள்ளவாறே எடுத்துக் காட்டும் கோட்பாடாகும். இது புறச் சூழலை விட அகமன உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது. நம்பிக்கை வரட்சி, முடிவற்ற சோகம் என்பன இயற்பண்புவாதத்தின் அடிப்படைகளாகும். இதன் காரணமாக இயற்பண்புவாதம் தோன்றிய காலம் முதலாகப் புறவுலகினின்றும் வரலாற்று உணர்விலிருந்தும் அந்நியப்பட்டே வந்துள்ளது.

இதற்கு மாறாக யதார்த்தவாதம், நிகழ்வுகளின் காரணத்தையும் அதற்குரிய வரலாற்றுப் பின்புலத்தையும் சித்திரிக்கின்றது. வகைமாதிரியான சூழலில் வகைமாதிரியான பாத்திரங்களைப் படைக்கின்றது. மனித நேயம், மனித துயரம், அனுதாபம், மனித விடுதலை போன்ற அம்சங்கள் யதார்த்தவாதத்தால் வெளிக் கொணரப்படுகின்றது. பாத்திரப்படைப்புகளின் பொதுத் தன்மையும் தனித் தன்மையும் படைப்பாக்கப்படுகின்றன. யதார்த்தவாதமானது சோகத்தை இசைத்தாலும் அவை கூட சமூக அசைவியக்கத்தை முன்னெடுப்பதாகவே அமைந்திருக்கின்றன.

யதார்த்தவாதத்தின் தர்க்க ரிதியான வளர்ச்சியே "சோஷலிச யதார்த்தவாதமாகும்". சோஷலிசத்தைத் தோற்றுவித்த நாடுகளிலேயே இக்கோட்பாடு தோன்றியது. யதார்த்தவாதத்தில் வகைமாதிரியான பாத்திரப் படைப்புகள் வெளிக் கொணரப்பட்ட போதிலும் அவை படைப்பில் ஒரங்கட்டப்பட்ட நிலையிலே பாத்திரமாக்கப்பட்டுள்ளன. யதார்த்தவாதம் சமுதாயப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் சித்திரித்து நிற்க, சோஷலிச யதார்த்தவாதம் அவற்றினை வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் நோக்கி, அப்போராட்டத்தில் முகிழக் கூடிய பாத்திரங்களையே சித்திரிக்கின்றது. அந்தவகையில் சோஷலிச யதார்த்த வாதம் என்பது சோஷலிச நாடுகளிலே தோன்றி வளரக் கூடியதாகும். இலங்கை போன்ற நாடுகளுக்கு அக் கோட்பாடு பொருத்தமற்றதாகக் காணப்பட்டது. தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம் போன்ற கோட்பாடுகளே பொருத்தமானதாக அமைந்திருந்தன. இச்சந்தர்ப்பத்தில் மலையக இலக்கியத்தின் செல்நெறி என்ன? அதன் பயன்பாடு என்ன? போன்ற வினாக்கள் எழுவது இயல்பே.

"ஒவ்வொரு உண்மையான கலைப்படைப்பும், வாழ்க்கை பற்றிய ஒரு புதிய அனுபவத்தையும் உணர்வையும் நமக்குத் தருகின்றது. நாம், கண்ட, கேட்ட, அனுபவித்த வாழ்க்கையை நமக்குப் புதிய பரிமாணத்தில்

காட்டுகின்றது. வாழ்க்கையின் உண்மைகளை நம்மை உணர்வுபூர்வமாகக் காணச்செய்கிறது. வாழ்க்கையை முழுமையாக விளங்கிக் கொள்ள நமக்கு உதவுகிறது. இந்தவகையில், நமது அனுபவத்தையும் உணர்வையும் அறிவையும் அது கூர்மைப்படுத்துகிறது. நமது ஆளுமையில் ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது. ஒரு நல்ல கலை, ஒரு ரசிகனிடம் இவ்வாறுதான் செயற்படுகிறது, இவ்வாறு அது அவனுக்கு செயற்படுவதன் மூலம், அவனையும் செயற்படத் தூண்டுகிறது." (நுஃமான் எம்.ஏ, 'மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்' , அன்னம் வெளியீடு, சென்னை, பக். 62,-63). அந்தவகையில் சமூகம் பற்றிய அறிவும் அவை தோற்றுவிக்கும் வாழ்க்கைப் போக்குகளும் அதனை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற உருவமும் தான் ஒரு கலைப்படைப்பாக உருவாகின்றது. கலைப்படைப்பில் உள்ளடக்கம் உயிர் என்றால் அதன் உடல் அதன் வடிவமாகும். இவ்விரு அம்சங்களும் இசைவுபட்டே கலைப்படைப்பு தோற்றம் பெறுகின்றது. இதற்கு அப்பால் உள்ளடக்கத்தை மட்டுமோ அல்லது உருவத்தை மட்டுமோ முதன்மைப்படுத்தி வெளிவருகின்ற கலைப்படைப்புகள் தோற்றுப்போய் பின்வாங்குகின்றன.

இந்தப் பின்னணியில் நின்று சிவனு மனோஹரனின் கதைகளை நோக்குகின்ற போது அவர் தமது கதைகளில் சமூகம் சார்ந்த-ஆக்கபூர்வமான வளர்ச்சிக் கூறுகளை எவ்வாறு கையாண்டுள்ளார்? அவரது புரிந்து கொள்ளலின் அடிப்படை யாது? போன்ற விடயங்கள் பற்றி நோக்க வேண்டியுள்ளது.

இச்சிறுகதையாசிரியர் தமது சிறுகதைகளினூடாகப் சமுதாயப் பிரச்சினைகளையும் ஓரளவிற்கு நோக்கியுள்ளார். அவற்றினைக் கோட்பாடாக விபரிக்காமல் பாத்திரப் படைப்புக்களின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளமை இத்தொகுப்பின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கதைகளில் மிக முக்கியமான கதையாக 'நிமிர்வு' அமைந்துள்ளது. இன்றைய சூழலில் இனவாதம் என்பது புதிய பரிணாமத்தை எட்டியுள்ளது. அதற்கு மத்தியிலும் ஆங்காங்கே மனிதம் நிலைகொண்டிருப்பதனை யதார்த்தமாகச் சித்திரிக்கும் கதையிது. இந்தச் சிறுகதையில் சிந்தனையும் உணர்ச்சியும் அளவாக உள்ளன. அதாவது வாசகனில் உணர்ச்சிகளைத் தூண்டும், பயன்படுத்தும் அம்சம் நிறைவாகவுள்ளது .

'பாப்பா புள்ள' என்ற கதை தொழிலுக்காக வெளிநாடு செல்லும் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றிக் கூறுகின்றது. சமூகம் பற்றிய அறிவும் அவை தோற்றுவிக்கும் உணர்ச்சிகளும் உள்ளடக்கமாகக் கொண்ட படைப்பாகக் காணப்படுகின்றமையினால் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான வடிவம் சிறப்பாக அமைந்துள்ளது.

இச்சிறுகதையாசிரியரின் பெரும்பாலான கதைகளில் சோகவுணர்வு இழையோடியிருப்பதைக் காணலாம். துன்ப இயற்கைக் கோட்பாடு பெரும்பாலான கதைகளுக்கு ஓர் ஒருமைப்பாட்டை அளித்திருக்கிறது. படர்(தா)மரை, கூட்டாஞ்சோறு, லயத்துக் குருவிகள், தவளைகள் உலகம் முதலிய கதைகளில் சோக உணர்ச்சியே அடிநாதமாய் விளங்குகின்றது. சோக உணரச்சி இக்கதைகளில் முனைப்பாக இடம்பெறுவதன் காரணமாக இவற்றில் உளவியல் சார்பு சற்று மேம்பட்டுக் காணப்படுகின்றது. இன்னொருவிதத்தில் இவற்றில் வெளிப்பட்டுள்ள கதாபாத்திரங்கள் புற உலகிலும் பார்க்க வாழும் அக உலகை மட்டுமே சித்திரிப்பனவாக அமைந்துள்ளமையினால் சோர்வு வாதத்தையே பிரதிபலித்து நிற்கின்றன.

எடுத்துக்காட்டாக இத்தொகுப்பின் தலைப்பாக அமைந்துள்ள 'கோடாங்கி' கதையை நோக்குகின்றபோது உழைப்பிலிருந்து அல்லற்படுகின்ற மலையகத் தொழிலாளர்களின் சமூகத்தின் கூட்டுச் செயற்பாடாகப் பிறந்த தங்களது கலையையும் இசையையும் காலங்காலமாகப் போற்றிப் பாதுக்காத்தே வந்துள்ளனர். எழுத்திலக்கியம் அல்லது தங்களது கல்வியுரிமைகள் மறுக்கப்பட்டுக் கல்லாதவர்கள் என்ற அடையாளத்துடன் வாழ்ந்த அவர்கள் தங்களது கலையையும் இலக்கியத்தையும் பாதுக்காத்தே வந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் போற்றிய இசைக்கருவிகளில் ஒன்று தான் கோடங்கியாகும். அத்தகைய இசைக்கருவியையும் அதனை வைத்திருக்கும் பூசாரியும் இக்கதையாசிரியருக்கு இழிவானதாகவும் ஏமாற்று வித்தையாகவுமே தென்படுகின்றனர். நகரப்பெரும் கோயில்களில் கோடானகோடி பணத்தைக் கொள்ளையடித்து சமூகக் காவலர்களாகவும் சமாதான நீதவான்களாகவும் உலாவருவோர் இக்கதையாசிரியரின் கண்ணுக்குப் புலப்படாமல் போனமை துரதிஷ்டமான ஒன்றே. அவ்வாறே இவரது ச(க்)தி கரகம் என்ற கதையில் கரகமாடும் பெண்ணின் துயரமான வாழ்வு: அப்பெண்ணுக்கு எதிரான பாலியல் பலாத்காரம் வெளிக் கொணரப்படுகின்றது என்றபோதிலும் மக்கள் அனைவரையும் காம வெறியர்களாகக் காட்ட முனைவது பொருத்தமற்றதாகவே

காணப்படுகின்றது. மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து அதன் ஆன்மாவாகவுள்ள சக்தி கரகம் சில நேரங்களில் இக்கதையாசிரியருக்கு சதிக்கரகமாகத் தென்படுவதும் தற்செயல் நிகழ்வல்ல.

'மட்டத்துக்கத்தி' என்ற கதையின் அடிநாதமாக அமைவது மனித நேசிப்பாகும். நேயம் என்பது மனிதர்கள்பால் மட்டுமன்றி எம்மோடு தொடர்புள்ள கருவிகள், ஆயுதங்கள் மீதும் இரங்குதல் ஆகும். இன்றைய காலச் சூழலில் மட்டத்துக் கத்தி பற்றி உணர்வு புதிய தலைமுறையினரிடம் எந்தளவு செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது என்பது கேள்வியாகும். கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிலுனரான மலர் தமது நண்பியின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின்போது பேத்டே கேக் வெட்டும் கத்தி கிடைக்காத நிலையில் "அந்த மட்டத்துக் கத்தி எங்கடி" என சக நண்பிகளிடம் கேட்க அவள் அவமானத்திற்குட்படுவதுடன் அன்று முதல் மட்டத்துக்கத்தி மலர் என்றே அழைக்கப்படுகின்றாள். இது இன்றைய சூழலில் நடக்கக் கூடிய ஒன்றா என்பது முதலாவது வினா. அப்படியே நடந்திருந்தாலும் கூட வகைமாதிரியான பாத்திரப் படைப்பாக அமையவில்லை.

'ஒரு அந்தப்புரத்தின் அந்தகாரம்' என்ற கதையில் சாதியத்தை விமர்சிக்க முற்படுகின்ற ஆசிரியர் பெண்ணை பால் கவர்ச்சியாகவும் காமக்கிழத்தியாகவும் காட்ட முனைவது ஓர் இலக்கியப் பழிவாங்கலாகவே படுகின்றது. இக்கதையில் மேகலா என்ற பெண்ணை அவள் மீது கொண்டுள்ள கவர்ச்சியில், காமத்தில் காதலிக்கின்ற விஸ்வா, அவள் வீட்டைச் சுற்றி தெரு நாய்கள் கொடுக்கின்ற தொல்லைகள் பற்றி வினவிய போது அதற்கு மேகலாவின் பதில் கதையில் இவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றது:

"மேகலா இந்த நாய்கள் கூட்டம் தேவைதானா, இதுகள கொண்டு நடத்த எடுக்கிற ரிஸ்க் அநாவசியமா படலையா? இருவர் மத்தியிலும் மௌனம்... அவளோ உடைக்கிறாள். 'நோ விஸ்வா, பறபல்லாஸ் பத்தி உங்களுக்கு தெரியாது! எப்பவுமே இதுகள கொஞ்சம் தள்ளி வைக்கணும். அதிகமாக எடம் கொடுத்தா மடம் பிடிக்கும். இந்த நாய்கள் நம்மோட செக்கியுரிட்டிக்கு மட்டும் வச்சிக்கலாம். விஸ்வா நீங்கள் ஒன்ன தெளிவா புரிஞ்சிக்கணும். என்னோட பார்வையில் உயர்ரகமான நாய்களைவிட இந்த தெரு நாய்கள் எப்பவுமே பெட்டராகத்தான் படும். ஏன் தெரியுமா? நம்மோடு ஐக்கியப்படும் உயர்ரக நாய்களைவிட ஒருபடி தள்ளி நிற்கும்

இந்த பறபல்லாவுக்கு தான் எசமானியின் உயர்வு புரியும்' என்று உதிர்க்கும் புன்னகை அவனுள் ஒருவிதமான அதிர்வை ஏற்படுத்தியது"

காம வேட்டையிலும் சதைப்பசியினாலும் அடிமையாகியுள்ள பெண்ணாகச் சித்திரிக்கப்படுகின்ற மேகலாவின் சாதிய உணர்வு காரணமாக அவள் மீது வெறுப்புக் கொண்ட விஸ்வா அவள் பலருடன் பாலுறவு கொள்வதையிட்டு வெறுப்படைந்து அந்நியப்படுகின்றான். கதையில் வில்லியாக்கப்பட்ட மேகலா 'ரத்தக் கண்ணீர்' படத்தில் வரும் காந்தாவாக சித்திரிக்கப்படுகிறாள். ச(க்)தி கரகம் கதையில் வருகின்ற கரகாட்டக்காரி பஞ்சா தோட்டத்து இளைஞர்களால் பாலியல் சேட்டைகளுக்குட்படுகின்ற போது அவளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் காட்டப்படகின்றதா? அல்லது அவள் பால் கவர்ச்சியாகக் காட்டப்படுகிறாளா? என்பதும் சுவாரசியமான வினாக்கள் தான். நந்தினி சேவியர் தமது நேர்காணலொன்றில் குறிப்பிடுகின்ற விடயத்தினை இங்கொருமுறை குறித்துக் காட்டுவது அவசியமானதொன்றாகின்றது.

ஆபிரிக்க எழுத்தாளர் ஒருவர் வெள்ளையர்களின் மீது கொண்ட வெறுப்புணர்வின் காரணமாக வெள்ளைப் பெண்கள் அனைவரையுமே சோரம் போகின்றவர்களாகக் காட்டியுள்ளார். அவ்வாறே ஈழத்து எழுத்தாளர்களில் ஒருவராகிய கே. டானியலின் படைப்புகளிலும் மேல்சாதி ஆடவர்கள் தாழ்த்தப்பட்ட பெண்களை வைப்பாக வைத்திருந்ததற்கு மாறாகப் பழிவாங்கலாக உயர்சாதிப் பெண்கள் அனைவருமே நெறிபிறழ்ந்தவர்களாக சோரம் போகின்றவர்களாகக் காட்டியிருக்கின்றார். சமுதாய மாற்றத்தை விரும்பும் புரட்சிகரமான எழுத்தாளனுக்கு உகந்த பண்பல்ல. அது அப்போராட்டங்களை பலவீனப்படுத்துவதாகவும் அமையும்.

சமீப காலமாக இளைஞர்களிடையே குறிப்பாக மலையகத்தில் வாழும் எழுத்தாளர்களிடையே பிரச்சினைகளை இன்னும் நுணுக்கமாக ஆராய்ந்து பரிகாரம் கூறும் இலக்கிய படைப்புக்கள் வெளிவர வேண்டும் எனும் கருத்து வேகம் பெற்று வருகின்றது. இதற்குத் தர்க்க ரீதியிலான காரணங்கள் இல்லாமலும் இல்லை. மனிதாபிமான முறையில் பிரச்சினைகளைச் சித்திரிப்பது என்ற கருத்து கால வழக்கமான பின் அடுத்து என்ன? எனும் வினா எழுவது இயல்பானதே. அதன் தர்க்க ரீதியான வளர்ச்சியாக மரபு மீறல் - எதிர் மரபு குரல் எனும் சிந்தனைகள் தோன்றுவது இயல்பு. வாழ்வின் யதார்த்தத்தை உணர்ந்து அதனுள் இருண்ட பகுதிகளாகவும் கண்ணுக்குப் புலனாகாமலும் காணப்படும்

கூறுகளையும் வெளிக் கொணர்வதே படைப்பாளியொருவரின் ஆளுமையாகும். கலையென்பது சமூக வாழ்வை உணர்ந்து அதன் புதிய போக்குகளை உணர்ந்து அதனைப் பொதுமைப்படுத்தும் திறனே ஆகும்.

இவ்வகையில் நோக்குகின்ற போது, போராடிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களின் உள்ளத்தை உணர்ந்து அவர்களின் துன்ப துயரங்களை வெவ்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் எதிர்த்துக் குரல் எழுப்பி வந்துள்ள எதிர் மரபு ஒன்று உலகின் பல மொழிகளிலும் இருப்பதையும் போல மலையகப் பாரம்பரியத்திலும் அத்தகைய மரபு ஒன்று வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். எதிர் - மரபு என்று நான் கூறிப்பிடுவது மரபை எதிர்க்கும் ஒன்றையல்ல: மாறாக எதிர்த்து இயங்கும் மரபு ஒன்றினையேயாகும். இரு நூற்றாண்டு காலமாக அடக்கியொடுக்கப்பட்டு அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த மலையகத் தொழிலாளர்கள் அவ்வப்போது செய்த கலகங்கள், எழுச்சிகள் என்பவற்றுடன் இவ்வெதிர்ப்புணர்வை இணைக்கத் தவறிவிட்டதை தோழமையுடன் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். சிவனு மனோஹரன் போன்ற இளம் படைப்பாளிகள் சமுதாய விடயங்களைச் சற்று ஆழமாக நுண்ணயத்துடன் நோக்குவார்களாயின் மலையக மக்களின் வாழ்வை அதன் சமுதாயத் தளத்திலிருந்து படைப்பாக்கித் தர முடியும். அவை வெளிவெளியாக அரசியல் சார்ந்த எழுத்தாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்தல்ல. ஆனால் அத்தகைய படைப்புகள் மூலமாக அவர் இலக்கு வைக்கும் வாசகர்களிடம் வலுவான கேள்விகளை எழுப்ப முடியும்.

சிவனுமனோஹரன் கதைகளில் மிக முக்கியமாக சிலாகித்துப் பேசப்படுகின்ற அம்சம் மலையக மக்களின் மண்மணம் கமழும் பேச்சு வழக்கைத் தமது படைப்புகளில் கையாண்டமையாகும். அவரது எல்லாக் கதைகளிலுமே இப்பண்பு முனைப்புற்றிருக்கின்றது. "நகரை உருவாக்குவது சுவர்கள் அல்ல, மனிதர்கள்" என்பார் டெமாதனிஸ். அவ்வாறு மொழியை உருவாக்குவதும் மனிதர்களே. ஒரே மொழியைப் பேசும் மக்கள் சமுதாயத்தினர்கூட தமது பிரதேச வாழ்க்கை, தொழில், வர்க்கநிலை போன்றவற்றுக்கேற்ப மொழியின் சொல்வழக்கையும், நடையையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாத சமூக நியதியாகும். இச்சிறுகதையாசிரியர் தமது படைப்பில் இத்தகைய போக்கை அனுசரித்திருப்பினும் சில இடங்களில் தொழிலாளர்கள் எவ்வாறு அறியாமை மிக்கவர்களாகவும், நாகரிகமற்றவர்களாகவும் கருதுகின்றாரோ அவ்வாறே அவர்கள் பேசும் மொழியையும் இழிவாகப் பார்க்கின்ற மனநிலையும் இவரிடம் காணப்படுகின்றது. அவரது 'ச(க்)தி கரகம்' என்ற

கதையில் ஒலிபெருக்கியின் அறிவித்தலொன்று பற்றிக் கதையாசிரியரின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொண்டிருக்கின்றது:

"இன்னும் சற்று நேரத்தில் அம்மா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு விடுவாள். பக்த அடியார்களை ஆலயத்திற்கு அழைக்கின்றோம்" என்ற செந்தமிழைப் புணரத்துடிக்கும் கொச்சை தமிழ் கலந்து அலறிக் கொண்டிருந்தது"

மலையகத்தில் இத்தகைய திருவிழாக்களின் போதோ அல்லது ஏனைய சமய நிகழ்வுகளின் போதோ சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் ஒலிபெருக்கியில் கதைக்கின்ற போது அவர்களின் பேச்சுத் தமிழை உபயோகித்தாலும் அவை எல்லாவற்றையும் அநாகரிகமானதாகவோ, உச்சரிக்கத் தகாத விடயமாகவோ அவர்கள் உபயோகிப்பதில்லை என்பதை அவ்வாழ்க்கையை நுண்ணியத்துடன் நோக்குபர்களுக்குப் புரியும். இந்த மரபினை மலையக எழுத்தாளர்கள் சிறப்பாகத் தமது படைப்பில் வெளிக்கொணர்ந்துள்ள அதே சமயம் அதில் வெற்றியும் பெற்றுள்ளனர் என்றே கூறவேண்டும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றியும் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. அதாவது இலக்கியத்தில் உள்ளடக்கம் எவ்வாறு கால, தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டும் அதனை மீறியும் இயங்குகின்றதோ அவ்வாறே அதன் வடிவமும் அத்தகைய தாக்கங்களுக்கு உட்பட்டே இயங்குகின்றது என்பதை இலக்கிய வரலாறு எண்பித்திருக்கின்றது. உள்ளடக்க ரீதியாக மட்டுமன்று வாசிக்கின்ற முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. முற்போக்கு இலக்கியத்திற்கும் அழகியல் பிரச்சினைகள் உண்டு. "ஒவ்வொரு காலமும் புதிய சிந்தனைகளை மட்டுமல்ல, புதிய கலை உருவங்களையும் தோற்றுவிக்கின்றது" என ரஷிய தத்தவ ஆசிரியர் பெலின்ஸ்கி குறிப்பிடுகின்றார். எனவே காலத்திற்கு ஏற்ற வடிவத்தை மக்களின் நலனிலிருந்து அந்நியமுறாமல் படைப்பாக்கித் தரவேண்டியது முற்போக்கு - மார்க்சியப் படைப்பாளியின் கடமையாகும். இன்றைய சிறுகதை வளர்ச்சியில் முக்கிய கணிப்பைப் பெற்றுள்ள ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகள் இந்தச்சீரியப் பணியினைசெய்திருக்கின்றது. இதற்கு "கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக் கூடும்" என்ற கதை தக்க எடுத்துக்காட்டாகும். இந்திய அரசியல் பின்புலத்தில் நின்று கொண்டு மெஜிக்கல் ரியலிச பாணியில் எழுதப்பட்ட கதையாகும். இந்திய சமூகத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வாழ்வைப் படம்

பிடித்துக் காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது. இக்கதை சொல்லும் பாணியில் பவனி வருகின்ற பாத்திரங்கள் யாவும் இன்றைய விடுதலையை நாடும் அதே நிலைக்குரிய பாத்திரங்களை மறுவாசிப்புச் செய்ய ஏதுவாக உள்ள புனைகதை ஏற்பும் சமூகமாற்றத்திற்கான உந்தலும் முற்போக்கு இலக்கியத்திற்கு மாத்திரமன்று முழுத் தமிழ் இலக்கியத்திற்கும் வழங்கிய மகத்தான பங்களிப்பாக அமைந்துள்ளது.

சிவனு மனோஹரனின் சிறுகதைகளை வாசிக்கின்ற போது அவர் வடிவ அமைப்பில்- கதை சொல்லுகின்ற முறையில் இத்தகைய உத்திகளைக் கையாண்டிருக்கலாமே என்று எனக்குத் தோன்றுவதுண்டு. எனினும் அவ்வகையான புதிய திசை வழியைக் கைக்கொள்ளாது பாரம்பரிய முறையில் தமது கதைகளைப் படைத்திருப்பது அவரது கதை சொல்லும் பாணியின் ஓர் அம்சம் என்று நாம் அமைதி காணலாம். அவ்வாறே இவரது சில சிறுகதைகளில் சிறுகதைக்கான வடிவம் இயல்பாக வார்க்கப்படாத நிலையும் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக இத்தொகுப்பில் அடங்கியுள்ள 'இந்திரலோகத்தில் தோட்டக்காட்டான்' என்ற கதையில் வருகின்ற சம்வம் - நிகழ்வுகள் - உணர்ச்சிகள் பலவகையாகக் காணப்படுகின்றமையினால் சிறுகதைக்குரிய பண்பினை இழந்து நிற்கின்றது. கதைப்பின்னல், கதையின் முடிவு தொய்வை ஏற்படுத்துகின்றது. கதையின் நடுவில் இங்கே கதை முடிந்திருக்கலாமே என்ற நினைவு வாசகனுக்கு ஏற்படுகின்றது. இசைவு, கதைப்பின்னல் என்பன கதையின் அடிப்படைக் கூறுகளாகும்.

இவற்றுக்கு அப்பால் சிவனுமனோஹரனிடம் படைப்பாளுமை உள்ளது. அவர் தமது சமூகம் சார்ந்த அரசியல் சமூக உணர்வுகளை மேம்படுத்திக்கொள்கின்றபோது ஆற்றல் வாய்ந்த படைப்பாளராகத் திகழ்வார். ஈழத்து இலக்கிய அரங்கில் சான்றோனாக அவர் வளர வேண்டும்.

முச்சந்தி இலக்கிய வட்ட ஏற்பாட்டில்
ஆதவன் தீட்சண்யாவுடனான இலக்கிய சந்திப்பு

அட்டன் நகரில் 24.7.2010 அன்று மாலை 4.00 மணிக்கு ஓர் அற்புதமான இலக்கியச் சந்திப்பு இடம்பெற்றது. தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த "புதுவிசை" ஆசிரியர் ஆதவன் தீட்சண்யாவுடன் ஒரு சந்திப்பு எனும் மகுடத்தில் இது இடம் பெற்றிருந்தது. ஏற்பாடு முச்சந்தி இலக்கிய வட்டம், அதன் ஆலோசகர்களில் ஒருவரான ந. இரவீந்திரன் தலைமை தாங்கினார். மலையகத்தின் மூத்த படைப்பாளிகள், கல்வியியலாளர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள் முதல் இளம்தலைமுறை ஆர்வலர்கள் வரை பலரும் கலந்து கொண்டு ஆரோக்கியமான கருத்தாடற் களமாக ஆக்கியதால் சந்திப்பினை அர்த்தமுள்ளதாக்கியிருந்தனர்.

முன்னதாக சு. உலகேஸ்பரா வரவேற்புரை ஆற்றுகையில் முச்சந்தி இலக்கிய வட்டம் (மு.இ.வ) முதல் நிகழ்வாக இந்தச் சந்திப்பினை ஏற்படுத்தியபோதிலும் இந்த அமைப்பு புதிய ஒன்றல்ல என்பதை எடுத்துரைத்தார். கார்க்கி இலக்கிய வட்டம் தனது பெயரை மு.இ.வ. என மாற்றியிருந்தமையை அறியத்தந்தார்.

தலைமையுரையில் இரவீந்திரன், ஒரு தசாப்தங்களின் முன்வரை அதற்கு முன்பு இருந்த எழுச்சியின் பேறாக கார்க்கி பெரிதும் ஆதர்ச சக்தியாக இருக்க முடிந்தது. இன்றைய தலைமுறையோ செல்லும்வழி இருட்டு என்ற திகைப்புடன் முச்சந்தியில் நின்று மார்க்கம் எதுவென அறியாது மயங்கும் நிலையில் அல்லாடுகிறது. அந்தவகையில் பெயர்மாற்றம் காலப்பொருத்தமானது. நாம் அனைத்தும் அறிந்தவர்கள், வழிப்படுத்த வந்திருக்கிறோம் என எவரும் சொல்லமுடியாத நெருக்கடி நிலை இன்று உள்ளது. முச்சந்தியில் கூடும் மக்களின் இருப்புக்கு நிகராக முன்முடிவுகள் இல்லாமல் இங்கே விவாதிக்க வேண்டியவர்களாகக் கூடியுள்ளோம். மனந்திறந்த கருத்தாடல்கள் வாயிலாக எமக்கான மார்க்கத்தைக் கண்டறிந்து செயற்பாட்டில் நாம் முன்னேற வேண்டும். மக்கள் விடுதலைக்கு வழிகாட்டிய இடதுசாரிச் சக்திகள் ஒன்றில் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளாக அல்லது அதிதீவிர இடதுசாரி வாத வாய்ச்சவடால்ப் பேர்வழிகளாக ஆகிவிட்டார்கள். இன்று அதிதீவிர

இடதுசாரிக் கோசங்களால் தம்மைப் பெரிய புரட்சியாளர்களாக வேடம் போடுபவர்கள் இளம் தலைமுறையை நச்சுப்படுத்துபவர்களாயுள்ளனர்.

முப்பது வருட யுத்தத்தினால் நாடு முழுமையிலுள்ள மக்கள் நல நாட்ட சக்திகள் அழிக்கப்பட்டதோடு இன்றைய வெற்றிடத்திற்குத் தொடர்புள்ளது. அதேவேளை இந்த நெருக்கடி எமக்கு மட்டும் உரியதல்ல. இயல்பான வாழ்வில் முன்னேறும் இந்தியாவிலும் அரசியல் நெருக்குவாரங்கள் இடதுசாரிகளுக்கு பெரும் இடர்களை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் இன்றைய புதிய சூழலுக்கு அமைவான மார்க்சியப் பிரயோகத்துக்கு ஏற்ற விவாதங்கள் அவசியப்படுகின்றன. அதனை ஆரோக்கியமான திசைவழியில் முன்னெடுக்கும் சஞ்சிகையாகப் புதுவிசை உள்ளது. அதன் ஆசிரியர் ஆதவன் தீட்சண்யா சிறந்த செயற்பாட்டாளராகவும் உள்ளார். அவரும் அந்த அமைப்பும் இன்று தமிழகத்தில் காத்திரமான சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இந்திய அனுபவங்கள் சார்ந்து அவர் முன் வைக்கும் விடயங்கள் எமக்குப் பயனுள்ளவையாக அமைய முடியும் எனக்குறிப்பிட்டு இரவீந்திரன் தலைமையுரையை நிறைவு செய்தார்.

திரு. வ. செல்வராஜா மலையக மக்கள் தொடர்பாகவும் அதன் பின்னணியில் மலையகத் தேசியம் தொடர்பாகவும் தமது அறிமுக உரையை நிகழ்த்தினார். இன்று மலையக மக்களின் சமூக இருப்புத் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்மக்களை மலையக மக்கள் என்று அழைப்பதா? அல்லது இந்திய வம்சாவளித் தமிழர் என்று அழைப்பதா? என்பதாகவே அவ்வாதங்கள் அமைந்திருக்கின்றன. மலையக மக்கள் என்று அழைப்பதை அழுத்தமாக வலியுறுத்திய திரு வ. செல்வராஜா தமது கருத்தைப் பின்வருமாறு முன்வைத்தார்:

"மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, வாழ்வியல் அம்சங்களை ஒட்டிப் பார்க்கின்ற போது அவர்களை மலையகத் தமிழர் என்றழைப்பதே பொருத்தமானது. மலையகத் தமிழர் என்று அழைக்கின்ற போது அதன் ஆத்மாவாக அமைவது பரந்துபட்ட உழைக்கும் மக்களாவர். ஒரு புறமான இனக் காலனித்துவ ஆதிக்கமும், சமூக ஒடுக்கு முறைகளும் மறுபுறமான சமூக உருவாக்கமும் இணைந்து இம்மக்களைத் தனித்துவமான தேசிய இனம் என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில் இந்திய வம்சாவளித் தமிழர் என்ற பதம் மலையகச்

சமூக அமைப்பின் பண்பாட்டு பாரம்பரியங்களை அதன் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் நலனிலிருந்து அன்னியப்படுத்திப் பார்ப்பதாகவே அமைந்திருக்கின்றது. யாவற்றுக்கும் மேலாக இந்திய முதலாளிகளின் நலனைக் காக்கின்ற அடிப்படையில் தான் இந்தியத் தமிழர் என்ற பதம் பாவிக்கப்பட்டு வருகின்றது. இன்று மலையகத்தில் தோன்றியுள்ள புதிய மத்தியதர வர்க்கம் இப்போக்கை அங்கீகரிப்பதாகவும் படுகின்றது. இப்போக்கானது மலையகத்தின் ஒட்டு மொத்தமான சமூக இருப்பையும் சிதைப்பதாக அமையும்" என்றார்.

ஆதவன் தீட்சண்யா தனது உரையில், சென்ற வருடம் ஒக்டோபர் மாதத்தில் முதல் தடவையாக இலங்கைக்கு வருகை தந்தபோது அட்டன் வந்தமையுடன் தொடர்புபடுத்தி இரண்டாவது பயணங்குறித்துப் பேசினார், இந்தியாவிலும், உலகெங்குமே இடதுசாரி இயக்கங்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன. இது தொடர்பில் தென்னமெரிக்க அனுபவங்களை வெளிப்படுத்தும் நூல் ஒன்று தமிழில் பாரதி புத்தகாலயத்தால் வழங்கப்பட்டுள்ளமை காலப்பொருத்தமுடையது.

தனது உரையை ஆதவன், மார்த்தா ஹர்னேக்கர் எனும் மார்க்சியரின் "இடதுசாரிகளும் புதிய உலகமும்" எனும் அந்த நூலை அடிப்படையாக முன்வைத்து ஆற்றியிருந்தார். உலகெங்கிலும் இடதுசாரி இயக்கங்கள் புதிய உலகச் செல்நெறிக்கு அமைவாக மார்க்சியத்தை பிரயோகிக்க இயலாத நிலைக்கு அமைவாக மார்க்சியத்தை பிரயோகிக்க இயலாத நிலைக்கு உள்ளாகியுள்ளன. சோவியத் பாணியிலான கட்சியமைப்பு இன்று கேள்விக் குறியாகியுள்ளது. அன்றைய எதேச்சாதிகார ஆட்சியில் ருஷ்யாவில் கட்டியெழுப்பப்பட்ட மாதிரியை ஜனநாயக நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கட்டியெழுப்பிட முடியாது. சோவியத்பாணி தோல்வியடைந்ததாலேயே மார்க்சியம் தவறென்று சொல்லிவிடவும் முடியாது. தோசை சுட்ட ஒருவர் கருக விட்டதாலேயே சமையல் குறிப்பு நூல் தவறென்று சொல்லிவிட முடியாது. உண்மையில் இன்றைய சூழலுக்குப் பிரயோகிப்பதற்கு ஏற்றவகையில் மார்க்சியத்தைப் பொருத்திப் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்விடத்தில் இடதுசாரிகளாகிய நாம் எதனைச் செய்தோம் அல்லது எதனைச் செய்ய வேண்டும் என்பது பற்றிச் சிந்தித்தல் அவசியமாகும். பழைய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. பெருங்காய டப்பா எவ்வளவு காலத்திற்கு

மணக்கும். இன்று உலகமயம் என்பது பாரதூரமான விளைவுகளை நம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அது தாராளமயத்தின் மூலமாகத் தேசிய எல்லையைத் தாண்டி ஒரு ஒற்றைச் சந்தையை உருவாக்குவதன் மூலமாக அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடித்து வருகின்றன. இங்கு மனிதர்கள் கூட விலை போகும் சரக்குகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச்சூழலில்தான்நாம்பணியாற்றவேண்டியுள்ளது. இலத்தின் அமெரிக்க நாடுகளில் மக்கள் மத்தியில் இடதுசாரி மனோபாவம் கொண்ட ஆட்சியை உருவாக்கியுள்ளனர். இங்கு இந்நாடுகள் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டன, எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளத் தவறின என்பது பற்றிய தெளிவான பார்வை அவசியமானதாகும்.

மேலும் இன்று இயங்கக் கூடிய இடதுசாரிகளைக் கட்சி சார்ந்த இடதுசாரிகள், சமூகம் சார்ந்த இடதுசாரிகள் என இரண்டுவிதமாக வகைப்படுத்தலாம். மக்களின் விடுதலைக்காக ஒரு ஸ்தாபனமாக இணைந்து சமூகமாற்றப் போராட்டங்களை முன்னெடுக்கின்ற செயற்பாட்டாளராக செயற்படுபவர்களைக் கட்சிசார்ந்த இடதுசாரிகள் எனக் கூறலாம். இதற்கு மாறாக கட்சியில் அங்கம் வகிக்காத அதேசமயம் அதிகார வர்க்கத்திற்கு எதிரான போர்க்குணத்தையும் செயற்பாடுகளையும் கொண்டுள்ளவர்களைச் சமூகம் சார்ந்த இடதுசாரிகள் எனக் குறிப்பிடலாம். இன்றைய சூழலில் புதிய தாராள மயமாக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் இவ்விரு சக்திகளும் ஐக்கியப்படுவது காலத்தின் தேவையாகும் எனவும் ஆதவன் தீட்சண்யா தமது உரையில் குறிப்பிட்டார்.

இவ்வகையான சூழலில் இடதுசாரிகள் தமது புதிய சூழலுக்கு ஏற்றவகையில் தம்மைப் புனரமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது தொடர்பான ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்றன. இக்கலந்துரையாடலில் திருவாளர்கள். ஓ. ஏ. இராமையா, லெனின் மதிவானம், ஜெ. சற்குருநாதன், கே. மெய்யநாதன், கு. இராஜசேகர், அ.ந. வரதராஜ் முதலானோர் கலந்து கொண்டனர். நன்றியுரையை திரு. ஜே. பிரான்சிஸ் ஹலன் வழங்கினார்.

புத்துலகப் படைப்புக்கான ஒரு ஆளுமை

("கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் நகைச் சுவை ஆளுமை தீர்க்கதரிசனம்" என்ற நூலை முன்னிறுத்தி..!)

தொகுப்பு : சண்முக சுப்ரமணியம்
வெளியீடு : முற்போக்கு கலை இலக்கிய மன்றம்

ஒரு சமூகம் புதிய எல்லைகளைத் தொட முனைகின்ற போதும், அல்லது அது அடிமைத் தளைகளிலிருந்து விடுபட முனைகின்றபோதும் சமூகம் தொடர்பான முன்னோடிகளை, அறிஞர்களை மீள் கண்டு பிடிப்புச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்கின்றது. அவ்வாறு சமூகம் வெளிப்படுத்திய முக்கிய ஆளுமைகளில் ஒருவர் தான் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த மு. கார்த்திகேசன் அவர்கள். இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆரம்பகால முதலே உரம் ஊட்டியவர்களில் முதன்மையானவர்.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் யாழ்ப்பாணத்தில் இடதுசாரி இயக்க வளர்ச்சிக்கு வழங்கிய அளவற்ற பங்களிப்பினை அனைவரும் அறிவோம். சிறந்த உரைவீச்சுத் திறனையும் மேடைப்பேச்சுகளில் வெளிப்படுத்துபவரான கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் தனிப்பட்ட கருத்தாடல்களின் போதும் ஆழமான பல விடயங்களை நகைச்சுவையுடன் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார். அந்த நகைச்சுவைகள் சிரித்துவிட்டு மறந்து விடக் கூடியவை அல்ல. தீர்க்க தரிசனமான பல உண்மைகளை வெளிப்படுத்த வல்லன; அவரது வீறுமிக்க ஆளுமையைக் காட்டுவனவாய் அமைவன. இவற்றினை இந்நூல் மிக எளிமையாகக் காட்டி நிற்பது சிறப்பான அம்சமாகும்.

நூலின் இறுதிப்பகுதியில் ஒரு சில வரிகளில் சொல்லப்பட்ட ஒரு சிறு விடயம் அடிப்படையான கோட்பாட்டுப் பிரச்சினை என்கிற வகையில் விமர்சனபூர்வமாக இங்கே எடுத்துக்காட்டுவது அவசியமானதாகின்றது. பொதுச் செயலாளராக தோழர் என். சண்முகதாசன் செயற்பட்டபோது ஏற்பட்ட பிளவில் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்களும் முக்கியத்துவம் மிக்கப் பாத்திரத்தை வகித்திருந்தார். அப்போது சண் மார்க்சியத்தை வறட்டுத்தனமாக்கியதோடு ஐக்கியப் பட வேண்டிய சக்திகளை எதிரிகளாக்கும் செயற்பாடுகளையும்

கொண்டிருந்தார். அக்காரணத்தால் சண் கட்சியிலிருந்து வெளியேறி மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் அணி உருவாக்கப்பட்டதையும் அதில் கம். கார்த்திகேசனின் பங்களிப்பையும் நூல் குறிப்பிடுகின்றது. உண்மையில் அந்த நிகழ்வு கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் ஆளுமைக்குக் களங்கம் ஏற்படுத்திய ஒன்று. தோழர் சண் வெளிநாடு சென்ற போது அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டதான முடிவை மத்திய கமிட்டி எடுத்து அறிவித்திருந்தது. உண்மையில் கம்யூனிட் கட்சியின் உயர்ந்த ஸ்தாபன வடிவம் மாநாடு ஆகும். மாநாடு ஒன்றில் விவாதிக்கப்பட்டு அந்த முடிவு செயற்பட வேண்டும். அவ்வாறின்றி ஸ்தாபன விரோதமாக மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தோழர் சண்ணின் வெளியேற்றத்தை ஏற்காதவர்களும் பின்னர் 1978 இல் சண்ணை விட்டு வெளியேறினார்கள்; 1978 இல் மாநாடொன்றின் மூலமாக அந்தப் பிளவு ஏற்பட்டது.

தோழர் சண் அத்தகைய தவறுகளுக்குரியவர் என்ற போதிலும் அவரது பங்களிப்புகளையும் கவனத்தில் கொள்வது அவசியம். கம். கார்த்திகேசனும் ஏனைய முன்னோடிகளும் அமைத்துத் தந்த பாதையில் தான் நாம் நடைபோடுகின்றோம். அத்தகைய ஆளுமைகள் அனைத்தையும் பெரும் மதிப்போடு நாம் வெளிக் கொணர்வது அவசியம். அவர்களிடையேயான விமர்சனத்திற்கான அம்சங்களை அதற்குரிய அளவோடு வெளிப்படுத்த வேண்டும். ஒரு ஆளுமையை முக்கியப்படுத்தும் போது மற்றொருவரை வில்லனாக்க வேண்டியதில்லை. அவர்கள் கட்டியெழுப்பிய பலங்களில் தொடர்வோம்; தவறுகளிலிருந்து கற்று கொள்வோம்.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவர்கள் நீண்டகாலமாக காலமாற்றங்களுக்கும் கருத்து மாற்றங்களுக்கும் முகம் கொடுத்து அவ்வக் காலங்களில் ஏற்பட்டு வந்த முரண்பாடுகளையும் போராட்டங்களையும் எதிர்கொண்ட விதம் தனித்துவமானது. அவர் ஆசிரியர், அதிபர், கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர், எழுத்தாளர் என பல்துறைசார்ந்த ஆளுமைகளை உடையவர். அவரது சிந்தனைகள், செயற்பாடுகள் யாவும் மனிதர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் ஆக்கபூர்வமான திசையில் இட்டுச் செல்வதாகவே அமைந்திருந்தது. அவர் அவ்வப்போது எழுதி வெளியிட்ட நகைச் சுவைகள் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளமை சிறப்பானதோர் அம்சமாகும். இந்நூல் குறித்த காய்தல், உவத்தல் அற்ற விமர்சனங்கள் தோன்ற வேண்டியது காலத்தின் தேவையாகும். காலத்தின் தேவையை நன்கறிந்து முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அறக்கட்டளை நிதியத்துடன் இணைந்து அழகான முறையில் இத்தொகுப்பினை வெளியிட்டுள்ளது.

ஆன்மாவை விலைபேசாத ஆளுமைகள்

வடபுலத்து இடதுசாரி இயக்க முன்னோடிகள் என்ற நூல் பற்றிய நோக்கு

போராடிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களின் உள்ளத்தை உணர்ந்து அவர்களின் துன்பதுயரங்களை வெவ்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் எதிர்த்துக் குரல் எழுப்பி வந்துள்ள எதிர் மரபு ஒன்று உலகின் பல பாகங்களிலும் இருப்பதைப் போல இலங்கையின் வடபுலத்துப் பாரம்பரியத்திலும், அத்தகைய மரபு ஒன்று வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். எதிர் - மரபு என்று நான் குறிப்பிடுவது மரபை எதிர்க்கும் ஒன்றையல்ல: மாறாக எதிர்த்து இயங்கும் மரபு ஒன்றினையேயாகும். இந்த போக்கினை வரித்து நிற்கின்ற வடபுலத்து இடதுசாரி இயக்கங்கள் காலம்காலமாக அடக்கியொடுக்கப்பட்டு அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த விவசாயிகள் தொழிலாளர்கள் அவ்வப்போது செய்த கலகங்கள், எழுச்சிகள் என்பவற்றுடன் இவ்வெதிர்ப்புணர்வை இணைக்க முற்பட்டமை இவர்களின் தனித்துவமான பண்பாகும்.

அவ்வகையில், உலகப் பொதுவுடமை இயக்கத்தின் ஒரு பகுதியே இலங்கையில் வடபுலத்தில் தோன்றிய பொதுவுடமை இயக்கங்களாகும். அவ்வியக்கங்கள் உலக பொதுவுடமை இயக்கத்தின் பொதுமையையும் இலங்கைப் பொதுவுடமை இயக்கத்தின் தனித்துவத்தையும் இணைத்து வளர்ந்த இடதுசாரி மரபொன்றை முன்னிறுத்துகின்றது. உலகளவில் இன்று இடதுசாரி இயக்கங்கள் பல நெருக்கடிகளையும் பின்னடைவையும் சந்தித்து வருகின்றன. இருப்பினும் ஆங்காங்கே திட்டுகளாகவும், தீவுகளாகவும் செயற்பட்டு வருகின்ற இடதுசாரி இயக்கங்கள், வரலாற்று அரங்கில் சமூக இயக்கம், சமூக முரண்பாடுகள், சமூக ஒடுக்கு முறைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் எவ்வாறு உள்ளன என்பதைத் தோலுரித்துக் காட்டிய அவ்வியக்கங்கள் அதற்கு எதிராகப் போராடவும் மக்களை வழிப்படுத்தியது. ஆனால் அவ்வியக்கங்ககள், அவை சார்ந்த ஆளுமைகள் பற்றிய ஆய்வுகள் மிகவும் சொற்ப அளவிலேயே வெளிவந்துள்ளன. குறிப்பாகத் தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் பொதுவுடமை இயக்க வரலாறு மறைக்கப்பட்ட வரலாறாகவே காணப்படுகின்றது. எழுதப்பட்ட அரசியல் வரலாறு என்பது ஆண்டபரம்பரையின் ஒரு வழிப்பாதை வரலாறாகவே வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு மாறாக, ஏகாதிபத்திய உலகமயமாக்கல், நாடுகளையும் மக்களையும் தமது கொடிய மூலதனச் சுரண்டல் மூலம் சூறையாடி வருகின்றது. இந்தப் பின்னணியில் பொதுவுடமை இயக்கத்தில் இடம்பெற்ற தவறுகள் தோல்விகளை மட்டுமே பிரதானப்படுத்தி அவ்வியக்கதை தாக்கவும் தகர்க்கவும் முற்பட்படுகின்றமை தற்செயல் நிகழ்ச்சியல்ல. எனவே நமது வரலாற்றை மீட்டெடுப்பதற்கும் அதனூடே நமது இருப்பு குறித்து சிந்திப்பதற்குமான வரலாற்றுத் தேவையிலிருந்து இன்றைய சமூகமாற்றச் செயற்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள் செயற்பட வேண்டியுள்ளது. இதுவே இன்றைய பொதுவுடமை இயக்கத்தின் முதன்மையான பணியாகவுள்ளது. தற்காலத்தில் பொதுவுடமை இயக்கங்கள் பற்றி வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களை நோக்கும் பொழுது மொத்தத்தில் ஏமாற்றமே எழுகின்றது. ஏலவே வெளிவந்துள்ள நூல்களை நோக்குகின்ற போதும் கூட ஆழமான முயற்சிகள் அருந்தலாகவே உள்ளன.

இவ்வாறானதோர் சூழலில் வடபுலத்து இடதுசாரிகள் சிலரைத் தேர்ந்தெடுத்து அதன் பின்னணியில் பொதுவுடமை இயக்கங்களின் பங்களிப்பு, இயங்கிய மனிதர்கள், அவர்களின் அனுபவங்கள் என்பனவற்றைப் பதிவாக்கும் சீரிய முயற்சிகள் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதனைக் காணலாம். மார்க்சிய முற்போக்கு அறிஞர்களே இத்தகைய பதிவுகளை வெளிக்கொணர்ந்துள்ளனர் என்பது குறித்துக் காட்டத்தக்கதோர் விடயமாகும். இது விடயத்தில் இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்தினர் - நீர்வை பொன்னையன் அவர்களின் முன்முயற்சியால் "வடபுலத்து இடதுசாரி முன்னோடிகள்" என்ற தலைப்பில் நூலொன்றினை வெளிக் கொணர்ந்துள்ளனர். கூடவே நூலின் சமர்ப்பணமும் இலங்கையில் பொதுவுடமை இயக்கத்தின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு செயற்பட்ட இடதுசாரி தோழர்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை இந்நூல் தொகுப்பாளர்களின் தன்முனைப்பற்ற நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்றது.

நூலின் உள்ளே பன்னிரு இடதுசாரி முன்னோடிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை தனியொரு ஆசிரியரால் எழுதப்படாமல் அவ்வாளுமைகள் பற்றி வெவ்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக காணப்படுகின்றது. முறையே 'வடபுலத்தில்முதல்கம்யூனிசவிதையை ஊன்றியதோழர்மு.கார்த்திகேசன்'

(சண்முகம் சுப்பிரமணியம்), 'அமரர் ஹன்றி பேரின்பநாயகமும் விடுதலைக் கருத்தியலும்' (போராசிரியர் சபா ஜெயராசா), 'சிறந்த சிந்தனையாளர் தீவிர செயற்பாட்டாளர் தோழர் அரியம்' (நீர்வை பொன்னையன்), 'வட இலங்கை இடதுசாரி முன்னோடிகளில் எம்.சி. சுப்பிரமணியம்' (வீ. சின்னத்தம்பி), 'ஒரு சிறந்த கம்யூனிஸ்ட் தோழர் சீனிவாசம்' (நீர்வை பொன்னையன்), 'வடபுலத்து இடதுசாரி இயக்க வளர்ச்சியில் முனனோடித் தோழர் இராமசாமி ஐயரின் பங்கு' (நீர்வை பொன்னையன்), 'சிறந்த கல்விமானும் கம்யூனிச சிந்தனையாளருமான ஆசான் எஸ். கே. கந்தையா' (த.ந. பஞ்சாட்சரம், நீர்வை பொன்னையன்), 'தோழர் ஆர். ஆர். பூபாலசிங்கம்' (சிவா சுப்பிரமணியம்), 'தொழிலாளி வர்க்கத் தோழர் ஜனாப் எம். எஸ். ஷேக் அப்துல் காதர்' (எம். ஜி. பசீர்), 'வடக்கு பெற்றெடுத்த தொழிலாளர் தோழன் 'ஜெயம்' தர்மகுலசிங்கம்' (சி. தருமராசன்), 'பொன். கந்தையா பற்றி என் நினைவுகளிற் சில....' (எம். குமாரசுவாமி) என இவ்வாளுமைகள் குறித்தும் அவர்களது சமூகப் பங்களிப்பு குறித்தும் காத்திரமான தகவல்கள் வெளிக் கொணரப்படுகின்றது.

இவ்வாளுமைகளில் வெளிப்படும் மனிதாபிமானமானது, மனிதனுக்கு மதிப்பு தரும் மனிதாபிமானமாகும். உழைக்கும் வர்க்கத்தை நேசிக்கும் மனிதாபிமானம்: அது முதலாளித்துவ மனிதாபிமானத்திற்கு எதிரானது. இதனால் தான் அந்த மனிதாபிமானத்தில் மனிதரது சுதந்திரம், நல்வாழ்வு, இன்பம், மனிதனின் சர்வாம்ச வளர்ச்சி என்பன அதன் அடிநாதமாக விளங்குகின்றது. முற்போக்குக் கலை .இலக்கிய மன்றத்தின் மேற்படி நூல் வீறுமிக்க அந்தக் காலத்தையும் அதன் வெளிப்பாடான ஆளுமைகளாக விளங்கிய இடதுசாரி இயக்க முன்னோடிகளையும் துலக்கமாகக் காட்டி நிற்கிறது. இவர்களின் வாழ்வும் வகிபாகமும் நூல் முழுமையும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாளுமைகள் மக்கள் போராட்டக் களங்களோடு ஊடாடி, மக்கள் சக்தி விடுதலைத் திசைமார்க்கத்தில் வீறுட்டு எழுச்சிகொள்ள வழிப்படுத்தும் கொமியூனிஸ்ட் கட்சியுடன் உறவுபூண்டு, தம் அறிவை நடைமுறை அனுபவங்கள் வாயிலாகப் பட்டைத் தீட்டி செழுமைப்படுத்தி முன்னேறியவர்கள்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றிய தெளிவுணர்வு அவசியமாகும். சமூகப் பிரச்சினைகளைத் தனியே வர்க்கபேதம் சார்ந்து மட்டும் பார்க்கும் ஒருமுனைவாதத் தவறுக்கு ஆட்படாது தேசிய-சாதி பேதங்கள் சார்ந்து அணுகித் தீர்வுக்கானப் போராட்டங்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டையும் இவர்கள் கொண்டிருந்தமை தனித்துவமான

அம்சமாகும். வர்க்கப் பிளவடைந்து உருவான ஐரோப்பியச் சமூக அமைப்புப் போன்று நமது இனக்குழு மரபு சமூகவமைப்புக் காணப்படவில்லை. "சாதி என்பது எந்த சமயத்தின் கண்டு பிடிப்போ, சதியோ, பாவச் செயலோ அல்ல. எமக்கான ஏற்றத் தாழ்வுச் சமூக உருவாக்கம் இனமரபுக்குழுக்கள் வர்க்கங்களாய் பிளவடைந்து ஏற்படவில்லை. விவசாய வாய்ப்பைப் பெற்ற மருதத்திணைக்குரியதான இனமரபுக் குழு ஆளும் சாதியாகி, நிலத்தோடுப் பிணைக்கப்பட்ட தீண்டாதோர் எனும் ஒடுக்கப்பட்ட சாதிகளாயும், கைத்தொழில் சாதிகளாய் இடைச்சாதிகளாக்கப்படுதலாயும் ஏனைய திணைகளுக்குரிய இனமரபுக்குழுக்களை மாற்றிய சாதி வாழ்வுமுறை எமக்கான பிரத்தியேகத் தன்மை உடையது. அத்தகைய புதிய வாழ்க்கைக் கோலமாகிய சாதி முறைமைக்கான கருத்தியலை வடிவமைக்கும் சாதியாக பிராமணர் உருவாகினரேயன்றி பிராமணச் சதியால் சாதி வாழ்முறை தோன்றி விடவில்லை. கருத்து வாழ்க்கை கோலத்தைக் கட்டமைப்பதற்கு முன்னதாக, வாழ்வுமுறை வெளிப்பாடாகவே கருத்து பிறக்கிறது". என்பார் ந. இரவீந்திரன் (ஒரு புலமைத்துவ ஆளுமையாக மட்டுமல்ல: இயக்கச் சக்தியாகவும் விளங்கியவர் பேராசிரியர் க. கைலாசபதி, இனியொரு. கொம்.05-05-2012).

இந்தப் பின்னணியில் உருவான சாதிய அமைப்பானது எமது சமுதாய அமைப்பில் பல்வேறுப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கும் சுரண்டலுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளது. ஏகாதிபத்தியம் எவ்வாறு தேசங்களை ஒடுக்கி உபரியை அபகரிக்கின்றதோ அவ்வாறே இனக்குழு சமுதாய அமைப்பில் அடக்கப்பட்ட சாதியினரை ஆதிக்கசாதியினர் ஒடுக்கி சுரண்டி வருகின்றனர். இலங்கையின் வடபுலத்தில் சாதிய அமைப்பு என்பது தமது சூழலுக்கு ஏற்ப தனித்துவத் தன்மைக் கொண்டதாக விளங்குகின்றது என்பதை பல ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. எடுத்துக் காட்டாக இந்தியாவில் பிராமணர்களைப் போன்று இலங்கையில் சைவ வேளாள சாதியினரே பொருளாதார ஆதிக்கம் மிக்கவர்களாக காணப்பட்டனர். பழமைக்கும் வைதீகத்திற்கும் முதன்மை கொடுக்கும் நிலவுடமை சிந்தனையால் இறுக்கம்பெற்ற வடபுலத்து சமூகவமைப்பில் ஒடுக்கு முறையின் வடிவமாக சாதியமைப்பு காணப்பட்டமையால் வடபுலத்து மார்க்சியர்கள் இவ்வொடுக்கு முறைக்கு எதிராகப் போராடினர். பாட்டாளி வர்க்க புரட்சியின் ஊடாக மலரும் சோசலிச சமூகத்தில் இரண்டாம் பட்ச முரண்பாடுகளான தேசிய, இன, மத, மொழி, பாலின, சாதி முரண்பாடுகள் எனக் கனவுலகில் உலாவிய வறட்டு மார்க்சியர்களின் கூற்று வக்கற்ற வெறும் புலம்பல்களுக்கே இட்டுசென்றது. அத்தகைய

வறட்டுத் தத்துவத்திலிருந்து விடுபட்டு வடபுலத்து மார்க்சியர்கள் அப்போராட்டத்தை வெறும் குறுங்குழு வாதமாக முடக்கி விடாமல் சகல ஜனநாயக சக்திகளையும் அப்போராட்டத்துடன் இணைத்தனர்.

இவ்வகையில் தோன்றிய சிறுபாண்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் என்பன ஆதிக்கச் சாதியினரை எதிரியாகக் கருதாமல் சுரண்டல் அமைப்புக்கும் சாதிய முறைக்கும் எதிராகவே போராட முனைந்தனர். இப்போராட்டத்தில் ஜனநாயக நல்லெண்ணம் கொண்ட ஆதிக்கச் சாதியினர் மட்டுமல்ல, தேசிய ஜனநாயகச் சக்திகளும் (சிங்கள முஸ்லிம், தோழர்கள் உட்பட பௌத்த பிக்குகளும்) இணைந்திருந்தனர். இவ்வம்சம் இலங்கையில் தோன்றிய சாதியத்துக்கு எதிரான போராட்டத்தின் தனித்துவமான அம்சமாகும். இருப்பினும் அமைப்புச் சார்ந்த போராட்டங்கள் முக்கியப்படுத்தப்பட்டளவு சாதியப் போராட்டத்தை மார்க்சிய நிலை நின்று நோக்கும் கோட்பாட்டுருவாக்கம் நிகழ்ந்ததா என்பது மிக முக்கியமான கேள்வியே. சிறுபாண்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை வெகுசன இயக்கம் என்பனவற்றினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் வாயிலாக பெற்ற அனுபவங்களையும் இதுவரையான இந்திய அனுபவங்களையும், குறிப்பாக பெரியார், அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன், அயோத்திதாச பண்டிதர் இன்னும் இதுபோன்றச் சிந்தனையாளர்களின், கோட்பாடு நடைமுறை என்பனவற்றையும் மார்க்சிய நோக்கில் விமர்சனத்திற்குள்ளாக்கி அதனடிப்படையில் மக்கள் விடுதலைக்கான கோட்பாட்டுருவாக்கத்தை அதன் வழியான நடைமுறையை நமதாக்கிக் கொள்வது காலத்தின தேவையாகும்.

இதற்கு மாறாக, இந்தியாவில் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை மார்க்சியர்கள் முன்னெடுத்தபோதும், அப்போராட்டங்கள் இலங்கையில் மார்க்சியர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் போன்று தத்துவத் தெளிவுடனோ அல்லது நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளுடனோ (எடுத்துக்காட்டாக ஆலய பிரவேசப் போராட்டம், தேனீர்க் கடை பிரவேசப் போராட்டம் என்பனவற்றைக் குறிப்பிடலாம்) தொடர்புபட்டதாக இருக்கவில்லை. இத்தகைய தவறுகளின் காரணமாகச் சாதிப்பிரச்சினையைத் தலித்தியவாதப் பார்வையில் அணுகவும் தீர்க்கவும் இயலும் என்ற எத்தனிப்புகள் முன்னெடுக்கப்பட்டு தோற்றுவிட்டமையை தலித் சிந்தனையாளர்கள் கூட இன்று ஏற்கும் நிலை உருவாகியுள்ளது. மறுபுறம், வர்க்கப்

போராட்டத்தை முன்னெடுத்தால் மட்டும் போதும் - சாதிப்பிரச்சினைத் தானே தீரும். சாதியத்துக்கு எதிரான விஷேடித்த போராட்டங்கள் வேண்டியதில்லை என்று இந்தியாவில் மார்க்சியர்கள் முன்னெடுத்த வறட்டுவாத நிலைப்பாட்டிலிருந்து மீண்டு, இன்று மார்க்சியர்கள் சாதிமுறை குறித்த ஆய்வுகளிலும் செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளனர் (ந. இரவீந்திரன் மே.கு.நூ).

தமிழகத்தில் தலித் இயக்கங்கள் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை மார்க்சிய நோக்கில் இனம் காணத் தவறியமையினாலேயே அவை தனிமைப்படுத்தப்பட்ட போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு, உழைக்கும் மக்களின் நலன்களுக்கு எதிராகத் தோன்றிய தலித்தியம், பின்நவீனத்துவம் முதலிய எதிர்ப் புரட்சிகரமான கோட்பாடுகளுக்குள் முடங்க வேண்டியதாகியது. இவர்கள் மார்சியத்தை இந்தியச் சூழலுக்கு ஏற்ப பிரயோகிக்கத் தவறியதன் விளைவாக மார்சியம் காலவாதியாகிவிட்டது எனவும் அத்தத்துவம் நமது சூழலுக்கான பிரச்சினையை அணுகுவதில் போதாமையாக உள்ளது என மார்க்சியத்திற்கு எதிரான சுலோகங்கள் பின்நவீனத்துவாதிகளால் தூக்கிப் பிடிக்கப்படுகின்றது. முன்னோர்வழிச் சுலோகங்களைப் பாராயணம் செய்தும் உச்சாடனம் செய்தும்வந்த மார்சியர்கள் விட்ட தவறையும் ரஷ்யா போன்ற சோசலிச நாடுகளின் சிதைவையும் பிரதானப்படுத்தி மார்க்சியத்தைத் தாக்கவும் தகர்க்கவும் முற்படுகின்ற மேதாவிகள் அமெரிக்காவின் மேலாண்மை சார்ந்த நடவடிக்கைளையும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளை பற்றியும் கவலைகொள்ளாதிருப்பது இவர்களின் அரசியல் நயவஞ்சகத்தைச் சிறப்பாகவே குறித்துக் காட்டுகின்றது. இந்த தத்துவார்த்த போராட்டத்தில் தமது தத்துவார்த்த குழறுபடிகளின் காரணமாக ஜனநாயகச் சக்திகளும் முடங்கியமை இன்னொரு துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இவ்வகையில் நோக்குகின்ற போது, இலங்கையில் வடபுலத்து மார்க்சியர்கள் சாதியத்திற்கு எதிரான போராட்டம் தொடர்பில் முன் வைத்த தத்துவம் நடைமுறை தெளிவானதோர் பார்வையைக் கொண்டிருந்தது. இவ்வம்சம் இந்நூலில் சிறப்பாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்நூலின் தொகுப்பில் கவனத்தில் கொள்ளப்படாத ஆளுமைகள் பற்றியும் கூற வேண்டியது அவசியமாகும். இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றில் தொழிலாளி வர்க்க அரசியலை முன்னெடுத்த தோழர் சண்முகதாசன் வலதுசாரி சந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிராகவும், நவீன திரிபுவாதத்திற்கு எதிராகவும் விட்டுக்

கொடுக்காததோர் தத்துவப் போராட்டத்தை முன்னெடுத்தவர். காலப்போக்கில் தோழர் சண்முகதாசன் வெளிப்பட்ட அகச்சார்பான தவறுகளும் அவற்றின் விளைவுகளும் இடதுசாரி இயக்கத்தைப் பல பின்னடைவுகளுக்கு இட்டுச் சென்றது எனும் விடயம் சுயவிமர்சன அடிப்படையில் நோக்கவேண்டியுள்ளது. அவ்வாறே பேரினவாதம் முனைப்புற்றிருந்த காலத்தில் அவர் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சி அதிகமான சிங்களத் தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தமையினால் சிங்கள மக்களின் உணர்வை நோகடிக்கக் கூடாது என்ற வகையில் பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடாதது மாத்திரமன்றி, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமல்ல என்ற நிலைப்பாட்டிற்கே சென்றார். இந்தப் பின்னணியில் இவர் பொறுத்து காய்த்தல் உவத்தல் அற்ற ஆய்வுகள் வெளிவரவேண்டியது காலத்தின் தேவையாகும். அவர் பொறுத்து எவ்வித தகவல்களும் இந்நூலில் உள்ளடக்கப்படாமை பெரும் குறைபாடாகவே உள்ளது.

சிறுபாண்மை மகாசபையின் ஊடாகச் சாதியெதிர்ப்புத் தொடர்பான போராட்டங்களையும் நடைமுறைசார்ந்த செயற்பாடுகளையும் முன்னெடுத்ததில் எம்.சி.சுப்ரமணியத்திற்கு முக்கிய இடமுண்டு என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. இருப்பினும் அவர் 1960களில் இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட தத்துவார்த்தப் பிளவில் திரிபுவாதமாக திகழ்ந்த மொஸ்கோ சார்புக்குள் புதைந்து பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் மூழ்கியது துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இவ்விடயம் இந்நூலிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அன்றைய சூழலின் வீறுகொண்ட எழுச்சியுடன் செயற்பட்ட இடதுசாரிகள் சீனச் சார்பை பின்பற்றியதுடன், தொடர்ந்தும் புரட்சிகரப் பாதையில் தமது போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். இந்தப் பின்னணியில் உருவாகிய தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கப் போராட்டமானது சகலவிதமான தேசிய ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டியிருந்தது. இப்போராட்டம் சீனச்சார்பு கொம்யூனிட்ஸ்டுகளாலேயே முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்திற்கு வழிகாட்டி நின்ற முக்கியமான ஆளுமைகளில் ஒருவர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம். சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜன எழுச்சியைத் தொடர்ந்து, சட்டத்திற்குட்பட்டதும் சட்டத்திற்கட்படாதுமான போராட்டத் தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து நிதானமான தலைமைத்துவத்தை வழங்கியதில் இத்தோழருக்கு முக்கிய பங்குண்டு. எமது மண்ணுக்கும், வாழ்வுக்கும் மாறான கோட்பாடுகளை முன்வைத்து - மார்க்சிய அணிகள்,

முன்னோடிகளது வசனங்களை, கோஷங்களை முன் வைத்து முன்னெடுக்கப்பட்ட சமூகமாற்றச் செயற்பாடுகள் மலட்டுத்தனமாக முடங்கிப்போனதை வரலாறு எண்பித்திருக்கின்றது. இலங்கையின் இடதுசாரிகள் அவ்வாறின்றி எமது பிரயோகச் சூழலுக்கு அமைவாக மார்க்சியத்தை வளத்தெடுக்க முனைந்ததன் விளைவே தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்க போராட்டமாகும். அரசியல் அரங்கில் இந்த முரண்பாட்டை விளங்கிக் கொண்டு அமைப்பாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டமை இவரது முக்கிய பங்களிப்பாகும். இதற்கப்பால் தொழிற்சங்கப் போராட்டங்கள், விவாசய இயக்கங்கள் நடாத்திய போராட்டங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் என பலமுனைப்பட்டப் போராட்டங்களிலும் தம்மை அர்பணித்துக்கொண்ட நேர்மையான இடதுசாரியாக வாழ்ந்தவர். அவர் பொறுத்து வெளிவந்த நினைவு மலரைத் தவிர வேறு ஆய்வுகள் மதிப்பீடுகள் வெளிவந்தவையாகத் தெரியவில்லை. ஒருவகையில் அவர் மறைக்கப்பட்ட ஆளுமையாகவே காணப்படுகின்றார். இந்நூலிலும் அக்குறைப்பாடு காணப்படுகின்றது.

1960களில் வடபகுதியில் சாதியத்திற்கு எதிரான போராட்டம் முனைப்புற்றுக் காணப்பட்டதைப் போல 1970களில் தமிழின ஒடுக்க முறை முனைப்புற்றுக் காணப்பட்டது. இந்நாட்டின் அதிகார வர்க்கமும் பேரினவாதிகளும் ஆரம்ப காலம் முதலாகவே தமிழர்களின் இனத்தனித்துவத்தைச் சிதைக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தனர். இக்காலப்பகுதியில் வட-கிழக்குச் சார்ந்த அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் இலங்கைத் தேசியம் குறித்து கவனம் செலுத்தியிருந்தமையினால்பேரினவாதம்பற்றிச்சிந்திக்கத்தவறிவிட்டனர். சேர்.பொன். அருணாச்சலம் போன்றோர் பேரினவாதத்தை அடையாளம் கண்டிருந்த போதும் அதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்னர் அவரின் மறைவு துரதிஷ்டவசமானதொன்றாகி விடுகின்றது. பின்வந்த தலைவர்கள் அதனைக் கவனத்திலே எடுக்கவில்லை. உயர் மத்திய தர வர்க்க வாழ்க்கை முறைகள், அரசியல் சிந்தனைகள், அரச சலுகைகள் காரணமாக பேரினவாதம் குறித்து அவர்கள் சிந்திக்கத் தவறிவிட்டனர்.

1950களில் ஏகாதிபத்திய சார்பு அரசியல் சக்திகள் தூக்கியெறியப்பட்டு தேசிய முதலாளித்துவச் சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த காலமாகும். தேசிய முதலாளித்துவம் அரசியல் அரங்கில் பிரவேசிக்கின்ற போது அது தன்னகத்தே சில முற்போக்கான பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதை வரலாறு எமக்கு உணர்த்தியிருக்கின்றது. அந்நிய முதலீட்டின் பிடிப்பும் அதன் தாக்கமும் தமக்கு பாதகமாக

இருப்பதனைத் தேசிய முதலாளிகள் இனங்கண்டனர். இதற்குமாறாக தேசிய முதலாளித்துவம் தத்தமது நாட்டில் கைத்தொழில் துறையினையும் வர்த்தக அபிவிருத்தியினையும் மேற்கொண்டது. இது தமது நாட்டினை அபிவிருத்தி செய்வதாக அமைந்திருந்தது. தமது நாட்டினைக் காலணித்துவ ஆட்சிக்குட்படுத்தி அதனூடாக நாட்டையும் நாட்டு மக்களையும் கொள்ளையடித்துக் கொண்டிருந்த குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிராக அவ்வுணர்வு இருந்த அதேசமயம், நவீன கொள்ளைக்காரர்களான ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் செயற்பட்டமை அதன் பிரதானமான அம்சமாகும். இதன் தாக்கத்தை நாம் இலங்கையிலும் காணக்கூடியதாக இருந்தது. இருப்பினும் அதன் வர்க்க நலன் காரணமாக அது வெகு விரைவிலேயே ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து மக்கள் விரோத செயற்பாடுகளிலும் ஈடுபடத் தொடங்கியது. அதன் ஒரு அம்சமாகவே இனவாதமும் அது தொடர்பான சிந்தனைகளும் வளரத் தொடங்கின.

இந்த முரண்பாட்டை இலங்கையில் இடதுசாரிகள் சரியாக அடையாளம் கண்டிருப்பார்களாயின் சாதிய எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து தனிமைப்பட்டிருந்த பிற்போக்குச் சக்திகளை முறியடித்தவாறு இடதுசாரிகள் தமிழ்த் தேசியத்துடன் இணைந்து ஆரோக்கியமான வரலாறு படைத்திருக்க முடியும். துரதிஷ்டவசமாக இடதுசாரிகள் இதனைக் கவனத்திலெடுக்க தவறியமையினால் தமிழ்த் தேசிய இனவொடுக்குமுறையை அரசியல் அரங்கில் முற்போக்காக இனங்கண்டிருந்த தமிழரசுக் கட்சியினர் தமது வர்க்க நலன் காரணமாக பிற்போக்கு சக்திகளின் கூடாரமாகி அப்போராட்டத்தைத் தவறான வழியில் இட்டுச் செல்வதற்குக் காரணமாக அமைந்தனர். " யாழ்பாணத்தில் அறுபதுகளின் பிற்கூறில் எரியும் அரசியல் - சமூகக் கொந்தளிப்பாக வெளிப்பட்டுத் தமிழர் வரலாற்றிலும் தமிழிலக்கியச் செல்நெறியிலும் புதிய வளர்ச்சிகளை எட்ட உதவிய போராட்டம் தமிழ்த் தேசியத்தின் முற்போக்குக் குணாம்சமாக அமைந்ததோடு இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் அரவணைப்புக்கு உதவுவதாயும் இருந்துள்ளது. அதற்கு எதிராக சென்ற வலதுசாரிப் பிற்போக்குத் தமிழ்த் தேசியம் தனக்கும் பெரும் கேடாக அமைந்ததுடன் இலங்கைத் தேசியத்தின் இறைமையும் சுயாதிபத்தியமும் அந்நிய சக்திகளின் காலடியில் மிதிபடவும் இடமேற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. மீண்டும் இலங்கைத் தேசியம் தனது இறைமையை மீட்டெடுத்து சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து - அவற்றோடு ஒன்றுப்பட்டு மேலாதிக்கச் சக்திகளுக்கு எதிராய்ப் போராடியாக வேண்டும்" (இரவீந்திரன்.ந.2011, முற்போக்கு இலக்கிய எழுச்சி, பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, ப. 145)

இந்திய தேசியப் போராட்டத்தில் காலணியாதிக்கத்திற்கு எதிரான தேசியப் போராட்டமும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமும் எவ்வாறு பிளவுபட்ட தேசியமாக இருந்துள்ளது என்பதை ஆனந்த் டெல்டும்ப்டே போன்ற ஆராய்ச்சியாளர்கள் தமது ஆய்வுகளில் குறித்துக் காட்டியுள்ளனர். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தையும் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தையும் அரசியல் பண்பாட்டுத்தளத்தில் முன்வைத்தவர் பாரதி. அதனால் தான் தற்கால விவாதத் தளத்தில் முக்கிய கோட்பாடான இரட்டைத் தேசியத்தின் முன்னோடியாக பாரதி திகழ்கின்றார். இந்தப் பின்புலத்தில் இலங்கையின் அரசியல் போக்கினை நோக்குகின்ற போது சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான இடதுசாரிகளின் போராட்டமும் தமிழின ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழரசுக் கட்சியினரின் தமிழ்த் தேசியப் போராட்டமும் பிளவுபட்ட தேசியமாக இருந்துள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய அனுபவங்களிலிருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் கற்று எமது சூழலுக்குப் பொருத்தமான மார்க்சிய பிரயோகம் சார்ந்த கோட்பாட்டை உருவாக்க வேண்டியுள்ளது. "இரட்டைத் தேசியம்" என்ற கோட்பாடு எமது சூழலுக்கான மார்க்சிய பிரயோகமே. இக் கோட்பாட்டைத் தற்காலத்தில் அறிமுகப்படுத்தி அதனை விருத்தி செய்தவர் ந.இரவீந்திரன் (அவருடைய இரட்டைத்தேசியம் பற்றிய கட்டுரைகளை வாசிப்பதால் இது பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெறலாம்). இந்தப் பின்னணியிலேயே இலங்கையின் இடதுசாரிகள் தமது கோட்பாட்டை உருவாக்கிச் செயற்படவேண்டியுள்ளது.

இறுதியாக ஒன்றைக் கூறி வைத்தல் அவசியமான ஒன்றாகும். மனித சமூகத்தின் வளர்ச்சியைத் தூண்டும் சக்தியாக அதிகாரத்திற்கு எதிராகப் போராடும் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே சமூகத்தை மாற்றியமைக்க முடியும். தமது அடிமை முறையிலிருந்து விடுபட்டுப் பொருளாதார ரீதியாகவும் ஆத்மார்த்த ரீதியாகவும் சுதந்திரப் பிரஜையாக வாழ முடியும். இந்த விடுதலையை அடைவதற்குப் பொது மக்கள் தங்கள் நலன்சார்ந்த கட்சியை அமைத்துக்கொள்ள வேண்டும். புரட்சிகர சித்தாந்தம் இன்றி புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. அவ்வகையில் மிகவும் முன்னேறிய சித்தாந்தத்தையும் அது பெற்றிருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு இடதுசாரி முன்னோடிகளுக்குப் பின்னாலும் இடதுசாரி அமைப்பொன்றிருந்திருக்கின்றது. கட்சியமைப்பில் அங்கம் வகிக்காத இடதுசாரி உணர்வுகொண்ட செயற்பாட்டாளர்களும் ஏதோ ஒருவகையிலும் அளவிலும் அவ்வமைப்பின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவே காணப்படுவர் என்பது வரலாற்று நியதி. பொதுவுடமை இயக்கங்கள் சகலவிதமான ஜனநாயகச் சக்திகளையும்

ஐக்கியப்படுத்திக்கொண்டு தமது இயக்கம் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில் இவ்வமைப்புகள் மற்றும் ஆளுமைகளின் வெற்றிகள் மாத்திரமல்ல தோல்விகள் கூட அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமையும். இந்நூலில் அடங்கியுள்ள பன்னிரெண்டு இடதுசாரி இயக்க முன்னோடிகளின் அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கையிலும் அரசியற்-சமூக ஈடுபாடுகளிலும் இதுவரை அறியப்படாதிருந்த பல உண்மைகளை வெளிக்கொணர்வதாக சில பதிவுகளும், - கூடவே அவர்கள் பற்றிய சில விமர்சனங்களை முன் வைப்பதாக சில பதிவுகளும் காணப்படுகின்றன. இத்தகைய விளக்கங்களுடே தொழிற்பட்டு நிற்கும் கருத்து நிலைகளை நோக்கும்போது அவற்றில் சில பதிவுகள் அவ்வாளுமைகளை கொண்டு இடதுசாரி இயக்கப் பாரம்பரியத்தை நிலைநிறுத்த முனைகின்றவையாகவும் வேறுசில புரட்சிகரமான சமூகமாற்றத்திற்குற்காக செயற்படக் கூடிய இடதுசாரி கட்சியமைப்பை உருவாக்குவதற்கான எத்தனிப்பாகவும் உள்ளன.

இத்தகையதோர் மானுட அணியில் கால் பதித்து புதியதோர் சமுதாயத்தை நோக்கி நகர்வதே இன்று வடபுலத்து இடசாரிகள் சார்ந்து எழுகின்ற ஆய்வுகளின் தேவையாகும். இடதுசாரி இயக்க முன்னோடிகள் பற்றிய காய்த்தல் உவத்தல் அற்ற ஆய்வுகள் வெளிவரவேண்டியுள்ளது. ஆழமான நுட்பமான மார்க்சிய ஆய்வுகளின் ஊடாகவே அத்தகைய ஆய்வுகள் சாத்தியமாகும். இந்நூல் இடதுசாரி இயக்க முன்னோடிகள் ஆய்வில் மாத்திரமல்லாது இடதுசாரி இயக்க வரலாற்றாய்வுப் பிரச்சினையொன்று தொடர்பாகவும் முக்கியத்துவமுடையது. பொதுவுடமைஇயக்கம்சார்ந்தஅமைப்பாக்கப்பணிகளைமுன்னெடுத்துச் செல்கின்றவர்களுக்கும் தத்துவார்த்தத் தளத்தில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை முன்னெடுப்பதற்கும் இது பற்றிய முழுமையான தேடுதல் அவசியமானதாகும். இப்பணி மிகவும் சிக்கலானதும் கடினமானதும் ஆகும். இப்பணிக்காக அர்ப்பணித்துக்கொண்ட ஆய்வாளர்கள், நிதி, கால அவகாசம் என்பன போக மனிதர்களுக்கு இயல்பாக இருக்கக் கூடிய மறதியுணர்வும் கூட இப்பணியினைச் சிக்கலாக்கியுள்ளது. அந்தவகையில் வட புலத்து இடதுசாரிகள் பற்றிய தேடலையும் ஆய்வினையும் வெளிக்கொணர்வதற்கான முதலடியாகவும் இந்நூலைக் கொள்ளலாம்.

இலங்கையில் உலகமயமாக்கலின் ஊடுருவலும் தேசிய இனப் பிரச்சினையும் பற்றி கைலாசபதி

கைலாசபதி பற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுகள், அறிமுகக் குறிப்புகள், மதிப்பீடுகள் என்பனவற்றை ஒப்பு நோக்குகின்ற போது ஒரு உண்மை புலனாகாமல் போகாது. கைலாசபதியின் தமிழியல் துறைசார்ந்த பங்களிப்புகள் வெளிக்கொணரப்பட்ட அளவிற்கு அவரது அரசியல் துறைசார்ந்த பங்களிப்புகள் வெளிக் கொணரப்படவில்லை என்றே கூறவேண்டும். அவர் செம்பதாகை, றெட்பனர் முதலிய பத்திரிகையில் சர்வதேச விவகாரங்களை ஒரு பக்கத்தில் தொடர்ச்சியாக எழுதி வந்தது போன்றே வேறொரு பக்கத்தில் இலங்கை விவகாரத்தை எழுதி வந்திருக்கின்றார். அன்னாரின் சர்வதேச அரசியல் விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'சர்வதேச அரசியல் நிகழ்வுகள் பற்றி 1979-1982'(வெளியீடு: புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்) வெளிவந்தது. இதுபோன்று இலங்கை அரசியல் விவகாரங்கள் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்படாமை துரதிஷ்டமானதொன்றே. இன்று அன்னாரின் சர்வதேச விவகாரங்கள் பற்றி அறிய முடிந்ததளவிற்கு உள்ளூர் விவகாரங்கள் பற்றி அறிய முடியாதுள்ளது. குறிப்பாக அவரது தமிழத் தேசியம் பற்றிய பார்வையை அறிய முடியாத நிலையில் கைலாசபதி முற்று முழுதாக தமிழத் தேசியத்தை நிராகரித்தார் என்ற தவறான நிலைப்பாடு தொடர்வதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. எனவே அக்கட்டுரைகள் யாவும் தொகுக்கப்பட்டு வெளி வர வேண்டியது காலத்தின் தேவையாகும். அவை வெளிவராத வரையில் இது தொடர்பிலான மயக்க நிலை நீடிக்கவே செய்யும். அத் தொகுப்பு முயற்சி கைலாசபதியை மதிப்பிடுவதற்காக மட்டுமன்று, தமிழ்த் தேசியத்தின் இரு வழிப்பாதைகள் இடையான மோதுகையின் தோற்றமும், எழுச்சியும்-வீழ்ச்சியும் பற்றி அறிந்து கொள்ளவும் அது அவசியமாகும்.

இக்கட்டுரையில் கவனத்தில் கொள்ளப்படும் கட்டுரைகள் எவையும் 1979-1982 காலப்பகுதியில் செம்பதாகையில் வந்தவையாகும். றெட்பனரில் வெளிவந்த கட்டுரைகள் யாவும் எனது பார்வைக்குக் கிடைக்காமையால் அவைப்பற்றி எவ்வித கருத்தும் கூற முடியாதுள்ளது.

இனிவரும் காலங்களில் அவை தொடர்பிலும் கவனம் செலுத்துவதன் மூலம் இத்துறையில் காத்திரமான ஆய்வுகளை வெளிக் கொணர முடியும் என்பதையும் இவ்விடத்தில் எடுத்துக் கூறுவது அவசியமாகும்.

இலங்கையில் 1956 ஆம் ஆண்டு திரு. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற்றதிலிருந்து தேசிய முதலாளித்துவம் இந்நாட்டில் நிலைகொள்ளத் தொடங்கியது. இவ்வம்சம் இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. தேசிய முதலாளித்துவம் வரலாற்று அரங்கில் பிரவேசிக்கின்ற போது அது தன்னகத்தே சில முற்போக்கான பண்புகளைக் கொண்டிருக்கும் என்பதை வரலாறு புதிய படிப்பினையாக எமக்குத் தந்துள்ளது. அந்நிய முதலீட்டின் பிடிப்பும் அதன் தாக்கமும் தமக்குப் பாதகமாக இருப்பதனைத் தேசிய முதலாளிகள் இனங்கண்டனர். இதற்குமாறாகத் தேசிய முதலாளித்துவம் தத்தமது நாட்டில் கைத்தொழில் துறையினையும் வர்த்தக அபிவிருத்தியினையும் மேற்கொண்டது. இது தமது நாட்டினை அபிவிருத்தி செய்வதாக அமைந்திருந்தது. அதேசமயம் தமது நாட்டினைக் காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தி அதனூடாக நாட்டையும் நாட்டு மக்களையும் கொள்ளையடித்துக் கொண்டிருந்த குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிராக இருந்த அதேசமயம் நவீன கொள்ளைக்காரர்களான ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் அது செயற்பட்டமை அதன் பிரதானமான அம்சமாகும். இதன் தாக்கத்தை நாம் இலங்கையிலும் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தவிர்க்க முடியாத வகையில் முன்னணிக்கு வந்தபோது ஏகாதிபத்தியம் எனும் சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிராகப் பேராட்டத்தை அது முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே அவ்வரசாங்கம் சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிராக, அதற்கு எதிரான சகலரையும் அணிதிரட்டிக் கொண்டது. தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் மத்தியதர வர்க்கத்தினரையும் அவ்வியக்கம் தன்னுள் வரித்திருந்தது. இலங்கையில் மூன்று தசாப்த காலமாக இடதுசாரிகள் மேற்கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வும் இவ்வியக்கத்திற்கு மேலும் வலுவூட்டின. இந்தப் பின்னணியில் உருவானதே மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடாகும்.

இந்நாட்டில், தேசிய முதலாளித்துவம் தமது இருப்பை நிலைநிறுத்திய பின் அது தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வர்க்கநலன் காரணமாகச் சர்வதேச முதலாளித்துவத்துடன் கைகோர்த்துக் கொண்டது. மேலும் அது தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியையும் அதன் போர்க்குணத்தையும் கண்டு அஞ்சியது. தேசிய முதலாளித்துவம் என்பது "வெகுசனங்கள் மாறுதல் விரும்பாது இருக்கும் பொழுது அவர்களின் மூடத்தனத்தைக் கண்டு முதலாளித்துவ வர்க்கம் கவலை கொள்கின்றது: அவர்கள் புரட்சிகர உணர்வு பெறுங் காலத்தில் அவர்களது நுண்ணறிவுத் திறனைக் கண்டு பேரச்சம் கொள்கின்றது" (கார்ல் மார்க்ஸ்). இந்தவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் தேசிய முதலாளித்துவம் ஏற்படுத்திய தமது வர்க்க நலனை வெளிப்படுத்திய போது அது மக்கள் நலனிலிருந்து அந்நியப்பட்டதாக இருந்தது.

மேலும், 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னர் பதவியிலிருந்த ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்ட மக்கள் விரோதச் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சி சுதேச விதேச பிற்போக்குச் சக்திகளின் ஆதரவுடன் ஆட்சிப் பீடமேறியது. இக்காலச் சூழலில் உலகமயப் பொருளாதாரத்தை அமுலாக்கம் செய்வதற்கான முயற்சிகள் மிகத் திட்டமிடப்பட்டவகையில் முன்னெடுக்கப்பட்டன. விவசாய நிலங்கள் கைவிடப்பட்டு சுதந்திர வர்த்தக வலயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம் முயற்சிகள் யாவும் வெளிநாட்டு, உள்நாட்டு உயர்வர்க்கத்தினரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருந்தன. இவ்விடயம் தொடர்பில் கைலாசபதியின் பின்வரும் கூற்று அவதானத்திற்குரியது:

"சுதந்திர வர்த்தக வலயம் ஒன்றை இந்நாட்டில் ஸ்தாபிப்பதற்காக- பெரும் முதலாளிகளைக் கைதூக்கி விடுவதற்காக சுதந்திர வர்த்தக வலயத்திற்கெனப் புறம்பான சட்டமே தயாரித்துத் தொழிலாளர்களின் உரிமைகளை நசுக்கி வருகின்ற இவர் (ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா- கட்டுரையாசிரியர்) முதலாளித்துவத்தில் நம்பிக்கை இல்லைஎனக்கூறுவது விந்தைக்குரியதொன்றாகும். 'நாம் இனிமேல் எந்தவொரு கம்பனியையோ அல்லது ஸ்தாபனத்தையோ தேசியமயமாக்கப் போவதில்லை' யென்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். இது உண்மையில் அவரதும் யூ. என். பி. யினதும் வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவ நண்பர்களை வாழ வைப்பதற்கேயாகும். மாறாக அவர் கூறும் தொழிலாள விவசாய நண்பர்களும் அல்ல. யூ. என். பி. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்துள்ளது. இக்காலத்தில் யூ. என்.பி. யும் ஜனாதிபதியும் செய்த சகல வேலைகளும் - நடவடிக்கைகளும் முதலாளித்துவத்தில் நம்பிக்கை

வைத்து முதலாளித்துவத்தையே வளர்த்துள்ளது. மாறாக இந்நாட்டில் தொழிலாள - விவசாயிகளை அடக்கி ஒடுக்கி வருகின்றது."(சித்திரை-வைகாசி 1980)

முதலாளித்து அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கத்தினர் ஒரு வலைப்பின்னலாகத் தம்மைப் பலப்படுத்திக்கொண்டு செயற்படுகின்றனர். இவர்களின் முயற்சிகள், செயற்பாடுகள் யாவும் அந்நிய முதலாளிகளுக்கான கொள்ளைக் காடாக நமது நாட்டைத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கானவையாகவே உள்ளன. அவர்களுடைய கவனத்தைப் பெறவும் அவர்களிடமிருந்து சலுகைகளைப் பெறவும் ஆளும் மேட்டுக் குடியினர் தன்மானமிழந்து, கூனிக் குறுகி அவர்கள் முன் நிற்கின்ற நிலைமையைக் கைலாசபதி சிறப்பாகவே அடையாளம் காட்டியுள்ளார்.

பொதுத்துறை நிறுவனங்களை இல்லாதொழித்து தனியார் மயப்படுத்தல் யூ.என் பி. யின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும் என்பதை யாவரும் நன்கு அறிவர். இதற்காக அவர்கள் பல்வேறுபட்ட ம்க்கள் விரோத தந்திரோபாயங்களைக் கையாண்டுள்ளனர். அவற்றில் பிரதானமானது, பொதுத்துறை நிறுவனங்கள் பெரும் நட்டத்தில் செயற்படுகின்றன எனப் பொது மக்களிடத்தில் எடுத்துக் காட்டுவதற்காக அத்துறை சார்ந்த நிறுவனங்களில் ஊழல்களை அதிகரிக்கச் செய்தன. பின் தனியார் துறையின் சிறப்புகள் மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்பட்டன. இவ்வாறாகப் பொதுத்துறை நிறுவனங்கள் பற்றிய அவ நம்பிக்கையை ஏற்படுத்திய பின்னர் தனியார்மயமாக்கத்தை மேற்கொண்டனர். அன்றைய சூழலில் இலங்கையில் ஜே. ஆர். ஆட்சி தனியார் துறையின் சொர்க்கமாக விளங்கிய அமெரிக்காவையும் விஞ்சி தனியார் துறை நிறுவனங்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற வெறியில் செயற்பட்ட நிலையினை கைலாசபதி இவ்வகையில் வெளிப்படுத்தியிருந்தார்:

"இதற்குத் (தனியார்மயத்திற்கு-கட்டுரையாசிரியர்) ஆயத்தம் செய்வது போல இ.போ.ச.வை தனியார் நிறுவனமாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவாம். இ.போ.ச. நட்டத்தில் இயங்குகின்றது என்ற கோஷத்தை முன் வைத்து தனிப்பட்டவர்கள் அதனை வாங்கி அல்லது பொறுப்பேற்று நடாத்த விட அரசாங்கம் யோசித்து வருகின்றது. ஏற்கனவே இ.போ.ச. வில் உள்ள சிலரக ஊழியர்களுக்கு

அனுப்பட்டிருக்கும் கடிதத்தில் வேறு நிறுவனங்களுக்கு வேலை மாறிச் செல்லும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றதாம். தனியார் பஸ்களையும் வான்களையும் வரையறையின்றி ஓட அனுமதித்த வேளையிலேயே இ.போ.ச. வருமானத்தை இழக்க நேரிடும் என்பது அரசாங்கத்திற்கு தெரிந்ததுதானே. தனியார் துறையினர் கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் பொழுது இ.பொ.ச. நட்டத்தில் ஓடுகின்றது என்ற காரணத்தைக் காட்டி அதனையும் தனியார் நிறுவனமாக்கத் திட்டமிடுகின்றது அரசாங்கம். முதலாளித்துவ அமைப்பை உறுதிப்படுத்துவதுடன் தொழிலாளர்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் இம்முறை வசதியாயிருக்கும் என்று அரசாங்கம் கருதுகின்றது. இதில் விசேடம் என்னவென்றால் உள்ளூர் முதலாளிகளிலும் பார்க்க அந்நிய மூலதனக்காரரே இது விடயத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றார்கள். யப்பானிய நிறுவனம் ஒன்று இலங்கையின் போக்குவரத்துச் சேவைகளைப் பொறுப்பேற்று நடாத்த முன்வந்திருப்பதாக வதந்திகள் அடிபடுகின்றன. யப்பானியக் கம்பனி இவ்வாறு முன்வருவது இலங்கை மக்களுக்கு நல்ல போக்குவரத்துச் சேவையை வழங்க வேண்டும் என்ற கருணையுணர்ச்சியினால் அல்ல. யப்பானிய பஸ்களையும் ஏற்றுமதி செய்து கோடிக் கணக்கில் சம்பாதிக்கலாம் என்பதனாலேயே" (1980 ஐப்பசி).

இவ்வாறாக இலங்கையில் தனியார் மயமாக்கத்தின் பின்னணி, அதன் நோக்கம் என்பனவற்றைச் சிறப்பாக எடுத்துக் காட்டிய கைலாசபதி, பொது மக்களின் போக்குவரத்துச் சேவைகளை மாத்திரமன்றி, அவை எவ்வாறு சில்லறை முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் என்பதையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் யப்பானிய எஜமான்களின் கட்டளையை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு நடக்கும் மேல் மட்ட அதிகார வர்க்கத்தினர் மீதும் இவை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் அதே கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளமை சிறப்பானதொரு அம்சமாகும்.

அந்நிய மூலதனத்தின் பெரும் தாக்குதல் காரணமாகப் பொது மக்கள் பெரும் தாக்குதல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இத்தாக்குதல்களில் ஒன்று தான் இந்நாட்டின் இராணுவத் துறைக்கான முதலீடாகும். மக்களுக்கு விரோதமான புதிய புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவை அந்நிய நாட்டுக் கம்பெனிகளுக்குப் பூரண திருப்தியளிப்பனவாக அமைந்திருந்ததுடன் தொழிலாளவர்க்கத்தின் மீது கடும் தாக்குதல்களையும் நடத்தி வந்துள்ளன. அன்றைய ஜனாதிபதி

ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் இராணுவத்தையும் பொலிஸை யும் தமது கையில் வைத்திருக்கும் முகமாக சம்பள உயர்வு, உத்தியோக உயர்வு, இன்னும் பிற சலுகைகளை இராணுவத்தையும் பொலிஸை யும் மையமாக வைத்தே மேற்கொண்டுள்ள அம்சங்கள் இவற்றிற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும். இது குறித்து கைலாசபதி" பாசிசப் பிசாசின் முழுமைத்தோற்றம்" என்ற கட்டுரையில் மிகத் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளார். மேலும் பாசிசத்தின் பரிணாமம் பற்றியும் தமிழ்க் காவலர்களின் சந்தர்ப்பவாத அரசியல் பற்றியும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"பாசிசத்தின் முக்கியமான சில பண்புகள் பின்வருமாறு: மக்களைப் பிரதநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு மக்களின் உரிமைகள் பலவற்றைப் பறித்தல்; எதிர்க்கருத்துள்ளவர்களை அடக்கி ஒடுக்குதல்; பொலிஸ்-இராணுவம் இரகசிய சேவைகள் ஆகியவற்றை தமது அதிகாரத்திற்கும், செல்வாக்கிற்கும் பயன்படுத்தல்; அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபடுதல்; வரலாற்றை வேண்டியபடி திரித்தல்; போலிக் கலாசார வைபவங்களிலும் கொண்டாட்டங்களிலும் மக்களின் கவனத்தைத் திருப்பி விட முயல்தல்; முதலாளித்துவச் சுரண்டல் முறையைப் பாதுகாத்து அதற்கு உத்தரவாதம் அளித்தல். ஹிட்லர் முதல் தென்கொரிய சர்வாதிகாரி கிம்டாய் யுங் வரையில் இந்தப் பண்புகளைக் கொண்டவர்களாய் இருக்கக் காண்கின்றோம். யூ.என்.பி. யும் தமிழர் வியாபாரக் கூட்டணியும் இப்பண்புகளை வெட்கமும் தயக்கமும் இன்றி வெளிப்படையாகவே காட்டிக் கொள்வதைக் காண்கின்றோம். அமிர்தலிங்கம் தனது பிறந்த தின களியாட்ட விழாவையே பலத்த பொலிஸ் பந்தோபஸ்துடன் நடாத்தியது இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. சர்வதிகாரிகள் நடந்து கொள்வதைப் போல மெய்க் காப்பாளர்களுடனேயே இப்பொழுது அமிர் பிரயாணம் செய்வதாகக் கூறப்படுகின்றது"(ஐப்பசி-1980).

உலகமயம் மூன்றாம் உலக நாடுகளை அடிமைப்படுத்துவதற்காக அது மேற் கொள்கின்ற தந்திரோபாயங்களில் ஒன்றுதான் அந்நியப் பொருளுதவியாகும். அதனை இரண்டு விதங்களில் சாதிக்கின்றன. ஒன்று, அதிகார சக்திகள் தமது இருப்பையும் அது சார்ந்த நிறுவனங்களையும் பாதுகாப்பதற்காகப் பொருளுதவி என்ற பெயரில் அந்நாடுகளில் நுழைகின்றன. அவ்வாறு நுழைந்த பின்னர் அவர்கள் அந்நாடுகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்து மக்களைச் சுரண்டுவதற்கும் அவர்களைத்

தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காகவும் அந்நாடுகளில் இனம், மதம், மொழி, சாதி சார்ந்த முரண்பாடுகளையும் மோதல்களையும் தோற்றுவிக்கின்றனர். இதற்கான பணத்தைத் தாம் கொள்ளையடித்த பணத்திலிருந்தே செலவு செய்கின்றனர். இன்னொன்று, கல்வி, சுகாதார மற்றும் சமூக அபிவிருத்தி என்ற பெயரில் ஏகாதிபத்திய நாடுகளினால் வழங்கப்படுகின்ற கடன்கள்-பண உதவிகள், சரியாக சொல்லப் போனால் அப்பணம் வெகு விரைவாகக் கடன் கொடுத்த நாடுகளுக்கே திரும்பிச் சென்று விடுகின்றது. அந்நிய மூலதனக்காரர்கள் எவ்வித வரியும் செலுத்தாமல் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதால் வெளியேறும் மூலதனத்தைப் போலவே அந்நிய உதவியும் உடனே அந்நாடுகளுக்குத் திரும்பி விடுகின்றன. "அந்நிய நிபுணருக்கு 60 ஆயிரம் சம்பளம்- இதுதான் அபிவிருத்தி" என்ற கட்டுரையில் கைலாசபதி மகாவலி செயற்றிட்ட அமுலாக்கத்தில் அந்நிய பொறியியல் நிபுணர்களும் மற்றும் ஏனைய வெளிநாட்டு ஊழியர்களும் எத்தகைய ஊதியத்தைப் பெற்றார்கள் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இவ்விடத்தில் முக்கியமாக வலியுறுத்திக் கூற வேண்டிய விடயம் யாதெனில், ஏகாதிபத்திய நாடுகள் தமது சுரண்டலுக்குச் சாதகமான கும்பலை உள்ளாட்டிலே உருவாக்கிக் கொள்கின்றது. அத்துடன் தாம் கடனாக வழங்கிய பணத்தை நிபுணர்களின் உதவி, பயிற்சி என்ற பெயரில் உடனே திருப்பி எடுத்துக் கொள்கின்றது. ஆனால் கடன் மட்டும் தொடந்து செலுத்தப்படாமல் இருக்கும். அக்கடனை அந்நாடுகள் திருப்பிச் செலுத்தாத வகையில் வைத்துக் கொள்வதற்காக விஷேட பயிற்சியளிக்கப்பட்ட பொருளாதார அடியாட்கள் ஏகாதிபத்திய நாடுகளினால் நியமிக்கப்படுகின்றனர். ஏகாதிபத்திய நாடுகள் இக்கடன் தொகையைக் காரணம் காட்டி தொடர்ந்தும் மூன்றாம் உலக நாடுகளைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருக்கின்றனர். அந்த வகையில் மூன்றாம் உலக நாடுகளை ஆளுவது பாராளுமன்றம் அல்ல; ஏகாதிபத்தியவாதிகளே என்பதைக் கைலாசபதி சிறப்பாகவே உணர்த்தியிருக்கின்றார்.

மேலும், ஏகாதிபத்திய நாடுகளின் ஆதிக்கத்தை தொடர்ந்து இந்நாட்டில் நிலை நிறுத்தி வைப்பது தொடர்பில் உள்நாட்டுத் தரகர்களுக்கான சலுகைகள் வெளிநாட்டு புலமைப் பரிசில்களை எதற்காக வழங்குகின்றார்கள் என்பதையும் கைலாசபதி அம்பலப்படுத்தத் தவறவில்லை. இது தொடர்பில் அவரது பின்வரும் கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கது:

"கடந்த மாத முற்பகுதியில் அமெரிக்கக் குடியரசுக் கட்சி சென்ட்டர் பெரிய கோல்ட்வாட்டர் தாய்வானுக்கு விஜயம் செய்தார். தாய்வான் வர்த்தக சம்மேளனத்தின் அழைப்பின் பேரில், குடும்பத்துடன் விடுமுறையைக் கழிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்த கோல்ட்வாட்டர் அங்கு சீனாவிற்கு எதிரான பேச்சுகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டது மட்டுமன்றி, தாய்வானே 'சுதந்திர சீனா' என்றும் வர்ணித்தார். உலகின் பெரும் பகுதி மக்களும், அமெரிக்க மக்களில் கணிசமான பகுதியினரும் இன்று மக்கள் சீனத்தின் ஒருமைப்பாட்டை ஆதரிக்கையில், கோல்ட்வாட்டர் போன்ற சில கம்யூனிச விரோதிகள் கன்னா பின்னா என்று விமர்சிப்பதை வியாதியாய்க் கொண்டிருக்கின்றார்கள். இது உலக ரிதியான உண்மை. கம்யூனிச விரோதிகளுக்கும் அதிதீவிர வலதுசாரிகளுக்கும் இக்காலத்தில் தாய்வான் தகுந்த பயிற்சிக் களமாகவும் சூழ்ச்சிக்களமாகவும் இருந்து வருவதை யாவரும் அறிவர்.

"யூலைமாத முற்பகுதியில் அமெரிக்காவில் இடம்பெற இருக்கும் மற்றொரு தமாஷாவிற்குச் சென்றுள்ள தளபதி அமிர்தலிங்கத்தார், சென்ற வருடம் தாய்வான் போய்வந்தது பலருக்கு நினைவிருக்கலாம். தம்பதி சமேதரராய் தாய்வான் தீவில் விடுமுறையைக் கழித்துவிட்டுத் திரும்பிய அமிர்தலிங்கத்தார் திடீரென சற்று ஓங்கிய குரலில் சில விஷயங்களை ஒலிக்கத் துவங்கியதும் பலருக்கு நினைவில் இருக்கத்தான் செய்யும். இரு அம்சங்கள் கூர்மையாகத் தென்பட்டலாயின. மூர்க்கத்தனமாக- பாமரத்தனமாக- தமிழர் மத்தியிலும், நாட்டிலும் உள்ள இடதுசாரி சக்திகள் மீதும் குறிப்பாக தேசபக்த சக்திகள் மீதும் அவர் கணைகள் தொடுக்க ஆரம்பித்தார். அது ஒரு அம்சம். கூடுதலாக- வெளிப்படையாகவே- முன்னெப்போதும் இருந்ததைவிட அமெரிக்கச் சார்பை அவர் பல நடவடிக்கைகளிலும் தெரியப்படுத்திக் கொண்டார். இது இரண்டாவது அம்சம்."

மேற்குறித்த வெளிநாட்டுப் பிரயாணங்கள் மூலமாக ஏகாதிபத்திய சார்பும் முற்போக்கு மார்க்சிய விரோத பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை இவ்வரிகள் சிறப்பாகவே தெளிவுபடுத்துகின்றன. அமிர்தலிங்கம் போன்ற பிற்போக்குச் சக்திகள் தமது ஏகாதிபத்தியச் சார்பினை பல்கலைக்கழககாலம் முதலாகவே வெளிப்படுத்தி வந்திருப்பினும்- அதுவே அவரின் அரசியல் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்து வந்திருப்பினும் இத்தகைய வெளிநாட்டுப் பயணங்கள் அத்தகைய வர்க்கச்சார்பை எவ்வாறு வளர்த்தெடுக்கின்றன என்பதைத் தெளிபடுத்தும் கைலாசபதி ஹிட்லர், முசோலினி முதற் கொண்டு

அமிர்தலிங்கம் போன்ற சில்லறைச் சர்வாதிகாரிகளும் - ஜனாதிபதி தாஸர்களும் வரலாற்றில் மக்களால் எவ்வாறு தூக்யெறியப்படுவார்கள் என்பதையும் அதே கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப்பின்னணியில் அத்தகைய அரசியல் போக்குகளின் விளைபொருளே தமிழ்த் தேசியப் போராட்டமாகும். தமிழ்த் தேசியவாதப் போராட்டத்திற்கான முக்கிய காரணியாக அமைந்தது இலங்கை அரசால் 1970களில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறையாகும். கல்வியின் மீதான ஆர்வமும், அதனூடான சமூகப்பெயர்ச்சியில் நம்பிக்கையும் கொண்டிருந்த யாழ்பாண இளைஞர்களின் பல்கலைக்கழக அனுமதியை தரப்படுத்தல் முறை வெகுவாகப் பாதித்தது. அத்துடன் இனவாத அடிப்படையில் காலங்காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்கு முறைகள், யாழ். நூலக எரிப்பு, இன்னும் இது போன்ற அம்சங்கள், இந்நாட்டில் வாழ்ந்த தமிழர் சமூகத்தை வெகுவாகப் பாதித்திருந்தது. இப்பின்னணியில் தீயாய், கனலாய் மூண்ட உணர்வின் வெளிப்பாடே தமிழ்த் தேசிய இயக்கங்களாகும். இவ்வுணர்வை தமிழ் முதலாளித்துவ சக்திகள் தமது வர்க்க நலனுக்காக தமிழ் இனவாதத்தினுள் அமிழ்த்திச் சென்றனர். 1960களில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் ஏற்படுத்தியிருந்த போராட்ட உணர்வுகளை இச் சக்திகள் குறுகிய தமிழ்த் தேசிவாத அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டன. இடதுசாரிகள் அன்று சிங்கள மக்களுடன் ஐக்கியப்படுதல் என்பதன் அடுத்த பக்கமாகச் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடுதல் என்ற அம்சத்தினையும் கவனத்தில் கொண்டு தமது போராட்டங்களை முன்னெடுத்திருப்பார்களாயின் தமிழ் ஜனநாயக சக்தியின் ஒரு பகுதியினரை வென்றெடுத்திருக்க முடியும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயத்தினையும் சற்று அழுத்திக் கூற வேண்டியுள்ளது. அதாவது அன்றைய காலச் சூழலில் இடதுசாரிகள் தமிழ் தேசியம் குறித்த தெளிவான பார்வையைக் கொண்டிருக்கவில்லை என்கின்ற அதே நேரத்தில் தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தின் சிதைவிற்கு, அதன் பிழையான பக்கத்திற்குக் காரணமாக அமைந்தவர்கள் அமிர்தலிங்கம் போன்ற பிற்போக்குத் தலைமைகளே என்பதை வரலாறு எண்பித்திருக்கின்றது என்பதும் இலகுவில் மறந்தவிடத்தக்க ஒன்றல்ல.

இந்தப் பின்னணியில் மூண்ட இளைஞர்களின் கோபத்தைத் தமது அரசியலுக்குச் சார்பாகத் தமிழர் கூட்டணியினர் பயன்படுத்திக்

கொண்டனர். மறுபுறத்தில் இந்த இளைஞர்களின் கோப உணர்ச்சிக்கு அப்பால் தமது பாரளுமன்றப் பதவிகளையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதிலும் மிகக் கவனமாக இருந்தனர். இந்தப் பின்னணியில், 1977 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கான செயற்பாடாக இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்ட வேளையில் அதன் அதிர்வு உலகின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது. அன்றைய சூழலில் தமிழ் ஈழம் கேட்ட தமிழத் தலைவர்களைப் பேட்டி காணுவதற்காக இலங்கை வந்த பத்திரிகை நிருபர் கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபலமான ஹோட்டல் ஒன்றில் அமிர்தலிங்கத்தாரைப் பேட்டி எடுத்துள்ளார். அதனை விசித்திரமான பேட்டி என்றும் தமது பத்திரிகையில் விவரித்திருக்கின்றார். இது பற்றிக் கைலாசபதியின் பின்வரும் வரிகள் நமது கவனத்தை ஈர்க்கின்றன:

"உண்மையான போராட்டத்தை அறியாத பத்திரிகை அறிக்கை தள(ர்)பதிகளையும், செயலாளர் நாயகங்களையும், காரிலும் ஜீப்பிலும் ஓடித்திரியும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களையும் ஹோட்டல்களில் குஷியான சூழ்நிலைகளில் பேட்டிகாணாமல் வேறெங்குதான் பேட்டி காண முடியும்?"

"விடுதலைக்காகப் போராடும் உண்மையான தலைவர்களுக்கு, போராளிகளுக்குப் பிரயாணம் செய்வதே கஷ்டமான காரியம். சில நாடுகளுக்கு அவர்கள் விஸா பெறுவதே வில்லங்கமானதாயிருக்கும். ஆனால் தமிழீழ தள(ர்)பதிக்கோ எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எங்கும் இராஜாங்க சலுகை; சுங்கப்பகுதிகூட சோதனை போடுவதில்லை. உலகில் பலருக்கு இதனைப் புரிந்து கொள்வது கஷ்டமாயிருக்கும். அரசாங்கமே தமது அமைச்சர் ஒருவரை 'எதிர்க் கட்சித் தலைவராக' ஆக்கி வைத்தது போல இருக்கிறது. அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவராகவும், தமிழீழத் தலைவராகவும் இருப்பது இரண்டில் ஒன்று தான் உண்மையாக இருக்க முடியும்! சினிமா நட்சத்திரங்கள் போல ஊருக்கு ஊர், இடத்திற்கு இடம் உடைகளை மாற்றிக் கொண்டு, உலகம் சுற்றும் போது (இயக்கத்திற்கு பிறர் வழங்கிய நிதியில்) 'அசல்' எதிர்க் கட்சி தலைவராகவும், ஆளும் வர்க்கத்தில் ஒருவராகவுமே அமிர்தலிங்கம் தோற்றமளிப்பதாக உலகின் பல பகுதிகளில் அனுபவமிக்க அவதானிகளும் அரசியல் நிருபர்களும் குறிப்பிட்டிருக்கின்றனர்" (1981 ஆவணி).

அமெரிக்காவில் வாஷிங்டனில் உலக வங்கியாளர்களிடமும் அது சாந்த நிறுவனங்களுடனும் பேரம் பேசுகின்ற போது இலங்கையில் தோன்றியுள்ள ஏகாதிபத்தியச் சார்பு அரசாங்கத்திற்கான விசுவாசியான தமிழ்த் தலைவர்கள் இலங்கையிலும்- யாழ்ப்பாணத்திலும்- தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கான பேட்டியின் போதும் தமிழ்க் காவலர்களாக இரட்டை வேடம் அளித்திருந்தனர் என்பதை மேற்குறித்த பந்தி வெளிப்படுத்தியிருக்கின்றது. இவ் வேடமாற்றங்கள் தனிநபர்களைப் பாதிப்பதாக அல்லாமல் ஒரு இனத்தையே அழிப்பதாக அமைந்திருந்தமை நாம் கவனத்திலெடுக்க வேண்டிய அம்சமாகும்.

இவ்வகையில் நோக்குகின்ற போது, தமிழர் கூட்டணியானது தமக்குப் போட்டியாகவும் தமது ஊழல்களை மக்கள் மத்தியில் பரப்பக் கூடிய சக்தியாகவும் இருந்த முற்போக்கு சக்திகளையும் தேசிய முதலாளித்துவ சக்திகளையும் மொழியையும் இனவொடுக்குதலையும் கேடயமாகக் கொண்டு இலங்கையின் அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த முயன்றனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர் என்றே கூறவேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது அரசியலை இருப்பை இலங்கையில் நிலைநிறுத்துவதற்கு ஜே.ஆர். அரசாங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டது போன்று தமிழர் மத்தியில் எழக் கூடிய போராட்டங்களைத் திசைதிருப்பி மக்களை அமைதிப்படுத்துவதற்கு தமிழ்த் தளபதியார் அமிர்தலிங்கத்தைப் பயன்படுத்திக்கொண்டது. ஜே.ஆரும் அமிர்தலிங்கத்தாரும் அடிப்படையில் கம்யூனிச விரோதி- பொதுவுடமைத் துரோகி- என்பதை நன்கு அறிந்திருந்த அமெரிக்கா யூ.என்.பி. காலத்தில் பிரச்சினையை பிரதேசமயப்படுத்திப் பாராளுமன்ற மாயை விஸ்தரித்து சிங்கள தமிழ் மக்களை ஏமாற்ற மட்டுமன்று அவர்களை ஓட்டாண்டியாக நடுரோட்டில் நிறுத்துவதற்கும் பயன்படுத்திக் கொண்டது என்பதைக் கைலாசபதி "தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கமா? அமிர்தலிங்கம் விடுதலை இயக்கத்தின் தலைவரா?" என்ற தலைப்பிலான கட்டுரையில் சிறப்பாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். மேலும் அதே கட்டுரையில் முன்னர் ஆட்சியிருந்த சுதந்திரக் கட்சியின் மக்கள் சார்பான பக்கத்தைச் சிதைக்கும் வகையிலும் குறிப்பாக தமிழ் மக்களை நசுக்கும் யூ.என்.பி. அரசாங்கத்தை அபிவிருத்தியின் பேரில் அரவணைத்து தமது வர்க்க சமரசத்தைத் தமிழர் கூட்டணியினர் செய்து வருகின்றனர் என்பதையும் அவர் விளக்கியிருக்கின்றார்.

இத்தகைய அரசியல் போக்குகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் அவர்களின் அரசியல் சார்ந்த இயக்கங்கள் தோற்றம் பெறலாயின. அவ்வியக்கங்கள் பிரதானமாக இரு நிலைப்பட்ட அரசியல் தளங்களை வெளிப்படுத்தி நின்றன. வரலாற்றிலிருந்தும் மக்களிலிருந்தும் தம்மை அந்நியப்படுத்திய அரசியல் போக்கானது குறுந் தமிழ் தேசியமாக அமைந்தது அதன் முதலாவது போக்காகும். மறுபுறத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இனவாதத்திற்குள் அமிழ்த்திச் செல்லாது சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான அரசியலை நிலைநிறுத்தியது அதன் இரண்டாவது அரசியல் போக்காகும். காலப்போக்கிலே இவ்வியக்கங்களானது சிதைந்து சின்னாபின்னமாகியிருப்பினும் குறைந்தபட்சம் மக்களிடம் செல்ல வேண்டும் என்ற உணர்வு இவர்களிடத்தில் முனைப்புற்றிருந்தது முற்போக்கான அம்சமாகும். கைலாசபதி இந்த இரண்டாவது போக்கை ஆதரித்திருந்தார் என்பதை அவரது செம்பதாகை எழுத்துக்களின் ஊடாக அறிய முடிகின்றது.

மேலும், இலங்கை அரசியல் வரலாற்றில் இடதுசாரி அடையாளங்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் சிலர் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறுவதற்கும் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கும் அத்தத்துவத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொண்ட பின்னர் பிற்போக்கான வியாபார நோக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டது மட்டுமன்று ஒரு காலத்தில் தாங்கள் எந்த வர்க்கத்திற்கெதிராகப் போராடினார்களோ அந்த வர்க்கத்தினருடன் சமரசம் செய்து கொண்டு கூடிக் குலாவுவது மாத்திரமன்று, அந்த வர்க்கத்தினருக்குச் சாமரை வீசி சேவகம் செய்து வந்துள்ளதையும் நாம் இலங்கை இடதுசாரி வரலாற்றில் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய சிதைவுகள் குறித்து கைலாசபதி எழுதிய கட்டுரையில் கூறுகின்ற பின்வரும் வரிகள் முக்கியமானவை:

"இந்த நாட்டில் தொழிலாளர் இயக்கமும் மார்க்சிய இயக்கமும் முளைவிடத் தொடங்கிய காலம் முதல் ரொட்சியவாதம் உடன்பிறந்தே கொல்லும்வியாதிபோல்இடதுசாரிஇயக்கத்தின்ஏகோபித்தவளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் குந்தகம் ஏற்படுத்திக் கொண்டே வந்திருக்கின்றது. ரொட்சியவாதத்தை அதன் பிறப்பிலேயே நன்கு அறிந்த ஸ்டாலின் அது இடதுசாரி இயக்கத்திற்குள் ஊடுருவியுள்ள முதலாளித்துவக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடு என்று சரியாகக் குறிப்பிட்டார். பிலிப்

குணவர்த்தனா முதல் கொல்வின் ஆர். டி. சில்வா வரை ரொட்சிசவாதிகள் இலங்கையில் நமக்குக் காட்டி வந்து நிற்கும் 'சாதனை' என்ன? பேச்சில் அதிதீவிரவாதமும் நடைமுறையில் படுமோசமான சரணாகதியுமாகும்" (1982).

இவ்வகையில் இலங்கை இடதுசாரி வரலாற்றில் நவீன திரிபுவாதமாக அமைந்த ரொட்ஸ்கிய வாதத்தின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் குறித்தும் அதன் வர்க்கத்தன்மை, விளைவுகள் குறித்தும் கைலாசபதி சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இன்று தமிழ் மக்கள் மத்தியிலே போர்க்காலச் சூழலில் இலைமறைகாயாக மறைந்திருந்த சாதிய உணர்வு என்பது பல வடிவங்களில் முனைப்படைந்து வருகின்றன. மறுபுறத்தில் இனவாதமும் பௌத்த மேலாதிக்கவாதமும் பல முனைகளில் வளர்த்தெடுக்கப்படுகின்றன. அந்தவகையில், இன்றைய சூழலில் தமிழர்களின் வாழ்வு என்பது பல்வேறுபட்ட முரண்பாடுகளுக்கும் நம்பிக்கையீனத்திற்குள்ளும் சுழன்று கொண்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியத்தின் தவறை இயக்கச் செல்நெறியில் ஏற்பட்ட விமர்சன ரீதியாக அணுகி, அதன் சாதக, பாதகங்கள் குறித்து தெளிவான, தீட்சண்யமான பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். வரலாற்றிலிருந்து கற்றுக் கொண்டு முன்னேற முடியும் என்ற வகையில் தமிழ்த் தேசியத்திற்கு நிகழ்ந்தது என்ன என்பதை நேர்மையோடு கற்க முனைகின்ற போது கைலாசபதியின் இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் பற்றிய எழுத்துக்கள் முக்கியத்துவம் மிக்கவையாகத் திகழ்கின்றன.

ஜீவநதி - 2011

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி:
சில நினைவுகள்

06-07-2011 அன்று பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி (1932-2011) தமது 79வது வயதில் நம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிந்தார். அவர் நம் அனைவரினதும் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழ் அறிஞர் ஆவார். அவரது இறப்பு நிகழ்ந்த அன்றைய தினம் சுமார் இரவு 8.30 மணியளவில் சக்தி எஃப்.எம் செய்தி ஆசிரியர் திரு. கே.எம். ரசூல் "பேராசிரியர் சிவத்தம்பி இறந்துவிட்டார். அவர் பற்றிய சில தகவல்களைப் பெறமுடியுமா" எனக் கேட்டார். "ஐயோ" என அலறியதாக ஞாபகம். அதிர்ச்சியில் எதையுமே பேச முடியாத நிலை. தொண்டை அடைத்துப்போய் கண்கள் குளமாகிக் கொண்டிருந்தன. நண்பர் என்னைப் புரிந்து கொண்டவராக "உங்கள் நிலை எனக்கு புரிகின்றது. உங்களுடன் பின் தொடர்பு கொள்கின்றேன்" என தொலைபேசியை வைத்துவிட்டார். பின் பேராசிரியரின் குடும்ப நண்பரான ரமணனுடன் தொடர்பு கொண்டு செய்தியை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

மிக அண்மைக்காலங்களில் எனது மற்றும் ந.இரவீந்திரன் முதலானோரின் நூல்கள், செய்திகள் மற்றும் இந்தியாவிலிருந்து பெ.சு.மணி, பேராசிரியர் அ.மார்க்ஸ், ஆதவன் தீட்சண்யா முதலானோர் அனுப்பி வைக்கும் கடிதங்கள், ஈமெயில்கள்(பிரதிகள்), சஞ்சிகைகள் என்பனவற்றை பேராசிரியரிடம் கொண்டு சேர்க்கின்ற பணியினையும், அவ்வாறே அவர் வழங்கும் தகவல்களை, நூல்களை எம்மிடம் கொண்டுவந்து சேர்க்கின்ற பணியினையும் நட்புடன் செய்தவர் ரமணன் (நானும் அவரும் ஒரே திணைக்களத்தில் பணியாற்றுபவர்கள்). எமக்கும் பேராசிரியருக்கும் இடையிலான உறவுப் பாலத்தை பலமுள்ளதாக மாற்றியதில் இவருக்கு முக்கிய இடமுண்டு. இவர் பேராசிரியரின் அரசியல் கலை இலக்கியம் தொடர்பான பார்வைகளில் அல்லது அதன் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவரல்லர். சில சமயங்களில் தொடர்பாடலும் தொழில் நுட்பம் சார்ந்து சில சமயங்களில் பேராசிரியர் இவருடன் உரையாடுவதுண்டு. இவர் பேராசிரியரை வளர்ப்புத் தந்தையாகவே மதித்து எண்ணி அவருடனான உறவை பேணிவந்தார்.

பேராசிரியரை நாங்கள் விமர்சித்தால் இயல்பாகவே அவருக்குக் கோபம் வருவதை அவதானித்திருக்கின்றேன். எனவே பொதுஜனத் தொடர்புச் சாதன நண்பர்கள் பேராசிரியர் பொறுத்த தகவல்களுக்காக என்னை அழைத்த போது அதனை வழங்குவதற்கு பொருத்தமான நபராக இவரைக் கருதி அவரின் தொலைபேசி இலக்கத்தை அவர்களிடம் கொடுத்தேன்.

பின்னர் எனது அனுதாபச் செய்தியைக் கூறுவதற்காக பேராசிரியரின் இரண்டாவது மகள் சட்டத்தரணி தாரணி புவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர் ஓரளவிற்கு எனக்கு அறிமுகமாகியிருந்தார். எனது அனுதாபச் செய்தியைக் கேட்டவுடன் அழுதுவிட்டார். பேராசிரியரின் வழித்தடத்தைப் பின்பற்றி அவருடனான நேசிப்பை வளர்த்துக் கொண்ட எங்களுக்கே தாங்க முடியாத துன்பம் என்றால் அவரது சொந்தப் பிள்ளைகளுக்கு அது எத்தகைய இழப்பாக இருக்கும் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. பேராசிரியரின் இறுதிக் கிரிகைகள் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 க்கு நடைபெறும் என்ற செய்தியையும் கூறினார். இதன் பின்னர் அவரது இறப்புச் செய்தியை நண்பர்களுக்குத் தெரிவித்து எமது உணர்வுகளை பகிர்ந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. நீர்வை பொன்னையன், பேராசிரியர் சி. மௌனகுரு, ஆதவன் தீட்சண்யா, கலாநிதி ந. இரவீந்திரன், தெணியான் எனப் பல நண்பர்களுடன் பேசியதாக ஞாபகம். அவ்வாறே சிலர் பேராசிரியரின் இறப்புப் பற்றி என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமது துயரங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்களில் நந்தினி சேவியர், மல்லியப்பு சந்தி திலகர், ஜெயக்குமார், ஹெலன், இதயராசன் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவரது இறப்புப் பற்றியும் மற்றும் தமிழியல் ஆய்வுலகில் அவரது சாதனைகள் பற்றியும் பொதுஜன தொடர்புச் சாதனங்கள் ஒளி, ஒலிபரப்பிக் கொண்டிருந்தன.

மனம் எதிலும் ஒட்டாமல் ஒருவித சோர்வு உணர்வுடன் நான் வழமையாக வாசிக்க எழுத உபயோகின்ற மேசையில் அமர்ந்தேன். என்ன ஆச்சரியம்! நான் சிவத்தம்பியை அறிந்து வாசித்த முதல் நூலான "இலக்கியத்தில் முற்போக்குவாதம்" என்ற அதே நூல் என் புத்தகக் கட்டுகளில் கிடக்கின்றது. துடுப்புக் கூட பாரமென்று கரையைத் தேடும் ஓடங்களாகவே அவை எனக்குத் தென்பட்டன. தமிழ் இலக்கியத்தை மார்க்சிய அடிப்படையில் இத்தகைய ஆய்வுகளினூடாகவே புரிந்து கொண்டேன். இத்தகைய நிகழ்வுகள்- நினைவுகள் இருபது ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று நிலைக்கின்றது.

பேராசிரியருடனாக அறிமுகம்...!

1990களின் ஆரம்பத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலக்கியப் பேரரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. இப்பேரரங்கிற்கு இந்தியாவிலிருந்து வல்லிக்கண்ணன், பொன்னீலன், தாமரை.சி.மகேந்திரன் முதலானோர் அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ஈழத்து அறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். ஆய்வரங்கிற்குத் தலைமை தாங்கியவர் பேராசிரியர். இவ்வாய்வரங்கில் ஈழத்துக் கவிதை வளர்ச்சி பற்றிக் கட்டுரை சமர்பித்த எம்.ஏ. நுஃமான் மஹாகவி பற்றிக் குறிப்பிடுகின்ற போது " ஈழத்துக் கவிதை வளர்ச்சிப் போக்கில் முக்கியமான கவிஞரான மஹாகவியை கைலாசபதியும் சிவத்தம்பியும் தமது குழு மனப்பாங்கால் மறைத்து விட்டார்கள்" என்ற கருத்தை முன்வைத்தார். தொடர்ந்து ஈழத்துப் புனைக்கதை இலக்கியம் பற்றிக் கட்டுரை சமர்ப்பித்த செ. யோகராசா தமதுரையில் "ஈழத்து புனைகதை இலக்கியத்தைப் போன்று, குறிப்பாக நாவல் இலக்கியம் ஈழத்து மூத்த விமர்சகர்களின் பார்வை படாமையினாலேயே அது வளர்ச்சியடைந்திருக்கின்றது" எனக் குறிப்பிட்டார். அன்றைய சூழலில் பேராசிரியர் இ.மு.எ.ச.த்தின் வெளியீடாக வந்த "புதுமை இலக்கியம்" சஞ்சிகையில் 'எழுத்தாளனும் சித்தாந்த நிலைப்பாடும்' என்ற தலைப்பில் கட்டுரையொன்றினை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் 'தமிழில் சிறந்த நாவல்கள் தோன்றவில்லை எனவும் அதற்கு கைலாசபதி போன்றோரின் விமர்சனக் கொடுங்கோன்மையும் காரணம்' என்ற கருத்தினை முன் வைத்திருந்தார்.

இவ்வாய்வுக் கட்டுரைக்குப் பின்னர் மதியபோசன இடைவெளி, அதன் பின்னரே சபையோர் கருத்துரை வழங்க வேண்டும் என ஏற்பாட்டுக் குழு அறிவித்தது. இந்த வேளையில் நானும் என்னுடைய நண்பர்களும் பேராசிரியரைக் கடந்து செல்கின்ற போது ஏதோ ஒரு ஆகர்ஷிப்பில் நான் அவரைப் பார்த்து புன்முறுவல் செய்தேன். மிகவும் அமைதியாக இன்முகத்துடன் புன்னகை செய்து இலக்கிய அரங்கு பயனுள்ளதாக உள்ளதா எனக் கேட்டார். இளங்கன்று பயமறியாது என்பது போல - சில நேரங்களில் இவ்வகையான மரபுகளை நான் பெரிதாக அலட்டிக் கொள்வதும் இல்லை. மஹாகவி பொறுத்தும் அவரது கவிதையின் அரசியல் பின்னணி குறித்தும் குறிப்பிட்டு, அதில் நீங்களும் கைலாசபதியும் சரியான நிலைப்பாட்டினையே

சார்ந்துள்ளீர்கள் என்றேன். அவர் எனது கருத்துகளை ஆர்வத்துடன் அவதானிப்பதை உணர்ந்து மேலும் நான், அவ்வாறான கருத்துகள் நீங்கள் தலைமை வகிக்கின்ற கூட்டத்திலேயே பேசப்படுகின்ற போது மௌனம் சாதிப்பதும் எமது தளத்தினைத் தகர்த்துவதற்கு சாதமாக அமையும் என்பதுடன் அழகியல் பார்வையில் நின்று கொண்டு சிறந்த நாவல்கள் தோன்றவில்லை எனக் கூறுவதும், மீண்டும் அழகியலுக்குத் திரும்ப வேண்டும் என்ற பிற்போக்கான கலை இலக்கியப் பார்வையையே வலியுறுத்த முனைவதாக அமையும் என என் கருத்தை வலியுறுத்திய போது ஒரு தாயின் கரிசனையோடு என்னைத் தழுவி அக்கருத்துகளை கலந்துரையாடலில் கூறுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி சபையோருக்காக ஒதுக்கப்பட்ட கலந்தரையாடலில் எனது கருத்துகளைக் கூறினேன்.

அன்றைய கூட்டத்தின் நிகழ்வுகள் கருத்துகள் ஏனோ ஒருவித வெறுப்பையே ஏற்படுத்தியிருந்தது. வீட்டிற்குச் செல்வதற்காக மண்டபத்தின் வாயிலை நோக்கிய வந்த சந்தர்ப்பத்தில் தமது தொகுப்புரையில் எமது கருத்துகளை ஆதரித்துப் பேராசிரியர் பேசியதை கேட்டு மீண்டும் மண்டபத்திற்குள் நானும் எனது நண்பர்களும் வந்து அமர்ந்தோம். அதன் பின்னர் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் நான் கட்டுரை சமாப்பித்த போது அவ்வைபவத்தில் பேராசிரியர் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் எங்களுடன் மிக நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். பல நாட்கள் பழகியது போன்ற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டிருந்தது.

பின் பேராசிரியருடன் ஏற்பட்ட என் உறவு பன்முகமானது. நேரடியாக அவரிடம் கல்வி கற்காத போதும் ஆசானாக, இலக்கிய வழிகாட்டியாகவெல்லாம் எமது உறவுகள் தொடர்ந்தன. பொதுவாகத் தமிழ் இலக்கியம், சமூகம், அரசியல் சார்ந்த விடயங்கள் தொடர்பாக பேராசிரியருடன் கலந்துரையாடுவதுண்டு. பல தகவல்களை அவரது கலந்துரையாடல்களிலிருந்து பெறக் கூடியதாக இருந்தது. அவ்வாறே மலையக இலக்கியம் தொடர்பில் நூல்களோ அல்லது தகவல்களோ தேவைப்படின் என்னிடம் அவர் கேட்பார். தொலைபேசியில் மிக நீண்ட நேரம் உரையாடுவார். மல்லியப்பு சந்தி திலகரின் 'மல்லியப்பு சந்தி' கவிதைத் தொகுப்புக்கான முன்னுரையை எழுதுகின்றபோது மிக நீண்ட நேரம் மலையக இலக்கியம் - குறிப்பாக ஸி.வி.வேலுப்பிள்ளை பற்றிக் கலந்துரையாடினார். ஸி.வி. யிலும் அவரது கவிதையிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். இதற்காக மல்லியப்பு சந்தி

திலகர் பேராசிரியருடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தித் தந்தார் என்பதனையும் இவ்விடத்தில் நினைவுகூர விரும்புகின்றேன். இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் "பாக்யா பதிப்பகத்தின்" வெளியீடாக வருகின்ற இந்நூலுக்கான (ஊற்றுக்களும் ஓட்டங்களும்) முன்னுரையை பேராசிரியரிடம் கேட்டிருந்தேன். அதுபற்றிப் பேசுவதற்காக அவரை சந்தித்த போது அந்நூலில் இடம்பெறுகின்ற "ஸி.வி யின் காலமும் கருத்தும்" என்ற கட்டுரையையும், காலந்தோறும் அவர் பெயர் நிலைத்து நிற்கும்" என்ற மீனாட்சியம்மாள் பற்றிய கட்டுரையும் கேட்ட போது தானும் ஸி.வி. பற்றி தனிக் கட்டுரை எழுத முயற்சியுடையவராக இருந்தார் எனவும் அதற்கான சந்தர்ப்பம் கைகூடவில்லை எனவும் கவலைப்பட்டார். இதனால் அவரது 'ஈழத்தின் தமிழிலக்கியச் சுடர்கள்" என்ற நூல் நிறைவு பெறவில்லை எனவும் குறிப்பிட்டார். அத்துடன் ஸி.வி யின் கவிதைகள் பற்றி ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக இருந்ததை உணர முடிந்தது.

ஆரம்பத்தில் நான் கொழும்பிற்கு வருகின்ற போது வெள்ளவத்தையில் இருந்த அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்து விட்டு வருவது வழக்கம். நான் கொழும்புக்கு மாற்றலாகி வந்த பின்னர் குறிப்பாக தெஹிவளையில் அவரது இல்லத்திற்கு மிக அருகிலே தங்கியிருந்தமையினால் பேராசிரியர் அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாறு சந்திக்கின்ற போதெல்லாம் அண்மைக்கால கலை இலக்கியம் தொடர்பான செய்திகளைக் கேட்டுக் கொள்வார். அவர் நோய்க்கு ஆட்பட்டு வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர் தொலைபேசியின் மூலமாக நண்பர்களுடன் தொடர்பு கொண்டு உரையாடுவதை அவதானித்திருக்கின்றேன். "மகன், உடலில் எல்லாப் பாகங்களும் செயலற்றுப் போயிவிட்டது. ஆனால் மூளை மட்டும் இயங்குகின்றது. அதுவும் நின்று விட்டால் நல்லதுடா" என அவர் அடிக்கடி கூறுவார். நான் அதிர்ந்து போவேன். இவ்விடத்தில் முக்கியமானதொரு அம்சத்தை வலியுறுத்த வேண்டியுள்ளது. அவர் தமது இறுதி மூச்சு வரையில் இயங்கிக் கொண்டிருந்தார். வாசிப்பு, எழுத்து என்பதும் ஒரு அரசியல், சமூகச் செயற்பாடாகும். இந்தப் பின்னணியில் தமிழ் ஆய்விற்காக அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். அதனூடாகவே அவருக்கான சமூக அங்கீகாரம் கிடைத்தது. இது பலருக்கு அலர்ஜியாக அல்லது அவர்களின் மூக்கை சிணுங்க வைப்பதாக இருந்தது. இன்றுவரை எஸ்.பொ. முதலானோர் இத்தகைய விமர்சனங்களையே முன்வைத்து வருகின்றனர். பொறாமையும் தனிமனித குரோதங்களும் இவர்களது

எழுத்துக்களில் முனைப்புற்றிருப்பதனைக் காணலாம். எஸ். பொ.வின் "வரலாற்றில் வாழ்தல்" என்ற இரண்டு பாகங்களைக் கொண்ட நூலில் (900 பக்கங்களுக்கு மேற்பட்டது) இந்தப்பணியை மிகச் சிறப்பாகவே செய்துள்ளார்.

பேராசிரியரின் ஆராய்ச்சித் தெளிவுக்கும் வெற்றிக்கும் அடிப்படையான காரணம், விஞ்ஞானபூர்வமான இயக்கவியல் பார்வையைக் கொண்ட அவரது முறையியலே ஆகும். அவருடைய முறையியல் பல்துறைசார்பானது. இந்த முறையியலும் ஆய்வுப் பார்வையும் பேராசிரியரிடம் சிரமப்படாமல் எளிதானதொரு இயல்பாகக் காணப்படுகின்றது. இது சாத்தியப்படுவதற்கு முக்கிய காரணம் அவரது மார்க்சிய சார்புநிலையாகும். அவ்வகையில் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்ட அவர் அதனை மாறிவருகின்ற தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவகையில் பிரயோகித்து ஆய்வுகளை வெளிக் கொணர்ந்தார். தமிழ் புத்திஜீவிகள் பலர் தமிழ்ச்சூழலில் ஐரோப்பிய வர்க்க சிந்தனை மரபை அப்படியே பிரயோகித்து கண்ட முடிவுகள் நமது சூழலில் விரக்திக்கும் பின்னடைவிற்குமே இட்டுச் சென்றது. தமிழ்ச் சமூகத்தில் சாதி, மதம், இனம், மொழி அடையாளங்கள் எல்லாம் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வதன் மூலமே அம்மக்களை அணிதிரட்டுவதற்கான மார்க்சியத்தைக் கண்டடைய முடியும். பேராசிரியர் இதனைப் புரிந்து கொண்டு தமிழியல் ஆய்வினை மேற்கொண்டார். அத்துடன் தமிழர் பண்பாட்டில் கலை இலக்கியம், நாடகம், வரலாறு, சமூகம், கல்வி, தொடர்பாடல் மற்றும் ஊடக நெறி என பல்துறை சார்ந்த விடயங்களில் தமது பார்வையைச் செலுத்தி அதன் ஒளியிலேயே தமது ஆய்வுகளை முன்வைத்தார். அவரது ஆய்வுகள் இன்றுவரை பல்துறை சார்ந்த ஆய்வுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. அந்த வகையில் கைலாசபதி - சிவத்தம்பி என்ற மரபொன்று தமிழியல் சூழலில் உருவாகி வந்திருப்பதையும் காணமுடிகின்றது.

எண்பதுகளுக்குப் பின்னர் இலங்கையில் இனநெருக்கடியின் மோசமான பரிமாணங்கள் அது தோற்றுவிக்கக்கூடிய சிதைவுகள், அரசியல் போக்குகள் காரணமாக பேராசிரியரின் பார்வையும் மாற்றமடைந்தது. இக்காலகட்டத்தில் அவருடன் இணைந்து செயற்பட்டவர்கள் மற்றும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்தவர்கள் அவருடன் முரண்பட்டனர். புலிகள் இயக்கத்தினால் கொன்று குவிக்கப்பட்ட நேச சக்திகள், பொதுமக்கள் போக அவர்களது ஏனைய நடைமுறைகளிலும் பாஸிசத்தின் புள்ளியை நாம் தரிசிக்கத் தவறவில்லை. இவ்வியக்கம்

தமிழ் மக்களின் போராட்டங்களை கூனிக் குறுக்கியதுடன் இறுதியில் படுதோல்வி அடையவும் செய்தது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இப்போக்கில் வளர்த்தெடுத்த அமெரிக்கா தமிழ் மக்களை நடுத்தெருவுக்கே கொண்டு வந்து விட்டது. இக்காலகட்டத்தில் பேராசிரியர் இவ்வியக்கத்தின் ஆதரவாளராக மாறினார் என்பது துரதிஷ்ட வசமானதொரு நிகழ்வாகும். இது குறித்துப் பல முற்போக்கு மார்க்சிய எழுத்தாளர்கள் அவரை விமர்சனத்திற்குட்படுத்தினர். எனது விமர்சனமும் முரண்பாடும் கூட இந்தப் பின்னணியில் எழுந்ததாகும்.

அதேசமயம் இதே காலப்பகுதியிலும் தொடர்ந்து வந்த காலப்பகுதியிலும் தமிழியல் சார்ந்து அவர் செய்த ஆராய்ச்சிகள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. அவை மக்களைத் தழுவியதாக அமைந்துள்ளமை அதன் பலமான அம்சமாகும். பேராசிரியரின் இந்தப் பங்களிப்பை நாம் தொடர்ந்து மதித்து வந்தோம்.

சில மாதங்களுக்கு முன் கலாநிதி ந. இரவீந்திரன் எழுதிய 'திருக்குறளில் கல்விச் சிந்தனைகள்' என்ற நூல் பற்றிய விமர்சன நிகழ்வொன்றினை வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களும் மாணவர்களும் ஒழுங்கமைத்திருந்தனர். அவ்வரங்கில் பேராசிரியரும் வாழ்த்துரை ஒன்றினை எழுத்து மூலமாக வழங்குவதாக ஒப்புக் கொண்டிருந்தார். அவ்வாழ்த்துரையினைப் பெறுவதற்காக நானும் இரவீந்திரனும் வவுனியா செல்வதற்கு முதல் நாள் பேராசிரியரைச் சந்தித்தோம். அந்நூலை மிகக் கவனமாக வாசித்துக் காட்டும் படி கூறிய அவர் அதில் முக்கியமாக இடம் பெறும் கருத்துகளை எங்களிடம் விசாரித்தார். பின்னர் மிக நிதானமாக அவர் தமது கருத்தினைக் கூற இரவீந்திரன் எழுதினார். மூன்று நான்கு முறைகள் வாசித்து திருத்தம் செய்த பின்னர் தமது கையெழுத்திட்டுத் தந்தார். அதன்பின் எனது 'மலையகம் தேசியம் சர்வதேசம்' என்ற நூலைக் கையளித்த போது அதிலடங்கியிருந்த கட்டுரைகளின் மையக் கருத்தினைக் கேட்டு வினவினார். கைலாசபதி பற்றி எழுதியிருந்த கட்டுரையொன்றில் பேராசிரியர் அண்மை காலத்தில் கொண்டிருந்த அழகியல் பார்வை குறித்தும் அந்நூலில் விமர்சனம் செய்யப்பட்டிருந்தது. பொறுமையாகவிருந்து இவற்றையெல்லாம் கேட்ட பேராசிரியர் மிக அமைதியாக "மோன் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியவற்றை ஓரளவு சாதித்து விட்டேன்: அதற்கான அங்கீகாரமும் கிடைத்தது. அதே மாதிரி வாங்க வேண்டிய அடிகளையும் தாக்குதலையும் வாங்கிவிட்டேன். என் பிள்ளைகள் நீங்களெல்லாம் தாக்கும் போது தாங்க முடியல்லையடா"

என்றார். இந்த வார்த்தைகள் என் நெஞ்சைச் சுட்டன. உண்மைதான்! நாங்கள் முன் வைத்த விமர்சனங்களை விட அவற்றில் அடங்கியிருந்த வார்த்தைகள் அவரது மனதை வேதனைப்படுத்தியிருக்க வேண்டும். ஒரு காலகட்ட ஆர்ப்பரிப்பில் முகில்களை கிழிப்பதற்கென்றே கரங்களை உயர்த்திய பேராசான் சிவத்தம்பி போன்றவர்களின் வாரிசுகள் அல்லவா நாங்கள்! அந்தப் பாதையில் வந்த நாங்கள் அவற்றை உருவாக்கியவர்களின் பாதை மாறிப் போகின்ற பொழுது அவர்களால் உருவாக்கப்பட்ட பார்வையே அவர்களைத் தாக்கும் என்ற சமூக நியதியை இந்த வாழ்க்கை அனுபவங்களின் ஊடாக எனக்கு அறிய முடிந்தது.

பிறிதொரு சந்தர்ப்பத்தில் சாருமதியின் 'அறியப்படாத மூங்கில் சோலை' தொகுப்பு வெளிவந்த போது அது பற்றி பேராசிரியர் நீண்ட கட்டுரையொன்றினை தினக்குரல் வாரவெளியீட்டில் எழுதியிருந்தார். இதுவரை யாரும் சாருமதி பற்றிய தகவல்களை வெளிக் கொணரவில்லை என்ற குற்றச்சாட்டு அக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டிருந்தது. மேலும் அவர் செ.யோகராசா கூட இதுபற்றி அக்கறை செலுத்தவில்லையே என்ற ஆதங்கத்தையும் தெரிவித்திருந்தார். சில நாட்களுக்கு பின்னர் பேராசிரியரின் தொலைபேசி அழைப்பு வந்தது. "அடே தம்பி, இப்பதான் அந்தனி ஜீவா டெலிபோனில் கதைத்தார். உமது நூலில் சாருமதி பற்றி எழுதியிருக்கிறதாவும், பல தொலைக்காட்சி நிகழ்வுகளிலும், இலக்கியக் கூட்டங்களிலும் நீர் பேசிவருவதாகவும் அறிந்தேன். சாருமதி பொறுத்து என்னிடம் கூறியவர்கள் இதுவரை இது தொடர்பான பதிவுகள் எதுவும் வரவில்லை என்ற தகவலையே தந்திருந்தனர். நான் தவறு செய்திட்டன் அப்பு" என மனவருத்தப்பட்டார். பின்னர் சாருமதி பொறுத்து எங்களது உரையாடல்கள் தொடர்ந்தன. சாருமதியின் கவிதை ஆளுமைகள் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள அதேசமயம் அதன் பலவீனமான பக்கங்கள் குறித்தும் நீங்கள் எழுதியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்: குறிப்பாக நக்ஷல்பாரி இயக்கம்-அழித்தொழிப்புநடவடிக்கைகள்-அதன் தலைவர் சாருமஜூம்தார் குறித்தெல்லாம் கருத்து மயக்கங்கள் சாருமதியில் இருந்ததை அவரது கவிதைகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன. அதனை நீங்கள் சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் பலவீனங்களில் ஒன்றாகக் காண்பதில் நாங்கள் முரண்படுகின்றோம் என்பதையும் அவரிடம் கூறினேன். பலவிடயங்களில் என் கருத்துகளுடன் உடன்பட்ட அவர் சீனச்சார்பு பற்றிக் குறிப்பிடுகின்ற போது மொஸ்கோ சார்பே சரியான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது எனவும், அது தொடர்பில் ஆழமாக கற்கும்படியும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் மொஸ்கோ சார்பை முன்னெடுத்தவர்கள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் மூழ்கியது இடதுசாரி இயக்கத்தில் பல பின்னடைவுகளை தோற்றுவித்திருந்தது. மாறாக சீனச் சார்பு அணியினர் தொடர்ந்து பல சமூகமாற்றப் போராாட்டங்களை முன்னெடுத்து வந்தனர் என்பதை கடந்த கால வரலாறு எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இந்த பின்னணியில் நானோ எமது அணியினரோ சரியான நிலைப்பாட்டினையே கொண்டிருந்தனர் என்பதில் உறுதியான பார்வை என்னிடம் இருந்தது. ஆனால் அந்தச் சூழலில் போராசிரியருடன் மேலும் விவாதத்தை தொடர விரும்பாமல் அமைதியாக இருந்து விட்டேன்.

யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் தமது அறிவு-ஆற்றல்-செயற்பாட்டால் உலக தமிழறிஞராக உயர்ந்துள்ளார். நான் முன்னர் குறிப்பிட்டது போன்று இந்நூலுக்கான முன்னுரையை அவரிடம் கேட்டிருந்தேன். உடல் நிலை மிக மோசமாகப் பாதிப்படைந்து வந்ததனால் உடன் எழுதித்தர முடியவில்லையே என்று மனவருத்தப்பட்டார் என்பதை நண்பர்கள் ரமணன், மல்லியப்புசந்தி திலகர் என்னிடம் கூறினார்கள். இது தொடர்பில் என்னிடமும் ஓரிரு தடவை தொலைபேசியில் கதைத்திருந்தார். அந்த வரப்பிசாதம் கிடைகாமலே போய்விட்டது. அந்தவகையில் நான் பெரும் துரதிஷ்டசாலியே.

இரவு பகல் ஓய்வு ஒழிச்சலின்றி தமிழியல் ஆய்வுக்காகத் தன்னை அர்ப்பணித்த பேராசிரியர் தான் உறங்குவதற்குப் போதுமான நேரத்தைப் பெறுவதற்காக தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். பேராசிரியர் நடந்து வந்த பாதை இன்று வெறிச்சோடிக் கிடக்கின்றது..! அது யாராலும் நிரப்ப முடியாத ஈடு இணையற்ற பணியாகும். அவரது இழப்பு அவரது குடும்பத்துடன் மட்டும் அடங்குவதன்று. அவரது இழப்பால் துயருறும் சகலருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இறுதியாக அவரது பூதல்வுடல் பொறலை மயானத்தில் எரிக்கப்பட்ட போது யாழ். நூலகம் இன்னொரு தடைவை எரிக்கப்பட்டது போன்று அல்லது அனைத்து அறிவியல் நூல் களையும் ஒன்றாக குவித்து எரித்தது போன்ற உணர்வுடன் அங்கிருந்து விடைபெற்றேன்.

வேதனைகளை சுமந்து கொண்டு..!

இனியொரு.கொம் -10.07.2011

இங்கிவரை யான் பெறவே என்ன தவம் செய்தேனோ..!

(மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 85 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எழுந்த நினைவுகள்)

27-06-2011 டொமினிக் ஜீவாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நண்பர்கள் தமது அனுபவப் பகிர்வுக் கலந்துரையாடலொன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சி கொழும்புத் தமிழச் சங்கத்தில் தினக்குரல் பிரதம ஆசிரியர் திரு.வீ.தனபாலசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் டொமினிக் ஜீவா பொறுத்து தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். இறுதியாகப் பதிலுரை வழங்கிய டொமினிக் ஜீவா இந்நிகழ்விற்கு சிகரம் வைத்தால் போல மல்லிகை சஞ்சிகையை வளர்த்தெடுப்பதில் தான் சந்தித்த போராட்டங்கள், சவால்கள், கூடவே தான் அதனை எதிர் கொண்ட விதம் குறித்துப் பேசியதுடன் எதிகாலத்தின் மீதான தனது நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டோரும் கருத்துரை வழங்கியோரும் ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் மல்லிகையுடன் தொடர்பு கொண்டவர்களே. அத்தகைய உறவுகளில் ஒருவாராகவே நானும் அந் நிகழ்வில் கலந்து கொண்டேன். ஜீவாவின் 85 ஆவது பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்த போது எனது நினைவுகள் பல ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று நிலைக்கின்றது. அந்த நினைவுகளைப் பதிவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

ஹட்டனிலே நான் கல்லூரி மாணவனாக இருந்த வேளையில், எனது வீட்டு அலுமாரியிலிருந்த ஜீவாவின் 'பாதுகை' என்ற சிறுகதைத் தொகுப்பும் மல்லிகை ஜீவா மணிவிழா மலரும் எதிர்பாராதவிதமாக என் கண்ணில் பட்டன. 'பாதுகை' சிறுகதைத் தொகுப்பின் அட்டைப்படம் செருப்புத் தைக்கும் தொழிலாளியின் படத்தை அதற்கே உரித்தான நாகரிகத்துடன் பிரசுரித்திருந்தமை இயல்பாகவே என்னைக் கவர்ந்திருக்க வேண்டும் என நினைக்கின்றேன். அந்தக் காலத்தில் ஜீவாவையோ அல்லது

அவரது படைப்புகளையோ ஓரளவிற்கேனும் அறிந்து வைத்திருந்தேன் எனக் கூறுவதற்கில்லை. எழுத்துலகில் ஈடுபடத் தொடங்கிய காலத்தில் தான் டொமினிக் ஜீவாவைப் பற்றியும் மல்லிகை சஞ்சிகையைப் பற்றியும் ஓரளவிற்கு அறிந்து கொண்டேன். 90களின் ஆரம்பத்தில் (திகதி சரியாக ஞாபகத்தில் இல்லை) பேராசிரியர் கைலாசபதி பற்றிய கட்டுரையொன்றினை எழுதுவதற்காக மல்லிகைப் பந்தல் வெளியிட்ட கைலாசபதி சிறப்பு மலரைக் கேட்டு யாழ்ப்பாணத்தில் இருந்த மல்லிகை முகவரிக்கு கடிதம் ஒன்று எழுதியிருந்தேன்.

என்ன ஆச்சரியம்...! ஒரு வாரத்திற்குள் அந்த நூல்கள் எனக்குக் கிடைத்தன. கூடவே ஜீவாவின் கையெழுத்தில் மிகச் சிறிய கடிதம். அன்றைய இலக்கிய உலகினை ஓரளவிற்கு நான் அறிவேன். பாலியல் ஏக்கங்களும் வெத்து வேட்டுகளும் பத்திரிகை உலகை ஆக்கிரமித்து நிற்க, மறுபுறத்தில் ஒவ்வொரு தலைமுறைக்காகவும் சேகரித்து வைத்த நாகரிகங்கள் அனைத்தையுமே இந்நாட்டின் மானுடம் இழந்து அம்மணமாகி இருக்கும் ஓர் காலக்கட்ட ஆர்ப்பரிப்பில், பளுவானவற்றை ஏனையோருக்குத் தள்ளிவிட்டு இலகுவானதை மாத்திரம் இவர்கள் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் சிறிதளவு ஏதேனும் சாதித்து விட்டாலும் மக்கள் மத்தியில் தம்பட்டம் அடிப்பவர்கள். ஓரளவு சமூகவியல் நூல்களை கற்றறிந்த போதே என்னால் இதனை இனங்காண முடிந்திருந்தது.

இவ்வாறான சூழலில் ஈழத்து இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைத் தொழிற்பாட்டினை ஆதாரமாகக் கொண்டு முகிழ்ந்த இதழாக மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியரும் மூத்த படைப்பாளியுமாகிய டொமினிக் ஜீவா என்னை மதித்து எனக்கான நம்பிக்கையைத் தந்தமை, சமூகம் குறித்துச் சிந்திப்பதற்கும் அது தொடர்பான இயங்காற்றலைச் சாத்தியப்படுத்துவதற்குமான புதிய இரத்தத்தை என்னுள் பாய்ச்சியது என்பதை நான் நன்றியுடன் கூறிக் கொள்கின்றேன். அன்றைய தினம் மூன்று நான்கு தடவைகள் ஹட்டன் நகரைச் சுற்றி வந்ததாக ஞாபகம்.

அன்று ஏற்பட்ட எமது உறவு இன்றுவரை பலவிதங்களில் பலமடைந்து வந்திருக்கின்றது. நான் வாசித்ததை விட எழுதியது குறைவு. தொடர்ந்து மல்லிகை சஞ்சிகையையும் மல்லிகைப் பந்தல் வெளியீடுகளையும் வாசித்து வருகின்றேன். உலக சமுதாயத்தில் நீதியை நிலை நாட்ட முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்குப் பாடுபட, சகல போகபோக்கியங்களையும்

துறந்து, யாதொரு கர்வமும் கொள்ளாது தியாக வாழ்க்கையை மேற்கொள்வதுதான் நாகரிகமிக்க மனிதர்களின் கடமை. இந்த நாகரிகம் டொமினிக் ஜீவாவில் முழுமையாகவே குடிகொண்டிருக்கின்றது.

ஜீவாவுடன் முதல் சந்திப்பு எப்போது நடந்தது என்பது ஞாபகத்தில் இல்லை. கொழும்பு நகரத்தின் ஒரு கோடியில் உள்ள கதிரேசன் வீதியில் உள்ள மாதா கோயிலுக்கு அருகில் மல்லிகைப் பந்தல் என்ற போர்ட்டுடன் காட்சியளிக்கும் அந்த நுழைவாயிலின் வழியாகச் சென்று பலகையால் அமைக்கப்பட்ட படிகளில் மேலேறிச் சென்றால் மல்லிகை அலுவலகத்திற்குச் செல்லலாம். அங்கு தான் நான் முதன் முதலாக ஜீவாவைச் சந்தித்தேன். அவர் சாதாரணமானதொரு மனிதராகவே காட்சியளித்தார். ஒரு தாயின் கரிசனையுடன் என்னை வரவேற்று இலக்கியம் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடினார். சொந்த விவகாரங்களோ அல்லது நேரத்தை வீணடிக்கும் வெட்டிப் பேச்சுகளோ அல்லது யாரையும் பற்றி தனிமனித வசைபாடல்களோ அவரது கலந்துரையாடலில் இருக்கவில்லை. அவர் பேசும் போது அக்கருத்துகள் அடிமனதிலிருந்து எழுந்து வருவதனைக் காணக் கூடியதாக இருந்தது. அநீதிக்கு எதிரான தர்ம ஆவேசம் அவரது பேச்சில் வெளிப்பட்டது. அவருடனான உரையாடல்கள் எப்போதும் என்னில் விரக்தியையோ நிராசையையோ தோற்றுவிக்கவில்லை. மாறாக என்னை எதிர்காலம் குறித்து நம்பிக்கை கொள்ளச் செய்ததுடன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கான உந்துதலைத் தருவதாக இருந்தது.

இதே காலப்பகுதியில் எனது வாசிப்பு ஆர்வம் அதிகரித்து வந்தது. என்னை கோட்பாட்டுத் தளத்தில் வளர்த்தெடுப்பதில் திரு. ந.இரவீந்திரனின் பங்கு முக்கியமானதாக இருந்தது. இரவீந்திரன் தேசிய ஜனநாயக முற்போக்குச் சக்திகளுடனான ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதில் முக்கிய கவனமெடுத்திருந்தார். அவர் ஜீவா பொறுத்து நன்மதிப்புக் கொண்டவராக இருந்தார். இந்தச் சூழலும் ஜீவா மீதான எனது மரியாதையை அதிகரிக்கச் செய்திருந்தது.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்தும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இந்தச் காலச் சூழலில் எனது எழுத்துக்கள் ஜீவாவின் கருத்துகளுடன் நேசபூர்வமாக முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. குறிப்பாக டானியல், கைலாசபதி குறித்த ஆய்வுகளில் நான் மொஸ்கோ தரப்பை விமர்சித்தும் சீனச்சார்பை ஆதரித்தும் கட்டுரைகளை எழுதியிருந்தேன். இக்கட்டுரைகளை ஜீவா மிக நேர்மையாக, எவ்வித

மாற்றமும் இன்றி அக்கட்டுரைகளை மல்லிகையில் பிரசுரித்தார். நான் சார்ந்திருந்த அல்லது நெருக்கமான கருத்தியல் உறவைப் பேணிய அணியில் கூட பல சந்தர்ப்பங்களில் ஒரு சஞ்சிகை ஆசிரியர் என்பதற்காக கட்டுரையில் ஏதோ ஒன்றில் கைவைக்க வேண்டும் என்ற மனப்பிறழ்வில் முக்கியமான பகுதிகளைக் கூட வெட்டியிருந்தனர். பல கட்டுரைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. இந்நிலையில் ஜீவாவின் பத்திரிக்கை நாகரிகம் முதிர்ச்சியடைந்ததொரு பத்திரிகையாளனுக்குரியதாகவே எனக்குப்படுகின்றது.

இன்னொரு நிகழ்வையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1990 களின் ஆரம்பத்தில் கொந்தளிப்பு சஞ்சிகை ஆசிரியர் குழுவினர்-குறிப்பாக மோகன் சுப்பிரமணியம், மு.நேசமணி ஆகியோர் ஜீவாவுடனான இலக்கியச் சந்திப்பையும் "மல்லிகை முகங்கள்" நூல் வெளியீட்டு நிகழ்ச்சியையும் ஒழுங்கமைத்திருந்தனர். இந்நிகழ்வில் நூல் பற்றிய கருத்துரை வழங்குவதற்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். ஈழத்து இலக்கிய வரலாற்றில் மல்லிகை சஞ்சிகையின் முக்கியத்துவத்தையும் ஈழத்துப் படைப்பாளிகளை மையமாகக் கொண்டு வெளிவந்த அட்டைப்படங்கள் மற்றும் அவை தொடர்பான அறிமுகங்கள் குறித்தும் உரையாடிய நான் மல்லிகை சஞ்சிகையில் இதுவரை காலமும் சமூகமாற்றப் போராட்டத்தில் அதன் போர்முகமாய் வெளிப்பட்ட சுபத்திரன், பசுபதி முதலானோரைப் பிரசுரிக்காதது தொடர்பில் எனது விமர்சனத்தை முன் வைத்தேன். ஜீவா தமது உரையில் மிக மிக நிதானமாக மல்லிகை சஞ்சிகையை நடாத்தி வந்ததில் தான் பெற்ற அனுபவங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள விடயங்களை எடுத்துக் கூறியதுடன் இறுதியாக மலையக இலக்கியம் பற்றிக் கூறுகின்ற போது இன்று மலையகம் கைலாசபதி போன்று வளரக் கூடிய ஆய்வாளனைப் பெற்றிருக்கின்றது என என்னைப் பற்றிக் கூறினார். இசக்கூற்று பலருக்கு மகிழ்வையும் சிலருக்கு ஆத்திரத்தையும் தோற்றுவித்தது. மலையகத்தைச் சார்ந்த பத்திரிகை நிருபரொருவர் அச்செய்தியை பத்திரிக்கையில் பிரசுரிக்காதது மாத்திரமல்ல என்னைப் பற்றிய தனிமனித அவதூறுகளையும் பரப்பிச் சென்றார். இந் நிகழ்வு ஒருவிதத்தில் வேதனை தரும் செயலாகவே இருந்தது.

இவ்விடத்தில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் ஜீவா என்னைக் கைலாசபதியைப் போன்று வளரக் கூடிய ஒருவர் எனக் கூறியது மிகைக் கூற்றாக இருப்பினும், மலையக சமூகம் பற்றியும் அதில் வளரக் கூடிய இளந்தலைமுறையினர்

குறித்தும் ஜீவா கொண்டிருந்த அக்கறையையே இது எடுத்துக் காட்டுகின்றது. உண்மையில் எனது ஆக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து என்னை வளர்த்தெடுத்ததில் மல்லிகைக்கும் ஜீவாவுக்கும் முக்கிய இடமுண்டு. அந்தவகையில் என்னைக் காணுகின்ற போதெல்லாம் சமூகத் தளத்தில் எழுத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி எடுத்துக் கூறுவதுடன் உரிமையுடன் என் எழுத்துக்கள் - செயற்பாடுகள் பற்றி விமர்சனங்களை முன்வைப்பார்.

எனது எழுத்தில் மாத்திரமன்று எனது தனிப்பட்ட வாழ்கையிலும் கூட ஜீவா பெரும் ஆதர்சனமாக இருந்திருக்கின்றார். எனது திருமணத்திற்கான அழைப்பிதழை நான் அவரிடம் கையளித்த போது முடிந்தவரையில் வருவதாக கூறினார். அவரை எப்படியும் அழைத்து வருவதாகப் பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் ஸ்ரீதர்சிங் உறுதியளித்திருந்தார். திருமணத்திற்கான ஆயத்தங்கள் நடைப்பெற்றுக் கொண்டிருக்க மணமகன் கோலத்தில் நான் மண்டபத்திற்குள் சென்ற போது வாசற்படியிலிருந்து என்னை வரவேற்றவர் ஜீவாதான். அவருடன் ந. இரவீந்திரன், ஸ்ரீதர்சிங் , மாத்தளை வடிவேலன் ஆகியோர் இருந்தனர். உண்மையைச் சொல்லப் போனால் அன்று தான் என் எழுத்தின் வலிமையை உணர்ந்தேன். என் வாழ்நாளில் நான் ஒருபோதும் அடையாத மகிழ்ச்சியை, அங்கீகாரத்தை ஜீவா என் திருமணத்தில் கலந்து வாழ்த்திய நிகழ்வு தந்தது.

ஜீவாவின் முக்கிய நாகரிகங்களில் ஒன்றுதான் கலை இலக்கியம் பற்றிய தனது இலட்சியத்தை விட்டுக் கொடுக்காதவகையில் சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் அவர் கொண்டுள்ள ஐக்கியமாகும். நண்பன் யார்? எதிரி யார் என்பது தொடர்பில் ஜீவா பற்றிப் பல நண்பர்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இவ்விமர்சனம் ஜீவாவுக்கு முற்று முழுதாகப் பொருந்தாது என்றபோதிலும் இவ்விமர்சனத்தையும் ஜீவா கவனத்தில் எடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். 85 ஆவது வயதை அடைந்து விட்ட ஜீவாவின் பன்முகப்பட்ட ஆளுமையை வெளிக் கொணரும் வகையிலான பன்முக ஆய்வுகள் வெளிவரவேண்டியது அவசியமாகும். இறுதியாக எமது யாசிப்பு, ஜீவா எமக்காகத் தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதே.

முச்சந்தி ப்ளொக்ஸ்பொட். கொம்.

நந்தினி சேவியர் -
எதிர் நீச்சல் போடும் படைப்பாளி

திருகோணமலை சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் என்னை எதிர்பாராத விதமாகச் சந்தித்த "நீங்களும் எழுதலாம்" சஞ்சிகையின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளராகிய நந்தினி சேவியரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். நந்தினி சேவியரின் சிறுகதைகளை, கட்டுரைகளை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே வாசித்திருக்கின்றேன். அவரது எழுத்தில் முனைப்புற்றிருந்த சத்திய வேட்கையும் உண்மைத் தேடலும் இயல்பாகவே அவரது எழுத்தின் மீதான தொற்றை ஏற்படுத்தியிருந்தன.

எதிர்பாராதவிதமான சந்திப்பாக இருந்தாலும் கூட எமது உரையாடல்கள் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருவனவாய் அமைந்திருந்தன. தமிழ் இலக்கியத்தின் இன்றைய செல்நெறி, அதன் வளர்ச்சி, தொய்வு குறித்தும் இன்றைய இடதுசாரி இயக்கத்தின் போக்குகள் எதிர்காலத்தில் செய்யக் கூடியவை - செய்ய வேண்டியவை குறித்தும் பலவாறாக எமது உரையாடல்கள் பரந்து சென்றன. ஒரு உண்மைக் கலைஞனுக்கு இருக்கக் கூடிய மனிதாபிமானத்தைப் பெற்றவர். இளம் எழுத்தாளர்கள்பால் மிகுந்த அன்பும், பரிவும் கொண்டு, அவர்களது ஆக்கங்களைப் படித்து முன்னேற ஊக்கமளிக்கின்ற உயரிய தார்மீகத்தை அவரிடத்தே அவதானிக்க முடிந்தது. இத்தகைய தன்னலமற்ற தொண்டின் விளைவாக, திருகோணமலைப் பிரதேசத்தில் பல அருமையான இளம் எழுத்தாளர்கள் உருவாகி வந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. வளரும் முற்போக்கு இலக்கியத்திற்கு நந்தினி சேவியர் ஆற்றி வரும் தலைசிறந்த பணிகளில் இதுவும் ஒன்றாகும். இவையாவும் விவரித்து விளக்கப்பட வேண்டியதொன்று என்ற போதிலும் இந்தச் சந்தர்ப்பம் அதற்கு ஏற்றதன்று.

சந்திப்பு ஏற்படுத்திய உந்துதல் மீண்டும் நந்தினி சேவியரின் கதைகளை வாசிக்க வேண்டும் என்ற அவாவை ஏற்படுத்தியிருந்தது. மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அவரது 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்'

என்ற சிறுகதைத் தொகுப்பை தேடிப் பெற்றேன். அத்தொகுப்பை மீண்டுமொரு முறை வாசித்த போது ஏற்பட்ட வாசக அனுபவத்தை, உந்துதலை இங்கு பதிவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

நந்தினிசேவியர் தமது இளமைப்பருவ முதலே தமது சிந்தனை, செயற்பாடு, நடைமுறை என்பவற்றை பொதுவுடைமை இயக்கத்துடன் இணைத்துக் கொண்டவர். அந்தவகையில் அத்தகைய இயக்கத்தின் பின்னணியிலிருந்து தமது படைப்புகளை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இவ்வம்சம் இவ்வாறிருக்க, நந்தினி சேவியரின் படைப்புகள் தெளிவான பார்வையுடன் இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை என்றே தோன்றுகின்றது. அதற்கு அன்னாரின் எழுத்துக்கள் யாவும் முழுமையாகத் தொகுக்கப்படாமையும் ஒரு காரணமாகும். குறுக்கு வழித் திறனாய்வு முறையும் ஆழ்ந்த தேடலின்மையும் இந்நிலையை மேலும் வலுவாக்கியுள்ளது. இன்னொருபுறத்தில் குழு நிலைப்பட்ட இலக்கியகாரர்களின் இழிபறி நிலைகளும் நந்தினி சேவியரின் கலைப்படைப்பின் பெறுமானத்தைப் புரிந்து கொண்டு தொடரத் தெரியாமையைத் தோற்றுவித்திருக்கின்றது. இந்நிலையில் நந்தினி சேவியரின் கலைப்படைப்பின் ஆளுமையை, நேர்மையை இன்றைய விமர்சகர்கள் முழுமையாக வெளிக்கொணரத் தவறிவிட்டனர்.

இவ்வாறானதோர் சூழலில் நந்தினி சேவியரின் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பின் ஊடாக அவரது கலை - அனுபவம் - நேர்வை குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறிதொரு காரணமும் முக்கியமானதொன்றாகின்றது. தமிழ் இலக்கிய உலகில் நந்தினி சேவியர் கட்டுரையாளர், நாவலாசிரியர், கவிஞர் என வேறுபல ஆளுமைகளைத் தம் எழுத்தின் ஊடாக வெளிக்கொணர்ந்த போதும் சிறுகதைகளே அவரை கணிப்புக்குரியவராக்கியது.

நிலவுடமைச் சமூகமைப்பு சிதைவுண்டு முதலாளித்துவ சமூகவமைப்பு தோற்றம் பெற்றது. இந்தச் சூழலில் நிலப்பிரபுத்துவத்தின் உண்மை முகம் எப்படியிருக்கின்றது என்பதை, அதன் கொடூரத்தை எடுத்துக் கூறுவதற்காகத் தோற்றம் பெற்ற இலக்கிய வடிவமே நாவலாகும். அவ்வாறே, முதலாளித்துவ சமூகவமைப்பில் அது தோற்றுவிக்கக் கூடிய தனிமனித அவலங்கள், நெரிசல்கள், சலனங்கள் என்பனவற்றினை வெளிப்படுத்தக் கூடிய இலக்கிய வடிவமாகச் சிறுகதை தோற்றம் பெற்றது. நாவல் வாழ்க்கையை எடுத்துக் காட்ட சிறுகதை அதன்

மறக்க முடியாத பாத்திரங்களை நிகழ்வுகளை எடுத்துக் காட்டுகின்றது. நாவலுக்கும் சிறுகதைக்கும் இடையிலான பாரிய வேறுபாடு இதுவாகும்.

அந்தவகையில் சிறுகதை சமூகவுறவுகளில் வெளிப்படும் மனித நிலைகளைப் பின்புல உறைப்புடன் எடுத்துக் காட்டுகின்றது. இன்றைய உலகில் சிறுகதை பற்றிய சிந்தனைகளும் போக்குகளும் பல புதிய பரிமாணங்களையும் தோற்றுவித்திருக்கின்றது. தமிழச் சிறுகதை வரலாற்றிலும் இதன் பாதிப்பு நிகழாமல் இல்லை. வ.வே.சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரத்தில்' ஆரம்பித்து நமது யுகத்து ஆற்றல் மிக்க சிறுகதையாசிரியரான நீர்வைப் பொன்னையனின் 'காலவெள்ளம்' சிறுகதைத் தொகுப்பு வரை பலரும் பலவகைகளில் சோதனைகள் செய்து பார்த்து இந்தப் புதிய திசை வழியைக் கண்டடைந்துள்ளனர். புதிய திசை வழி என்பதன் அர்த்தம் மக்களால் மக்களுக்கான இலக்கியம் என்ற அம்சத்தைச் சுட்டி நிற்கின்றது. பல ஆண்டுகளாக வளர்ந்த இயக்கம், போராட்டம் செயல் என்பனவற்றின் ஊடாக வளர்ந்து வந்ததொரு இலக்கிய செல்நெறியாகும். இந்தப் பின்னணியில் சிறுகதை பற்றி நோக்குகின்ற போது அது வாழ்க்கையின் அவலங்களை, துன்பங்களை எடுத்துக் காட்டுகின்றது. தனி மனித வாழ்வில் ஏற்படும் அவலங்கள் துன்பங்கள் வெளிக்கொணரப்படாவிட்டால் அவற்றினை அழித்து விடவும் முடியாது. எனவே சிறுகதை மக்களின் வாழ்க்கை அவலங்களை, துன்பங்களை மட்டும் சித்திரிப்பதாக அன்று அதனை தீர்ப்பதற்காக உந்துதலையும் வழங்குகின்றது என்பதை சிறுகதை வரலாற்றினை ஊன்றிக் கவனிப்பவர்களால் உணர முடியும்.

நந்தினி சேவியர் தமது இளமைக் காலத்தில் யாழ். கிராமச் சூழலில் சந்திக்க நேர்ந்த சமூகப் பிரச்சினைகள் தொடக்கம் பின்னாட்களில் இடதுசாரிச் சிந்தனையாளராக, செயற்பாட்டாளராக வளர்ந்த காலத்தில் தாம் சந்தித்த அனைத்து சமூகப் பிரச்சினைகளையும் சிறுகதைகளாக்கியுள்ளார்.

இத்தொகுப்பில் இடம்பெறுகின்ற 'வேட்டை' என்ற கதை தம்பர் என்ற முதியவர்க்கும் அவர் வளர்க்கும் வெள்ளயன் என்ற நாய்க்கும் டையிலான உறவு குறித்துச் சித்திரிக்கின்றது. இது தொடர்பில் நந்தினி வியரின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொள்கின்றது:

"தம்பரும் நாயும் ஒரே மாதிரி. அந்த நாய்க்கும் வயது கடந்து விட்டது. மெலிந்து எலும்புகள் உடலைப் புடைத்துக் கொண்டு வெளியில் தெரிய, முன்னங்கால் ஒரு பக்கம் சாய்ந்து தம்பரைப் போலக் கம்பீரமாக நடக்கும் ஒரு அலாதி.... நாய்தான் தம்பர்...தம்பர்தான் நாய்"

எனத் தம்பருக்கும் நாய்க்கும் இடையிலான உறவைக் காட்டும் நந்தினிசேவியர் ஒரு படி மேலே சென்று நாயினை இழந்த போது தம்பர் அடைந்த வேதனையை அவர் இவ்வாறு தீட்டுகின்றார்:

> "தம்பர் கதறினார். அவரது தாயும் தகப்பனும் இறந்த போதும், மனைவி மக்கள் வீடு விழுந்து மடிந்த போதும் எப்படி அழுதாரோ அதேபோல...இது அவரது கடைசி நஷ்டம். அவரது உணவுக்கு வழி செய்யும் அந்த உயிரின் நாடித் துடிப்பு மெதுவாக அடங்கிக் கொண்டிருக்கின்றது."

மானுட நேயம் என்பது பலம் வாய்ந்ததாக மாறுகின்றபோது, இந்த நேயம் சக மனிதனில் மட்டுமல்ல தனக்குப் பிரியமான விலங்குகள், பறவைகள், மரங்கள் மீதாகவும் படர்ந்து விரிகின்றது. இந்த நாகரிகத்தின் பின்னணியில் தான் பாரதியும் காக்கை குருவி எங்கள் ஜாதி எனவும் வாலைக் குழைத்து வரும் நாய்தான் -அது மனிதனுக்கு நல்ல தோழனடி பாப்பா என்றும் பாடினார். பாரதி வழி வந்த நந்தினி சேவியரிலும் இந்த நாகரிகம் துளிர்விட்டுக் கிளைபரப்புகின்றது. கிராம வாழ்க்கையின் உன்னதங்களை அழகுற எடுத்துக்காட்டிய சிறுகதையாசிரியர், தன் கண் எதிரே உறுத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையின் குரூரங்களையும் அவலங்களையும் மனதைப் பிழியும் துன்பக் காட்சிகளையும் கண்டு தூரவிலகி நின்று ஆண், பெண் காமவேட்டையிலும் இருபாலாரின் சதைப் பசியையும் இலக்கியமாக்கி அதனூடே தமது வயிற்றுப் பிழைப்பிற்கும் கம்பீரத்திற்கும் வழி தேடிக் கொண்டவர்கள் மத்தியில் அத்தகைய வாழ்க்கைக்குள் காணப்படுகின்ற இன்னல்கள், முரண்பாடுகள், மோதல்கள் என்பனவற்றினையும் எடுத்துக் காட்டத்தவறவில்லை. அவரது தொகுப்பில் அடங்கியுள்ள அனைத்துக் கதைகளிலும் வேட்டையாடுதல், மில்லில் வேலை செய்தல், கிணறுவெட்டுதல், கல்லுடைத்தல், சைக்கிள் ஓட்டுதல், பட்டறையில் உளியும் கையுமாக இருக்கும் கொல்லர் எனப் பல கிராமத் தொழில்களின் மேன்மையைக் காட்டுகின்ற ஆசிரியர் அதன் பின்னணியில் உள்ள இன்னல்களையும் காட்டுகின்றார்.

இந்த இன்னல்களிலிருந்து விடுபடுவதற்கான மார்க்கம் யாது? மனித சமூகத்தின் வளர்ச்சியைத் தூண்டும் சக்தியாக அதிகாரத்திற்கு

எதிராகப் போராடும் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே சமூகத்தை மாற்றியமைக்க முடியும். தமது அடிமை முறையிலிருந்து விடுபட்டு பொருளாதார ரீதியாகவும் ஆத்மார்த்த ரீதியாகவும் சுதந்திரப் பிரஜையாக வாழ முடியும். இந்த விடுதலையை அடைவதற்கு தொழிலாளர்கள்-விவசாயிகள் தங்கள் நலன்சார்ந்த கட்சியை அமைத்துக் கொள்ள வேண்டும். புரட்சிகர சித்தாந்தம் இன்றி புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. அவ்வகையில் மிகவும் முன்னேறிய சித்தாந்தத்தையும் அது பெற்றிருக்க வேண்டும்.

இத்தகையதோர் மானுட அணியில் கால் பதித்து புதியதோர் சமுதாயத்தை நோக்கி நகர்வதே மலையக இலக்கியத்தின் இன்றைய தேவையாகும். இவவாறானதோர் சூழலில், இன்னொரு விடியலுக்காய் மனித சமூகத்தின் சிகரத்தை எட்டிப் பிடிக்க கடின உழைப்பை மேற்கொள்ளும் இலக்கியப் படைப்பாளிகளின் வரிசையில் நந்தினி சேவியர் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார் என நம்புகின்றேன்.

அந்த வகையில், நந்தினி சேவியரின் தனித்துவங்களில் ஒன்று தான், கட்சி இலக்கியம் குறித்த அவரது படைப்புகளாகும். கட்சி இலக்கியம் என்பது மனிதனை அவனது ஆக்கப்பூர்வமான செயலுக்கு இட்டுச் செல்லக் கூடியது. மனிதர் உணவை மனிதர் பறிக்கும் சமுதாயத்தை மாற்றுவதற்கான இயக்கமொன்றினை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியமாகும். அவ்விலக்கியமானது மக்களை அமைப்பாக்கம் செய்வதுடன் அது சமூகமாற்றப் போராட்டத்திற்கான ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட போராட்டங்களையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இதற்கு மாறாக கட்சியை உச்சமாகக் கொண்டு கட்சி உறுப்பினர்களைப் புனிதர்களாகக் காட்டுவது அல்ல. அவ்வாறே கட்சிக்குள் நடைபெறக் கூடிய விவாதங்களையெல்லாம் வெகுசனத் தளத்திற்குக் கொண்டு வந்து அவ் அமைப்பின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதும் கட்சி இலக்கியமாகாது. அது எதிர்ப்புரட்சிகரமான செயலாகும். மாஓ கட்சி உறுப்பினர்களிடையேயான முரண்பாடுகள் குறித்தும் மக்கள் மத்தியிலான முரண்பாடுகள் குறித்தும் தெளிவானதோர் நிலைப்பாட்டினை முன்வைத்தார். தமிழ்ச் சூழலில் கட்சி இலக்கியம் என்பது தமது அமைப்பு சார்ந்தவர்களை உச்சமாகக் காட்டுவதற்கும் தமது அமைப்பு சாராதவர்களை எல்லாம் எதிரியாகக் காட்ட முனைகின்ற ஒரு போக்காகவே வளர்ந்துள்ளதைக் காணலாம். பலர் புனை

பெயர்களைத் தமக்குச் சாதமான வகையில் பயன்படுத்திக் கொள்கின்றனர். புரட்சிகரமான சமுதாய மாற்றங்களை விரும்பும் எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் இந்த அறிவு ஜீவிகள் குழப்பவும் செயலற்றவர்களாகக் காட்டவும் முனைகின்றனர். மாக்சியர் என்ற வகையில் நோக்குகின்ற போது அவர்கள் இரு விதங்களில் தமது நிறுவன எதிர்ப்பாளர்களாகவும் சமூகச் செயற்பாட்டாளர்களாகவும் காணப்படுகின்றனர். ஒன்று கட்சி அமைப்பைச் சார்ந்த மாக்சியர்கள் அமைப்பு சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களாகக் காணப்படுவர். அமைப்பு சாராத மாக்சியர்கள் மக்களை விழிப்படையச் செய்வதுடன் அவர்களை ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போர்க்குணம் கொண்டவர்களாக மாற்றுவர்: சீன இலக்கிய முன்னோடி லூசுன் இதற்கு தக்க எடுத்துக் காட்டாகும். நமது சூழலில் சிலர் தமது தத்துவத் தெளிவின்மை காரணமாக இதனைக் கண்டு கொள்ளத் தவறியுள்ளனர். நந்தினி சேவியரின் 'நீண்ட இரவுக்கு பின்', 'மத்தியானத்திற்குச் சற்று பின்பாக', 'ஆண்டவனுடைய சித்தம்' ஆகிய சிறுகதைகள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும். அவரது கட்சி இலக்கியப் படைப்புத்திறனுக்கு உதாரணமாக 'நீண்ட இரவுக்கு பின்' என்ற கதையில் வரும் பின்வரும் பந்தி அமைந்து காணப்படுகின்றது.

> "...மச்சான் பாத்தியே ரத்தினபாலாவைப் போலையும் உன்னைப் போலையும் எத்தினை தமிழ் சிங்களச் சீவன்கள் கஷ்டப்பட்டு வந்ததோ தெரியாது, நாங்கள் கதைச்சதாலை எங்களுக்குப் பிரச்சினை விளங்கிச்சுது... மற்றதுகள்?"

> "குலம் உத்தியோகம் கிடைக்காது என்கிறதாலை மட்டும் நான் இந்த முடிவுக்கு வரயில்லை. நீங்கள் படுகிற கஷ்டத்தைப்பார்த்த பிறகும் இந்த நாட்டிலை இருக்கிற பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு நீங்கள் சொல்கிற மார்க்கந்தான் சரி எண்டு எனக்கு விளங்கி விட்டது. நானும் வரதனோடை சேர்ந்து உழைக்க வேணும். இண்டைய நிலையில அது கூடக் கிடைக்குமோ தெரியாது. ரத்தினபாலா போல நானும் விடிவுக்கான மார்க்கத்தைக் காண உழைக்கப்போகிறேன். அந்த நிலை வந்தால்தான் விடிவும் இந்த நிலைக்கு முடிவும் வரும். என்னை நம்பு நான் திருந்தியிட்டன்."

அந்தவகையில் நந்தினிசேவியரின் கதைகளில் இனம், மதம், மொழி, சாதி கடந்த மானுட விடுதலைக்கான சிந்தனையும்

அதனை அடைவதற்கான அமைப்பாக்கச் சிந்தனையும் முனைப்படைந்திருப்பதைக் காணலாம். இவ்வுறவுகள் கோட்பாடாக விவரிக்கப்படாமல் பாத்திரப் படைப்புகளின் ஊடாக அதன் அழகியல் அம்சம் குன்றாத நிலையில் சித்திரித்துள்ளமை அவரது தனித்துவமாகும்.

பிரான்சுப் புரட்சிக்காரர்களை அரசு கில்லட்டனில் வைத்து ஈவிரக்கமற்ற நிலையில் கொன்று குவித்ததைப் பார்த்துப் பார்த்து மரத்துப் போன மனித உள்ளங்கள், சில வேளைகளில் அதனைப்பார்த்துக் கொண்டே பெண்கள் எம்பிராய்ட் செய்தார்களாம். இன்று எமது சூழலிலும் நகர வாழ்க்கையில் அவலங்களையும் இன்னல்களையும் பார்த்துப் பார்த்து மரத்துப் போன மக்கள் எவருக்காகவும் உதவ முன்வராத பண்புக்கு ஆட்படும் அவலம் வளர்ந்து வருவதைக் காணலாம். இதன் தாக்கம் கிராமப் புறங்களையும் பாதிக்கத் தறவில்லை என்ற போதிலும் ஆங்காங்கே மனித நேயம் குடி கொண்டிருப்பதை அவரது 'ஒரு பகற் பொழுது' என்ற சிறுகதை சித்திரிக்கின்றது.

இந்நாட்டிலே இனவாதம் குமிழ்விட்டு மேற்கிளம்பிய போது அது தோற்றுவிக்கக் கூடிய பரிமாணங்கள், வாழ்க்கைக் கோலங்கள் சமுதாய அவலங்கள், அதன் பின்னணில் காணாமல் போகும் மனிதர்கள் பற்றிக் கூறுவதாக "தொலைந்து போனவர்கள்" என்ற சிறுகதை சித்திரிக்கின்றது. இக் கதை இன்றுவரை காணாமல் போனவர்களை ஞாபகப்படுத்துகின்றது.

இவ்விடத்தில் முக்கியமானதொரு விடயம் பற்றிய தெளிவும் அவசியமானதாகும். அதாவது நந்தினி சேவியர் இலக்கிய உலகில் காலடி வைத்த காலத்தில் தான் இலங்கையின் வடக்கில் சாதிய எதிர்ப்புப் போராட்டம் துளிர் விட்டு உச்சத்தை அடைந்திருந்தது. டானியல் இப்போராட்டம் சார்ந்த இயக்கத்திலும் போராட்டங்களிலும் பங்கு பற்றிய காலங்களில் எழுதிய சிறுகதைகளில் சாதியம் கடந்த வர்க்க உணர்வே முனைப்புற்றிருந்தது. இடதுசாரிக் கட்சியிலிருந்தும் இப் போராட்டங்களிலிருந்தும் அவர் தூர விலகிய பின்னர் சாதித் தீவிரமே அவரது படைப்புகளில் முதன்மைப்படுத்தப்பட்டது ஒருவகையில் டானியல் ஊடாக தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வும் போராட்ட உணர்வுகளும் வெளிக்கொணரப்பட்ட போதினும் மக்கள் இயக்கங்களையும் இலக்கியங்களைத் தாக்குவதற்கும் தகர்ப்பதற்கும் கூட அத்தகைய படைப்புகள் காரணமாக அமைந்தன. இந்தவகையில் நந்தினி சேவியரின் படைப்புகளை நோக்குகின்ற போது தேசிய,

ஜனநாயக சக்திகளின் குரலாகவே அவரது படைப்புகள் அமைந்துக் காணப்படுகின்றன. இறுதி வரை நந்தினி சேவியர் இத்தகைய இயக்கத்தோடு இணைந்திருந்தமையும் இதற்கான காரணமாக அமையலாம்.

இத்தொகுப்பில் அடங்கியுள்ள கதைகளை ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது முக்கியமானதொரு விடயம் பற்றியக் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். அதாவது நமது சிறுகதை எழுத்தாளர்கள் படைப்பாளிகள் திரும்பத் திரும்ப ஒன்றையே கூறுவதற்கான காரணம் அவர்களது சமூக தரிசனம் பற்றிய தெளிவின்மையாகும். நமது சிறுகதைப் படைப்பாளர்கள் சிலர் தத்துவார்த்தத் தெளிவு அல்லது அறிவு பெற்றிருப்பினும் அவர் அதனை கதை நிகழ் சூழலுக்கேற்ப, தமிழ் மரபிற்கேற்ப பொருத்தி பார்ப்பதில் இடறுகின்றனர். இந்தச் சமூக அனுபவம் விஸ்தரிக்கப்படாமையால் கலைப்படைப்புகளில் காலத்திற்கேற்ற உள்ளடக்கத்தினை அதன் வடிவம் சிதையாத வகையில் வெளிக் கொணரத் தவறிவிட்டனர். மாறாக நந்தினி சேவியரின் கதைகள் மனிதாபிமானமுள்ளவர்களின் இதயத்தை நெருடும் சக்தியாகப் பொழிந்து கிடக்கின்றது. கதையில் வரும் பாத்திரங்கள் உயிருள்ள ஜீவன்களாக இருக்கின்றன.

தேசியம், மண்வாசனை என்ற கோட்பாட்டு போராட்டங்கள் இயக்க ரீதியாக முன்னெடுக்கப்பட்ட போது மக்களின் சமகால வாழ்க்கை இலக்கியமாக்கப்பட்டது. பிரதேசம் சார்ந்த மொழிநடை பழக்கவழக்கங்கள் புதிய அழுத்தங்களுடன் இலக்கிய உலகில் சஞ்சரித்தன. இந்த இலக்கியப் போக்கினை நந்தினி சேவியர் கடைப்பிடித்திருந்தார் என்பதை இத் தொகுப்பில் அடங்கியிருக்கின்ற சிறுகதைகள் எடுத்துக் காட்டுகின்றன. கவிஞர் இ.முருகையன் வழங்கியுள்ள முன்னுரையும் நந்தினி சேவியரின் படைப்பாளுமையைச் சிறப்பான முறையில் மக்களுக்கு அறிமுகம் செய்கின்றது.

> 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற தொகுப்பு சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தார் தேசிய கலை இலக்கிய பேரவையுடன் இணைந்து வெளியிட்டுள்ளனர் (1993).

இனியொரு.கொம்

அரங்கியலுக்குப் புதிய பார்வை, புதிய பங்களிப்பு

('மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்' என்ற நூல் பற்றி சில அறிமுக குறிப்புகள்)

ஆசிரியர்: சி.மௌனகுரு
வெளியீடு: விபுலம், மட்டக்களப்பு.

மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் என்ற நூல் 1983 ஆம் ஆண்டு பேராசிரியர் சி. மௌனகுருவினால் தமது கலாநிதிப் பட்டப் படிப்பிற்காக யாழ்பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடாகும். 1998 ஆம் ஆண்டில் இவ்வாய்வேடு நூலாக வெளிவந்தது. இந்நூல் வெளிவந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. இக்கால இடைவெளியில் இந்நூல் குறித்து உருப்படியான விமர்சனங்கள் ஏதும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. இன்றைய சூழலில் பாரம்பரிய மரபுகளிலிருந்து முற்போக்கான அம்சங்களைப் பெற்று அவற்றினைக் காலத்திற்கேற்றவகையில் மாற்றம் செய்து நமக்கான நாடக மரபொன்றினை உருவாக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் இந்நூல் பற்றிய ஆய்வுகளும் மதிப்பீடுகளும் அவசியமாகின்றன. அத்தகைய ஆய்வுகளுக்கு அரங்கியலின் தோற்றம் குறித்த தெளிவு அவசியமானதாகின்றது.

நாடக - அரங்கியல் வரலாற்றை ஊன்றிக் கவனிக்கின்ற போது ஒரு உண்மை தெளிவாகத் தெரியவரும். மனித சமுதாய வரலாற்றில் மனிதர்கள் தங்கள் செயல்களைப் பாவனை அல்லது பிரதி செய்ய முற்பட்டபோது நடிப்பு தோன்றியது என்பர். புராதன சமுதாயத்தில் வேட்டையாடிய மனிதன் வேட்டைக்குச் செல்வதற்கு முன்னர் அவர்கள் அதனைப் பாவனை செய்ய முற்பட்டனர். இத்தகைய மனித நடத்தைகளினூடாகவும் மற்றும் தெய்வ நடவடிக்கைகளின் மூலமாகவும் நாடகம் தோன்றியது.

இவ்வாறாக ஆரம்ப காலம் முதலாகவே நாடக அம்சங்கள் மனித வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்று வந்திருப்பினும் அதனை ஆவணப்படுத்துவதற்கான முயற்சிகள் பிற்காலத்திலேயே தோன்றின. இவ்வடிப்படையில் தமிழ் நாடக இலக்கிய வரலாற்றினை நோக்குகின்ற

போது நாடக அம்சம் நிறைந்த கூத்து நூல்கள் நாயக்கர் காலத்திற்குப் பின்னரே தோன்றியுள்ளன. பள்ளு, குறவஞ்சி போன்ற நாடக இலக்கியங்கள் இவற்றிற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

இந்தப் பின்னணியிலே ஈழத்து நாடக இலக்கிய நூல்கள் குறித்து நோக்குகின்ற போது கதிரைமலைப் பள்ளு (1478-1519) என்ற நூலே முதல் நூலாகக் கொள்ளப்படுகின்றது. பிற்பட்ட காலங்களில் கணபதிஐயர், இணுவை சின்னத்தம்பிப்புலவர், கீத்தாம்பிள்ளை, மாதகல் மயில்வாகனம், சுந்தரம்பிள்ளை, குமாரசாமிப்புலவர் என இப்பட்டியலை நீட்டிச் செல்லலாம். இத்தகைய நாடக முயற்சிகள் யாவும் ஈழத்து அரங்கியல் துறையில் ஏற்பட்ட ஆரம்ப முயற்சிகளாகவே காணப்படுகின்றன. அரங்கியல் கோட்பாடுகளோ அல்லது ஆய்வுகளோ விருத்தி பெற்றிராத நிலையில் இவ்வாறான ஆரம்ப முயற்சிகள் கூட மெத்தப் பெரும் சாதனைகளாக இருந்தன.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வியின் தாக்கம், ஜனநாயகம், தேசிய சிந்தனைகள் காரணமாக ஏற்பட்ட பொது மக்கள் நலநாட்டம் என்பனவற்றின் தாக்கத்தை அரங்கியலிலும் காணக் கூடியதாக உள்ளது. இக்காலச் சூழலில் கிங்ஸ்பரி எழுதிய மனோன்மணி, சந்திரகாசம் முதலிய நாடகங்கள் அரங்கியல் துறையில் செல்வாக்குச் செலுத்துவனவாக அமைந்து காணப்பட்டன. புராண இதிகாச மரபுகளைத் துணையாகக் கொண்டு அவற்றில் சமூகம் சார்ந்த அம்சங்கள் புகுத்தப்பட்டன. இதன் இன்னொரு பரிணாமமாகவே பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் வரவு அமைந்திருந்தது. இவரது நாடகங்களில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு சிறப்பாகவே கையாளப்பட்டுள்ளமை அரங்கியல் துறையில் முக்கிய சாதனையாக அமைந்திருந்தது.

1950களுக்குப் பின், உலகளவில் தோன்றிய மக்கள் எழுச்சிகளினதும் சிந்தனைகளினதும் பின்னணியில் தேசியம், தேசிய இலக்கியக் கோட்பாடுகள் என்பன தத்துவார்த்தப் போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய பின்னணியில் அரங்கியல் சார்ந்த தமது பார்வையை செயற்பாட்டைப் பட்டை தீட்டிக் கொண்டவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். அரங்கியலில் தமது செயற்பாடுகளை முற்போக்கான திசையில் முன்னெடுத்துச் சென்றதுடன் "கலைக்கழக தமிழ் நாடகக் குழு" என்ற அமைப்பின் மூலம் புதிய தலைமுறையினரை அமைப்பு சார்ந்த செயற்பாடுகள் நோக்கி அமைப்பாக்கம் செய்தமை இவரது மிக முக்கியமான பங்களிப்பாகும்.

இத்தகைய சிந்தனையின் பின்னணியில் தம்மைப் பிணைத்துக் கொண்ட அதேசமயம் சரித்திரவியல் கண்ணோட்டத்திலும் சமுதாயக் கண்ணோட்டத்திலும் அரங்கியலை ஆய்வு செய்த முதல் தமிழறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. இவரது **'Drama in Ancient Tamil Society'** என்ற நூல் முக்கியமானதொன்றாகும். அரங்கியல் வரலாற்றை தமிழ் நாடக இலக்கிய வரலாற்று நோக்கில் ஆய்வு செய்வதாகவே இவ்வாய்வு காணப்படுகின்றது.

அண்மைக்காலத்தில் ஆய்வுலகில் அறிமுகமான சொற்களில் அரங்கியலும் ஒன்றாகும். தமிழ் நாடக இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட புதிய பரிமாணங்களையும் நோக்கு நிலைகளையும் தொகுத்துக் காட்டும் நிலையில் அச்சொல் அமைந்துள்ளது.

மேனாட்டு கல்விமுறை நம்மிடையே பரவியதன் பயனாகப் பொதுவாகவே உலகில் வேகமாகப் பரவிவரும் அறிவியல் துறைகளின் செல்வாக்கு தமிழ் நாடகத் துறையிலும் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருந்தது. அத்துடன் தமிழர் சமுதாயத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக, கலாசார இயக்கங்களின் விளைவாகவும் தமிழ் அரங்கியல் துறையின் பரப்பும் பெருகிவந்துள்ளது. இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர் குழந்தை சண்முகலிங்கம்.

இவ்வாறானதோர் சூழலில் பேராசிரியர் சி.மௌனகுரு அரங்கியல் பேராசிரியர், அரங்க ஆய்வாளர், இயக்குனர், பிரதி ஆக்குனர் எனப் பல்துறைசார்நத ஆளுமையுடன் அரங்கியல் துறையில் தமது சுவடுகளைப் பதிக்கின்றார். இந்தப் பின்னணியில் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களை சமுதாயக் கண்ணோட்டத்துடனும் அரங்கியல் நோக்குடனும் ஆய்வு செய்துள்ளார்.

சடங்கிலிருந்து எவ்வாறு கூத்துக்களும் பின் அவை நாடகங்களாகவும் விருத்தி பெற்று வந்துள்ளன என்பது பற்றித் தக்க ஆதாரங்களுடன் விளக்கும் இந்நூல், மட்டகளப்பு மரபு வழி நாடகங்களான வடமோடி, தென்மோடி கூத்து மரபுகளைக் கள ஆய்வில் பெற்ற தகவல்களினடிப்படையிலும் முதல் நிலை இரண்டாம் நிலை ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களினடிப்படையிலும் தமது ஆய்வினை முன்வைக்கின்றார். யாவற்றுக்கும் மேலாக இன்று மருங்கிவருகின்ற கூத்துகளான மகுடிக் கூத்து, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்துக்கள் தொடர்பிலும் இவ்வாய்வு கவனம் செலுத்துகின்றது. இக் கூத்துக்கள் சமூக இருப்புக் காரணமாகவும் மற்றும் கல்விப் புலத்தில் அவை புனரமைக்கப்படாததன் காரணமாகவும் அவை

எவ்வாறு நகைப்புக்குரியதாக மாறி மருங்கி வருகின்றது என்பதும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

பிரதி ஆக்கம் செய்வதனாலோ அல்லது பாடப்படுவதனாலோ மட்டும் அது நாடகம் என்ற வடிவத்தினைப் பெற்று விடாது. நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப்படும் நிகழ்கலையாகும் என்ற அரங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் குறித்து ஆய்வு செய்கின்றது இந்நூல். இந்த ஆய்வுப் பார்வை ஆய்வின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்று வந்திருப்பது இந்நூலின் தனித்துவமான சிறப்பாகும். இவ்வாய்வில் பல்வேறு விதமான நாடக மரபுகள்- குறிப்பாக கிரேக்க- ஆசிய மரபுகள் பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பினும், மட்டக்களப்பு நாடக மரபு எவ்வாறு அச்சூழலுக்கு ஏற்றவகையில் எத்தகைய தனித்துவமான அம்சங்களுடன் விளங்குகின்றன என்பது குறித்தும் - அதன் பொதுமைகள் குறித்தும் நூலாசிரியர் சுட்டிக் காட்டத்தவறவில்லை.

வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் தோற்றம், வளர்ச்சி, அமைப்பு முறை, கையாளப்படும் உத்திகள், ஆட்டக் கோலங்கள், உடைகள், ஒப்பனைகள் என்பனவற்றினை ஆய்வுக்குட்படுத்தி மட்டக்களப்புக்கான நாடக மரபொன்றினை உருவாக்க முனைகின்றது இந்நூல்.

மேலும் இந்நூல், நாடகங்களுக்கும் ஏனைய துறைகளுக்கும் இடையிலான உறவு பற்றியும் ஆய்வு செய்கின்றது. புவியியல், சமூகவியல், மெய்யியல், உளவியல், சரித்திரவியல் முதலிய துறைகளையும் தமதாக்கி அதன் ஒளியிலேயே மட்டக்களப்பு மரபு வழி நாடகம் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டுள்ளமை இந்நூலுக்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

மட்டக்களப்பில் தொழில் முறையான அரங்கியல் கலைஞர்கள் தோன்றாத நிலையில் அரங்கியல் துறையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை உள்வாங்காத அல்லது புனரமைக்கப்படாத நிலையில் பராம்பரிய மரபு வழிக் கூத்துகள் அழிந்து விடக் கூடிய அபாயம் உள்ளது. எடுத்துக்காட்டாக பறைமேளக் கூத்து மேற்குறித்த மாற்றங்களை உள்வாங்கத் தவறியதன் விளைவாக நகைப்புக் குரிய கூத்தாக மாறி மறைந்து வருவதனையும் காணலாம். அரங்கியல் துறையில் இத்தகைய முரண்பாடுகளை இனங்காண்கின்ற நூலாசிரியர் அவற்றினைக் கல்விப் புலத்தில் ஆய்வு செய்வதன் ஊடாக எத்தகைய மாற்றங்களையும் விரத்திகளையும் மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

எமது சூழலில் ஏற்படுகின்ற சமூகமாற்றங்களும் புதிய போக்குகளும் பாரம்பரிய கூத்துக்களிலும் தாக்கம் செலுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. அத்தகைய விருத்திகளும் மாற்றங்களும் எப்போதும் மானுட மேம்பாட்டை மையமாகக் கொண்டிருக்கும் எனக் கொள்ளவேண்டியதில்லை. அதனை சமூகமாற்றத்திற்குரியதாக மாற்றியமைக்க வேண்டியது தேசிய ஜனநாயக முற்போக்கு மார்க்சிய சக்திகளின் கடமையாகும். இத்தகைய கலை இலக்கிய பிரவாகத்தில் சங்கமம் கொள்கின்ற ஓர் ஆய்வாளரின் முயற்சியாகவே இந்நூலாக்கம் அமைந்துள்ளது.

நூலில் இணைக்கப்பட்டுள்ள வரைபடங்கள், இவ்வாய்வினை வாசகர் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய திறனை வழங்குகின்றது.

புதிய துறைகள் உருவாகின்ற போது அவற்றோடு நேரடித் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே பயன்பாடு உடையதாக தோன்றும். ஆனால் காலக்கிரமத்தில் அவைபற்றிய தகவல்களும் செய்திகளும் பரவுகின்றபோது அவை பொது மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமையும். இவ்வகையில் அரங்கியல் குறித்த காத்திரமான ஆய்வு நூல்கள் மிகக் குறைவு. அவ்வாறு செய்யப்பட்ட ஆய்வேடுகள் கூட பல்கலைக்கழகத்தினுள்ளேயே முடங்கிவிட்டன. வெறுமனே அவ்வாய்வுகள் ஆய்வாளர்களுக்கும் நிபுணர்களுக்கும் பயன்படும் வகையிலே அமைந்து காணப்படுகின்றன. இக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

இதுவரை வெளிவந்த அரங்கியல் தொடர்பான ஆய்வுகளை ஒப்பு நோக்குகின்றபோது மூன்றுவிதமான போக்குகளை அடையாளம் காணலாம். முதலாவது பகுதியினர் குறித்ததொரு கூத்து மரபை எடுத்துக் கொண்டு அதன் வடிவத் தூய்மை கெடாதவாறு புதிய உள்ளடக்கத்தைப் புகுத்தினர். இரண்டாவது பிரிவினர், பல கூத்து மரபுகளிலிருந்து பல்வேறுப்பட்ட ஆடல், பாடல், அளிக்கை முறைகளைக் கவனத்திலெடுத்து அதனூடாக புதிய உள்ளடக்கங்களை புகுத்தினர். மூன்றாவது பிரிவினர், நமது கூத்து மரபுகளுடன் உலக நாடக மரபுகளையும் இணைத்துப் புதிய உள்ளடக்கங்களைப் புகுத்தினர். தமிழர் சமுதாயம், பண்பாடு என்பனவற்றில் மாற்றம் ஏற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மாற்றத்தின் இயக்கவியலை உணர்ந்து அதனடிப்படையில் தமிழ் நாடக மரபை புனரமைத்ததில் சி. மௌனகுருவின் சாதனை முக்கியமானதாகும். அந்தவகையில் ஆய்வாளர்களுக்கும் பொது மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

முச்சந்தி ப்ளொக்ஸ்பொட்.கொம்

திருக்குறளுக்கும் கல்வியியலுக்குமான புதிய பார்வை - புதிய பங்களிப்பு

'திருக்குறளில் கல்விச் சிந்தனைகள் சமூக நோக்கில் ஒரு மறுவாசிப்பு' என்ற நூல் கலாநிதி ந. இரவீந்திரனால் எழுதப்பட்டு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் (விஞ்சு பதிப்பகத்துடன் இணைந்து) வெளியீடாக வெளிவந்துள்ளது. பொதுவாகவே கலாநிதி ந. இரவீந்திரனின் எழுத்துகள் சமூக அநீதிகளையும் அடக்குமுறைகளையும் அவற்றுக்குரிய பண்பாட்டுத் தளத்தில் அடையாளம் கண்டு வெளிப்படுத்தியுள்ளன. இந்நிலையில் திருக்குறளின் வழி கல்விச் சிந்தனை குறித்த ஆய்வையும் புதியதோர் கோணத்தில் ஆய்வு செய்ய முனைகின்றது இந்நூல்.

மிக அண்மைக் காலம் வரை திருக்குறள் கல்வித் தளத்தில் நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது. நவீன காலத்தே எழுந்த சிந்தனைகளில் மேலைத்தேயக் கல்வி மரபே, மனித சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக்க முடியும் எனவும் கீழைத்தேய சிந்தனைகள் யாவும் காலாவதியானது என்ற சிந்தனை மூன்றாம் உலக நாடுகளைச் சார்ந்த புத்திஜீவிகளின் மூளைகளைக் கசக்கிப் பிழிந்துள்ளது என்பதைக் கல்வித் துறைசார்ந்த ஆய்வுகளில் காணக்கிட்டுகின்றது. இந்தச் சிந்தனைப் போக்குகள் இரு தளங்களில் வெளிப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இன்றைய உலகமயமாதல் சூழலில் மேற்கு நாடுகளின் மேலாதிக்கப் பண்பாட்டை மக்களிடம் திணிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பண்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அதன் விளை பொருளாகத் தோன்றியுள்ள பின் நவீனத்துவம் முதலிய கோட்பாடுகள் "அடித்தள மக்களின் விடுதலைக்குத் தடையாக மதப்பற்றும் சாதிப்பற்றும் மட்டுமல்ல மொழிப்பற்றும் கூடத் தடையாக இருக்கின்றன" என்ற அடிப்படையில் தமிழரின் பண்பாட்டு பாரம்பரியங்கள் சகலவற்றையும் நிராகரிக்கின்றன. தமிழரின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் வெறும் பார்பனிய கலாசாரமாக மட்டுமே கருதியதால் ஏற்பட்ட சிந்தனை இது. இத்தகைய சிந்தனைகளின் மூலமாக நமது பண்பாட்டில் முகிழ்ந்து வந்த போர்க்குணமிக்க உள்ளடக்கக் கூறுகளையும் வடிவங்களையும் நிராகரிப்பதுடன் மக்களின் வாழ்விலிருந்து விடுபட்டு தொலைதூரத் தீவுக்குள் ஒதுங்கி விட்ட இந்த புத்திஜீவிகள் திருக்குறளை நிராகரிப்பது தற்செயல் நிகழ்ச்சியல்ல.

மறுபுறத்தில், முற்போக்குவாதத்தையும் மார்க்சியத்தையும் இன்றைய யதார்த்தச் சூழலுடன் பொருத்திப் பார்க்காது வெறுமே மூல நூலை ஒப்புவிப்போரும், பாராயணம் செய்வோரும் கருதுகோள்களை-முடிவுகளை மனப்பாடம் செய்து அவ்வப்போது பல்வேறு வடிவங்களில் தொடர்கிறார்கள் என்ற உண்மையை மேற்கோள் காட்டி விட்டாலே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடலாம் என முடங்கிக் கொள்வர்: இவர்கள் திருக்குறளை நிராகரிப்பது வியப்பிற்குரியதொன்றல்ல. தமிழர் சூழலுக்கேற்றவகையில்- இனக்குழு வாழ்க்கை முறையை அறியாது ஐரோப்பிய வர்க்க ஆய்வு முறையை அப்படியே பிரயோகிக்க முற்பட்டனர். இவ்வம்சம் தமிழ்ச் சூழலில் சாதிகளின் வடிவில் முனைப்புற்றிருந்த இனக்குழு வாழ்க்கை முறையையும் கலாசாரக் காரணிகளையும் புறக்கணிப்பதற்கு ஏதுவாக அமைந்தன. நமது பாரம்பரியம், கலாசாரம் என்பனவற்றை சமுதாயப் பின்புலத்தில் வைத்து நோக்கி அதனை ஒடுக்கும் வர்க்க மரபுகள், ஒடுக்கப்படும் வர்க்க மரபுகள் எவையெவை எனக் கண்டறிந்து சமூக மாற்றத்திற்குச் சாதகமான கூறுகளை இனங்கண்டு மனித குலத்தின் மேன்மைக்காக அதனைப் பயன்படுத்திக் கொள்ளல் காலத்தின் தேவையாகும். இந்நிலையில் திருக்குறள் பற்றிய மீள் வாசிப்பு அவசியமானதொன்றாகும். இந்நிலையில் திருக்குறள் பற்றிய இவர்களது பெரும்பாலான ஆய்வுகளில் திருக்குறள் குறித்து எழுந்த பொழிப்புரையே ஆய்வுக்கான மூல நூலாக அமைந்திருக்கின்றது. எனவே திருக்குறளில் வெளிப்பட்ட சமுதாயம் சார்ந்த சிந்தனையை இவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது இருக்கின்றனர். அதன் விளைவாக திருக்குறளை, நிலவுடைமை மற்றும் அதிகார தரப்பு சார்ந்த நூல் எனவும் அது பெண்ணடிமைத் தனத்தைப் போற்றுகின்ற நூல் எனவும் கருத்துக் கூறப்பட்டன.

இவ்வாறானதோர் சூழலில் திருக்குறளின் மூல நூலை சமூக நோக்கில் மறு வாசிப்புச் செய்த இந்நூலாசிரியர், திருக்குறளில் கல்வி குறித்த சிந்தனை முதன்மை பெற்றுள்ளது, என்பதனையும் அந்நூலில் சமத்துவ நோக்கு, அதிகாரத்துவ எதிர்ப்பு, பன்மைத்துவத்தைப் போற்றும் நெறி, உழைப்பிற்கு முதன்மை தரும் நோக்கில் உலகியலைப் போற்றும் பண்பு முதலியன குறித்த பார்வைகளை சமுதாய நோக்கில் எவ்வாறு வெளிக்கொணர்கின்றது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் முன்வைக்கின்றார்.

இன்றைய கல்வியியல் பற்றிய ஆய்வுகளை உன்னிப்பாக நோக்குகின்ற போது ஓர் உண்மை புலனாகாமல் போகாது. அதாவது

கல்விச் சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் சமூகவமைப்பில் கல்வி என்பது ஒரு தனித்துவமான பலம் என்றும் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மதம் முதலியன ஏனைய சுயேச்சையான தனித்தனிப் புலங்கள் என்றும் கருதினர். அதனால் கல்விப்புலத்தை ஒரு சுயேச்சையான முழுமையான புலம் என எண்ணி அதன் அடிப்படைக் கோட்பாடுகள், அதில் தோன்றும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் ஆகியவை பற்றி சுய அணுகுமுறையின் அடிப்படையில் தம் சிந்தனையில் தோன்றிய கருத்துகளை அப்படியே வெளியிட்டனர். கல்விக் கோட்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலமாக அல்லது கல்வி இலக்குகளில் மாற்றம் கொண்டு வருவதன் மூலமாக, கலைத்திட்டங்களில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாகக் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டனர். மாணவனொருவனைத் தமது சமூகவமைப்பிலிருந்து பிரித்தெடுத்துத் தனியே வைத்து இன்றைய சமூகவமைப்பிற்கு ஏற்றவகையில் அவர்களது குணாம்சங்களையும் நடத்தைகளையும் எவ்வாறு மாற்றலாம் என்றவகையிலேயே தான் கல்விக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வகையான கோட்பாடுகள் காலத்திற்கும் யதார்த்தத்திற்கும் பொருத்தமற்றவையாகக் காணப்பட்டன.

இன்றைய காலச் சூழலில் போற்றப்படும் கல்விச் சிந்தனையாளர்களான சாக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில், ரூசோ, பிரோபல், ஜோன்டூயி, விவேகானந்தர், இரவீந்திரநாத்தாகூர் முதலியோர் முன்வைத்த கல்விச் சிந்தனைகள், மற்றும் யுனெஸ்கோவின் கல்வி பற்றிய அறிக்கைகளில் கூறப்பட்ட கருத்துகள் திருக்குறளில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதைத் தக்க ஆதாரங்களுடன் வெளிக் கொணர்கின்றது இந்நூல். மேற்குறித்த கல்விச்சிந்தனையாளர்கள் யாவரும் சமூகத்திற்கும் கல்விக்கும் இடையிலான உறவு குறித்து சிந்தித்ததை விட, கலைத்திட்டத்தின் மூலம், பாடத்திட்டத்தின் மூலமான சமூகத்திற்குப் பொருத்தமான நற்பிரஜையை உருவாக்குவதையே தமது இலக்காகக் கொண்டு செயற்பட்டனர். இவர்களின் சிந்தனையில் சமத்துவமற்ற சமூக அமைப்பு குறித்தோ அதனடியாக வெளிப்பட்டு நிற்கின்ற வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், களவு, பொய், மோசடி, ஏமாற்று என்பன குறித்தோ அக்கறை ஏதும் இருந்ததில்லை. எனவே எல்லோருக்கும் பொதுவான கல்வி முறையை முன் மொழிந்தார்கள். அச்சிந்தனை யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றதாக அமைந்திருந்தது.

கல்வியானது எல்லோருக்கும் பொதுவானது என சிலர் தத்துவம் பேசினாலும், ஒரு சாதிய வர்க்க சமூகவமைப்பில் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கேற்பவே கல்வி முறையும் அமைந்து காணப்படும் என்பது சமூக நியதி. அந்தவகையில் சொத்துடைமைச் சமூகத்தில் உடைமை வர்க்கத்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான நற்பிரஜைகளை உருவாக்குவது கல்வியின் அடிப்படை இலக்காகும். திருக்குறளில் எவ்வாறு இவ்வேறுபாடுகள் களைந்து சகலருக்கும் சமமான கல்வி வழங்கப்படவேண்டும் என்ற சிந்தனை முன் வைக்கப்படுகின்றது என்பதை இந்நூலாசிரியர் தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியிருக்கின்றார். இது தொடர்பில் நூலாசிரியரின் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

"திருக்குறள் சமத்துவநெறிக்கு முதன்மையளிக்கையில் சமஸ்கிருத இலக்கியங்கள் பாலின சாதி பேதங்களை நியாயப்படுத்தியதற்கான காரணம் ஆராயத்தக்கது. ஒரு அடிப்படையான விடயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். கௌடலியம் மகதப்பேரசு உருவாக்கத்திற்கு கட்டியம் கூறியது. ஏனைய இரண்டும் (மனுதர்ம சாத்திரம், வாத்சாயனரின் காமசூத்திரம் என்பன- ஆசிரியர்) குப்தப் பேரரசுக்கு முன்னோட்டமாய் அமைந்தவை. அத்தகைய பேரரசுகளை உருவாக்க முனையும் சிற்றரசர்களுக்கான படைப்புகளாய் அவை அமைந்தன. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கட்டிக் காத்து சுரண்டும் வர்க்கத்தினருடைய சுகபோக வாழ்வை உத்தரவாதப்படுத்தி உழைப்பு சக்தி முழுவதையும் பிரயோகிக்கச் செய்துவிட ஏற்றதாக அரசு அமைவதற்கு வழிகாட்டுவன அந்த இலக்கியங்கள். மாறாக எந்த அரசையும் தனது வாசகப் பரப்பாகக் கொள்ளவில்லை திருக்குறள். முழுச் சமூகத்தையும் முன்னிறுத்துவது போலவே அரசுக்குரியவற்றையும் முன்மொழிகிறது திருக்குறள்" தவிர, நிதர்சனமாயிருந்த மூன்று பேரரசுகள் தகர்ந்து நூற்றுக் கணக்கான சிற்றரசுகளான நிலையில் - மீண்டும் பேரரசுருவாக்கத்துக்கு இன்னும் மூன்று நூற்றாண்டுகள் இருந்த சூழலில் உருவாகிய திருக்குறள் பேரரசுருவாக்கத்திற்கு எதிரானதாகவே இருந்தது என்பதையும் இந்நூல் எடுத்துக்காட்டியுள்ளது.

மேற்குலகச் கல்விச் சிந்தனை மரபில் கிரேக்கச் சிந்தனை மரபின் தாக்கம் அதிகமானதாகும். கிரேக்கச் சிந்தனை மரபில் சாக்கிரடீஸின் சிந்தனை மரபின் தொடர்ச்சியான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலானோரின் காலத்தில் கிரேக்க நாடு பலவிதமான அரசியல் குழப்பங்களுக்கும் முறைகேடுகளுக்கும், ஒழுக்கக்கேடுகளுக்கும்

உட்பட்டிருந்த காலப்பகுதியாகும். எனவே இவர்களின் சிந்தனைகளில் அரசியல், அறிவியல் தொடர்பான கருத்துகளே அதிகம் தாக்கம் செலுத்தக் கூடியவையாக அமைந்திருக்கின்றன. கல்விக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவை முதன் முதல் கல்வி உலகில் அறிமுகப்படுத்திய பிளேட்டோ ஆளும் வகுப்பினரையும் ஆள்வோரையும் ஞானமுள்ளவர்களாகவும் சுயநலனற்ற நற்பண்புடையோராகவும் மாற்றுவதே கல்வியின் அடிப்படை இலட்சியம் என வலியுறுத்தினார். அரிஸ்டாட்டில் காலத்தில் கிரேக்க நகர அரசுகள் பல மாசிடோனிய மன்னர்களால் வெற்றி கொள்ளப்பட்டு ஐக்கியப்பட்டு பேரரசின் ஆதிக்கம் நிலவியது. இந்தச் சூழலில் இவர்களின் கல்வி பற்றிய சிந்தனை அரசு தழுவியதாக அமைந்திருந்தது. இதனை நாம் வட இந்திய கல்விச் சிந்தனை மரபிலும் காணக்கூடியதாக உள்ளது. சாணக்கியன் முதலானோர் மகதப் பேரரசுக்கு உரித்தான கல்வி முறையினை முன்மொழிந்தனர். கௌதம புத்தர் அறம் சார்ந்த கல்வியை வலியுறுத்தியிருந்த போதும் அக்கல்வி முறையினைப் பரப்ப அரசு தேவையென்றவகையில் பிம்பசாரனை ஆதரித்திருந்த நிலையினைக் காணலாம். ஒரு வகையில் இச்சமூகவமைப்பில் அரசு தோற்றம் பெற்று நிலையூன்றியிருந்தமையினால் இவர்களின் சிந்தனை முறைகளிலும் இதன் தாக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் தமிழகத்தின் சமூக நிலைமை வேறு விதமாக அமைந்திருந்தது. அதாவது சங்ககாலத்தில் இனக்குழு வாழ் முறையில் மருதத்தினை மேலாதிக்கத்தின் விவசாய எழுச்சியைத் தொடர்ந்து தோன்றியிருந்த மூவேந்தர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியில் விவசாயம் கீழ் நிலை எய்துவதும், உழைப்பும் உழைப்பவரும் கீழாகப் பார்க்கக் கூடிய காலப்பின்னணி அது. மூவேந்தர் பேரரசுகள் தகர்ந்த பின்னர் மேற்கிளம்பிய அறநெறிக் காலத்தில் வணிகம் எழுச்சி பெற்று வணிக கருத்தியல்கள் மேலோங்கின. இந்தச் சூழலில் திருக்குறள் எவ்வாறு ஒரு வர்க்கச் சார்பற்ற நூலாகத் தோன்றியது என்பதை நூலாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:

> "வணிக வர்க்கம் அதிகார வலுவை உறுதியாகப் பற்றிவிட்ட காலத்தவையான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களின் சமண, பௌத்த சார்புபோலக் குறளில் வணிகச்சார்புத் தத்துவக் கூறுகள் முழு ஆளுமையுடன் மேலாதிக்கம் கொள்ளவில்லை. அதேவேளை விவசாய வாழ்முறை மாற்றத் தத்துவமான வைதிக நெறிகள் சார்ந்து முழுதாய் நிலத்துடன் பிணைக்கப்பட்ட சாதியப் பிளவுகளை வாழ்த்தி வரவேற்றிடவுமில்லை. வரலாற்று மாற்றத்தின் முற்போக்கான அம்சங்களை உள்வாங்கியதில் வணிகவர்க்கச் சார்பைக்

கொண்டிருந்த அதேவேளை, வறுமையை வளர்ப்பதற்கு ஏதுவான - உழைப்புக்கு எதிரான வணிகக் கருத்தியல் பண்புகளிலிருந்து விலகிநிற்க குறளால் முடிந்தது. ஏரின் பின்னது உலகம் எனப் பிரகடனப்படுத்தியதன் வாயிலாக வணிகவர்க்கப் பக்கமான முழுச்சாய்விலிருந்து மீண்டது இத்தகைய மாற்றக் காலச் சூழலில் பேணிக் கொண்ட சமநிலையின் பேறெனலாம்."

அந்தவகையில் எல்லோருக்கும் சமத்துவமான கல்வியை வழங்க வேண்டும் என்ற சிந்தனை திருக்குறளின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளதை வரலாற்று அடிப்படையிலும் தக்க ஆதாரங்களுடனும் ஆசிரியர் வெளிக் கொணர்ந்துள்ளார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய திருக்குறளில் இன்றைய கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துகள் எவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனையும் இந்நூல் அழகுற எடுத்துக் காட்டுகின்றது. இன்று யுனெஸ்கோ அறிக்கையில் முன் வைக்கப்பட்ட கல்வியின் நான்கு தூண்களாக அறிதலுக்காக கற்றல் எனும் விடயம் திருக்குறளில் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடமை எனும் அதிகாரங்களில் எவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளது எனவும், செயலாற்றலுக்காக கற்றல் எனும் இரண்டாவது விடயம் திருக்குறளில் வினைநுட்பம், காலமறிதல், வினைசெயல்வகை, போன்ற அதிகாரங்களில் வெளிக்கொணர்வது பற்றியும், சேர்ந்து வாழக் கற்றல் எனும் மூன்றாவது விடயம் திருக்குறளில் வாழ்க்கை துணைநலம், இல்லறம், மக்கட்பேறு, அன்புடைமை முதலிய அதிகாரங்களில் வெளிக்கொணர்வது பற்றியும், வாழ்வதற்காக கற்றல் எனும் நான்காவது விடயம் மக்கட் பண்பு நலம் எனும் அதிகாரத்தில் எவ்வாறு சிறப்பாக வெளிக் கொணரப்பட்டுள்ளது என்பது பற்றியும் ஆய்வு நிலை நின்று வெளிப்படுத்தியிருப்பது சிறப்பானதாகும். "திருக் குறளில் கல்விச் சிந்தனை" என்னும் இந்நூல் திருக்குறள் ஆராய்ச்சி வரலாற்றில் ஒரு புதிய வரவு என்பார் பேராசிரியர். இ. சுந்தரமூர்த்தி. திருக்குறள் ஆராய்ச்சித் துறையில் மாத்திரமன்று கல்வித்துறை சார்ந்த ஆராய்ச்சி வரலாற்றிலும் இந்நூல் புதிய வரவாக அமைந்துள்ளது எனலாம்.

இங்கு சமூகமாற்றச் சிந்தனையாளர்கள், செயற்பாட்டாளர்கள் மாற்றுக் கல்விக்கான் சிந்தனையை முன் வைத்தார்கள். அத்தகைய தமிழியியல் சூழலில் அத்தகைய சிந்தனைக்கான அடித்தளம் திருக்குறளில்

இருப்பதை இந்நூலின் ஊடாக அறிய முடிகின்றது. எதிர் காலத்தில் திருக்குறளில் வெளிப்பட்டுள்ள கல்விச் சிந்தனையை பாரதியார், மற்றும் மார்க்சிய சிந்தனைகளின் கல்விக் கொள்கைகளுடன் ஒப்பு நோக்குவதன் மூலமாக சுதந்திரமான கல்வி ஆய்வுகளை வெளிக் கொணரலாம். இத்தகைய ஆய்வுக்கு இந்நூல் வழிகாட்டியாக அமைந்துள்ளது எனக் கூறின் தவறாகாது..

முச்சந்தி ப்ளொக்ஸ்பொட்.கொம்

தகழியின் படைப்பாளுமை:
"செம்மீன்" என்ற நாவலை முன்னிறுத்தி...!

இந்தியாவின் இலக்கிய வளர்ச்சிக்குக் காத்திரமானதொரு உத்வேகத்தை வழங்கியது இந்திய விடுதலை இயக்கம். இவ்வியக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் சாதனை என்பன மக்கள் மத்தியிலே வெம்மை சூல் கொண்டெழுந்த போது சமூக பொருளாதார அரசியல் துறைகளில் தேசிய உணர்வு மிக்க பலர் தோன்றினார்கள். மேலும், அவ்வியக்கமானது தன் நோக்கி பல எழுத்தாளர்களையும் சிந்தனையாளர்களையும் ஆகர்சித்திருந்தது. இத்தகைய உணர்வுகளின் வெளிப்பாடாகத் தோன்றியதே 'இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கமாகும்.' இந்தப் பின்னணியில் உருவாகக் கூடிய புதிய போக்கை, ஆழமாக விசாலிக்கக் கூடிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புகின்ற பணியில் இ.மு.எ.ச. முன்னின்று செயற்பட்டது. இவ்வியக்கத்தின் பங்களிப்பு சாதனை பற்றி நோக்குவதற்கு இக்காலப் பின்னணியில் எழுந்த இலக்கியப் போக்குகள் குறித்த தெளிவு அவசியமானதொன்றாகும்.

1. முதலாவது பிரிவினர் கலை இலக்கியம் சமுதாய சட்டதிட்டங்களுக்கும் விதிகளுக்கும் உட்படாது என்றனர். இலக்கியத்திற்கு புறநோக்கம் ஏதும் இல்லை எனக் கருதிய இவ்வணியினர் இலக்கியத்தில் அழகே பிரதானமானது என்ற இலக்கியப் போக்கினை வலியுறுத்தி நின்றனர். "கலை கலைக்காக" என்ற கோட்பாட்டை வலியுறுத்திய இவர்கள் கலை இலக்கியத்தை சமூக முரண்பாடுகளின்றும் பிரச்சினைகளின்றும் பிரித்து நோக்கினர். மக்களின் பிரச்சினைகளோ அவர்கள் சார்ந்த அரசியலோ கலை இலக்கியத்தில் இடம்பெற்றால் இலக்கியம் அதன் தன்மையை இழப்பதாகக் கருதுகின்றனர். வெளிப்படையாகக் கூறுவதென்றால் சமூகத்தில் வாய்ப்பும் வசதியும் பெற்றவர்களின் குரலாகவே இப்போக்கு அமைந்து காணப்படுகின்றது. இலக்கியம் பிரச்சாரம் செய்யக் கூடாது எனக் கூப்பாடு எழுப்பும் இவர்கள் தமக்குப் பிடிக்காத-முரணான இலக்கியப் படைப்புகளையே அவ்வாறு நிராகரிக்கின்றனர். இவ்வம்சம்

அவர்களின் வர்க்க நலன் சார்ந்த அம்சமாகும். இவர்கள் அறிந்தோ அறியாமலோ சமூகமாற்றத்திற்காகப் பேனா பிடிக்கும் எழுத்தாளர்களின் படைப்புகளை நிராகரித்தனர்.

2. இரண்டாவது பிரிவினர், தேசிய பிராந்திய வெறியோடு இலக்கியத்தை நோக்கினர். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்னரே வாளோடு தோன்றியது மூத்த தமிழ்' , 'தலித் பற்றிய எழுத்துக்களை தலித்துக்கள் மட்டுமே எழுத முடியும்,' 'பெண்ணியம் சார்ந்த படைப்புகளை பெண்கள் மட்டுமே படைக்க முடியும்' என்ற குறுகிய சிந்தனைகளை முன் வைத்தனர். மார்க்சிய மூலவர்களான காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் இன்னும் இத்தகையோர் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து தோன்றவில்லை என்பதற்காக தொழிலாள வர்க்கம் சார்ந்த இவர்களின் சிந்தனைகளை நிராகரிப்பதா? பாரதி பிறப்பால் தலித் இல்லை என்பதாலோ அல்லது பெண் இல்லை என்பதாலே இவரது சாதி - பெண் விடுதலை தொடர்பாக முன் வைத்த கருத்துகளை நிராகரிப்பதா? என்ற வகையில் நோக்குகின்ற போது நிராகரிக்க வேண்டும் என்பதே இவர்களின் வாதமாக அமைகின்றது. உழைக்கும் மக்களின் போராட்டங்களைச் சிதைத்து அதனைக் கூனிக் குறுகி இறுதியில் படுதோல்வி அடையச் செய்வது இப்போக்கின் அடிப்படையாகும். இவ்வகையில் இவர்களால் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் யாவும் மனிதனை அவனது ஆக்கபூர்மான செயற்பாட்டிலிருந்து பிரித்து அழிவுக்கு இட்டுச்செல்வதாகவே அமைந்திருக்கின்றன.

3. மூன்றாவது பிரிவினர் கலை இலக்கியத்தை சமுதாயத்தின் விளை பொருளாக நோக்கினர். இலக்கியம் சமுதாயத்தின் உற்பத்திப் பொருளாக அமைந்திருப்பதுடன் அது சமுதாயத்தை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது என்பதை இவர்கள் உறுதியாக நம்பினர். அழகியல் நிர்மாணிப்புகளும் எழுத்து நடைகளும் சமுதாயச் சூழலுக்கு ஏற்றவகையில் மாறுகின்றன. அந்தவகையில் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளைச் சிறந்த முறையில் பிரதிபலிக்கும் போது இலக்கியம் புத்துயிர்ப் பெறுகின்றது. அவ்வாறில்லாதபோது தேக்கம் அடைகின்றது. சமூகமாற்றப்

போராட்டத்தில் கையிலேந்திச் செல்லக் கூடிய போர் வாளாக இலக்கியம் திகழ்கின்றது. எனவே சமூகமாற்றப் போராட்டத்தில் அக்கறை கொண்டு செயற்படுகின்றவர்கள் அரசியல் பொருளாதார போராட்டங்களில் எத்தகைய அக்கறை செலுத்த வேண்டுமோ அதேயளவு அக்கறையைக் கலை இலக்கியப் போராட்டங்களிலும் செலுத்த வேண்டும் என்பதன் அவசியத்தை உணர்ந்திருந்தனர்.

இவ்வகையில் இ.மு.எ.ச.திற்கு கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்ட் அல்லாத தேசிய ஜனநாயக முற்போக்குச் சக்திகளுமே உந்து சக்தியை வழங்கினர். இவ்வகையில் மூன்றாவது அணியினரே இ.மு.எ.ச.திற்கு இதயமாகத் திகழ்ந்தனர். இவ்வணியினர் புதியதோர் சமூகத்திற்காக அதன் மாற்றத்தில் பங்கு கொள்ளும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புத்திஜீவிகள் இன்னும் இத்தகையோரை இணைத்துக் கொண்டு சமூகப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இ.மு.எ.ச. சர்வதேச பாஸிசத்திற்கு எதிராகவும் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் உறுதிமிக்கப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இவர்களின் சிந்தனை, செயற்பாடுகள் என்பன ஒரு தத்துவார்த்தத் தளத்தில் முன்னேறிச் சென்றது. அத்தத்துவமானது அந்நியர் ஆட்சியை எதிர்ப்பதாக மட்டுமன்று, சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியாவில் தோன்றக் கூடிய புதியதோர் சமுதாய மாற்றம் குறித்தும் கவனம் செலுத்தத் தலைப்பட்டிருந்தன. இந்தியச் சூழலைக் கணக்கிலெடுத்து ஒவ்வொரு மாநிலத்திலும் முகிழக் கூடிய கலை இலக்கியங்கள் குறித்துத் தீவிர கவனமெடுத்தனர்.

இதன் தாக்கத்தை நாம் கேரளத்தில் தோன்றிய கலை இலக்கியப் படைப்புகளில் காணலாம். குமரன் ஆசான், கோசதேவ், வைக்கம் முகமது பஷிர், பொன்குன்றம் வர்க்கி, குரூப், பொற்றேகாட் முதலானோரின் எழுத்துகளில் இவ்வியக்கத்தின் தாக்கத்தைக் காணலாம். இவர்களில் சிலர் சுதந்திரப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குகொண்டவர்கள்.

இத்தகைய இலக்கியப் போக்கில் முக்கியமான தடத்தைப் பதித்தவர் தகழி சிவசங்கரம்பிள்ளை. அவர் எழுதிய முக்கியமான நாவல்களில் ஒன்றுதான் செம்மீன் (1958). இந்நாவலுக்கான கேரள சாகித்ய அகடமி பரிசும் கிடைத்தது. இந்நாவல் திரைப்படமாகவும் வெளிவந்தது. இதன் காரணமாக இந்நாவல் பலருடைய கவனத்தைப் பெற்றது.

கதை இப்படித்தான் தொடங்குகின்றது :

கேரளத்துக் கடற்கரை எத்தனையோ சிறு சிறு மீனவக் கிராமங்களைக் கொண்டது. கடலுடன் தம் வாழ்வை இணைத்துக் கொண்டு எளிய மீனவர்கள் வாழும் சின்னஞ்சிறு செம்படவச் சேரிகள். அத்தகைய சேரியை மையமாகக் கொண்ட மீனவர்களின் கதை.

கடின உழைப்பின் மூலம் உயர்ந்த வாழ்க்கையை அடையத் துடிக்கும் செம்மன்குஞ்சு, அவனது மகள் கறுத்தம்மா, வடிவும் திடகாத்திரமும் கொண்ட பெண். கடல்கன்னி என வர்ணிக்கத்தக்களவிற்கு அவள் நாவலில் பாத்திரமாக்கப்பட்டுள்ளாள். கறுத்தம்மா சிறுவியாபாரியான பரிக்குட்டி என்னும் முஸ்லிம் இளைஞனைக் காதலிக்கின்றாள். அவர்களது காதல் தூய காதல். அது நிறைவேறாது முடிகின்றது நாவல். அவர்களது காதல் நிறைவேறாது என்பது கறுத்தமாவுக்கும் பரிக்குட்டிக்கும் தெரியும். சமூகக் கட்டுப்பாடுகள் வலுவானவையாகக் காணப்படுகின்றன. பரிக்குட்டியிலிருந்து தன் நினைவை அகற்ற கறுத்தம்மாவால் முடியவில்லை. இவ்வாறான நிலையில் மிகுந்த சோகத்துடன் இளம் மீனவனான பழனி என்ற இளைஞனை மணக்கின்றாள். பழனி யாருமற்ற அநாதை.

கறுத்தம்மாவின் தந்தை செம்மன்குஞ்சு தான் சொந்தப் படகு வாங்குவதற்காக சம்பாதித்த பணத்துடன் மிகுதியை நிறைவு செய்ய பரிக்குட்டியிடம் பணத்தைப் பெறுகின்றான். பணத்திற்குப் பதிலாக மீன் தருவதாக வாக்குறுதி கொடுத்த செம்மன்குஞ்சு அதனை நிறைவேற்றத் தவறுகின்றான். பரிக்குட்டிக்கு மீன் கொடுக்கவும் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கவும் செம்மன்குஞ்சு மறுத்துவிடுகின்றான். காதலில் ஏற்பட்ட தோல்வி ஒருபுறமும் வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டம் இன்னொரு புறமும் வாட்டி வதைக்க பரிக்குட்டி அநாதரவான நிலையில் கடற்கரைப் பரப்பில் பைத்தியக்காரனைப் போல் அலைந்து திரிகின்றான்.

கரம் பிடித்த கணவனுக்கு உண்மையான மனைவியாக வாழ கறுத்தம்மா எவ்வளவோ முயன்று பார்த்தாள். இறுதியாக தோல்வியையே தழுவுகின்றாள். நாவலில் இந்த மனப் போராட்டத்தைச் சித்திரிக்கும் பகுதிகள் உள்ளத்தை உருக்குவனவாய் அமைந்துள்ளன. கறுத்தம்மாவின் ஒழுக்கத்தில் சந்தேகம் கொண்ட மீனவர்கள் ஒருசந்தர்ப்பத்தில் தோணியைச் செலுத்துவதில் முரட்டத்தனமாக நடந்துக்

பழனியை ஏசுகின்ற போது கறுத்தம்மாவையும் இழுத்துவிடுகின்றனர். மறுநாட் காலையில் பழனியை ஒதுக்கி விட்டே கடலுக்கு செல்லும் காட்சி, பழனி கறுத்தம்மாவின் மனவோட்டங்கள் யாவற்றையும் வாசிக்கின்ற போது வாசகனின் கண்கள் குளமாவதைத் தடுக்க முடியாது. கறுத்தம்மாவின் ஒழுக்கம் குறித்து பழனிக்கு நம்பிக்கையிருப்பினும் ஊர்ப்பழிச் சொல் இவ் இளம் தம்பதிகளின் வாழ்க்கையைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்குகின்றது.

இது இவ்வாறிருக்க கறுத்தம்மாவின் திருமணத்தின் போது ஏற்பட்ட தகராறில் நோயாளியாகிவிட்ட சக்கி (கறுத்தம்மாவின் தாய்) இறந்துவிடுகின்றாள். மரணப்படுக்கையிலிருந்த தன் தாயை விட்டுச் சென்றமையினாலும் பழனி கறுத்தம்மாவைக் கூட்டிச் செல்வதில் பிடிவாதமாக இருந்ததனாலும் கோபமடைந்த செம்மன்குஞ்சு சக்கியின் இறப்பை கறுத்தம்மாவிற்குத் தெரிவிக்க மறுத்துவிடுகின்றான். எனவே இறப்புச் சேதியை கறுத்தம்மாவிற்குத் தெரிவிக்க பரிக்குட்டியே திருக்குன்னப்புழைக்குப் போகிறான். அவனைக் கடற் கரையில் கண்ட சக தோணிக்காரர்கள் தவறான கதையைப் பரப்பி விடுகின்றனர். வீட்டிலிருக்கும் மனைவி கற்பொழுக்கம் கெட்டுவிட்டால் கடல் தாயின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவருவதுடன் அது கணவனின் உயிருக்கும் ஆபத்தாகிவிடும் என்ற புராணிக நம்பிக்கையைக் காரணம் காட்டி சக மீனவர்கள் பழனியிடமிருந்து விலகிவிடுகின்றனர். தனியாளாகி, தான் மிகவும் சிரமப்பட்டு வாங்கிய சிறிய தோணியிலேயே மீன் பிடிக்கப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் கறுத்தம்மாவிற்கும் பழனிக்கும் இடையே குடும்ப முரண்பாடுகளை உக்கிரம் அடையச் செய்கின்றன. இந்த வேதனையும் துன்பமும் வாட்ட பழனி கடலை நோக்கி செல்கின்றான். இந்நிலைமை அவனது உயிரை இழக்கும் அளவுக்கு கடலின் வெகு தூரத்திற்கே செல்ல வைக்கின்றது. சமூகத்தாலும் கணவனாலும் பாதிப்படைந்த கறுத்தம்மா விரக்தியின் விளிம்பிற்கே சென்று விடுகின்றாள். இந்தச் சூழல் இயல்பாகவே அவளை பரிக்குட்டி மீது காதல் கொள்ளவும் பாலுறவு கொள்ளவும் நிர்ப்பந்திக்கின்றது. இதே நேரத்தில் மீன் பிடிப்பதற்காக ஆழ் கடலுக்குச் சென்ற பழனி தூண்டிலில் மாட்டிய சுறாவுடன் போராடி உயிரிழக்கின்றான்.

எதிர்பாராதவிதமாக கடலில் ஏற்பட்ட புயல்காற்று அந்த கடற்கரையையே நாசமாக்கியது. கடலுக்குச் சென்ற பழனி திரும்பி வரவில்லை. இருதினங்களுக்குப் பின், ஆண் - பெண் ஆகிய

இரண்டு பிணங்கள் கடற்கரையில் ஒதுங்கின. அவை பரிக்குட்டியும் கறுத்தம்மாவும். அவை ஒன்றையொன்று ஆரத்தழுவிக் கொண்டன. அதேசமயம் செறீயெழிக்கல் என்ற அடுத்த ஊரின் கடற்கரையில் தூண்டிலை விழுங்கிவிட்ட சுறாமீனும் ஒதுங்கின.

இந்நாவலின் பாத்திரப் படைப்புகள் இவ்வாறு அமைந்திருக்கின்றன:

கறுத்தம்மாவை எடுத்துக் கொண்டால் கதாநாயகியான அவள் கடற் கரையில் தன் காதலன் பரிக்குட்டியிடம் உரையாடுவதிலிருந்து நாவலின் இறுதிவரையில் அவள் பாத்திரமாக்கப்பட்டுள்ளாள். பரிக்குட்டியின் மீது காதல் கொண்ட அவளின் மனவோட்டங்களையும் பூரிப்பையும் தகழி இவ்வாறு சித்திரிக்கின்றார்:

> " அன்றும் பரிக்குட்டி பாடினான். சிதலமடைந்த அந்தக் குடிசையினுள் முடங்கிக் கிடந்தவாறு கறுத்தம்மா பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஒரு விடயத்தை பரிக்குட்டியிடம் சொல்லிவிட வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. அதாவது: அவளுடைய மார்பகங்களை அவன் வெறித்துப் பார்க்க கூடாது. அதோடு இப்போது மற்றொரு விஷயமும் சேர்ந்து கொண்டது அவன் பாடவும் கூடாது!

வெகு உற்சாகத்துடன் பட்டுப் பூச்சி போல் அவள் பறந்து திரிந்து கொண்டிருந்தாள். இரண்டு நாட்களுக்குள் அவளிடம் என்ன என்ன மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன! ஆற அமர அமர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டிய சங்கதிகளும் முளைத்து விட்டன. தன்னையே அவள் அறிந்து கொள்ளத் தொடங்கினாள். வாழ்வுக்கே ஒரு முக்கியத்துவத்தைத் தருகின்ற விஷயங்கள் அல்லவா அவை! அவள் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிகுந்த கவனத்துடன் அவள் எடுத்து வைக்க வேண்டும். இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்த பின்னர், முன்போல் ஓடியாடித் திரிந்து கொண்டிருக்க முடியுமா? ஓர் ஆண்மகன் அவளுடைய மார்பகங்களை வெறித்து, அதன் அழகைப் பருகிவிட்டான். அவள் ஒரு யுவதியாகி விட்டாள் என்பதில் என்ன சந்தேகம்? (ப.25)

காதல் தோல்வியுற்று எல்லாவற்றையும் இழந்து தனக்காக வழி என்ன என்பதையே அறியாது நிற்கும் பரிக்குட்டியைத் தகழி பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகின்றார்:

"வாழ்க்கையில் தனக்குச் சொந்தமென்று இருந்த அனைத்தையும் இழந்துவிட்டுப் பித்துப் பிடித்தவன்போல் கடற்கரையில் வாய்விட்டுப் பாடிக்கொண்டே அலைந்து திரிந்து கொண்டிருக்கும் பரிக்குட்டி, பஞ்சமி மனமுருக, மிகுந்த பரிவுணர்ச்சியுடன் விவரித்தாளே, அதே கோலத்தில் கறுத்தம்மாவின் முன்னால் தோன்றினான். 'நான் வாழ்நாள் முடிவது வரை இப்படிப் பாடிக் கொண்டே இருப்பேன், திருக்குன்றப்புழைக் கடற்கரையில் கேட்க வேண்டாமா? அதற்காகத்தான், என்று அவன் அன்று சொன்ன வார்த்தைகள் அவளுடைய செவியினுள் முழங்கின."(ப.332)

அரயனாக வாழ்வதற்குரிய பழனியின் ஆளுமை குறித்தும் தன் மனைவி கறுத்தம்மா பற்றி எழுகின்ற ஊர்ப் பழிச் சொற்களும் அவனை வாட்ட, அத்தகைய யதார்த்தச் சூழலில் பழனியின் நிலையையும் மனவோட்டங்களையும் தகழி இவ்வாறு சித்திரிக்கின்றார்:

"..அரயனாக கடலின் அருமைக் குழந்தையாக வாழ்ந்தே தீருவது என்ற அவனது வேட்கை எத்தனை அழகானது. மலைபோல் ஓர் அலை - அன்று வரையிலும் அத்தனை பெரிய அலை ஒன்று எழுந்தது இல்லை என்று சொல்லலாம் - எழுந்து அவனது தலைக்கு மேலாக உருண்டோடிச் சென்றது. மறு வினாடி அதே அலை அவனது சக்தி அனைத்தையும் ஒட்ட உறிஞ்சி எடுத்துக் கொண்டு, பந்துபோல் அவனை ஒரே சுருட்டாய்ச் சுருட்டிக் கரை மீது தூக்கி எறிந்து விட்டுச் சென்றது.

பழனி தோல்வி கண்டு விட்டான். சோர்வினால் கீழே விழுந்து விட்டான் அவன். அவன் சட்டென்று எழுந்திருந்து வலைக்காரன் குஞ்சனுடைய வீட்டைப் பார்க்க ஓடினான். அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்து ஒரு கேள்வி கேட்க வேண்டியிருந்தது.
"கடல் வேலைக்கு நான் லாயக்கத்தவனா?"

ஒரு கணம் பதில் சொல்ல முடியாமல் தயங்கினான் குஞ்சன்:

"டேய், வந்து..வந்து"
" அது பொய். பச்சைப் பொய்,.. அவ கெட்டுப் போனவ இல்லே. எனக்கு நல்லாத் தெரியும்."
"இருந்தாலும் எல்லோரும் சொல்றாங்களே"
மிகுந்த கோபத்துடன் பழனி கத்தினான்:
"சொல்லாங்க"
அவன் வழி பார்த்துத் திரும்பி நடந்தான்.

இவ்வகையில் இந்நாவலை நோக்குகின்றபோது செம்மன்குஞ்சு என்ற மீனவனின் உயர்வையும் வீழ்ச்சியையும் குறிக்கும் கதையாக உள்ளது. இன்னொருவகையில் கடற்கரைக்கன்னி கறுத்தம்மாவின் தூய காதல் கதை காதலுக்காகத் தான் செய்வது தியாகம் என்றுணராத பரிக்குட்டியின் கதை ஊக்கமும் உற்சாகமும் உருவான கறுத்தம்மாவின் தாயான சக்கியின் கதை: ஆண்மையும் ரோசமும் கொண்ட பழனி என்ற இளைஞனின் கதை என்று சொல்லத்தக்க வகையில் கேரள மீனவக் கிராமமொன்றின் வாழ்வியல் கோணங்களின் பல் பரிமாணத்தை நாவலாசிரியர் சித்திரிக்க முனைகின்றார். ஏனைய பாத்திரங்களின் குணநலன்களை வாசகர்களே படித்துச் சுவைக்கவேண்டியதுதான்! இந்நாவலில் எளிய கதாபாத்திரங்கள் அசாதாரணமான ஆற்றலைப் பெற்று விளங்குகின்றது எனத் துணிந்து கூறலாம்.

இக்கதையின் ஊடாக ஆசிரியர் எதனை உணர்த்த வருகின்றார் என்பதும் சுவாரசியமான வினாவாகும்.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைப் படைப்பாக்கியவர்களை இரண்டு விதங்களில் காணலாம். ஒன்று நகர வாழ்வில் ஏற்படுகின்ற நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் கண்ட அதிருப்தி அடைந்தவர்கள் கிராமப்புற வாழ்வை இன்பலோகமாகக் கருதி அவ்விலக்கியத் தொகுதியை நோக்குபவர்கள். எளிமை, இனிமை, தூய்மை என்பன அவ்விலக்கியத் தொகுதியின் உயிர் நாடியாக அமைந்துள்ளது எனக் கூறுவர். இதனை வெறும் உணர்ச்சிமயமான கற்பனாவாதம் என விமர்சகர்கள் கூறுவர். கிராம வாழ்க்கை தூரத்தே விலகி நின்று பார்ப்பவர்களுக்கு இன்பலோகமாகத் தென்படும். அவை வெறும் புறத்தோற்றங்கள் என்பதை அறிவதற்கு அவர்களது உணர்வோ வர்க்கப் பின்னணியோ இடம் தருவதில்லை.' மறுபுறத்தில் அவ்வாழ்க்கையில் காணப்படும் முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் கூர்ந்து அவதானிப்பவர்களுக்கு அப்பண்பாட்டினுள் உள்ள மோதல்கள், பிணி, சூது, பொறாமை போன்ற பண்புகள் அங்குள்ள வடிவில் தென்படத் தடையிராது. பேராசிரியர் க.கைலாசபதி கூறுவது போல " மனிதன் படைத்த அத்தனைக் 'கெடுபிடி'களும் குறைந்த அளவிலேனும் அங்குண்டு. வாழ்க்கை அங்கும் போராட்டந் தான்." இந்த யதார்த்தத்தை உணர்ந்து வகைமாதிரியான சூழலில் இயங்கக் கூடிய உண்மையான மாந்தரைப் படைக்கும் படைப்பாளியே இன்றைய மக்கள் இலக்கியத்திற்கு உயிர் தருவோனாகின்றார். இந்த இரண்டாவது இலக்கியப் போக்கினை அழகுற வெளிப்படுத்தியதில் செம்மீன் நாவலுக்கு முக்கிய இடமுண்டு.

இந்நாவலில் கறுத்தம்மா பற்றி எழுகின்ற சமுதாயப் பழிச் சொற்கள் இதற்குத் தக்கசான்றுகளாகக் காணப்படுகின்றன. தான் திருமணமாகிச் சென்ற ஊரான திருக்குன்னப்புழையில் கறுத்தம்மாவின் மீது சக பெண்களால் பாடப்படும் வசைமொழிகள் பற்றி ஆசிரியர் பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகின்றார்:

"... அன்று கடற்கரையில் பெரும் பூசல் ஒன்று கிளம்பிற்று. வியாபாரத்திற்குச் சென்றுவரும் மற்ற எல்லாப் பெண்களும் ஒன்று சேர்ந்து, ஒரே கட்சியாக நின்று கொண்டு கறுத்தம்மாவை வாயில் வந்தபடி வைது நொறுக்கினர். அவர்களில், ஒருத்தியின் ஏச்சுக்குப் பதில் சொல்லக் கூடக் கறுத்தம்மாவின் நாவுக்கு நீளம் பற்றாது. பின் எவ்வாறு ஐந்தாறு பெண்களுக்குப் பதில் சொல்லப் போகிறாள் அவள்? இவள் வாய்விட்டு அழுது விட்டாள்! ஒருத்தி அப்போது கோபவெறியில் கத்தினாள்:

" ஏதோ ஒரு கடற்கரையிலே எவனோ ஒரு துலுக்கப்பயலெக் கட்டிக்கிட்டுக் கிடந்தவ, நம்ப கடற்கரையை அழிக்க வந்து சேர்ந்திருக்கா."

அப்போது மற்றொருத்தி சொன்னாள்:

"அவளுக்கு நிறைய வியாபாரம் கிடைக்கத்தான் செய்யும். எல்லா வீட்டிலேயும் அவ கிட்ட தான் வாங்கணும்னு ஆம்பளைங்க சொல்லுவாங்க. ஆளை மயக்குற ராங்கிக் காரியல்ல அவ."

இப்படியெல்லாம் கறுத்தம்மாவின் எதிரே நின்று பேசும்படியாகிவிட்டது.(பக்.244,245)

மேலும், செம்மன்குஞ்சு, அச்சக்குஞ்சு முரண்பாடு ஊர்மக்களுக்கும் செம்மன்குஞ்சுக்கும் இடையிலான முரண்பாடு: இறுக்கமான சமூகக்கட்டுப்பாடுகள் மரபுகள் சாதியப் பிரிவுகள், என்பன கிராம வாழ்க்கையில் காணப்படும் முரண்பாடுகளுக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தகைய முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டிய ஆசிரியர் அம்மக்களிடையே துளிர்விட்டிருந்த மனிதாபிமானத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. எடுத்துக்காட்டாக சக்கி இறந்த பின்னர்

செம்மன் குஞ்சு தனக்கு இரண்டாம் தாரமாக (ஒரு காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்து தனது கணவனின் இறப்பிற்குப் பின் நிராதரவான) கண்டங்கோரனின் மனைவியைத் திருமணம் செய்து கொள்கின்றான். காலப்போக்கில் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக அவளை செம்மன்குஞ்சு வீட்டை விட்டு வெளியேற்றி விட அவள் அநாதரவான நிலையில் கடற்கரையைச் சுற்றி வருகின்றாள். இந்தச் சூழலில் அவளுடன் முன்னர் முரண்பட்ட அச்சக் குஞ்சுவின் மனைவி அவளை வீட்டிற்கு அழைத்து ஆதரிக்கின்றாள். இது உழைக்கும் வர்க்கத்திற்கே உரித்தான நாகரிகத்தை எடுத்துக் காட்டும் ஒரு குணாம்சம்.

இந்நாவல் ஒருவகையில் மீனவர்களின் அயராத உழைப்பு, கொடிய வறுமை, எளிமை, இவற்றினடியாக எழக்கூடிய முரண்பாடுகள் என்பனவற்றைத் தத்ரூபமாகச் சித்திரித்துள்ளது. இந்த வாழ்க்கையை அவர்கள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள் என்பது பற்றியும் நல்லோரைக்காத்து தீயோரை அழிக்கும் கடலன்னை, அதன் மீது அம்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், அவற்றினடியாக எழுகின்ற கருத்தோட்டம் போன்ற அம்சங்கள் இந்நாவலில் நுண்ணயத்துடன் தீட்டப்பட்டுள்ளது. அவ்வாறே இந்தக் கடினமான சூழலிலும் அவர்களின் வாழ்வில் இடம்பெறக் கூடிய இன்பங்கள், களியாட்டங்கள் குறித்தும் ஆசிரியர் படைப்பாக்கம் செய்யத் தவறவில்லை.

வலை நிறைந்து வழியும் நாட்களில் மீனவர்கள் அருகே உள்ள நகரத்திற்குச் சென்று கொண்டாடுவார்கள். அவ்வாறே ஆண்டுக்கொரு முறை ஆயில்ய விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுவார்கள். இந்த வாழ்க்கை முறையில் முகிழக் கூடிய காதல் - நிறைவேறிய நிறைவேறாத காதல் எல்லாம் மனக்கண் முன் தோன்றும் காட்சி நாவலில் வருகின்றது. இவ்வாறு நெற்கன்றம், திரிகுன்றம் புழைகிராமத்து மீனவர் குடிசைகளும் அவர்களது வாழ்வும் எவ்வாறு எளிமையும் அன்பும் நிறைந்துள்ளது என்பது பற்றியும் நாவல் சித்திரிக்கின்றது.

மற்றொரு முக்கியமான விடயம், இந்நாவலின் உரையாடல்களெல்லாம் கேரளத்தில் உள்ள மீனவச் செம்படவர் சேரிகளின் மண்வாசனை மணங்கமழும் பேச்சுத் தமிழில் அமைந்துள்ளன. அவற்றைப் புரிந்து கொள்வதில் சிரமம் இல்லை. நாவலில் பின்வரும் உரையாடல்கள் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

செம்மன் குஞ்சுக்கும் சக்கிக்கும் இடையிலான உரையாடல்:
செம்மன் குஞ்சு சொன்னான்:
"அதெல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம். நானும் ஒரு மனிசப் பிறவிதானே."
சக்கி கோபத்துடன் சொன்னாள்:

"பூ ! மனிசன் அப்படி நெனச்சிக்கிட்டிருந்தாப் போதும். மக அநியாயமா கெட்டுப் போவா ஆமா,"
"போடி போ ! அதுக்கு ள்ளே நான் அவளைக் கட்டிக் கொடுத்திடுவேன்"

"அது என்னமா முடியும்? காசு கொடுக்காமெ எந்தப் பய வருவான்னு கேக்கறேன்"
"இதைக் கேளு புள்ளே" என்று ஆரம்பித்து, தன் வாழ்க்கைத் திட்டத்தை சவிஸ்தாரமாகச் சொன்னான் செம்மன் குஞ்சு. கறுத்தம்மாவும் அதை நூறாவது முறையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வருத்தத்துடனும், கோபத்துடனும் சக்கி கேட்டாள்:

"அப்போ தோணியும் வலையும் சம்பாதிச்சிட்டு உக்காந்திரு." (ப. 21)

இவ்வாறே கறுத்தம்மாவிற்கும் பரிக்குட்டிக்கும் இடையிலான உரையாடல்களும் சுவாரசியமிக்கதாய் காணப்படுகின்றன.

இருவரும் ஒருவருக்கெருவர் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அந்த மௌனநிலை அப்படியே நீடித்து விடுமோ என்றுக் கவலை கொண்டவள் போல் கறுத்தம்மா சொன்னாள்:

"அம்மா இப்போ வந்துடுவாங்க."
"அதனால என்ன?"

பயந்து போய் அவள் சொன்னாள்:

"ஐயோ, அது தப்பு. பெரிய தப்பாய் போயிடும்."

"நீ உள்ளே இருக்கே. நான் வெளியிலே நின்னுக்கிட்டிருக்கேன். பின் என்னவாம்?"

அதையும் அவனிடம் விளக்கிப் புரியவைக்க வேண்டும். எப்படி முடியும்? சொல்ல ஆரம்பித்தால், அது எவ்வளவு இருக்கிறது!

பரிக்குட்டி கேட்டான்:
"உனக்கு எம்மேலே பிரியம் தானே?"

அவள் சட்டென்று பதில் கொன்னாள் :

"ஆமா"
பரிக்குட்டி ஆவேசத்துடன் கேட்டான்:

"அப்படீனா ஏன் நீ வெளியே வராம உள்ளேயே இருக்கே?"

"நான் வரமாட்டேன்"
"நான் சிரிப்பு மூட்டமாட்டேன். ஒருதரம் உன்னைக் கண்ணாலே பார்த்துப்புட்டு போறேன்."

"ஐயோ வேண்டாம்" என்றாள் அவள், ஆற்றாமை தொணிக்கும் குரலில்.(பக்.29,30)

இவ்வகையில் பேச்சுத் தமிழைச் சிறப்பாகக் கையாண்டுள்ளமை நமக்கு ஓர் இன்ப அனுபவமாகவே உள்ளது. இத்தகைய பேச்சு நடை இந்நாவலின் தனிச்சிறப்பு. இவ்விடத்தில் தகழியின் மொழிநடை குறித்து டாக்டர் ஜோசப் முண்டச்சேரி தகழியின் தேர்ந்தெடுத்த சிறுகதைகள் என்ற தொகுப்பின் முன்னுரையில் கூறுகின்ற பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

"தகழியின் மொழிநடையைப் பற்றி ஒரு வார்த்தை. பல்வேறு மேடைகளில் தகழி, தான் இலக்கணம் படித்தவன் இல்லை என்றும் தனக்கு மொழிப் புலமை இல்லையென்றும் பிரகடனப்படுத்தியுள்ளார். ஒரு வகையில் அதுவும் சரியே. அவர் படித்தது வாழ்க்கையின் இலக்கணத்தைத்தான் என்பதும், எழுதியது வாழ்க்கையின் மொழியைத்தான் என்பதும் தான் உண்மை. வாழ்க்கையின் ஆழமான பகுதிகளைப் பற்றி அறிய வந்த போது சொல்லவேண்டியதைச் சொல்லத் தொடங்கினால் அதற்காக அவருக்கென ஒரு மொழி

உண்டாயிற்று. தான் சொல்லக் கூடிய விடயத்தைச் சரியாக விளக்கிச் சொன்னார் என்பது இருக்க, அதன்பின் அதைத் தெளிவாகக் கூறும்போது அந்த மொழிக்கு ஓர் இலக்கணம் தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் ஆரம்பத்தில் ஒரு விடயத்தில் மற்ற எழுத்தாளர்களைப் போலவே, தகழியும் கற்பனையையும் மொழியையும் வெவ்வேறாகவே கண்டுள்ளார். அதோடு மட்டுமல்ல அப்போது கற்பனையை விட மொழி நடைக்கு அவர் முக்கியத்துவம் அளித்தார்போ என்ற சந்தேகமும் வருகிறது. அதனால் தகழியின் மொழிநடை கொஞ்சம் கூடுதலாகவே செயற்கைத்தன்மை தானாகவே மறைந்துவிட்டது. பெரிய நாவல்களிலெல்லாம் அவர் எழுதிய மொழியை அதுவரை அவருடைய பேனா அறிந்திருக்வில்லை எனலாம். அந்தளவிற்கு இயல்பாகவும் அழகாகவும் உள்ளது அந்த மொழிநடை. தகழியின் ஒவ்வொரு வாக்கியத்தாலும் எந்த ஒரு வாசகனின் இதயத்திற்குள்ளும் சிரமமின்றிப் பதிய முடியும். அதுவே ஒரு நல்ல நடையின் முதல்தர லட்சணமாகும்" (மே.கு.நூ.பக்.319,320)

காதல் என்பது இன, மத, மொழி, சாதி, பிரதேசம் கடந்தது எனச் சிலர் தத்துவம் பேசினாலும் கூர்ந்து நோக்கின் காதலும் இத்தகைய தாக்கங்களுக்கும் பாதிப்புக்கும் உட்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இங்கு திருமணம் என்பது இரு உள்ளங்களின் - உடலின் சேர்க்கை என்பதை விட இரு குடும்பங்களின் சேர்க்கையாகவே அமைந்து காணப்படுகின்றது. அந்தவகையில் காதல் வாழ்க்கையில் மதம் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பு பற்றி இந்நாவல் அழகுற எடுத்துக் காட்டுகின்றது. இதனை இன்குலாப்பின் 'மதம்' என்ற குறுநாவலும் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. நாவலில் பச்சைக் கிளிக்கும் யூசுப் இடையிலாக மலரும் காதல் மதவெறி தாக்குதல்களால் சின்னாப்பின்னமாக்கப்படுகின்றன. இவையெல்லாம் எதனை எடுத்துக் காட்டுகின்றன? மதவெறி என்கின்ற நச்சு மரம் படர்ந்து நிற்பதைக் காட்டுகின்றது. இம்மரத்தை இலகுவாக வெட்டியெறிந்துவிட முடியாது. பலம் கொண்ட கோடரியால் பிளக்க வேண்டும் என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. அந்தவகையில் இந்நாவல் மனிதனில் நம்பிக்கையை ஏற்படுத்தி அவனை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுகளுக்கு இட்டுச் செல்கின்றது.

நாவலில் கடற்கரை வாழ்வு சார்ந்த "இருத்தல் ஒழுக்கம்" சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆடவர் தம் தொழிலுக்காக கடலை

நோக்கிச் செல்வதும் பெண்கள் அவ்வாடவருக்கு ஏதும் நடக்காமல் இருப்பதற்காக கற்பொழுக்கத்துடன் கடலன்னையைப் பிரார்த்தித்து இருக்க வேண்டும் என்பது இவ்வொழுக்கத்தின் பாற்படும். அவ்வகையில் பெண்களுக்கு கற்புத் தூய்மை - ஆண்களுக்கு உடலுறுதியும் நெஞ்சுரமும் முக்கியமான இலட்சணங்களாகும். கரையில் உள்ள பெண்களின் கற்பின் வலிமையினால் தான் கடலில் படகேறிச் செல்லும் ஆடவரின் உயிர் பாதுகாக்கப்படுகின்றது என்ற புராணிக நம்பிக்கை இதன்பாற்படும்.

பெண்களுக்கு கற்பு "நாற்படையும் நாற் குணமும்." கொண்டதாக இருக்க வேண்டும் என பெண்களின் ஒழுக்கம் பற்றிப் பண்டைய இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய இலக்கியங்கள் வரையில் போதித்து வருகின்றன. இந்நாவலில் இடம் பெறும் இந்நம்பிக்கை குறித்த தகழியின் காலத்திலேயே பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. இது தொடர்பில் தகழியின் பின்வரும் வரிகள் கவனத்தில் கொள்ளத்தக்கது:

"செம்மீனைப் பற்றி வெளிவந்த பலத்த விமர்சனங்களையெல்லாம், நான் குருட்டு நம்பிக்கையை உறுதிப்படுத்த முயன்றுள்ளேன் என்பதாக இருந்தன. தூரத்தில் நடுக்கடல் வரையில் சிறு படகில் மீன் பிடிக்கச் செல்பவனின் உயிருக்குப் பாதுகாப்பு, கடற்கரையில் வசிக்கும் அவனுடைய மனைவியின் நன்னடத்தையில்தான் உறுதிப்பட்டுள்ளது எனும் நம்பிக்கையானது ஒரு குருட்டு நம்பிக்கையாகி விட்டிருக்கிறது போலும். ஒரு பெண்ணின் நன்நடத்தையைப் பற்றி ஆழமாகச் சொல்லுவது தவறா? எப்போதாவது மனம் நிலைத்தடுமாறுவது போல் தோன்றும் போது, 'என் கடலம்மே' என்று அழைத்து கடற்கரையிலேயே கவிழ்ந்தடித்து படுத்துக் கொள்ள வேண்டும் என்று நல்லபெண் அரையத்தி (மீனவப் பெண்) கறுத்தம்மாவிற்கு உபதேசிக்கின்றாள். நல்லது கெட்டது அறியாத கடற்கரையோரம் உள்ள கள்ளமற்ற ஆத்மாக்களான கறுத்தம்மாக்கள் கடல் தாயிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாமல் வேறென்ன செய்யப் போகிறார்கள். கடும்புயலிலும் சூறாவளியிலும் சுழற்சியிலும் உழலும் பழனியின் மனதிற்குத் தைரியம் அளிப்பதும், தசைநார்களுக்குக் கடும்புயலையும் வட்டம் சுற்றிச் சுழலும் கடல் அலைகளையும் தோற்கடிக்கக் கூடிய உறுதியைத் கொடுப்பதுவும், வெகுதூரத்தில் கடற்கரையிலுள்ள குடிசையில் இருக்கும் தன்னுடைய வாழ்க்கைத் துணைவி கற்புடையவள் தான் என்னும் நம்பிக்கையேயாகும். ஒரு நல்ல போக்கு நிலைப்பதற்காக ஒரு குருட்டு நம்பிக்கை நிலைத்திருக்கின்றது என்றால் அதிலென்ன தவறு இருக்கின்றது? மனிதனின் ஜீவித பார்வை

முழுவதும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டால் தாயையும் தந்தையையும் எப்படிக் காண முடியும்? கணவன் மனைவியின் உறவை அறிவியல் கண்ணோட்டத்தில் மட்டுமே நோக்கினால், மனைவிக்கு எத்தனை காதலர்கள் உண்டாகிறார்கள் என்பதிலும் தவறில்லை. மனிதனும் ஒரு மிருக இனத்தைச் சார்ந்தவன்தான்." (1988ல் கேரளப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து, குறிஞ்சிவேலன் (தொகுப்பும் மொழிபெயர்ப்பும்) 1994, தகழி, வேர்கள் இலக்கிய இயக்கம். பக்.342,343.)

இவ்வகையான கருத்துகள், மரபுகள் யாவும் ஆண் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியதுடன் பெண்களின் மானசீகமான உணர்வுகள் மறுக்கப்படுவதற்கும் அவை காரணமாக அமைந்தன. கற்புநெறியை பெண்ணுக்கு மட்டும் உரித்தானதாக நோக்குவது ஆண் ஆதிக்கம் சார்ந்த பிற்போக்கான பார்வையாகும். இந்நாவலிலும் இக்கருத்து முனைப்படைந்து காணப்படுகின்றது. இப்பண்பு இந்நாவலின் பலவீனமான அம்சங்களில் ஒன்றாகும்.

இவ்விடத்தில் பிறிதொரு விடயம் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. இந்தியாவின் இனக்குழு வாழ்க்கை முறையை உணராத சில அதி தீவிர புரட்சியாளர்கள் தம்மைப் புரட்சியின் புனிதர்களாகக் காட்டுவதற்காக ஐரோப்பாவில் இடம் பெற்ற வர்க்க ஆய்வை இந்தியச் சூழலிலும் அப்படியே பொருத்திப் பார்க்க முற்பட்டனர். அவர்களால் ரசிய, சீன புரட்சியை நிகழ்த்திக் காட்டியளவிற்கு இந்தியப் புரட்சியை நிகழ்த்திக் காட்ட முடியாமல் போய்விட்டது துரதிஷ்டமானதொன்றே. அப்பார்வையைத் தமிழியல் சூழலுக்கு ஏற்பப் பொருத்திப் பார்க்கத் தவறிய இவர்களின் சிந்தனை, செயற்பாடு என்பன தனக்கும் நட்டத்தை ஏற்படுத்தியதுடன் சமுதாயத்திற்கும் நட்டத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. இந்தப் பின்னணியிலிருந்து அதி தீவிர இடதுவாதத்தால் முடக்கப்பட்டவர்கள் சிலரால் இந்நாவல் மீது கர்ணகொடூரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. மீனவர் சமூகம் சார்ந்த அரசியல் எழுச்சிகளையோ அம்மக்களிடையே எழக் கூடிய இயக்கங்களையோ தகழி படைப்பாக்கித் தரவில்லை என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டன. இந்த விமர்சனத்தின் பின்னணில் தகழியின் முழு இலக்கியப் பங்களிப்பும் நிராகரிக்கப்பட்டன. இது தொடர்பில் தகழியின் பின்வரும் பதில் கவனத்தில் கொள்ளத்தக்கதொன்றாகும்:

"...கம்யூனிட்டுகளின் அன்றைய திட்டங்களை வைத்துக் கொண்டு திறனாய்வாளர்கள் இலக்கியப் படைப்புகளை மதிப்பிடுவார்கள். இந்தக் கட்டத்தில் தான் 'செம்மீன்' எழுத உறுதி கொண்டேன். கடலோர மீனவர்கள் அப்போதும் சங்கம் இல்லாமல் தான் இருந்தார்கள். எந்தவொரு கொடியின் கீழேயும் அவர்கள் அணிவகுக்கவில்லை. அவர்களின் வழக்கமே அதுதான். 'செம்மீன் என்ற நாவலை நான் எழுதப் போகின்றேன் என்று நான் கொஞ்ச நாட்களாக சொல்லிக்கொண்டு வந்தேன். அந்த நாவலில், நடுத்தர வாசிகளின் சுரண்டலையும் அதிலிருந்து தப்பிப்பதற்கு மீனவத் தொழிலாளர் வர்க்கம் ஒன்று சேர முயல்வதையும் தான் நான் எழுதப் போகிறேன் என்று எல்லோரும் எண்ணியிருந்தார்கள். 'ரண்டிடங்கழி'யை அவர்கள் படித்ததால் இப்படியொரு எண்ணம் பரவியிருந்தது. மீனவர்களிடம் நான் நெருங்கிப் பழகியதால் அப்படியொரு கதையை எழுத என்னால் முடியவில்லை. அன்றைய மனோநிலையும் மாறியதாகவே இருந்தது. கம்யூனிஸ்டு கட்சி என்னும் அமைப்பிலுள்ள எதிர்ப்புகளை என்னால் கண்டு கொள்ள முடிந்தது. அதனால் சிறு சிறு நாவல்களை நான் எழுதினேன். இதற்கு 'பேரில்லாக் கதை' ஒரு உதாரணமாகும். அப்போது நான் எழுதியிருந்த கதைகளும் நாவல்களும் கட்சித் தலைமைக்கு எரிச்சல் ஊட்டியிருந்தது. தேவ் அப்போது நிறையவே எழுதினார்: கம்யூனிஸ்டு சித்தாந்தத்திற்கும் கட்சிக்கும் எதிர்ப்பாக பலமான மொழியில் எழுதினார்: ஒரு பகைவனைப் போல் எழுதினார். என்னுடைய பார்வை அப்படியிருக்கவில்லை என்றுதான் எனக்கு இப்போதும் தோன்றுகின்றது. என்னுடையது ஒரு உறவினரின் பார்வையாக இருந்து ஏழே நாட்களில் நான் "செம்மீன்" நாவலை எழுதி முடித்தேன்." (மே.கு.நூ. பக்.341,342.)

தமிழர் பண்பாட்டுச் சூழலில் மார்க்சிய சித்தாந்தத்தையும் அதன்வழியான இலக்கியச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பவர்கள் முரண்பாடுகளையும் அதில் ஈடுபட்டுள்ள சமூக வர்க்கங்களையும் ஆய்வு செய்து - அவற்றுக்கும் சர்வதேச நிகழ்விற்கும் இடையிலான உறவை ஆய்வு செய்வது என்பது தான் அறிவியல் பூர்வமான அணுகு முறையாகும். இத்தகைய பண்பாட்டு ஆய்வுக் குரிய ஆய்விற்கான அணுகுமுறையையும் உணர்வையும் "செம்மீன்" நாவல் தருவது இதன் பலமான அம்சமாகும்.

செம்மீன் நாவலை சுந்தரராமசாமி அதன் உள்ளடக்க-உருவகப் பண்பு சிதையாத வகையில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்.

சுந்தரராமசாமி இந்நாவலை மொழிபெயர்ப்புச் செய்ததன் மூலம் தமிழுக்குக் காத்திரமான பங்களிப்பினைச் செய்துள்ளார் என்றே கூறவேண்டும்.

முடிவாக நோக்குகின்ற போது உழைக்கும் மக்கள் சார்ந்த அவலங்கள், துன்பங்கள் வெளிக் கொணரப்படாவிட்டால் அவற்றினை அழிக்கவும் முடியாது. இந்நாவலின் ஊடாக அந்நோக்கம் நிறைவேறுகின்றது. நாவல் உள்ளடக்கத்துக்கு ஏற்ற வடிவத்தையும் பெற்றிருப்பதனால் மலையாள இலக்கியப் பண்பாட்டுத்தளத்தில் முகிழ்ந்த இந்நாவல் உலக இலக்கியத்திற்கான அடித்தளத்தையும் கொண்டிருக்கின்றது.

நமது பண்பாட்டுச் சூழலில் உலகமயத்தின் தாக்கமும் வணிகக் கலாசார தாக்கமும் இலக்கிய உலகினையும் பாதித்துள்ளது. இந்தச் சூழலில் வெளிவருகின்ற மாதாந்த நாவல்கள், வாரவெளியீடுகள், தொடர் கதைகள் எனும் பெயரில் பால்வக்கிரங்களும் வன்முறைக் கலாசாரங்களும் வாசகர் உள்ளத்தைக் கொள்ளை நோய் போல தாக்கி வரும் இத்தருணத்தில் "எல்லாம் மனிதனுக்கே! மனிதகுலத்தின் நல்வாழ்விற்கே" எனும் சீரிய இலட்சியம் கொண்ட இலக்கியப் படைப்புகள் தோன்ற வேண்டியது காலத்தின் தேவையாகும். எண்ணிக்கையில் மட்டுமன்றித் தரத்திலும் அவை உயர்ந்தவையாக இருக்க வேண்டும். இத்தகைய உயரிய இலட்சியத்திற்காய் கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில், உலக நாவல் இலக்கியத்தில் தனித்து நின்று ஒளி வீசும் நாவலாக செம்மீன் திகழ்கின்றது எனத் துணிந்துக் கூறலாம்.

இனியொரு.கொம் 2011

18

ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகளில் விரிவு பெறும் எல்லைகள்

இலக்கியம் என்பது மாற்றங்கள் வாயிலாக முன்னேறும் சமூகம் எனும் விளைநிலத்தின் பயிராக இருப்பதனால் அது கால, தேச வர்த்தமாணங்களுக்குக் கட்டுப்பட்டவையாகவும் அதனைக் கடந்து இயங்குகின்றவையாகவும் அமைந்திருக்கின்றன. ஒரு காலத்தில் முனைப்புப் பெற்றிருந்த வாழ்க்கைப் போக்குகளும் விழுமியங்களும் இன்னொரு காலத்தில் பிரதானமற்றவையாகப் போய்விடுகின்றன. புதிய வாழ்க்கைப் போக்குகளும் அதனடியாக எழுகின்ற உணர்ச்சிகளும் மாற்றமடைகின்றன. இதனை மனதில் கொண்டே நமது யுகத்து மகத்தான கவிஞர்களில் ஒருவரான பாரதி இவ்வாறு பாடினான்:

> " காலத்துக்கேற்ற வகைகள்- அவ்வக்
> காலத்துக்கேற்ற ஒழுக்கமும் நூலும்
> ஞான முழுமைக்கும் ஒன்றாய்- எந்த
> நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை"

சிறுகதை என்பது குறிப்பிட்டதொரு மனோநிலையை உணர்வுநிலையை அல்லது ஒரு நிகழ்ச்சியை ஆதாரமாகக் கொண்டு அமைந்திருக்கும். ஒரு மனிதர் - ஓர் உணர்வு-ஒரு நிகழ்ச்சி- ஒரு சிக்கல் தான் சிறுகதையின் உயிர். சிறந்த சிறுகதையின் தரம் என்பது அதன் ஒருமைப்பாட்டுத் தன்மையிலேயே தங்கியுள்ளது. கதைகளின் முதன்மையான கருத்தை விளக்குவதற்கு இந்த ஒருமைப்பாட்டுத் தன்மை அவசியமானது. கதையின் பொருள் - நிகழ்வு கதையாசிரியரின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி பின் அகவயமான உணர்வும் சிந்தனையும் புறவயமான செயற்பாட்டைத் தோற்றுவிக்கின்றது. அந்தவகையில் அகபுற பாதிப்புகளின் அடியாகவே சிறந்த சிறுகதை உருவாக்கம் பெறுகின்றது.

சிறுகதையின் "அளவு" என்பது என்ன என்பதிலே வாதப்பிரதிவாதங்கள் உண்டு. சிறுகதை எனும் இலக்கிய வகையின் பண்புகளைச் சொல்லோடு பொருள்வழியாகக் கொள்ளும் போது

கதையின் அளவு-அதாவது சிறிதாக இருக்க வேண்டும் என்னும் பண்புதான் முக்கியமாகத் தோன்றும். ஆனால் இந்த அளவு என்பதை நாம் எவ்வாறு தீர்மானிப்பது என்பது பெரும் பிரச்சினையாகிவிடும். உதாரணமாகப் புதுமைப்பித்தனின் "பொன்னகரத்தை" நல்ல அளவிலான சிறுகதை என்று கொண்டால் "துன்பக் கேணியை" விபரிப்பதற்கு நீண்ட சிறுகதையென்ற புதிய பெயரைத் தோற்றுவிக்க வேண்டும். அல்லது "சாபவிமோசனம்" "அன்று இரவு" போன்றவைதான் தரமான அளவுடையனவென்றால் "பொன்னகரம்", "மிஷின்யுகம்" முதலிய கதைகளை விபரிப்பதற்கு "சின்னஞ் சிறுகதை" என்ற சொற்றொடரைத்தான் கையாள வேண்டி வரும். எனவே அளவு என்ற உரைகல்லை மாத்திரம் கொண்டு நாம் சிறுகதையைத் தீர்மாணித்துவிட முடியாது.(சிவத்தம்பி. கா (1980), தமிழ் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் புத்தகாலயம், சென்னை,ப. 18) ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகளில் சில சிறுகதைகள் அளவில் சிறியவைகளாகவும், சில கதைகள் அளவில் பெரியவையாகவும் காணப்படுகின்றன. "சாவும் சாவு சார்ந்த குறிப்புகளும்", "புரியும் சரிதம்", "விரகமல்ல தனிமை", "காணாமல் போன கதாநாயகன் அல்லது வில்லன் ராஜ்ஜியம்", "புறப்பாடு", "சொர்ணகுப்பத்தின் துர்க்கனவு" ஆகிய கதைகள் அளவில் சிறியவையாகும். " நான் நீங்கள் மற்றும் சதாம்", "லிபரல் பாளையத்து கட்டப்பஞ்சாயத்தார்க்கு காவானோபா வழங்கிய தீர்ப்பு", "கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக்கூடும்", "இரவாகி விடுவதாலேயே சூரியன் இல்லாமல் போய்விடுவதில்லை" ஆகிய கதைகள் அளவில் பெரிய கதைகளாகக் காணப்படுகின்றன. அவரது கதைகள் சிறுகதைக்குரிய உள்ளடக்கமும் அதனைச் சாத்தியப்படுத்துவற்கான உருவமும் சிறப்பாக அமைந்துள்ளமையால் சிறுகதைக்குரிய ஒருமைபாட்டைப் பெற்றுள்ளன எனக்கூறலாம்.

தமிழில் வெளிவந்துள்ள பெரும்பாலான சிறுகதைகளைப் படிக்கும் போது குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாய்த் தோன்றும் பெரும் குறைபாடு ஒன்று உண்டு. அது யாதெனில் முற்போக்கு மார்க்சியர்கள் படைத்துள்ள படைப்புகளிலும் கூட காலத்திற்கு ஏற்றவகையில் சமகால வாழ்க்கைப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் படைப்பாக்கம் செய்வதில் செலுத்திய கவனத்தை அதனை வாசிக்கும் முறையில்-வடிவமைப்பில் செய்யவில்லை என்றே கூறத்தோன்றுகின்றது. விமர்சகர்களும் அவ்வவ் காலத்துப் பொருளாதார, சமூக நிலைமைகள், ஓட்டங்கள் , இயக்கங்கள், முரண்பாடுகள் என்பன எவ்வெவ்வகையில் இலக்கிய வடிவத்துடன் தொடர்புபட்டிருந்தது என்றோ அவ்விலக்கிய

வடிவங்கள் அவ்வியக்கங்களுடன் எவ்வாறு எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருந்தனவெனவோ சிந்திக்கத் தவறிவிட்டனர். இந்நிலையில் முற்போக்கு மார்க்சியச் சார்புடைய எழுத்தாளர்கள் சிலர் இவ்விடயம் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளனர் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. இலக்கியத்தில் மக்கள் சார்பு அழகியலை வலியுறுத்தியதில் க. கைலாசபதி, தி.க.சி, பிரேம்ஜி, நா. வானமாமலை, அருணன், ந. இரவீந்திரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் எழுத்துக்களில் இலக்கிய கர்த்ததாக்களின் தத்துவச் சார்பு, உலக நோக்கு, சமூகநிலைப்பாடு குறித்தே அதிகமான சர்ச்சைகள் நடைபெற்றுள்ளன. மறுபுறத்தில் வடிவம் குறித்துத் தூய அழகியல்வாதிகள் மேற்கொண்டுள்ள ஆய்வுகள் வெகுஜன விரோதப் பண்பினையே இலக்கியத்தில் நிலைநிறுத்துகின்றது. இலக்கியத் தளத்தில் இவர்கள் அழகியல் என்ற பெயரில் பொது மக்கள் சார்ந்த எழுத்துக்களை நிராகரிக்க முனைகின்றனர். அவர்கள் அறிந்தோ அறியாமலே அரசியல் பிற்போக்குத் தளத்தை இலக்கியத்தில் நிலை நிறுத்தி வருகின்றனர். இது மார்க்சிய முற்போக்கு எழுத்தாளர்களின் பணியினை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது. கலை இலக்கியங்களின் உள்ளடக்கமான கருத்துகள், சிந்தனைகள், உணர்வுகள் முதலியற்றுக்கு மூலாதாரமாக இருக்கும் சமூக வர்க்க நிலைமைகளைக் கண்டறிந்து அவற்றுக்கும் இலக்கிய வடிவத்திற்கும் இடையிலுள்ள இயங்கியல் ரிதியான தொடர்புகளைச் சரியாக இனங்கண்டு சிறுகதைகளைப் படைப்பாக்கம் செய்வதில் நமது சிறுகதையாளர்கள் இடம் யாது என்பதனை- பங்களிப்பினை தரநிர்ணயம் செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகும். அம் முயற்சியினை ஆதவன் தீட்சண்யாவின் கதைகளை ஆதாரமாகக் கொண்டு நோக்குவோம்.

இவ்விடயம் குறித்துத் தெளிவுபெற சிறுகதையில் எழுத்தாளரின் தரிசன நோக்கு, நுண்ணுணர்வு குறித்த அவரது பார்வை-தெளிவு பற்றிய வரையறையைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டியுள்ளது.

சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் மனிதவிழுமிய மாறுபாடுகள், பெயர்ச்சிகளின் பொழுது, மனித நிலையைக் குத்திக் காட்டும் ஓர் இலக்கிய வடிவமாக உள்ளது என்பதனை மீள வலியுறுத்தலாகும். வெகுசன வாசிப்புக்காக உற்பத்தி செய்யப்படும் இலக்கியத் தயாரிப்புகளில் இந்நிலைமை சாதுரியமாக மறைக்கப்பட்டாலும், அங்கொருவர் இங்கொருவராக சில எழுத்தாளர்கள் இப்பண்பினை,(பிரசாங் ஓ கொனர் சொன்னது போன்று) 'தனிக்குரல்' களாக (lonely voices) நின்று எடுத்துக் காட்டி வருகின்றனர். சிறுகதையின்

அடிப்படையான தோற்றம் நியாயப்பாடு இதுவேயாகும். (சிவத்தம்பி.கா, முன்னுரை (1984) நந்தி, கண்களுக்கு அப்பால், சென்னை புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.)

எழுத்தாளனின் சமூகம் பற்றிய தரிசனத்திற்கு நுண்ணுணர்வு அவசியமானதொன்றாகும். இவ்வுணர்வு அவனது சமூக அனுபவத்தின் ஊடாகப் பெறப்பட்டு உலகப் பார்வையால் ஆழ அகலப்படுத்தப்படுகின்றது. இதற்காக மேனாட்டு எழுத்தாளர்கள் சிலர் பயணங்களை மேற்கொள்வதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். இத்தகைய பிரயாண சமூக அனுபவங்களாலும் உலக இலக்கியங்கள் பற்றிய தேடலாலும்- வாசிப்பாலும் ஒருவருடைய சமூக தரிசனை குறித்த நுண்ணுணர்வானது கால நகர்வோடு விசாலிக்கின்றது.

தமிழில் திறமை கொண்ட பல எழுத்தாளர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்வதற்கும் பழைய கதை சொல்லும் முறையையே கையாளுவதற்கும் காரணம் அவர்களது சமூக அனுபவமும் அதனைப் படைப்பாக்கும் திறனும் விஸ்தரிக்கப்படாமையேயாகும். தமிழ்ச் சிறுகதைத் துறையில் புதுமைப்பித்தன் ரகுநாதன் ல.சா. ராமாமிருதம் முதலானோர் மொழியாட்சித் திறனைக் கையாள்வதில் தனித்துவமான சாதனையை நிலைநிறுத்தியுள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

அந்தவகையில் ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகள் இதுவரை தமிழ் சிறுகதை வளர்ந்து வந்த முறையிலிருந்து தோன்றி புதிய வார்ப்பில் - புதிய மரபில் நடைபோடுவதாக அமைந்துள்ளன. இயற்பண்புவாத நிலையிலிருந்த வாழ்வைச் சித்திரிக்க முற்பட்ட சிறுகதையாசிரியர்கள் இலக்கிய வானில் கற்பனாவாதச் சிந்தனையில் பவனி வந்தனர். இதற்கு மாறாக முற்போக்குச் சிறுகதையாசிரியர்கள் வாழ்க்கையின் பன்முகப் போக்குகளையும் உள்ளார்ந்த முரண்பாடுகளையும் வளர்ச்சிப் போக்குகளையும் படைப்பாக்கினார்கள்.

முற்போக்கு மார்க்சியப் படைப்பாளர்கள் யதார்த்தப் பாத்திரப் படைப்புகளை அவர் சிருஷ்டித்துள்ளார் - மக்களை விடுதலை நோக்கி நகர்த்திச் செல்லும் வகையில் அவர் பாத்திரப்படைப்புகளை வார்ப்புச் செய்துள்ளார். கற்பனைப் பாத்திரங்களை உருவாக்குகின்ற போது கூட அவற்றினை சமுதாயப் பின்புலத்தில் வைத்துப் படைப்பாக்கத்

தவறவில்லை. "கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக் கூடும்" என்ற கதை இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். இந்திய அரசியல் பின்புலத்தில் நின்று கொண்டு மெஜிக்கல் ரியலிச பாணியில் எழுதப்பட்ட கதையாகும். இந்தியச் சமூகத்தில் தூய்மையாக்கல் தொழிலில் (அதான் சுத்திகரிப்பு தொழில் என்று சொல்லலாமே..!) ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் குறித்து இக்கதை நகர்ந்து செல்கின்றது. இக்கதை சொல்லும் பாணியில் இவற்றில் பவனி வருகின்ற பாத்திரங்கள் யாவும் இன்றைய விடுதலையை நாடும் அதே நிலைக்குரிய பாத்திரங்களை மறுவாசிப்புச் செய்ய ஏதுவாக உள்ள புனைக்கதை ஏற்பும் சமூகமாற்றத்திற்கான உந்தலும் முற்போக்கு இலக்கியத்திற்கு மாத்திரமன்று முழுத் தமிழ் இலக்கியத்திற்கும் வழங்கிய மகத்தான பங்களிப்பாக அமைந்துள்ளது. அப்படைப்பு மக்களை இயல்பாகவே விடுதலை மார்க்கத்தை நோக்கிய இயங்காற்றலைத் தோற்றுவிக்கும் பண்பினைக் கொண்டமைந்துள்ளது.

உள்ளடக்க ரீதியாக மட்டுமன்று வாசிக்கின்ற முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. முற்போக்கு இலக்கியத்திற்கும் அழகியல் பிரச்சினை உண்டு. காலத்திற்கு ஏற்ற வடிவத்தை மக்களின் நலனிலிருந்து அந்நியமுறாமல் படைப்பாக்கித் தர வேண்டியது முற்போக்கு - மார்க்சியப் படைப்பாளியின் கடமையாகும். ஆதவன் தீட்சண்யாவின் பெரும்பாலான கதைகள் இந்தச் சீரிய பணியினைச் செய்திருப்பினும் மேற்குறித்த கதையில் தான் அப்பணி முழுமை பெற்றிருக்கின்றது. சிறுகதை இலக்கியத்தில் புதிய செல்நெறியைக் காட்டி நிற்கின்றது. ஆதவன் தீட்சண்யாவின் ஏனைய கதைகள் யாவும் இக்கதையை எழுதுவதற்கான படிக்கற்கள் எனக் கூறுவது மிகைக் கூற்றல்ல.

"கக்காநாட்டின் இந்த ஜனாதிபதியும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட கொஞ்ச நேரத்திலே பதவி விலகி விட்டார். இது எதிர்பார்க்கப்பட்டதுதான்.. கடந்த பத்து வருடங்களில் ஆறு மாதத்திற்கொருமுறை தேர்தலை அறிவிப்பது, நடத்துவது, பதவியேற்கிறவர் ஜனாதிபதியாகி விட்டதன் அடையாளமாக தனது மாளிகையில் உள்ள கழிவறைக்குச் சென்று திரும்பியதும் அவர் ராஜினாமா செய்துவிடுவது என்பது வாடிக்கையாகிவிட்டது. பக்கத்து நாடான இந்தியாவில் பாப்பாப் பட்டி, கீரிப் பட்டி போன்ற கிராமங்களில் நடந்ததைப்போல கக்காநாட்டு ஜனாதிபதியை யாரும் வற்புறுத்தியோ மிரட்டியோ பதவி விலகச் சொல்வதில்லை. இவர்கள் தாங்களாகவே முன்வந்து விலகிவிடுகின்றனர்."

எனத் தொடங்கும் இக்கதையை வாசித்த போது கென்யா நாட்டு எழுத்தாளர் கூகி வோ தியாங்கோவின் "சிலுவையில் தொங்கும் சாத்தான்", "கறுப்பின மந்திரவாதி" ஆகிய நாவல்களில் கையாளப்பட்ட இலக்கிய உத்தி நினைவுக்கு வருகின்றன. கூகி தமது நாவலில் மெஜிகல் ரியலிச கலையாக்க உத்தி முறையை எவ்வாறு மக்கள் சார்பான இலக்கிய உத்தி முறையாக மாற்றி வெற்றி பெற்றாரோ அவ்வாறே அவ்வுத்தி முறையை ஆதவன் தீட்சண்யா தமிழ் சிறுகதையில் பிரயோகித்து வெற்றிபெற்றிருக்கின்றார். ஆசிரியரே தமது சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

" சிலர் எழுதிய தாள்கள் மலம் துடைக்கவும் தகுதியற்றதாக அருவருப்பூட்டும். ஆனால் சிறையிலடைக்கப்பட்ட கூகி அங்கு மலம் துடைக்கும் தாளில் ஒரு நாவலை எழுதி முடிக்கிறார். அது நாட்டின் வயல்வெளிகளிலும் அடுப்படிகளிலும் தெருமுனைகளிலும் மதுபான விடுதிகளிலும் வரிக்குவரி வாசிக்கப்படுகிறது. மதுபான விடுதியில் வாசித்துக் காட்டுறவனின் கோப்பை காலியாகிற போதெல்லாம் என் கணக்கில் அவனது கோப்பையை நிரப்பு என்று கூட்டத்திலிருந்து யாரோ ஒருவன் செலவழிக்கிறான் கூகியின் எழுத்தைக் கேட்பதற்காக. தமிழில் அப்படி வாசிக்கப்படும் உக்கிரமான முதல் படைப்பு என்னுடையதாக இருக்க வேண்டும் என்ற எளிய ஆசையை அகங்காரம் துளியுமின்றி இவ்விடத்தில் வெளிப்படுத்துகின்றேன். எனக்கு முன்பாகவே யாருடைய எழுத்தேனும் வாசிக்கப்படுமானால், வாசித்துக்காட்டுகிறவரின் கோப்பை என் செலவில் தளும்பி வழியும் - என் மகிழ்வைப்போல".

இயற்கை வளங்கள் நிரம்பிய கிழக்கு ஆப்பிரிக்க நாடு கென்யா. அந்நாட்டை பிரித்தானியர் தமது காலனித்துவ ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்த போது அந்நாட்டை மீட்பதற்கான சுதந்திரப் போராட்டங்கள் எழுந்தன. அதில் "மாவ் மாவ் இயக்கம்" என பிரித்தானியரால் அழைக்கப்பட்ட "மண் மீட்புப் படை", கென்யாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தது. இத்தகைய போராட்டங்களின் ஊடாகவும் பல்லாயிரக்கணக்கான உயிர்த் தியாகங்களுடனும் மீட்டெடுக்கப்பட்ட நாடு பின்வந்த உள்நாட்டு இடைத் தரகர்களால் எவ்வாறு ஏகாதிபத்திய சக்திகளுக்குக் காட்டிக் கொடுக்கப்படுகின்றது என்பதனையும் அதற்கு எதிரான மக்களின் கலகக் குரல்களும் எதிர்ப்புகளும் வெம்மை சூழ்கொள்கின்றது என்பதனையும் இந்நாவல் அழகுற எடுத்தக் காட்டுகின்றது.

இந்நாவலில் நவீன திருட்டிலும் கொள்ளையிலும் பேர்போன ஏழு நிபுணர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாபெரும் விருந்து கற்பிதம் செய்யப்படுகின்றது. இவ்விருந்தில் கலந்து கொள்கின்ற செல்வந்தர்களும் தொழில் அதிகாரிகளும் போட்டியில் வெற்றிபெறுவதற்காக தாம் மக்களையும் நாட்டையும் கொள்ளையடித்து எவ்வாறு சுகபோக வாழ்க்கையைப் பெற்றுக் கொண்டோம் என்பதனையும், கூடவே ஏகாதிபத்தியவாதிகளின் கொள்ளையடிப்புக்கும் திருட்டுக்கும் எவ்வாறு துணைபோகின்றோம் என்பதனையும்ஒவ்வொருவரும்போட்டிபோட்டுக் கொண்டு எடுத்துரைக்கின்றார்கள். இவ்வாறு கென்யா நாட்டு மக்கள் மீதான சுரண்டலையும் ஒடுக்கு முறைகளையும் அந்நாட்டில் தோன்றிய இடைத்தரகர்கள் ஊடாக, அதிலும் அவர்களின் பெருமையைப் பேசுவது போல அங்கத தொனியில் வெளிக்கொணர்கின்றார்.

ஆதவன் தீட்சண்யாவும் தமது கதையில், கக்கா நாட்டில் தூய்மைப் பணியாளர்க்கான சம்பள மற்றும் அவர்களுக்கான ஈலுகைகள் அதிகரிக்கப்பட்டதனால் சமூகத்தில் உயர் தொழில் துறைகளில் பங்குபற்றிய வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சிவில் அதிகாரிகள் இது போன்ற இன்னும் பலரும் இன்று அத்தொழிலுக்காகப் போட்டியிடுவதைச் கற்பிதம் செய்கின்றார். அவர்கள் தூய்மையாளர் தொழிலுக்கான தேர்வுப் பரிட்சையில் சித்தியடைந்தாலும் செயன் முறைப் பரிட்சையில் இடர்கின்றனர் என நையாண்டி செய்கின்றார். 'ஆசை இருக்கு மலம் அள்ள, அம்சமிருக்கு கலெக்டராக' என பழமொழியைத் தமது கதையின் ஓட்டத்திற்கு ஏற்றவகையில் மறுவாசிப்புச் செய்கின்றார். கூடவே, தூய்மையாக்கல் தொழிலின் கஷ்டங்களையும் துயரங்களையும் எடுத்துக்காட்டுகின்றார். கூகியின் நாவலில் கையாளப்பட்ட இந்த இலக்கிய உத்தி-நுட்ப முறையை ஆதவன் தீட்சண்யா தமது சிறுகதையில் வெற்றிகரமாகக் கையாண்டு இந்திய வாழ்முறைக்கேற்ற பாத்திரப்படைப்பை உருவாக்கியிருக்கின்றார். அதில் வெற்றியும் பெற்றுள்ளார் என்றே கூறத் தோன்றுகின்றது. "சமகால வரலாற்றையும், கடந்த கால வரலாற்றையும் தன்னுடைய கதைகளில் இவ்விதமான நையாண்டிக்குஉள்ளாக்குகிறார். வாழ்க்கையைஎங்கோதொலைத்துவிட்டு மலக் குழிகளிலும் தார்ரோட்டுகளிலும் சுடுகாடுகளிலும் உறவுகள் சிதைய அலைமோதும் மனிதர்களின் துன்பம் தோய்ந்த வாழ்க்கை வெளிக் கொணரப்படுகின்றது. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக புது விசையில் வெளிவந்த கதையின் தலைப்பு கடைசியில் இருக்கக்கூடும்.., என்ற கதையைச் சொல்லலாம். இக்கதை மிகச் சிறப்பான தலித் எள்ளல்

தன்மையுடைய கதை" என அழகிய பெரியவன் கூறுவார். தலித் எள்ளல் தன்மைக்கு அப்பால் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கை, அவற்றினடியாக எழுகின்ற கருத்தோட்டம், வர்க்க முரண்பாடுகள் என்பன இக்கதையில் நுண்ணியத்துடன் தீட்டப்பட்டுள்ளன.

தமிழில் சிறுகதை மூலம் எவற்றையெல்லாம் உணர்த்தி வைக்கலாம் - புலப்படுத்தலாம் என்பதை உணர்வு பூர்வமாக இக்கதையாசிரியர் உணர்த்தியிருக்கின்றார் என்பதை இக்கதை வெளிப்படுத்துகின்றது. "தமிழில் ஒரு நூற்றாண்டில் வெளிவந்திருக்கும் ஆகச் சிறந்த கதைகள் - பத்து பதினைந்து தேறும் - தொகுக்கப்பட வேண்டிய காலம் வந்துள்ளதை உணர முடிகிறது. ஆதவன் தீட்சண்யாவின் 'கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக்கூடும்' கத்த அவைகளில் ஒன்றாக இருக்கும்" என பிரபஞ்சன் பொருத்தமாகவே குறிப்பிடுகின்றார். ஆதவன் தீட்சண்யாவின் அனைத்துக் கதைகளிலும் தலித் மக்களது வாழ்க்கை படைப்பாக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அவ்வகையில் கவனத்தை ஈர்க்கும் கதைகள் 'ரகசியத்தில் பாயும் நதி', 'பொங்காரம்', 'அன்னையா' ஆகியவையாகும். சாதிய முரண்பாடுகள் மட்டுமல்ல மத முரண்பாடுகள் கூட எப்படி சமூகத்தைக் கூறுபடுத்தி ரத்த ஆறை ஓடவிடுகின்றது என்பதைக் காட்டுவதாக 'மார்க்ஸை மருட்டிய ரயில்' கதை அமைந்துள்ளது. இவர் எழுதியுள்ள தலித் சிறுகதைகள் சமுதாயப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு பாத்திர வார்ப்பு, கதைப்பின்னல், இலக்கிய நோக்கு, நடை என்பனவற்றில் சிறந்து விளங்குகின்றது. தமது பெரும்பாலான கதைகளில் தலித் மக்களின் உண்மையான மன உணர்வுகள், ஆதங்கங்கள், ஏக்கங்கள் முதலியவற்றினை உணர்வுபூர்வமாக மட்டுமன்று அரசியல் தெளிவுடனும் கதையாக்கியிருக்கின்றார். தலித் மக்களின் உணர்வுகளை இவ்வளவு அழகாய் சிறப்பாகப் படம் பிடித்த எழுத்துக்கள் மிகச் சிலவாகத் தான் இருக்க முடியும் என உறுதியாகக் கூறலாம். சாதிய கபடங்களைத் தாக்கி நிர்மூலமாக்கும் தன்மை இவரது படைப்புகளில் ஆழமாக விரவியுள்ளது.

சமூக உணர்வாலும் புரட்சிபற்றிய அறிவாலும் தன்னைப்பற்றிய சிந்தனை ஏதுமின்றி மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிப்பவனே உண்மையான வீரன். இத்தகைய பின்புலத்திலே இந்திய விடுதலைப்போராட்டத்தில் முக்கிய பாத்திரம் வகித்த பகவத்சிங் என்ற ஆளுமை எம்மில் எத்தகைய தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை "இரவாகி விடுவதாலேயே சூரியன் இல்லாமல் போயிவிடுவதில்லை"

என்ற கதை அழகுறச் சித்திரிக்கின்றது. படைப்பாளிக்குச் சரித்திர நாயகர்கள் மீதான ஈடுபாடு இன்றியமையாததொன்றாகும். அத்தகைய சரித்திர நாயகர்கள் ஊடாக காலத்திற்குத் தேவையான விழுமியங்கள், ஒழுக்கங்கள், நற்பண்புகள், நலன்கள்- மக்களின் நலன்கள் என்பனவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் மக்களில் வெளிப்பட்டு நிற்கும் நற்பண்புகள் நலன்கள் சரித்திர கதாநாயகர்களில் எவ்வாறு மிகைப்பட்டு வெளிப்படுகின்றது என்பதை இக்கதை உணர்த்துகின்றது. இக்கதை தொடர்பான நேர்காணல் ஒன்றில் ஆதவன் தீட்சண்யா கூறும் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது:

"தலைமறைவுக்காலத்தில் பகவத்சிங் ரஞ்சித் என்ற பெயராலே விளிக்கப்பட்டார். அந்தப் பெயரே ஒரு புனைவாய் இருக்கும் போது அதிலிருந்து புனைவின் வெவ்வேறு நிறங்களை ,வடிவங்களை, சுவையை உருவாக்க முடியும் என்றே தோன்றியது. அதற்குப்பிறகு நான் தாமதிக்கவில்லை. வாசிப்புகளினூடாக பகவத்சிங் குறித்து எனக்கிருந்த மனப்பதிவுகளின் சித்திரமாக முதல்வரைவை ஒரே மூச்சில் எழுதி முடித்தேன். பிறகான வேலைப்பாடுகளுக்குத்தான் சற்றே கூடுதலான உழைப்புத் தேவைப்பட்டது. கதையில் இடம்பெற்றுள்ள வரலாற்றுத் தகவல்களும் புனைந்து எழுதப்பட்டவையும் ஒன்றுக்கொன்று இசைமையோடு இழையும் வண்ணமாக எழுதுவதன் மூலம்தான் வரலாற்றை ஒரு புனைவாகவும் புனைவை வரலாற்றின் ஒரு பகுதியாகவும் நிலைமாற்றம் செய்ய முடியும் என்பதை இத்தகைய எழுத்துக்களினூடாக விளங்கிக் கொண்டேன் என்றே சொல்ல வேண்டும். புரட்சியாளர்கள் இறக்குமதிச் சரக்கல்ல. அவர்கள் இந்தச் சமூகத்தின் அழுத்தங்களிலிருந்தும் தேவையிலிருந்தும் உருவாகி வருகிற நமது சொந்தப்பிள்ளைகள் என்பதனை விளக்கப்படுத்துகிற குறியீடாகவும் நான் பகவத்சிங்கை உருவாக்கிக் கொள்வது இதனால்தான் "

சரித்திரச் சூழலின் பின்னணியில் கற்பனைப்படிமத்தின் துணையுடன் பகவத்சிங்கின் வரலாற்றைப் படைப்பாக்க முனைந்துள்ளார். அப்படிமமானது உண்மையை ஆதாரமாகக் கொண்டதாக இருப்பதனால் வலிமைமிக்கதாகக் காணப்படுகின்றது. பகவத்சிங் என்ற சரித்திர நாயகரைப் பற்றிய இக்கதை அவரது சமூக வாழ்க்கைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் திகழ்கின்றது. அத்துடன் சரித்திர நாயகனின் வாழ்க்கைப் போக்குகள் எவ்வாறு காலத்தினையும் உருவாக்குகின்றது என்பதனையும் இக்கதையில் தரிசிக்க முடிகின்றது.

அவரது அறிவின் உருவாக்கம் சமூக சக்தியிலிருந்து உருவானது என்பதை எடுத்துக்காட்டுவதாக அவரது அழிந்து போனதாக வரலாற்று ஆய்வாளர்களால் கூறப்பட்ட நான்கு புத்தகங்களையும் (சோசலிசத் தத்துவம், சுயசரிதை, இந்தியாவின் புரட்சி இயக்கத்தின் வரலாறு, மரணத்தின் நுழைவாயிலில்) வைத்திருப்பவராக நந்தினி என்ற பாத்திரத்தை உருவாக்கிய கதையாசிரியர், புத்தகங்களையும் அவரே உருவாக்கித் தருவது நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்தியாவில் சில பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்த தோழர்கள் நம்பிக்கை வரட்சியைத் தரும் சில நாட்டார் பாடல்களை (ஒப்பாரிப் பாடல்கள்) மாற்றம் செய்து மக்களுக்கு வழங்கியுள்ளனர் என்பதும் இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கதொன்றாகும். அந்தவகையில் இன்றைய மக்கள் அரசியலின் தேவைக்கேற்றவகையில் பகவத் சிங்கின் வரலாற்றை உள்ளடக்கத்திற்கு ஏற்ற கலைத்துவத்துடன் படைப்பாக்கித் தந்துள்ளார்.

ஆடையில் நிர்வாணத்தை மூடியவனை ஆதிக்க வெறி கொண்ட உலகம் எவ்வாறு நிர்வாணமாக்கியது என்பதை "காலத்தை தைப்பவனின் கிழிசல்" என்ற கதை வெளிப்படுத்துகின்றது. இக்கதையில் வரும் மனோகர் ராவ் வம்சத்தினர் பார்பனர்களுக்கு எதிராகப் பூனூல் போடுபவர்கள். பாரம்பரியமாக தையல் தொழிலை மேற்கொண்டு வருகின்றவர்கள். மொத்த விலையில் துணி எடுத்து வருவதற்காக சூரத் போகும் அவர்களின் பணத்தையெல்லாம் கொள்ளையடித்தது மட்டுமன்று, அவனை நிர்வாணமாக்கி சுன்னத்து செய்தவனா எனத் தமது புனிதத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள் இந்து வெறியர்கள். கதையின் பின்வரும் பந்தி இதனை அழகுற எடுத்துக் காட்டுகின்றது:

"சூரத்திலிருந்து திரும்பிவிட்டதாய் தகவல் கிடைத்த இரவில் நான் போயிருந்தபோது அவன் சொன்ன விசயங்கள்- பணத்தைப் பிடுங்கிக் கொண்டதோடு நில்லாமல் நட்ட நடுவீதியில் அப்பனையும் மகனையும் நிர்வாணமாக்கி சுன்னத் செய்திருக்கிறவர்களா இல்லையா என்று சோதித்து.. கடம்பமானின் வலிய கொம்பிலிருந்தும் மீன்முள்ளிலிருந்தும் கடைசலிட்டெடுத்த ஆதி ஊசியின் கண்ணில் காட்டெருதின் வால்ரோமம் கோர்த்து உலகின் நிர்வாணம் போக்க ஆடைமூட்டிய பரம்பரையின் கடைக்கொழுந்தாகிய தன்னை, பிறந்தமேனியாக்கி வேடிக்கைபார்க்குமளவு கெட்டதாயிருக்கிறதே இவ்வுலகமென்கின்ற தாமோதரின் குமுறல் - அவமானம் - உளைச்சல் - இப்போதெல்லாம் யாரைப் பார்த்தாலும் நான் சுன்னத் செய்துக்கல என்று லுங்கியவிழ்த்துக் காட்டுமளவுக்கு அவனது மனநோய் முற்றிவிட்டதையும் சொல்லி,

வாழ்க்கையை அபத்தமானதாய் மாற்றிவிடும் வில்லன்கள் பெருகி விடும் போது எவரின் வாழ்வும் பாதுகாப்பற்றதாவதைப் பற்றிய விபரிப்போடு முடிப்பது."

வாழ்வின் பல கோணங்களை பல ரக மனிதர்களின் உணர்ச்சிகளை திறமையாகப் படைப்பாக்கும் திறன்கொண்ட ஆதவன் தீட்சண்யாவின் கதைகள் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களையும் வாழ்க்கைப் போராட்டத்தில் அல்லல்படுகின்ற மனிதர்களையும் கால மாற்றத்தையும் சித்திரிக்கின்ற போக்கிற்கு ஆதாரமாக அவரது "அன்னையா" என்ற கதை அமைந்துள்ளது. அன்னையா யாருக்காகவோ தன் தூக்கத்தை இழக்கின்றான். அவனது மகன் கல்வியின் மூலமாகவேனும் இந்நிலையிலிருந்து விடுபடுவான் என்ற தன் தாயின் எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் முழுக்குப் போட்டு விட்டு, அச் சிறுவன் பிணம் எரியும் போது பக்கத்திலிருந்து வேடிக்கைபார்கின்றான். தனது அப்பன் பிணமறுப்பதைப் போல பொம்மை செய்து பிணமறுத்து விளையாடுகின்றான். இந்நிகழ்வுகள் வாசகனுடைய உள்ளத்தை உருக்கி குருதிக் குழாய்களில் உள்ள ரத்தத்தை உறையச் செய்து விடுகின்றது. கதையாசிரியர் அன்னையா என்ற பாத்திரத்தை அதன் சூழலில் வைத்து தனக்கும் தனது எழுத்துக்கும் கொணர்ந்து சேர்த்த தாக்கங்களைப் பின்வருமாறு குறிக்கின்றார்:

"அன்னய்யா எழுவதற்கான அறிகுறிகளற்று பிணங்களோடு அளவளாவிக் கிடந்தான். மனிதன் எல்லாவகையிலும் திணறிப்போய் தன்னை நிறுத்திக் கொள்கிற அகாலத்தின் பின்தொடர் காலத்தில் அவனோடு பேசி உறவாடி, தொட்டு விளையாடி அன்னய்யா தூக்கத்திலும் தன்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றான். பிணங்களாலேயே சூழப்பட்டிருந்தாலும் மரணமற்ற வாழ்வின் அருள்பெற்ற ஒற்றை மனிதனாய் அன்னய்யா காலாகாலத்துக்கும் இருப்பான் எனத் தோன்றியது. ஒருநாள் பேச்சில் அவனைப் புரிந்து கொள்வதோ நெருங்கி விடுவதோ யாருக்கும் முடியாதது. எனது பேச்சால் அவனது நம்பிக்கையும் தைரியமும் எவ்வகையிலும் பின்னமாவதை நான் விரும்பவில்லை. அவனை அவனாகயிருக்க விடுவதே சரியென்று பட்டது. கிளம்பி விட்டேன்.

புருசனோடு பேச வந்தவன் பேசாமலே செல்வது ஏனென்று புரியாது அவள் புதிராயப் பார்க்க, நான் வழியெங்கும் தேடியபடி நடந்தேன். பொம்மை செய்து பிணமறுத்து விளையாடும் சிறுவன் ஒருவனை."(ப.53)

உழைக்கும் மக்களின் பாத்திரங்களைப் படைப்பாக்கி விடுவதால் மாத்திரம் ஒரு படைப்பு முற்போக்கானதாகவோ மனிதநேயப் பாத்திரமாகவோ ஆகிவிடாது. இதனை ஓர் ஒப்புவமை மூலமாக நோக்குவோம். சிவனு மனோகரன், பிரமிளா பிரதீபன் முதலானோர் அண்மைக் காலங்களில் இலங்கை மலையக இலக்கியத்தில் கவனத்திற்குரிய படைப்பாளிகளாகத் தங்களை நிறுத்திக் கொண்டவர்கள். பிரமிளா பிரதீபனின் "காத்தான்" என்ற சிறுகதையில் முத்துக் கொட்டைபோட்டுப் பார்த்துக் குறி சொல்லும் பூசாரி பற்றிய பாத்திரப்படைப்பு இவ்வாறு பிரவாகம் கொண்டிருக்கின்றது:

"காத்தானுக்கு அடிக்கடி குளிக்கப் பிடிக்காது முடிவெட்டவோ, நகம் வெட்டவோ பிடிக்காது.. எல்லாமே எப்போதாவதுதான். ஒரு பழைய சாரத்தை உயர்த்திக்கட்டி, அதை ஒரு மடி மடித்துப் பாதியாய் கட்டிக் கொள்வார். ஒரு காவி நிற ஷேட் ஒன்றுதான், அப்படி நிறமாறி போயிருக்குமோ என்பது பலரது சந்தேகம். தோளில் ஒரு மஞ்சல் நிற மெல்லிய டவல். தலைமுடியிலும் தாடியிலும் ஆங்காங்கே வெள்ளை வெள்ளை முடிகள் துருத்திக் கொண்டு நிற்கும். அவர் செருப்புப் போட்டு யாருமே பார்த்ததில்லை. முழுப்பாதத்தையும் நிலத்தில் பதிக்காமல் குதிக்காலைச் சற்று உயர்த்தி அடி வைத்து நடப்பார்."

சிவனு மனோகரனின் "கோடாங்கி" என்ற கதையில் வருகின்ற பூசாரியின் பாத்திரப்படைப்பும் இந்தப் பின்னணியிலே சிருஷ்டிக்கப்பட்டுள்ளது என்பதை இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டியதாகின்றது. ஆக பிரமிளா பிரதீபனாக இருந்தால் என்ன சிவனு மனோகரனாக இருந்தால் என்ன இப்பாத்திரப் படைப்புகளை உருவாக்குகின்ற போது சமன்பாடு ஒன்றாகத் தான் உள்ளது. இது தற்செயல் நிகழ்ச்சியல்ல. உலகமயத்தின் பின்னணியில் மலையகக் கலை இலக்கிய செல்நெறியில் ஏற்பட்டு வருகின்ற சிதைந்த பக்கத்தை இப்படைப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. சாரல் நாடன், மு.சிவலிங்கம் இன்னும் இது போன்றவர்களின் சிறுகதைகளில் உழைக்கும் மக்களை கிண்டலடிக்கின்ற தொனி இடம்பெற்றாலும், மலையக மக்களின் வாழ்க்கையை - யதார்த்தத்தைப் படைப்பாக்கினார்கள். இன்றையகாலத்தில் யதார்த்தவாதம் பின்தள்ளப்பட்டு இயற்பண்புவாதம் அந்த இடத்தைப் பிடித்திருப்பது இலங்கையின் மலையகத்திற்கு மாத்திரம் உரித்தான இலக்கியப் போக்கல்ல. இந்தப் பின்னணியில் உழைக்கும் மக்கள் பற்றிய கேலிகளையும் நையாண்டிகளையும் ஒரு எழுத்தாளனில் காணல் ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.

இந்தச் சூழலில் வாழ்விலிருந்து அந்நியமுறாமல், விரக்தியில் மூழ்காமல் ஆதவன் தீட்சண்யா படைத்துள்ள பாத்திரங்கள் காலத்தை மீறி எதிர் நீச்சல் போடக் கூடியவையாகும். இக்கதையை வாசிக்கின்ற போது வாசகன் கதையில் வருகின்ற பாத்திரப்படைப்புகளுடன் மிக நெருக்கமாகி விடுகின்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. அந்தளவிற்கு அக்கதை மக்களின் அன்றாட பிரச்சினைகளுடன் நெருங்கிய உறவு கொண்டதாக இருக்கின்றது.

சமூகமே மனிதனது மனசாட்சியை உருவாக்கி விடுகின்றது என்ற தத்துவத்தின் உண்மை உருவங்கள் தான் அன்னையாவும் அவனது மனைவியும் - பிள்ளையும். திருடப்பட்டது அன்னையாக்களின் உழைப்பு மட்டுமல்ல வாழ்வும் தான் என்பதை இக்கதை வாசகனில் உணர்த்துகின்றபோது அவ்வாசகன் அன்னையாக்களுக்காக அனுதாபப் படுவதாக மாத்திரமின்றி கோபப்படவும் செய்கின்றான். இது இக்கதையின் வெற்றிக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

'கடவுளுக்குள் தெரியாதவர்கள்' என்ற கதை பெண்ணுரிமை தொடர்பானது (தீபாமேத்தாவின் **Water** திரைப்படம் பற்றிய விளக்குகின்றது). அத்திரைப்படத்தைக் கதையாகக் கூறும் கதையாசிரியர் பிராமண சமூகத்தில் விதவைகளின் கொடுமைகள், ஆண்களின் பாலியல் வக்கிரங்கள் என்பனவற்றை கதையினூடாக வெளிக்கொணர்கின்றார். கூடவே கதையில் வருகின்ற விதவையான ஆனந்தியம்மா நாவிதர் ஒருவரோடு கொள்ளும் காதல், பால் உறவு, அதனடியாக குடும்பத்தில்-சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் என்பனவற்றை ஆசிரியர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. மேலும் சமூக - குடும்பப் பிரச்சினைகளுக்கு மத்தியில் வீட்டிலிருந்து வெளியேறி ஆனந்தியம்மாவும், நாவிதரும் செல்கின்றார்கள். பின் பிராமணப் பெண்ணொருத்தியுடன் உடலுறவு கொண்டதற்கான தெய்வ குற்றத்திற்கும் பழி பாவத்துக்கும் அஞ்சி நாவிதர் தற்கொலை செய்து கொள்கின்றார் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இக்கதை சாதியத்தின் கொடுமைகளையும் இறுக்கத்தையும் தெளிவாகவே படம் பிடித்துக் காட்டுகின்றது. கூடவே அத்திரைப்படத்தின் மீதான விமர்சனத்தையும் ஆசிரியர் முன்வைக்கத் தவறவில்லை. கதையின் இறுதியில் வரும் பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்:

"தனது ஆவேசத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரு அப்பாவி நாவிதனைப் பலி கொடுக்க நேர்ந்தது குறித்த ஆனந்தியம்மாவின் தீராத உளைச்சலைப் படம் நழுவவிட்டு விட்டதாக அவன் கொண்டிருக்கும்

அதிருப்தியே படத்தை முடக்கி வைத்துள்ளது. ஆனந்தியம்மா அவன்மீது அருள்பொழியும் கணத்தில் நாட்டின் திரையரங்குகள் நொறுக்கப்படுமென உள்மனம் என்னை எச்சரிக்கிறது" (ப.161) இப்பார்வை படத்தில் தவறவிடப்பட்ட ஒருபகுதியை நிறைவு செய்வதாகவே அமைந்திருக்கின்றது. இவரது 'நமப்பு' என்ற கதையும் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணின் மனவோட்டத்தையும் ஆணாதிக்க சமூகத்தில் சந்திக்க நேர்ந்த பாலியல் வக்கிரம் சார்ந்த பிரச்சினைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. 'சொல்லவே முடியாத கதைகளின் கதை' என்ற கதையும் பெண்கள் பற்றியதாகும்.

'ஆறுவதற்குள் காப்பியைக் குடி' என்ற கதை இன்றைய உலகமயமாதல் சூழலில் பலர் மந்தைகள் போல ஓய்வொழிச்சலின்றி உழைக்க அதன் பயனை உழைப்பில் ஈடுபடாத சிறு கூட்டம் எவ்வாறு அபகரித்து உல்லாசமான வாழ்க்கையை வாழுகின்ற அவலம் நீடிக்கின்றது. வங்கிக் கடன், கிரடிட் காட், கடன், இன்னும் இது போன்ற கடன்களை படித்துப்பார்க்காமலே கையொப்பம் போடும் பெரும் கூட்டத்தை உலகமயம் சிருஷ்டித்துள்ளது. தாராளமாய்த் தரும் பணத்தில் நாய்ப்பாடுபட்டு வீட்டைக் கட்டினாலும் நிம்மதியாக இருந்து உண்டு உறங்குவதற்கு நேரமிராது. வாழ்வைத் தொலைத்து உழைத்தாலும் கடனை அடைத்து மாளாது. போலியான ஆடம்பர வாழ்வில் மூழ்கடிக்கப்பட்டு திருடுபோவது உழைப்பு மட்டுமல்ல வாழ்வும் தான் என்பதை இக்கதை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது. 'மொழிக்குள் மௌனித்து கடந்த அவர்களின் (அழகியல்வாதிகளின்- கட்டுரையாசிரியர்) அழகியல் அளவுகோல் எதுவென்றும் அறிவோம். தான் எழுதிச் செல்லும் அளவிற்கு தமிழ் நுட்பமான மொழியல்ல எனவும், தன் ஆணுறுப்பை அறுத்தெறிவேனே தவிர, பூணூலைக் கழட்ட மாட்டேன் என்று தன் அடையாளம் அழிந்துவிடாது காத்த மௌனிகள் உருவாக்கிய அழகியல் தர்க்கங்களுக்குள் எங்கள் எழுத்தை அடைக்க வேண்டாம் என நாம் அவர்களுக்குச் சொல்லுவோம். ஏனெனில், இது நாம் உருவாக்கும் நமக்கான புதிய தொன்மம். ஆகவே தான் நிரந்தரம் குறித்த அச்சம் பரவிக்கிடக்கும் கதையில் ஆண் பதட்டமடைபவனாகவும், பெண் நிதானமான வாழ்வை எதிர்கொள்பவளாகவும் இருக்கிறாள். ஐரோப்பிய வாழ்க்கைக்கு ஏங்கிடும் நடுத்தரவர்க்க கனவான்கள் மலத்தை தன் நுனிவிரலால் கூட தொட மறுத்து நவீனமயமாவதையும் மலம் சுமக்கவே பெரும் கூட்டத்தை சாதியக் கட்டமைப்பின் படிநிலைகளில் நீடிக்க வைத்திருப்பதுமான கலாசார அரசியலைப் பேசவேண்டியுள்ளது" என்பார் மணிமாறன்.

இவ்விடத்தில் மிக முக்கியமாக அழுத்திக் கூற வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. அதாவது தொழிலாளர் எழுச்சியுடன் வீறுபெறும் போராட்டங்கள் சாதியொழிப்பையும் பெண்விடுதலையையும் எட்டும் வகையிலான முன்மொழிவுகள் மார்க்சிய முற்போக்கு இயக்கங்களுக் கூடாக முன்வைக்கப்பட்டன. ஐரோப்பிய வாழ்முறையில் காணப்பட்ட வர்க்க முறையை அப்படியே இந்தியச் சூழலில் பிரயோகிக்க முற்பட்டதன் விளைவாக இந்திய வாழ்முறையில்- இனக்குழு முறையில் முனைப்புற்றிருந்த சாதிய முறையை உணரத்தவறினர். இலங்கையில் மாக்சியர்கள் சாதிய முறையின் ஆதிக்கத்தை உணர்ந்து அதனை வர்க்கப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுத்தமை முக்கிய சாதனையாக அமைந்தது. இப்போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினர் மட்டுமல்ல ஆதிக்க சாதியினரும் இணைந்திருந்தமை இதன் பலமான அம்சமாகும்.

இப்பின்புலத்தில் இந்தியாவை நோக்குகின்ற போது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டிருந்த காங்கிரஸ்காரர்கள் சாதிய விடுதலை குறித்துத் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறிவிட்டனர். மறுபுறத்தில் தலித் மக்களின் தலைவர்களான அம்பேத்கர், அயோத்திதாசர் முதலானோர் தலித் மக்களின் விடுதலை அவசியத்தை உணர்ந்திருந்தனர் என்றபோதிலும் அவர்கள் ஆங்கிலேயருடன் கூட்டமைத்து தலித் விடுதலைபற்றிச் சிந்தித்தமை பலவீனமானதாக அமைந்தது. இருப்பினும் தலித் விடுதலைக்கான பல கூறுகளை இவர்களிடமிருந்து கற்க வேண்டியுள்ளது என்பதையும் இன்று மார்க்சிய முற்போக்குவாதிகள் கவனத்திலெடுத்து வருகின்றார்கள். எனவே பிளவுப்பட்ட இந்தத் தேசியத்தை முன்னிறுத்தி சாதியத்தையும் பெண்விடுதலையையும் நாடி நிற்கின்ற போராட்டமானது உள்ளூர் பிற்போக்குவாதிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான போராட்டமாகத் திகழ வேண்டும் என்பதில் கவனமெடுத்து வருகின்றனர். அந்தவகையில் சாதிய விடுதலையினதும் பெண்விடுதலையினதும் தனித்துவத்தை வலியறுத்துகின்ற ஆதவன் தீட்சண்யாவின் கதைகள் அனைத்திற்கும் எதிரான வர்க்கப் போராட்டம் என்ற பார்வையை நிலைநிறுத்தத் தவறவில்லை. இவ்வகையில் நோக்குகின்ற போது அரசியல் போராட்டத்திற்கு முன்னதாக இடம்பெற வேண்டிய புதிய பண்பாட்டுக்கான போராட்டத்தை அவரது கதைகள் வலியுறுத்தி நிற்கின்றது எனத் துணிந்து கூறலாம்.

ஆதவன் தீட்சண்யா தமது சமகால அரசியல் பிரச்சினைகளிலிருந்து தப்பியோடுபவர் அல்லர். தான் காணுகின்ற

அநீதிகளையும் அவற்றுக்கெதிரான போராட்டங்களையும் தமது கதைகளில் வெளிக்கொணர முடிந்தது. வரலாற்றுச் சம்பவங்களையோ, நாயகர்களையோ பாத்திரமாக்குகின்ற போது கூட அவற்றினைக் காலநகர்வோடு இணைத்தே படைத்திருக்கின்றார். 'இரவாகிவிடுவதனாலேயே சூரியன் இல்லாமல் போய் விடுவதில்லை' என்ற கதை இதற்குச் சிறந்த உதாரணமாகும். இக்கதையை வாசித்த போது பகவத்சிங் என்ற சரித்திர நாயகரை வாசிக்கின்றோம் என்ற உணர்வை விட இன்றைய புரட்சியாளர் ஒருவரைப் பற்றிய உணர்வே ஏற்படுகின்றது. மேலும், இன்றைய மக்கள் இயக்கங்களுக்கு நம்பிக்கை தரும் வகையில், நந்தினி என்ற பாத்திரத்தின் வாயிலாக பகவத்சிங்கின் அழிக்கப்பட்ட நூல்கள் கிடைப்பதாக மறுவாசிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, ஆதவன் தீட்சண்யாவின் கதைகளில் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்கள் யாவும் சமகால அரசியல் கருத்தியல் பொருள் கோடலுக்கு உட்பட்டே சித்திரிக்கப்படுகின்றன. இவரளவிற்கு இவ்வளவு தெளிவாகவும் நுட்பமாகவும் இப்பாத்திரங்களைப் படைப்பாக்கும் திறன் பெற்ற எழுத்தாளரை நான் அறியவில்லை. இவ்வகையான கதையாடல்கள் வழியே மறு உற்பத்தி செய்யப்படும் ஆதிக்க அதிகார அரசியலுக்கு எதிரான மாற்று அரசியலை வளர்த்தெடுக்கும் முறையியலொன்றினை ஆதவன் தீட்சண்யா தமிழுக்குத் தந்திருக்கின்றார்.

பேசுவது போலவே எழுதுவது என்கட்சி என்றான் பாரதி. இக்கதையாசிரியன் உள்ளடக்கம் மட்டுமல்ல அவரது மொழிநடையும் சற்றே மாறுப்பட்டதாகக் காணப்படுகின்றது. அவரது மொழி வெகு இயல்பாகவே உழைக்கும் மக்களின் வாழ்வுடன் கலந்திருக்கின்றது. அவரது கதைகளில் பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் இடையிலான இடைவெளி குறைந்துள்ளது. 'பொங்காரம்' என்ற கதையில் வருகின்ற பின்வரும் பந்தியை நோக்குவோம்:

"புள்ள சமஞ்சி அஞ்சி வருசமாவது இந்த சித்திரையோட அவளுக்கும் பொறனால ஆளான கூழுத்தோட்டி மவுளுக்கு கண்ணாலமாகி இப்ப கையில ஒண்ணு வயித்தல ஒண்ணு. காலா காலத்துல அததை செய்யலன்னா அந்துசு கெட்டுரும். பாலூரான் மவன் தொப்லானுக்கு ஆசை. கட்டிக்குடுங்கன்னு ஆள்மேல் ஆளாந்து வருது. பையனும் நல்ல சமுத்தாளி. ஒம்லூர் பாய் இவன நம்பித்தான் கசாப்புக் கடைய வுட்டுருக்காரு. எத்தசோட்டு மாடாயிருந்தாலும் ஒத்தையாளா கீழ

தள்ளிருவான். தோல் வேவாரமும் இருக்கு. கட்டிக் குடுத்தா கமானமா பொழைக்கும் புள்ள. தோடு, மாட்லு, சிமிக்கி, பையனுக்கு காப்பவுன்ல மோதரம், சைக்கிள், துணிமணின்னு. ரொக்கமா எங்காச்சும் பொரட்டி முடிச்சிரணும்னு ஒவ்வோர் முகூர்த்த நாளுக்கு முன்னயும் நெனச்சி மருகுறான் காளியப்பன்.

ஆளாளுக்கொரு பீக்கலிருக்கு. அரசனுக்கு அவன்பாடு ஆண்டிக்குத் தம்பாடு. காத்தில்லாத வூட்ல கையுங்காலும் கட்டிப் போட்டாப்ல ஆயிருச்சு. எங்கேயும் காசு கண்ணி பொரளுல. அப்பப்ப அள்ளையில் வாங்குன கடனுங்களும் அரிக்குது சீலபேனாட்டம். இன்னிக்கு நேத்து இப்படியாகல. காலம முச்சிடும் இப்படியேதான் நாட்டுக்கு ராசாமாறினாலும் தோட்டிக்கு பொழப்பு மாறலேன்னு காலங்கழியுது. மீள்றதுக்கும் வழி தெரியல மாள்றதுக்கும் குழி தெரியல."

ஆதவன் தீட்சண்யாவின் தமிழ் நடை எளிய இனிய உணர்ச்சிகரமான அழகிய தமிழ் நடை என்று கூறின் மிகையாகாது. மற்றொரு முக்கியமான விடயம் அவர் அடித்தள மக்களின் பேச்சுத் தமிழை தனது சிறுகதைகளில் கையாண்டுள்ளார். இந்தப் பேச்சுத் தமிழ் வழக்கைப் புரிந்து கொள்வதில் நமக்கு சிரமமேதுமில்லை. எடுத்துக் காட்டாக கதையாசிரியரின் 'அன்னையா' சிறுகதையில் வரும் இளைஞனுக்கும் அன்னையாவின் மனைவிக்கும் இடையிலான உரையாடலில் பின்வரும் பந்தி கவனத்தில் கொள்ளத்தக்கது.

"யேய் சாந்தி, இங்க வாடி. ஒடிப்போய் ஒரு காப்பி வாங்கியா.."
"அதெல்லாம் ஒண்ணும் வேணாம்.."
"எங்கூட்ல குடிப்பீங்களா மாட்டீங்களோ. கலரு வேணும்னா வாங்கியாரச் சொல்லட்டுங்களா.?"
"எதுக்கு காப்பி, கலாருனு..குடிக்க கொஞ்சம் தண்ணி குடுங்க.."

சிறுமி அதற்குள் இயல்பு திரும்பியிருந்தாள். துலங்க விளக்கிய பித்தளைச்செம்பில் தளும்ப கொண்டுவந்த நீரில் மேலே தூசு ஏதோ கிடக்க ஊற்றிவிட்டு மறுபடி கொண்டு வந்தாள்.

"ஸ்கூல் போறியா..?"

"என்னத்தப் போறா. பேருதான் அஞ்சாகிளாஸ், ஆ-ங்கிறத்தில்ல, ஊ-ங்கிறதில்ல சிலேட்டு மட்டும் மாசத்துக்கு ரண்டு ஒடைஞ்சினுகீது."

இவ்வாறாகப் பேச்சுத் தமிழ் பொருத்தமான வகையில் இச்சிறுகதைகளில் கையாளப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

ஆதவன் தீட்சண்யாவின் கதைகளின் ஆதாரமாக அமைவது சமூக அநீதிக்கு எதிரான எதிப்புக்குரலும் மாற்றத்தை வேண்டிநிற்கும் மனோபாவமும் ஆகும். தலித் மற்றும் விளிம்பு நிலை மனிதர்கள் பற்றி எழுதுகின்ற அவரது எழுத்துகளில் அம்மக்களின் வாழ்வினடியாக எழுகின்ற அனுபவங்கள் மட்டுமல்ல, அதிலிருந்து விடுபடத்துடிக்கும் மனித உணர்வுகளையும் காணலாம். தலித் மக்களின் வாழ்க்கையின் அவலங்களை விற்று தனது கம்பீரத்திற்கும் பிழைப்புக்கும் வழிதேடிக் கொண்டவரல்ல இக்கதையாசிரியர். இன்றைக்கு இலக்கியத்தில் உழைக்கும் மக்கள் சார்ந்த சிந்தனைகள் நீர்த்துப் போயுள்ள நிலையில் ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகள் நம்பிக்கையொளி பாய்ச்சுகின்றது.

ஆதவன் தீட்சண்யா வடிவப் பரிசோதனைகளையும் தம் எழுத்துக்களின் ஊடாக மேற்கொண்டுள்ளார். இதற்கு 'லிபரல் பாளையத்து கட்டப்பஞ்சாயத்தார்க்கு கவானோபா வழங்கிய தீர்ப்பு', 'கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக்கூடும்', 'இரவாகிவிடுவதனாலேயே சூரியன் இல்லாமல் போய் விடுவதில்லை' ஆகிய கதைகள் தக்க எடுத்துக் காட்டுகளாகும். 'கதையின் தலைப்பு கடைசியாக இருக்கக்கூடும்' என்ற கதை கூகி போன்றோர் கையாண்ட இலக்கிய உத்தியைப் பயன்படுத்தி எழுதிய கதையாகவே படுகின்றது. சமூகத்தில் அடித்தளத்திலிருந்து அல்லற்படும் மாந்தகைள் பற்றிய பாத்திரங்களைப் புதுமெருகூட்டும் வகையில் தீட்டுவதாக அமைந்த கதை. அவ்வாறே ஆதவன் தீட்சண்யாவின் அனைத்துக் கதைகளும், வாழ்க்கையின் பல கோணங்களை, மனிதர்களின் பல முகங்களை ஆழ்ந்த சமூக அக்கறையுடனும் மனித நேயத்துடனும் பதிவாக்கியுள்ளன. இவ்விடத்தில் வடிவப் பரிசோதனை என்றவுடன் வெறும் வார்த்தை ஜாலங்களை வைத்து, குறியீடு, படிமம், புனைவுகள் என்ற போதைகளுக்கு அவர் ஆளாகவில்லை. அவரது கதைகளில் புனையப்பட்டுள்ள கற்பனைப் பாத்திரங்கள் கூட வாழ்விலிருந்து அந்நியப்படாமல் மக்களையொட்டியதாக வேர்கொண்டுள்ளது. யதார்த்தத்தில் காலூன்றி மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்துவிட்ட படைப்பாளிக்கு அவர் சந்திக்க நேர்ந்த மனிதர்கள் - சம்பவங்களையே படைப்பாக்க முடியும் என்பதை ஆதவன் தீட்சண்யாவின் கதைகள் அழகுற எடுத்துக் காட்டுகின்றன. அவரது கதைகளில் தனது அனுபவ எல்லைக்குட்பட்ட மனிதர்களின் வாழ்வு மட்டுல்ல அம்மனிதர்களிடையே குடி கொண்டிருந்த கோபங்களும் பதிவாக்கப்பட்டுள்ளன. கதையாசிரியரின் எழுத்து நடையும் பாத்திர வார்ப்புகளும் வாசிப்பில் சலிப்புத் தட்டாத வகையில் வாசகனை வாசிக்கத் தூண்டுகின்றது.

ஆதவன் தீட்சண்யாவின் சிறுகதைகளில் தனிப்பட்ட பாத்திரங்கள் மாத்திரம் மட்டுமல்ல சமுதாயத்தின் நானாவிதமானவர்களின் கூட்டுச் சிந்தனையும் அனுபவமும் படைப்பாக்கப்பட்டுள்ளன. இவையாவும் புதிய பண்பாட்டுப் புரட்சிக்கு அவசியமாகின்றன. இவ்வம்சம் இச்சிறுகதையாசிரியரின் இன்னொரு சிறப்பாகும்.

ஆக ஆதவன் தீட்சண்யாவில் வெளிப்பட்டு நிற்கும் அரசியல் என்பது தமது கை விலங்கைப் பார்த்து அழுது புலம்பிக் கொண்டிருக்கும் மனிதர்களின் குரலாக அமையவில்லை. சற்றே அந்நியப்பட்டு, உலக அரங்கில்வெற்றிபெற்றுவரும்சக்திகளின்குரலாகவும்அமைந்திருக்கின்றது. சமூகத்தில் புறநிலைப்பட்ட வாழ்க்கை மட்டங்களிலுள்ளவர்கள் பற்றிய ஒரு புதிய தரிசனை தான் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் ஆதவன் தீட்சண்யாவின் வரவைப் பதிவு செய்தது.

சூரியகாந்தி - 2011.

உலக இலக்கியத்தில் ஆழத்தடம் பதித்த மார்க்ஸிம் கார்க்கி

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் பேரறிஞர்களும் கலை இலக்கிய மேதைகளும் தோன்றியுள்ளார்கள். இவர்கள் தமது சிந்தனையால், எழுத்துக்களால் செயற்பட்டவர்கள் என்றவகையில் மனித இனத்தின் நாகரிகம், கலாசாரம், பண்பாடு என்பவற்றை மேன்மையடையச் செய்திருக்கின்றார்கள்.

கலையும் இலக்கியமும் காலத்திற்கேற்பவும் சமுதாயச் சூழலுக்கு ஏற்பவும் பிறப்பெடுக்கின்றன. ஆனால் அதே காலத்தில் அச்சூழலில் வாழ்கின்ற யாவரும் ஒரே விதமான சிந்தனைகளைப் பிரதிபலிப்பதில்லை. அப்படிப் பிரதிபலித்தாலும் அவை அழகாகவும் நேர்த்தியாகவும் அமைவதில்லை. திறமைமிக்க படைப்பாளிகளும் சிந்தனையாளர்களுமே தமது காலத்துக்கேற்ற சிந்தனையை நேர்த்தியாக வெளியிடுகின்றனர். அவ்வகையில் சமுதாயம் எனும் விளைநிலத்தின் பயிராகத் தோன்றிய சிந்தனையாளர்கள், மேதைகள் அச்சமுதாய அமைப்பினை உருவாக்குவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இந்தப் பின்னணியிலே கார்க்கியை நோக்குதல் காலத்தின் தேவையாக உள்ளதுடன் அவரது ஆளுமையை சரித்திரச் சூழலில் வைத்துப் புரிந்து கொள்வதற்கும் ஏதுவாக அமையும்.

கார்க்கி 1868ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி வால்கா நதிக்கரையில் உள்ள நிஷ்னி நோவ்கொராட் (Nizhny Novgord) எனும் ஊரில் ஏழ்மை மிக்க குடும்பத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் அலக்ஸி மாக்மோவிச் பெஸ்கோவ் (Aleksey Maksimovich Peshkov). கார்க்கி என்றால் கைத்துப் போனவன் என அர்த்தம். இவரது தந்தை தச்சு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். மிக இளமையான வயதிலேயே தமது பெற்றோரை இழந்துவிட்ட கார்க்கி செல்லவொண்ணாத துன்பங்களை அனுபவித்ததால் அப்பெயரைச் சூடிக் கொண்டார்.

கார்க்கி தமது வாழ்க்கையைப் பொது மக்களுக்காக புர்ப்பணித்தார். அவ்வாழ்க்கையைச்சுமையாகக்கொள்ளாமல்அதனையே

தமக்கு விருப்பமான வாழ்க்கையாகவும் ஆக்கிக் கொண்டார். அவரது எழுத்துக்களின் பின்புலமாக அமைந்தது அவரது வாழ்க்கையேயாகும். கார்க்கியைப் போல தமது இளமை வாழ்க்கையில் கடும் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தவர் வேறு யாருமாக இருக்க முடியாது என்றே கூற வேண்டும். 12 வயதிலேயே உழைக்கத் தொடங்கி விட்டார். இந்தக் காலப்பகுதியில் அவர் சமையல் காரன் ஒருவருக்கு எடுபிடி வேலை செய்கின்றவராக இருந்தார். அவர் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கவில்லை. பின்னர் கடைச் சிப்பந்தியாக, சுமை கூலியாக, துறைமுகக் கூலியாக, ஹோட்டல் தொழிலாளியாக, ரொட்டி சுடுபவராக, பறவை பிடிப்பவனாக, நூல் நிலைய குமாஸ்தாவாக, ரொட்டிக் கிடங்கு பணியாளனாக, செம்படவனாக, காவல் காக்கும் வாட்ச்மேனாக வாழ்க்கை நடாத்தி அந்த அனுபவங்களின் ஊடாகத் தனது கல்வியை மக்களோடான ஊடாட்டத்தின் ஊடாகவும், உழைப்பின் வாயிலாகவும் பெற்று வளர்த்துக் கொண்டவர்.

...கார்க்கியின் வாழ்வில் ஏற்பட்ட மிகத் துயரமான சம்பவம் 1887ம் ஆண்டில் செப்டம்பர் 12ந் தேதி இரவு 8 மணிக்கு நிஸ்னி நோவ் குரோத் என்ற ருஷ்ய நகரமொன்றின் பொத்தியஸ்னயா என்ற வீதியில் நிகழ்ந்தது. பல தினங்கள் துன்பங்களுக்கு மேல் துன்பம் அனுபவித்து, வேலை கிடைக்காமல் நகர் பூராவும் பல தினங்கள் பட்டினியுடன் சுற்றிச் சுற்றி அலைந்து, வாழ்க்கையில் கடுமையான வெறுப்புண்டு கார்க்கி துப்பாக்கியால் தன்னையே சுட்டுக் கொண்டார். தன்னைச் சுடுவதற்கு முன்னர் அவர் எழுதிய குறிப்பு மிக்க வேடிக்கையானது. அதை எண்ணி அவர் அடிக்கடி பல நண்பர்களிடம் சொல்லிச் சிரிப்பார். அந்தக் குறிப்பில் தான் சுட்டுக் கொண்டு சாவதற்கு உலகப்பிரசித்திபெற்ற ஜேர்மன் தேசத்துப் புலவர் ஹைன்தான் காரணம் என்று குறிப்பிட்டிருந்தார். இதோடு, மனிதனுக்கு உண்டாகும் இதயவலி பற்றி எனக்கு முதன் முதலில் உணர்த்திய கவிஞர் இவன்தான் என்று ஹைனுக்கு வாழ்த்தும் கூறி இருந்தார். சில மாதங்களில் கார்க்கி சுகமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினாலும் கூட அவர் சாகும் வரை இந்தச் சூட்டினால் ஏற்பட்ட தசைக் குறைபாடுகள் அவரைத் துன்புறுத்தியே வந்தன.

எனது பருவகாலத்தை வறுமைத்தேவன் கபளீகரம் செய்து விட்டான் என்று கார்க்கி அடிக்கடி சொல்வார். என்றாலும் அவர் அதற்காக வேதனைப்படுவதே இல்லை. 24 வயது நிரம்பும் வேளையில், ஆறு மாதங்களுக்கு அதிகமாகவே கார்க்கி மயானத்தில் பிணங்களின் தலைமாட்டில் இருந்து விடியும் வரை 25 ரூபிள் கூலிக்கு பிரார்த்தனை

செய்துள்ளார். இந்தத் தொழிலைக் கார்க்கி ஆறு மாதங்கள் தான் செய்தார் என்ற போதிலும், அவரின் வாழ்க்கை வஜ்ர உறுதியும் தெம்பும் மிக்கதாக உரம் பெற இது ஒரு காரணமாக இருந்தது. செத்த பிணங்களின் வாடையை ஆறு மாதம் பக்கத்திலிருந்து நுகர்ந்த கார்க்கி, வெளியே தன்னைச் சுற்றியும் வாழ்ந்த உயிருள்ள மக்கள் மத்தியில் நிலவிய வறுமையால் பெருந்துயரால் ஏற்பட்ட பிணவாடையை நீக்கும் இலட்சியத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டார்.[1]

அந்தவகையில் அந்தக் காலத்தில் ருஷ்யச் சமூகத்தில் இடம்பெற்ற கொடுமைகளையும், அடக்குமுறைகளையும், நேருக்கு நேர் கண்டது மட்டுமன்றி அவ்வாழ்க்கையை அனுபவித்தவராகவும் காணப்படுகிறார். உழைக்கும் மக்கள், திரளின் வாழ்க்கையையும் கொடுமைகளையும் காணவேண்டும் என அவா கொண்டிருந்த கார்க்கி நாடோடி போல் பல இடங்களுக்கும், நாடுகளுக்கும் சுற்றித்திரிந்தார்.

கார்க்கி தமது 17வது வயதிலே எழுதத் தொடங்கிவிட்டார். அவரிடம் மிக இளமைக் காலத்திலிருந்து எழுத்தார்வம் காணப்பட்டது. அவரது வாசிப்புத் திறனை அக்காலக்கட்டத்தில் ஊக்குவித்த இருவர் பற்றிய குறிப்புகளை நாம் அவரது எழுத்துகளில் காணக்கூடியதாக உள்ளது. தாம் சிறுவனாக இருக்கும் போது சமையற்காரர் ஒருவருக்கு உதவியாக கார்க்கி வேலை செய்தார் என்பதை முன்னர் பார்த்தோம். ஓர் சமயற்காரர் இவரது வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுபவராகவும் அதற்கான உதவிகளைச் செய்கின்றவராகவும் காணப்பட்டார். மற்றவர் கார்க்கியின் வாழ்க்கையில் முக்கிய பாத்திரமாகவும் அவரின் அன்புக்குரியவராகவும் விளங்கிய அவரது பாட்டி. இது தொடர்பில் ருஷ்யப் பயணத்தை மேற்கொண்டு கார்க்கியின் பாட்டி பொறுத்து அவரது மனைவியுடனான உரையாடலில் பெற்ற அனுபவத்தை எச்.எம்.பி. முஹிதீன் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

கார்க்கி தனது இறுதிக்காலம் வரை இரண்டு விஷயங்களை அவர் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கடுமையான வெறுப்புணர்ச்சியுடன் கண்டிப்பார். இதில் ஒன்று அநீதி விளைத்த அக்கிரமமே தனது தலையாய கடமையெனக் கொண்டிருந்த ஜார் ஆட்சியும், கோணல், மாணல் முதலாளித்துவ சமுதாயமுமாகும். மற்றையது அவரது தந்தையைக் கொடுமைப்படுத்தியும் அடித்தும் கொன்ற கார்க்கியின் பாட்டனார். "துயர் படிந்த, கண்ணீர் நிறைந்த இருள் கவிந்த கார்க்கியின் சிறுபிராய வாழ்வுக்கு அன்புத்திரி கொண்டு இன்ப ஒளி ஏற்றியவர், கார்க்கியின்

பாட்டி அக்குவினா இவானோவ்னா ஆவார். இந்த மூதாட்டி மாத்திரம் இல்லாதிருந்தால் கார்க்கி எட்டு வயது நிரம்புவதற்குள்ளேயே நம்மை விட்டு மறைந்திருப்பார். கார்க்கி தனது பாட்டியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என்னிடம் கூறுவார். 'அவள் தான் மனித வாழ்வை எனக்கு முதன்முதலில் போதித்தவள். மனிதத்துவ மாண்பினை அவளின் அனுபவத்திலிருந்து சிருஷ்டியான ராஜா ராணிக் கதைகள் தான் எனக்கு தெளிவாகப் பாடம் சொல்லித் தந்தன' என்பார். பாட்டி இவானோவ் கூறிய சின்னஞ்சிறிய கதைகளை, எழுத்தில் வெளிவராத அந்த அமர சிருஷ்டிகளை, அனுபவ மாண்மியங்களை தனது இறுதிக் காலம் வரை தலை சிறந்த நூல்களாக, இலக்கியச் செல்வங்களாக எங்கும் கிடைக்க முடியாத பொக்கிஷம் என மதித்து கார்க்கி பேணிப் பாதுகாத்து வந்தார்.[2]

இத்தகையை வாழ்வியலின் பின்னணியிலிருந்து தன்னைப் பட்டை தீட்டிக் கொண்ட அவர் புத்தகங்களைத் தமக்கு அந்நியப்பட்டதாகவோ அல்லது அவற்றை வேண்டாத குப்பை கூழங்களாகவோ கருதியவர் அல்லர். மாறாக கார்க்கி வாசிப்பதிலே தீவிர கவனம் செலுத்தினார். அதனூடாக உலக அனுபவங்களைப் பெற்றுப் புதியதோர் வாழ்க்கைக்கான நாகரிகத்தைச் சிருஷ்டிக்கும் திறனைப் பெற்றிருந்தார் என்பதை அவரது எழுத்தக்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. புத்தகங்கள் பற்றிய அவரது எண்ண ஓட்டம் இவ்வாறு பிரவாகம் கொண்டிருந்தது.

"அச்சுக் கோர்ப்பவன் என்கின்ற அத்துறையின் உழைப்பு நாயகன் ஒருவனால் பிறிதொரு உழைப்பு நாயகனால் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு யந்திரத்தின் உதவியுடன், ஒரு அச்சகத்தில் உருவாக்கப்பட்ட ஒரு புதிய புத்தகத்தை நான் கையில் எடுக்கும் போது அது ஒரு மனிதனால் தன்னைப்பற்றியும், உலகிலே எல்லாவற்றையும் விட மிகவும் சிக்கலானதும், மிகவும் மர்மமானதும், மிகவும் நேசிக்கக் கூடியதுமான ஒன்றினைப் பற்றியும், உலகத்திலேயே அழகும் மேன்மையும் பொருந்திய அனைத்தையும் தன் உழைப்பாலும் கற்பனையாலும் படைத்த ஒன்றினைப் பற்றியும் எழுதப்பட்ட அற்புதமான என்னுடன் பேசும் ஆற்றல் படைத்த ஜீவனுள்ள என்னுடைய ஆன்மாவோடு கலந்துவிட்ட ஒன்றாக நான் உணருகிறேன்."[3]

புத்தகத்தை ஜீவனுள்ளதாகக் கருதும் கார்க்கி அது தன்னுடன் பேசுவதாகக் கூறுகின்றார். யாவற்றுக்கும் மேலாக அது மனிதனைப்பற்றி மனிதனால் எழுதப்பட்டது எனக்கூறுகின்றார். மனிதன் குறித்த இந்தப்

பார்வையும் சிருஷ்டிகரத் திறமையுமே கார்க்கியை மனித குலத்தின் மகத்தான படைப்பாளியாக்கியது. மனிதன் குறித்த அவரது பார்வை: "மனிதன்! எத்தனை கம்பீரமாக இச்சொல் ஒலிக்கிறது! எனக்கு மனிதனைவிடச் சிறந்த கருத்துகள் இல்லை, மனிதன் மட்டும்தான் எல்லாப் பொருள்களுக்கும் எல்லா கருத்துகளுக்கும் படைப்பாளி, அற்புதம் செய்வோன் அவனே, இயற்கைச் சக்திகளின் எதிர்காலத் தலைவன் அவனே, இவ் உலகின் அதியற்புத அழகுப் பொருட்கள் எல்லாம் அவனது உழைப்பால் ஆனவை. நான் மனிதனுக்குத் தலை வணங்குகின்றேன், ஏனெனில் மனித அறிவுக்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காண முடியவில்லை.

உலகத்திலுள்ள அழகு அனைத்தும் மனிதன் படைப்புத்தானே? இயற்கையின் வனப்பை மனிதன் மிஞ்ச முடியுமோ என்று நீங்கள் முணுமுணுக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. நம்மைச் சுற்றியுள்ள இயற்கையில் அழகு இல்லை அது நமக்குப் பெரிதும் பகைமை கொண்டது. ஆன்மாவின் ஆழத்தில் மனிதனே சிருஷ்டித்த ஒன்றுதான் அழகு."[4]

இவ்வாறு மனித குலத்தின் யௌவனத்தையும் அழகையும் உணர்ந்திருந்த கார்க்கி தனது சரித்திரத் தூரிகை கொண்டு புதியதோர் நாகரிகத்திற்காக அதனை நகர்த்திச் செல்கின்றபோது எழுத்தாளன் குறித்தும் இலக்கியப் படைப்பின் கடமைப்பாடு குறித்தும் பின்வருமாறு எழுதுகின்றார்:

ஒரு எழுத்தாளன் அல்லது கலைஞன் தனது வாழ்வை, விதியை மக்களின் விதியோடு, அவர்களுடைய விடுதலை, மேம்பாடு, மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை ஆகியவற்றுக்கான போராட்டத்தோடு இணைக்கின்ற போதுதான் அவன் புனர்ஜென்மம் எடுக்கின்றான். அவனுடைய படைப்புக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தையோ, ஒரு குறிப்பிட்ட நாட்டையோ சார்ந்தவையாக இருக்க முடியாது. அவை சர்வ வியாபகமானவை, காலத்தை வென்றவை.

ஆனால் ஒரு எழுத்தாளன் உழைக்கும் மக்களிடமிருந்து பிரிந்து, தன்னைத் தனிமைப்படுத்தி நிற்பதன் மூலம், மக்களுடைய போராட்டங்களில் இணையாமல், அவர்களுடைய போராட்டங்களைப் பார்த்தும் பாராமல் இருப்பதன் மூலம் அவன் மக்களிடமிருந்து அந்நியமாகின்றான். இதனால் அவன் தன்னுடைய ஆளுமையை அழிக்கின்றான். அவனுடைய எழுத்துக்கள் வலிமையற்று நபுஞ்சகத்தன்மை உடையவனாக அமைகின்றன.[5] எனக் கூறுகின்றார்.

கார்க்கி தாம் வாழ்ந்த காலத்தில் ருஷியப் புரட்சியைச் சந்தித்தவர். புரட்சிகரப் போராட்டங்கள் யாவற்றிலும் இணைந்து நின்றவர் என்ற வகையில் 1917 இல் நடைபெற்ற அக்டோபர் புரட்சியே கார்க்கியை முழு ஆளுமை கொண்ட படைப்பாளியாக மாற்றியது. கார்க்கி பற்றிய அவரது மனைவியின் நினைவலைகளில் சில குறிப்புகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

"கார்க்கிக்கு ஒவ்வொரு நாட்டு இலக்கியங்கள் பற்றியும், எழுத்தாளர்களைப் பற்றியும் நன்கு தெரிந்திருந்தது. அவர் பலதடவைகளில் பல்வேறு நாட்டு எழுத்தாளர்களுக்கு, அவர்கள் நாட்டு இலக்கியங்களை வைத்தே விமர்சனம் செய்யக்கேட்டு நான் அதிசயமுற்றுள்ளேன். ஒரு தடவை இத்தாலிய எழுத்தாளர்கள் சிலர் இதே வீட்டுக்கு கார்க்கியைக் காண வந்திருந்தார்கள். அவர்களுடன் கார்க்கி நீண்ட நேரம் சம்பாஷனை நடத்தினார். சோவியத் இலக்கியம் பற்றியும், உலக இலக்கியங்களைப் பற்றியும் அவர்கள் கார்க்கியுடன் நீண்ட நேரம் பல கருத்துகளில் தர்க்கம் செய்தனர். முடிவில் அவர்கள் விடைபெற்றுச் செல்ல வேண்டிய நேரம் நெருங்கிய வேளையில் அவர்களுக்கு கார்க்கி, இத்தாலிய இலக்கியத்தின் ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பற்றியும், அதன் வழிவழி வரும் இலக்கிய மாண்பினைப் பற்றியும் நீண்ட சொற்பொழிவொன்றே ஆற்றினார் என்றுதான் சொல்ல வேண்டும். முடிவில், அந்த இத்தாலிய விமர்சகர்கள் விடைபெறும் போது 'உங்களின் தாய்மொழியான இத்தாலியில் தொன்றுதொட்டு வந்துள்ள இலக்கியச் செல்வங்களை இன்னும் அதிகமாக நீங்கள் படித்தால் எல்லோருக்கும் பயன் கிடைக்கும்' என்று கார்க்கி நல்லுரை கூறி அனுப்பினார். அவர்களுடன் ஏன் அம்மாதிரி வேண்டா வெறுப்பில் நடந்து கொண்டீர்கள் என்று அவர்கள் சென்ற பிறகு நான் கார்க்கியிடம் கேட்டேன். கடிந்தும் கொண்டேன். அதற்கு அவர், 'என்னிடம் செய்த தவறை அவர்கள் வேறு யாரிடமும் செய்யக்கூடாது என்பதற்குதான்' என்று பதில் கூறினார். கார்க்கியின் சூடான வார்த்தைகள் இவ்வெழுத்தாளர்களில், விமர்சகர்களில் பலரைத் திருத்திய நற்செய்தியை, பின்னர் அவர்கள் இத்தாலியிலிருந்து கார்க்கிக்கு எழுதிய கடிதங்களிலிருந்து என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது."[6]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என்பன முற்றுப் பெற்று ஏகாதிபத்தியம் என்ற கட்டத்திற்குள் சென்று கொண்டிருந்தது. ஆனால் ருஷியா மட்டும் அரை நிலப்பிரபுத்துவ நாடாக விளங்கியது.

இவ்வாறான சூழலில் முதலாளித்துவம் பாட்டாளி வர்க்கத்தையும் உழவர் வர்க்கத்தையும் இணைத்துப் போராடி, முதலாளிய ஜனநாயகத்திற்குக் கீழான ஒரு அரசினை உருவாக்கியிருக்க முடியும். அது அவ்வாறு செய்யப்பட்டதற்குக் காரணம் அதன் நலன் சார்ந்து அமைந்திருந்ததைக் காணலாம்.

சரக்கு உற்பத்தி வளர்ச்சி பெறுவதால் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குள்ளேயே இரண்டு புதிய வர்க்கங்கள் தோன்றுகின்றன. வணிகத்திலும் பண்ட உற்பத்தியிலும் ஈடுபடும் பூர்சுவாக்கள் அல்லது முதலாளி வர்க்கம் ஒரு வர்க்கம். மற்றொன்று பாட்டாளி வர்க்கம் இவர்கள் பஞ்சப்பட்ட உழவர் வர்கக்கத்தில் இருந்தே பெரும்பாலும் வருகிறார்கள். இவர்களிடம் உழைப்புச் சக்தியைத் தவிர வேறெந்த உடைமையும் இல்லை. கூலிக்காக இவ் உழைப்புச் சக்தியை முதலாளிகளிடம் விற்கிறார்கள். இவ்வாறாக முதலாளியம், சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியைத் தடை செய்யும் நிலப்பிரபுக்களுக்கும், உழைப்புச் சுரண்டலுக்கு உட்படுத்தப்படும் பாட்டாளிகளுக்கும் எதிராக நிற்கிறது. நிலப்பிரபுக்களைப் பொறுத்தமட்டிலும் புரட்சிகரமானதாகவும், பாட்டாளிகளைப் பொறுத்தமட்டிலும் எதிர்ப் புரட்சிகரமானதாகவும், உள்ள இந்த இரட்டைப் பண்பு, முதலாளியத்தின் இறுதிக் கட்டத்தில், உழவர் வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கம் தன்னைத் தலைவனாக அமர்த்திக் கொண்டு அவற்றின் ஆதரவோடு நிலப்பிரபுக்களைத் தூக்கி எறிந்து, தன்னையே ஒரு ஆளும் வர்க்கமாக நிறுவுகிறது. முதலாளி வர்க்கப் புரட்சி என்பது இதுதான்.[7]

1905 ஆம் ஆண்டு இடம்பெற்ற புரட்சியில் இப் பண்பினைக் காணலாம். மறுபுறமாக பாட்டாளி வர்க்கம் அதன் நேச சக்திகளுடன் இணைந்து புரட்சிகர உணர்வைப் பெற்றிருந்ததுடன் அது தமது எசமான வர்க்கத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கியது. இந்தச் சூழலில் ஜார் ஆட்சியைப் பலப்படுத்துவதே இப் புரட்சியைத் தடுப்பதற்கான ஒரே மார்க்கம் என்பதை ஏகபோக முதலாளிகள் அறிந்திருந்தனர். அந்தவகையில் அவர்களது வர்க்க நலன் சார்ந்து ஜாரை ஆதரித்து நின்றனர்.

அன்றைய சூழலின் யதார்த்தத்தை ட்றொட்ஸ்கி யதார்த்த சூழலில் வைத்து நோக்கத் தவறியதன் காரணமாக 'ஒரு நாட்டில் சோஷலிசம்' எனும் விடயத்தைத் தவறாகப் புரிந்து கொள்கின்றார். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை குறுகிய எல்லைக்குட்பட்டதாகக்

கருதிய ட்றொட்ஸ்கி பாட்டாளிவர்க்க கலை, பண்பாடு ஆகியவற்றை வெறும் கற்பனாவாதப் புனைவுகளாகக் கருதினார். பட்டாளிவர்க்க சர்வாதிகாரம் குறுகிய காலத்துக்குரியதாக இருப்பதனால் பாட்டாளிவர்க்க கலை, பண்பாட்டை உருவாக்க முடியாது எனக் கருதினர். இதன் பின்னணியில் வர்க்கம் கடந்த கலை பண்பாடு என்ற சிந்தனையை முன்வைத்தார். இது தொடர்பில் ட்றொட்ஸ்கியின் பின்வரும் கூற்று முக்கியமானது: "ஒரு கலைப்படைப்பை புறக்கணிப்பதா அல்லது ஏற்றுக்கொள்வதா என்பதில் மார்க்ஸிய கொள்கையை எப்போதும் கடைப்பிடிக்க முடியாது. அது சொந்தக் கலை விதிகளால் தீர்மானிக்கப்பட வேண்டும்" என்கிறார். அந்தவகையில் அரசியலில் மார்க்சியம் - கலையில் முதலாளியம் என்ற நிலைப்பாடு ட்றொட்ஸ்கியால் முன்வைக்கப்பட்டது. அந்த இலக்கியப் போக்கு ட்றொட்ஸ்கியின் வார்த்தைகளில் சொன்னால் "பழைய சாதனைகளை அப்படியே விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு புதிய வர்க்கமாக பாட்டாளிவர்க்கம் தன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்" என்பதை முன்வைத்து அந்தப் போக்கு தமக்கு முன்னோடியுள்ள முதலாளிய விழுமியங்களை அப்படியே ஏற்றுக் கொள்ள விழைந்தது.

இதற்கு நேர் எதிர்மாறாகத் தூய பாட்டாளிவர்க்க கலைக் கோட்பாடும் முன்வைக்கப்பட்டது. இந்தச் சிந்தனையை முன்வைத்தவர்களில் பொக்டனொவ் முக்கியமானவர். பொக்டனொவின் நோக்கில் கலை ஒரு வர்க்கத்தின் சித்தாந்தத்தின் பகுதியாகும். அதன் வர்க்க உணர்வின் ஒரு கூறாகும். எனவே கலை வர்க்க வாழ்வின் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு வடிவமாகிறது. வர்க்க சக்திகளை ஒன்றுபடுத்தி இணைக்கும் ஒரு கருவியாகின்றது. வர்க்கப் போராட்டத்தில் கலை ஒரு ஆயுதமாகும். ஒரு குறிப்பிட்ட வர்ககத்தின் சித்தாந்தத்தை ஒவ்வொரு எழுத்தாளனும் பிரதிபிம்பம் செய்கின்றான். எடுத்துக்காட்டாக ஒரு கவிஞன் ஒரு திட்டவட்டமான வர்க்கத்தின் கண்களினூடாகத்தான் அதன் சிந்தனைகளினதும் உணர்ச்சிகளினதும் ஊடாகத்தான் உலகை நோக்குகின்றான். அதனைப் பற்றுகின்றான். எழுத்தாளனின் ஆளுமைக்கு அடியிலே கூட்டு ஆசிரியன் மறைந்திருக்கிறான். கவிதை இந்தக் கூட்டு ஆசிரியனின் தன்னறிவின் ஒரு பகுதியே. எனவே பொக்டனோவின் கோட்பாட்டு நிலையில் பூர்சுவா வர்க்க கலையின் முற்றான நிராகரிப்பு தொக்கி நிற்கின்றது. காரணம் பாட்டாளி வர்க்கத்திற்கு உதவாத வர்க்க மனப்பான்மையையே இக்கலை பிரதிபிம்பம் செய்தமையாகும்.[8]

மனித குலம் இதுவரை காலமும் சேகரித்து வைத்துள்ள சகல விடயங்களையும் நிகாரிப்பதாக இப்போக்கு அமைந்தது. பாட்டாளிகளாக இருப்பவர்களே கலை இலக்கியம் படைக்க முடியும் எனவும் அதற்காக ஆண் பெண் தொழிலாளர்கள் பாட்டாளிவர்க்க கலைக் கூடங்கள் பட்டறைகள் மூலமாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதையும் இப்பிரிவினர் வலியுறுத்தினர். இதுவரைக் காலமும் சேகரித்து வைக்கப்பட்ட பண்பாட்டை நோக்கி அதனுள் "ஒடுக்கும் பண்பாடு," "ஒடுக்குமுறைக்குள்ளான பண்பாடு" குறித்த பார்வையைச் செலுத்தி அவற்றில் பாட்டாளி வர்க்கத்திற்குச் சார்பான போராட்டக் கூறுகளை கவனத்திலெடுக்கத் தவறியதன் விளைவாக இப் போக்கு இவர்களை வக்கற்ற புலம்பல்களுக்கே இட்டுச் சென்றது. பாட்டாளி வர்க்கத்துடன் ஐக்கியப்பட வேண்டிய நேசசக்திகளை தனிமைப்படுத்தியதுடன் உழைக்கும் மக்களின் போராட்டங்களையும் கூனிக் குறுகச் செய்தது. இத்தகைய இரண்டு போக்குகளையும் லெனின் விமர்சனத்திற்குட்படுத்தினார். அது தொடர்பில் லெனின் பின்வருமாறு எழுதினார்:

"சமகாலத்தைய பண்பாட்டின் சிறந்த முன்மாதிரிகள் மரபுகள், விளைவுகள் ஆகியவற்றை மார்க்சிய உலகக் கண்ணோட்டத்தின் வழிநின்று கண்டறிந்த வளர்ச்சி நிலையாகவே புதிய பாட்டாளிவர்க்க கலை அமையுமே தவிர அது புதிய கண்டுபிடிப்பு அல்ல என்பதை பாட்டாளிவர்க்க கலை பற்றிப் பேசுகின்ற நாம் மனதிற் கொள்ள வேண்டும். மனிதவர்க்கத்தின் வளர்ச்சி பற்றிய துல்லியமான அறிவும் அதனை மாற்றக் கூடிய ஆற்றலும் சாத்தியமானால் தான் பாட்டாளிவர்க்க கலை படைக்க முடியும். இக்கலை வானத்திலிருந்து குதிப்பது அல்ல. பாட்டாளி வர்க்கக் கலை நிபுணர்கள் என அழைத்துக் கொள்பவர்களின் கண்டு பிடிப்பும் அல்ல. அப்படிச் சொல்வதெல்லாம் சுத்த அபத்தம். பாட்டாளிவர்க்க கலை என்பது முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் அதிகாரத்துவ சமூகம் ஆகியவற்றில் சேகரிக்கப்பட்ட மனித குல அறிவின் தர்க்க ரீதியிலான வளர்ச்சியாகும்." [9]

இவ்வாறு நமது பாரம்பரிய பண்பாடு மரபுகளிலிருந்து நாம் கற்க வேண்டியவற்றின் அவசியத்தைக் கூறுகின்ற லெனின் அதனைப் பாட்டாளிவர்க்க நலனுடன் இணைத்து உள்வாங்கப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கை செய்கின்றார். இப் போக்கானது தேசிய ஜனநாயக சக்திகளைத் தன்னுள் ஐக்கியப்படுத்தி யதார்த்தத்தை உணர்ந்து அந்தச் சூழலிலே பாட்டாளி வர்க்கம் சார்ந்த கலை இலக்கியக் கோட்பாடுகளை

முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனையை முன் வைக்கின்றார். இந்தப் போக்கினை ஆதரித்து நின்றவர் கார்க்கி.

இத்தகைய பின்னணியில் நின்று கொண்டே கார்க்கி சோஷலிச யதார்த்தவாதம் என்ற சிந்தனையை முன் வைத்தார். யதார்த்த வாதம் என்பது குறிப்பிட்டதோர் வரலாற்றுச் சூழ்நிலையில் தோன்றிய தொன்றாகும். நிலமானிய சமுதாயத்தை மாற்றி முதலாளித்துவ சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கான போராட்டத்தில் நிலமானியத்தின் கொடுமைகளைத் தோலுரித்துக்காட்ட வேண்டியதன் தேவை ஏற்பட்டதன் விளைவாக யதார்த்தவாதம் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தது. இப்போக்கு சமூகத்தின் எண்ணற்ற முரண்பாடுகளை ஊடுருவி அதன் சாராம்சமான போக்குகளை வெளிக் கொணர்வதில் முக்கியத்துவம் பெற்றது. யதார்த்த வாதக் கலைப்படைப்பில் வகை மாதிரியான பாத்திரப்படைப்பு முக்கியமானதோர் அம்சமாகும்.

சோஷலிச யதார்த்த வாதம் என்பது மற்றுமொரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் தோற்றம் பெற்ற ஒன்றாகும். முதலாளிய அமைப்பைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் சோஷலிச சக்திகளால் முன்வைக்கப்பட்ட சிந்தனை. யதார்த்தவாதத்தில் உழைக்கும் மக்கள் பாத்திரங்களாகச் சித்திரிக்கப்பட்டாலும் அவை மனிதாபிமான சித்தரிப்புகளாகவே அமைந்தன. அவை சமூக முரண்பாடுகளை வெளிக் கொணர்வதில் முக்கியத்துவம் மிக்கனவாகக் காணப்படுகின்றன. ஆனால் சோஷலிச யதார்த்தவாதத்தில் சமூக முரண்பாடுகள் பகை கொண்ட வர்க்கங்களின் முரண்பாடாகக் கண்டு அதனை உழைக்கும் மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்கின்றது. ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் போது சோஷலிச யதார்த்தவாதம் முக்கியமான இலக்கியப் போக்காகத் திகழ்ந்தது. இதனைக் கலைப்படைப்பாக்கியதில் முதன்மையானவர் கார்க்கி. அவரது "தாய்" நாவல் இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும்.

1939ல் நடைபெற்ற சோவியத் எழுத்தாளர்களின் முதலாவது மாநாட்டில் மாக்ஸிம் கார்க்கி சமர்ப்பித்த அறிக்கை கூறியது: "வாழ்க்கை என்பது செயல், வாழ்க்கை என்பது படைப்புத் திறன் என்கிறது சோஷலிச யதார்த்தவாதம். இயற்கைச் சக்திகளின் மீதான மனிதனின் வெற்றிக்கான, அவனின் ஆரோக்கியத்திற்கும் நீண்ட ஆயுளுக்குமான உலக வாழ்வின் மகத்தான மகிழ்ச்சிக்கான அவனின் பெருமதிப்பு வாய்ந்த தனிமனித ஆற்றல்களின் தடையற்ற வளர்ச்சியே இதன் நோக்கமாகும். மனிதனின்

தேவைகள், ஆசைகள் ஆகியவற்றின் நிலையான வளர்ச்சிக்கேற்ப இந்தப் பூவுலகை ஒரே குடும்பமாய், வாழும் மனித குலத்தின் அற்புதமான விளைநிலமாக மாற்றுவதே அதன் நோக்கமாகும்."[10]

இந்த வகையில் புதியதோர் உலகைப் படைக்கும் சமூகமாற்றப் போராட்டத்தில் சோஷலிச யதார்த்தவாதம் நிதர்சனமானதோர் இலக்கியக் கோட்பாடாகத் திகழ்ந்தது. இதனை அறிவாலும் உள்ளுணர்வாலும் தமதாக்கிக் கொண்ட கார்க்கி அதன் ஒளியிலேயே தமது சமூகம் குறித்தும் மக்கள் குறித்தும் கருத்துகள் கூறக் காண்கின்றோம்.

கலை இலக்கியத்தை சமூகமாற்றத்திற்கான கருவியாக நோக்குகின்றபோது கோடான கோடி உழைக்கும் மக்கள் அவர்களின் நலன் சார்ந்த போராட்டத்திற்கான ஐக்கியப்படுகின்ற போது அவர்களை அரசியல் மயப்படுத்துவதற்கு இலக்கியமும் அவசியமானதொன்றாகின்றது. இதன் காரணமாகத் தான் மார்க்ஸ், லெனின், ஹோசிமின் முதலானோர் கலை இலக்கியம் குறித்து அக்கறை செலுத்தத் தலைப்பட்டனர். இந்தச் சூழலில் தமது அரசியல் போராட்டங்களுக்கான சாதனமாகக் கலை இலக்கியத்தை நோக்கினர். இங்கு தவிர்க்க முடியாத வகையில் இலக்கியம் பாட்டாளி வர்க்க ச்செயற்பாட்டின் முக்கிய பகுதியாகத் திகழ்கின்றது. கட்சி இலக்கியம் தொடர்பில் அக்காலகட்டத்தில் லெனின் எழுதிய "கட்சி ஸ்தாபனமும் கட்சி இலக்கியமும்" (1905) என்ற கட்டுரை எதிர் முகாமினரால் கடுமையான தாக்குதல்களுக்கு உட்பட்டது. கலை இலக்கியம், இலக்கிய கர்த்தா என்பவற்றைச் சமுதாயத்திலிருந்து பிரித்துப் பார்த்தவர்களுக்கு கலை இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் இடையிலான உறவு குறித்துப் பேசியது அலர்ஜியை ஏற்படுத்தியது.

லெனின் தமது கட்டுரையின் ஊடாக இலக்கியத்திற்கும் அரசியலுக்கும், இலக்கியத்திற்கும் வர்க்க முரண்பாடுகளுக்கும் இடையிலான உறவு குறித்து அழகுற தெளிவுபடுத்தினார். அவர் குறிப்பிட்ட கட்சி இலக்கியம் என்பது கட்சி உறுப்பினர்களைப் புனிதர்களாகக் காட்ட முனைவதாக அல்லாமல் பாட்டாளி வர்க்கத்தின் பொது இலட்சியமான கம்யூனிசம் என்ற மனித குலத்தின் மகத்தான போராட்டத்தில் மக்கள் இலக்கிய கர்த்தா அதனை முன்னெடுத்துச் செல்லக் கூடிய இயக்கத்தைப் பற்றியதாக அமைந்திருந்தது. மேலும் அப்போராட்டத்தைச் சரியான திசைமார்க்கத்தில் முன்னெடுத்துச் செல்வதற்காகவும், யாவற்றுக்கும் மேலாக அப்போராட்டத்தில் மக்களை

ஐக்கியப்படுத்தி, அவர்களின் அரசியல் உணர்வை வளர்ப்பதாகவும் கட்சி இலக்கியம் அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார். கார்க்கியின் சகல படைப்புகளிலும் இந்தச் சிந்தனைப் போக்கைக் காணலாம். "தாய்" என்ற நாவல் அக்டோபர் புரட்சியில் முக்கிய பாத்திரம் வகித்ததாலும், அப்புரட்சி எத்திசை நோக்கிச் செல்கின்றது என்பதனை எடுத்துக் கூறியதாலும் கட்சி இலக்கியத்திற்கு முன்னோடிப் படைப்பாகத் திகழ்கின்றது எனலாம்.

அதே சமயம் கார்க்கி குறித்த நேசபூர்வமான விமர்சனங்களும் அவ்வக் காலங்களில் முன்னெடுக்கப்பட்டன. அத்தகைய விமர்சனங்களை முன் வைத்தவர்களில் லெனின் முக்கியமானவர். லெனின் அரசியல் போராட்டத்தில் வகித்த பங்கு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது கார்க்கி இலக்கியத் தளத்தில் வகித்த பாத்திரமாகும். மதம் குறித்த கார்க்கியின் பார்வையுடன் லெனின் முரண்படுகின்றவராகக் காணப்பட்டார்.

அதே நேரத்தில் கார்க்கியின் எழுத்துக்களில் வந்த சில சித்தாந்தத் தவறுகளை எடுத்துக்காட்டவும் லெனின் தவறவுமில்லை. கார்க்கி எழுதிய ஒரு கட்டுரையில் கீழ்க்கண்டவாறு ஒரு பந்தி இருந்தது:

"கடவுளை நாடுவது தற்சமயத்திற்கு ஒத்திவைக்கப்பட வேண்டும். அது ஒரு பயனற்றவேலை. காணுவதற்கு இல்லாத ஒன்றைத் தேடிக்கொண்டிருப்பது வியர்த்தமானது. விதைக்காமல் அறுவடைசெய்ய முடியாது. இப்போது கடவுள் கிடையாது? ஏனெனில், நீங்கள் அவரை இன்னும் சிருஷ்டிக்கவில்லை. கடவுள்களைத் தேடவேண்டியதில்லை. அவர்கள் உண்டுபண்ணப்படுகின்றனர். மக்கள் வாழ்க்கையைக் கண்டுபிடிப்பதில்லை, அவர்கள் அதைச் சிருஷ்டிக்கின்றனர்."

இதை எடுத்துப்போட்டு கடவுளைத் தேடுவதனைத் தற்காலிகமாகத்தானே ஒத்திவைக்கச் சொல்லுகிறீர்கள்? கடவுளைத் தேடுவது, கடவுளைச் சிருஷ்டிப்பது என்பவற்றிற்கிடையில் அப்படி என்ன வேறுபாடு இருக்கிறது? மஞ்சள் பேய்க்கும் நீலப்பேய்க்கும் இடையில் எவ்வளவு வேறுபாடு உண்டோ அவ்வளவு வேறுபாடுதானே இந்த இரண்டிற்கும் இடையிலும்? தங்களது எழுத்தில் இப்படிப்பட்டதொரு மோசமான சித்தாந்தக் குறைபாடு வரலாமா? இப்படிக்கேட்டு ஒரு காரசாரமான கடிதம் அவருக்கே எழுதினார் லெனின்.[11]

சமூகமாற்றப் போராட்டங்களின் போது எதிர்ப்புரட்சிக் கலவரங்களைக் கண்டு கலக்கமடைந்த கார்க்கி ஒரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ கம்யூனிசம் பற்றிக் கூடப் பேசத் தொடங்கினார். ஆனால் பலமான கட்சி அமைப்பு என்ற ஒன்று இருந்தாலும் அதில் லெனின், ஸ்டாலின் போன்ற ஆளுமைமிக்க தலைவர்கள் இருந்ததாலும் மீண்டும் புரட்சி வழியில் தம்மைப் புனரமைத்துக் கொண்டு புரட்சி வழியில் தொடர்ந்து முன்னெடுத்தார்.

முதலாவது உலகப் போருக்குப் பின்னர் ஏகபோகங்கள் வளர்ச்சி பெற்றன. இந்த வளரச்சிப் போக்கின் பின்னணியில் சிறு தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர் சிதைவுண்டனர். சமுதாயத்தில் தோன்றுகின்ற முரண்பாடுகள் சமூகத்தை வறண்ட பாலைவனமாக்கிவிடும் என்ற அச்ச உணர்வு பலரைப் பாதித்திருந்தது. தனிமனித சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க முடியாமலும், அதேசமயம் ஏகபோகத்தையும் விமர்சிக்க முடியாமல் தங்களுக்குள்ளேயே புழுங்கிப் போயினர். இப்பின்னணியில் தான் ஃபிராய்டு போன்றோரின் உளவியல் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் ஹிஸ்டீரியா நோயாளிகள், நரம்பு நோயாளிகள் போன்றோரின் பரிசோதனைக்காகப் பயன்பட்ட இக்கோட்பாடு பின் முழு மனித சமுதாயத்திற்குரியதாகவும் மாற்றப்பட்டது. ஒரு விதத்தில் யதார்த்தத் தளத்தை விட்டு விலகி ஆழ்மனப் புலம்பல்களுக்குள் இக்கோட்பாடு தஞ்சம் புகுவதனால் முதலாளிய உலகம் வெகுவாக வரவேற்றது. நடைமுறையில் இக்கோட்பாடு பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கும் அதனால் ஏற்படக் கூடிய நம்பிக்கைக்கும் விரோதமாகச் செயற்பட்டது. இதன் காரணமாகத் தான் பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராகத் தோன்றிய எழுத்தாளர்களான எஸ்ராபௌண்ட், ஜேம்ஸ் ஜாய்ஸ், ஃபிரான்ஸ் காஃப்கா, டீ.எஸ்.எலியட் போன்றோர் இப்போக்கினைச் சார்ந்து இலக்கியம் படைத்தனர். நமது யுகத்தில் மார்க்ஸியத்தை நிராகரிப்பதற்காக இக்கொள்கை பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம்.

கார்க்கி இப்போக்கினை விமர்சனத்திற்கு உட்படுத்தினார். இக்காலச் சூழலில் வளர்ச்சி பெற்று வந்த தொழிலாளி வர்க்கப் போராட்டத்தையும் அதற்கு உந்துதலாக இருந்த கட்சியையும் பிரதிபலித்து வந்தது கார்க்கியின் எழுத்துக்கள் நம்பிக்கை தரக் கூடியவனாக இருந்தன.

1936 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி கார்க்கி தமது இல்லத்தில் திடீர் மரணமடைந்தார். அவரது மரணம் குறித்துப்

பல்வேறுபட்ட வதந்திகள் பரவிவருகின்றன. கார்க்கியின் புரட்சிகர ஆளுமையின் காரணமாக அவருக்கு வைத்தியம் பார்த்த வைத்தியர் ஒருவர் அவரைச் சிறுகச் சிறுக விஷம் கொடுத்துக் கொன்றதான செய்திகள் காணப்படுகின்றன. மறுபுறத்தில் எதிர்ப் புரட்சியாளர்கள் கார்க்கியைக் கொன்றனர் என்ற செய்தியும் காணப்படுகின்றது. இயற்கையில் இறப்பு எனவும் சில செய்திகள் வெளியாகின. எது எவ்வாறாயினும் பல மேதைகள், சமூகமாற்றப் போராளிகள் பலர் அன்று ஏகாதிபத்தியத்திற்கு துணைபோன வைத்தியர்களால் கொல்லப்பட்டுள்ளனர். இதனை ஆதாரமாகக் கொண்டு நோக்குகின்ற போது கார்க்கியைக் கொன்றதற்கான சாத்தியங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

பத்தாயிரம் பொதுக் கூட்டங்களைவிட மார்க்சிம் கார்க்கியின் 'தாய்' லட்சக்கணக்கான போராளிகளை உணர்ச்சி கொண்டு எழச் செய்தது. கார்க்கியின் எழுத்துக்கள் வலிமையுடையதாய் திகழ்ந்தமையினால் தான் அவரை உலக முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடியாகக் கொள்கின்றோம்.

அடிக்குறிப்புகள்

1. முஹிதீன் எச்.எம்.பி. (கட்டுரையாசிரியர்) (2001) சரஸ்வதி களஞ்சியம் கலைஞன் பதிப்பகம் சென்னை - ப.105
2. மே.கு.நூ. ப.106
3. பாலதண்டாயுதம் - கே (1992) 'இலக்கியத்தில் மனிதநேயம்' நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவட் விமிட்டட் , சென்னை ப . 13
4. மே.கு. நூ. ப. 14
5. பொன்னையன் நீர்வை (1991), 'முற்போக்கு இலக்கிய முன்னோடிகள்' குமரன் புக்ஹவுஸ் , சென்னை ப. 04.
6. முஹிதீன் எச்.எம்.பி - மே.கு. நூ. ப.110.
7. தாம்ஸன் ஜார்ஜ் - (1981) 'மார்க்ஸ் முதல் மாசேதுங்வரை' கீழைக் காற்று வெளியீட்டகம், சென்னை ப.24.
8. மே. கு. நூ. ப. 29.
9. இரவீந்திரன் .ந. (1996) 'பின் நவீனத்துவமும் அழகியலும்', வவுனியா கலை-இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா பக் .12-13
10 அலன் ஸ்விஞ்வுட் (தமிழில் கனகரட்னா ஏ.ஜே.) மார்க்ஸியமும் இலக்கியமும் 1981, அலை வெளியீடு யாழ்ப்பாணம் , ப. 23
11 அருணன் (1990), மார்க்சிய அழகியல், சிட்டு பதிப்பகம், மதுரை ப. 82.
12. மே.கு. நூ. ப.109

இனியொரு.கொம் - 2010.

20

இளமையின் கீதம்

(சீன பழைமை சமூகத்தை எதிர்த்துப் போரிட்ட ஒரு இளம் பெண்ணின் கதை)

"இளமையின் கீதம்" என்ற நாவல் சீன முற்போக்கு இலக்கியவாதியான யங்மோவின் ஆற்றல் மிக்க படைப்பாகும். இந்நாவல் கிட்டத்தட்ட 748 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்நாவலை மயிலை பாலு தமிழிலே மொழிபெயர்த்துள்ளார். மார்க்ஸிம் கார்க்கியின் "தாய்" நாவல் ரசியப் புரட்சிக்கு முன் எழுதப்பட்டதாகும். அந்நாவலுக்கு ரஷியப் புரட்சியைச் சரியான திசையில் இட்டுச் சென்றதில் முக்கிய பங்குண்டு. இந்நிலையில் மார்க்ஸிம் கோர்க்கியின் அனுபவங்களை உள்வாங்கி அதன் வழியில் பட்டைதீட்டப்பட்ட அறுவடையாகவும், சில சமயங்களில் அதன் சிகரமாகவும் இந்நாவல் விளங்குகின்றது.

கதை இப்படித்தான் தொடங்குகின்றது.....!

பழைய சீன நிலப்பிரபுத்துவ வாழ்க்கையினால் சீரழிக்கப்பட்ட குடியானவப் பெண் பெற்றிருந்த மகள் தான் கதையின் கதாநாயகி லின் டாவோசிங். பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் நிர்க்கதியான டாவோசிங் தன்னந்தனியாக தனது ஊரை விட்டு வெளியேறி வேறொரு கிராமத்திற்கு வந்திறங்கும் காட்சியிலிருந்து தொடங்குகின்றது நாவல்.

தேடிப்போன மாமாவும் அந்தக் கடலோரக் கிராமத்தில் இல்லாமல் இருக்க, ஆதரவின்றி குழப்பத்தில் மூழ்கும் டாவோசிங் தன்னை மறந்து கடலின் அழகினை இரசித்துக் களிப்புறுவதும், பின் நிராதரவாக நிற்கும் அவளை மேலும் துன்ப துயரங்கள் துரத்த மிகவும் தளர்ந்து தற்கொலைக்கு முயற்சிக்கின்றமையும் சித்திரிக்கப்படுகின்றது.

இந்நிலையில் டாவோசிங் மீது காதல் கொண்டு அவளை அறியாமல் பின்தொடரும் யுங் சே என்ற பல்கலைக்கழக மாணவனால் அவள் காப்பாற்றப்படுகின்றாள். பின்னர் இருவரும் காதலர்களாகி கணவன் மனைவியாக வாழ்கின்றனர். பின்னாட்களில் (1930களில்) சீனாவில் மகத்தான போராட்டமானது தேசத்தின் தலைவிதியை இளைய தலைமுறையினரின் தலைவிதியுடன் ஒன்றாகச் சேர்த்துப் போராட

வேண்டிய காலக்கட்டத்தில் லூசியா - சுவான் என்ற பல்கலைக்கழக மாணவர் மூலமாக அரசியல் அறிவினையும் அமைப்பாக்க உணர்வினையும் பெறுகின்றாள் டாவோசிங்.

1930களில் ஜப்பானிய ஏகாதிபத்தியமானது சீனாவின் மீதான தனது ஆக்கிரமிப்பை கட்டவிழ்த்திருந்தது. இப்போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உள்ளூர் பிற்போக்குவாதிகளுக்கு எதிராகவும் தீவிரமாகப் போராடியது. இத்தகைய பின்னணியில் கதைமாந்தர்களையும் இயக்கங்களையும் பொருளாகக் கொண்டு எழுதப்பட்டதே இந்நாவல்.

கதையில் வரும் பாத்திரங்கள் யாவும் தன்னிகரற்ற தலைவர்களாகவோ அல்லது பிறவி நாயகர்களாகவோ சித்திரிக்கப்படவில்லை. மாறாக அன்றைய வாழ்க்கைப் போராட்டத்தின் ஊடாக - புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் வெளிப்பட்ட சாதாரண மனிதர்களே படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளனர். சிறு முதலாளிகள், சிறு உடைமையாளர்கள், அறிவு ஜீவிகள், கூலி விவசாயிகள், பாட்டாளிகள் எனப் பலதரப்பட்டோர் இந்நாவலில் இடம்பெறுகின்றனர். தமது வர்க்க நிலைப்பாடுகளுக்கேற்ப தமது சிந்தனை முறைகளை வெளிப்படுத்துகின்றனர்.

இதுவரை காலம் தமது ஒவ்வொரு தலைமுறைக்காகவும் சேகரித்து வைத்த நாகரிகங்கள் அனைத்தையுமே இந்நாட்டின் மானுடம் இழந்து அம்மணமாகி இருக்கும் ஓர் காலகட்ட ஆர்ப்பரிப்பில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் தமது தேசத்தின் தலைவிதியை மாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கால கட்டத்தில், சமகாலப் போராட்டத்திலிருந்து விலகி நூலகசாலைக்குள்ளும் பரிசோதனை அறைக்குள்ளும் இருந்து கொண்டு புரட்சி குறித்த அவதூறுகளைப் பேசும் சிறு முதலாளித்துவப் பண்பு சீனாவிற்கு மட்டும் உரித்தானதல்ல. மக்கள் சார்பான தத்துவங்களையும் இலக்கணங்களையும் இவர்கள் தமது சுயநலத்தின் பேரில் தமக்கேற்றவகையில் மாற்றியமைக்க முனைகின்றார்கள். "ஒரே மூச்சில் புரட்சி அல்லது வீழ்ச்சி" எனக் கூப்பாடு எழுப்பும் இக் கனவான்களைத் தான் லெனின் புரட்சிகர வாய்ச்சொல் வீரர்கள் என விமர்சிக்கின்றார். இத்தகைய சந்தர்ப்பவாதிகளால் புரட்சி எவ்வாறு காட்டிக் கொடுக்கப்படுகின்றது என்பதற்கு நாவலில் வரும் பாத்திரங்களான சூ நிங், தய் யூ ஆகியோர் சிறந்த உதாரணங்களாகும்.

யாவற்றுக்கும் மேலாகப் புரட்சிகர காலத்தில் காதல் கூட எவ்வாறு ஓர் சமுதாயம் சார்ந்ததாக வெளிப்படுகின்றது என்பதற்குப் பின்வரும் இரு காதல் கடிதங்கள் தக்க எடுத்துக்காட்டுகளாகும்.

யூ யூங்சே தனது மனைவியான டாவோ சிங் புரட்சிகர இயக்கத்தில் பங்கெடுப்பது குறித்து ஆத்திரமுற்று லூ சியா சுவான் என்ற கம்யூனிஸ்டுக்கு எழுதுகின்ற கடிதத்தின் சில வரிகள் இவ்வாறு அமைந்திருக்கின்றன:

"சில கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ததன் மூலம் என் மனைவியின் மனதை நீ ரொம்பவும் கெடுத்து விட்டிருப்பதை நான் காண்கின்றேன். அவள் உனது ஆணைப்படியே செயல்படுகிறாள். எப்போது பார்த்தாலும் "புரட்சி" "போராட்டம்" என்று தான் பேசிக் கொண்டிருக்கிறாள். மிக மோசமான முறையில் எங்களது குடும்ப மகிழ்ச்சி மறைந்து விட்டது. நீ உன் விருப்பம் போல் நடந்து கொள்ளலாம் என்றாலும் எனது துன்பத்தில் நீ இன்பம் காண்பதும் எனது அவலத்தில் நீ உனது வாய்ப்பை வளர்த்துக் கொள்வதும் எவ்வளவு வருந்தத்தக்கது. ஒவ்வொருவருக்கும் ஒரு நீதிநெறி இருக்க வேண்டும்...".

யூ யுங்சேயை, பிரிந்து ஆற்றல் மிக்கத் தோழராகக் கட்சிப் பணிகளை முன்னேடுக்கும் டாவோ சிங்கின் தன்னலமற்ற போக்கு, ஆளுமை, நேர்மை என்பன அவள் மீதான மெல்லிய காதலை லூ சியா - சுவானுக்கு தோற்றுவித்திருந்தது. சிறைப்பட்டு மரணத்தின் வாயிலில் நின்று கொண்டிருக்கும் போது அவன் தன் காதலைக் கடிதம் மூலம் இவ்வாறு வெளிப்படுத்துகின்றான்:

"கடந்த ஆண்டுகளில் கொடுஞ்சிறையில் இருந்த போது உலகின் மிக முன்னேறிய வர்க்கத்தின் போராளியாக நீ மாறிவிடுவாய் என்று நான் முன்னோக்கிப் பார்த்தேன். புரட்சியை முன்னெடுத்துச் செல்பவர்களில் ஒருவராகவும் இருப்பாய் தோழரே. வெற்றியின் நேரத்தை விரிவுபடுத்துவதற்காக ஒவ்வொரு நாளும் கம்யூனிஸ்ட்டுகள் இரத்தம் சிந்துகின்றார்கள், உயிர்த்தியாகம் செய்கிறார்கள்... அன்புத் தோழரே, அன்பு டாவோசிங் எனது முறை விரைவிலே வரக்கூடும்"

இரு வேறுபட்ட நாகரிகங்களின் வீச்சை நாம் இங்கு தரிசிக்கின்றோம். முன்னைய கடிதம் தனது காதல், மகிழ்ச்சி, இன்பம் குறித்துப் புலம்புகின்றது. பின்னையது இப்போராட்டத்தில் தான்

கொல்லப்பட்டாலும் தன் காதலி அதனை முன்னெடுத்துச் செல்வாள் என்ற நம்பிக்கையையும், கூடவே புரட்சிக்குரிய கம்பீரத்தையும் நமக்கு வழங்குகின்றது.

இந்த நவீனம் பழைமைச் சமூகத்தை எதிர்த்துப் போரிட்ட ஒரு இளம் பெண் அறிவு ஜீவியின் கதையாகும். "தாய்" நாவலில் ஒரு சாதாரண தாய் எவ்வாறு புரட்சிகர ஆளுமைக்குள் கொண்டு வரப்பட்டாளோ, அவ்வாறே இந்நூலில் ஒரு சாதாரண பெண் புரட்சிகர ஆளுமைக்குள் கொண்டு வரப்பட்டு, மிகத் தீவிரமான கம்யூனிஸ்டாக மாறி சீன தேசத்தின் விடுதலைக்காகப் போராடுகிறாள். சீனாவின் பண்ணையடிமைத்தனத்திற்குப் பலியான தனது தாய் லிண்டோவைப் போன்று அந்த அடிமை வாழ்க்கை முறைக்குள் மட்டும் கட்டுண்டுக் கிடக்காது, கதாநாயகி டாவோ சிங் தனது முதல் காதலன் சந்தர்ப்பவாதி என்று தெரிந்ததும் அவனைத் துணிவாக விட்டு விலகிச் செல்கின்றாள். அந்தவகையில் ஒரு பெண்ணின் ஆளுமையை அழகுறச் சித்திரித்துக் காட்டப்படுவதில் இந்நாவல் வெற்றியடைகின்றது.

இனிவரும் காலங்களில் எமது தலைமுறையினருக்கு வெறுமனே சகித்துக் கொண்டு போகும் பண்பைக் கற்றுக் கொடுக்காமல், அவற்றினை எதிர்த்துப் போராடும் பண்பைக் கற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. நிமிர்ந்து நிற்கவும் வாழ்க்கைக்காகப் போராடவும் முற்படுகின்ற போது இந்நாவல் அவர்களின் கையில் வலிமை மிக்க ஆயுதமாகத் திகழும் என நம்பலாம்.

இறுதியாக மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறுவதாயின் நாவலின் உள்ளடக்கம், உருவம் சிதையாத வகையில் - மிக எளிமையான எழுத்து நடையில் மயிலை பாலு தமிழில் மொழி பெயர்த்துள்ளார். நெருடலற்ற அவரது மொழிபெயர்ப்பு, சீன வாழ்வுடன் எம்மை இணைக்கின்றது. இத்தகைய நவீனத்தைத் தமிழ் வெளிக்கொணர்வதன் மூலமாக தமிழ் இலக்கியத்திற்குக் காத்திரமானதொரு பங்களிப்பினை நல்கியிருக்கும் மயிலை பாலு அவர்களும், கனதிமிக்க இதனைப் பதிப்புச் செய்து வெளியிடும் அலைகள் பதிபகத்தினரும் மெய்யாகவே போற்றுதலுக்குரியோர் என்பதில் சந்தேகமில்லை.

அந்தவகையில் இந்நாவல் தன்னால் இயன்ற மட்டும் மக்களின் சுக துக்கங்களை இசைக்க முனைகின்றது. இந்நூலை வாங்குங்கள், படியுங்கள், ரசியுங்கள், விமர்சியுங்கள், பலருக்குச் சொல்லுங்கள் என்று வாசகர்களை உரிமையுடன் கேட்டுக்கொள்ளலாமா?
சூரியகாந்தி - 2010.

பின்னுரையாக ஒரு விமர்சனக் குறிப்பு

- கலாநிதி ந. இரவீந்திரன்

லெனின் மதிவானத்தின் இந்நூல் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. அவ்வவ்போது அவர் படித்துக் கொண்டிருந்த நூல்கள் குறித்து, அல்லது அவரைப் பாதித்த விடயம் தொடர்பாக எழுதப்பட்டன இவை.

பல்வேறு கதம்பங்களின் தொகுப்பாக அமைந்த போதிலும் நுனித்து நோக்கும் போது அவற்றுக்குள் இழையோடும் மையச்சரடு ஒரு தொடர் ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியுள்ளமை தெளிவு. வெவ்வேறு இதழ்களில் இவை எழுதப்பட்டிருப்பினும், பெரும்பாலானவை 'முச்சந்தி' இணைய இதழில் வெளிவந்ததன் குறிப்பாக மலையக சமூக உருவாக்கச் செல்நெறியோடு தொடர்பாடலை மேற்கொள்வதாக அமைந்தது 'முச்சந்தி'.

அந்தவகையில், தவிர்க்கவியலாதவகையில் லெனின் மதிவானத்தின் எந்தவொரு தேடலும் மலையக மக்களின் அசைவியக்கம் - விடுதலை என்பன சார்ந்ததாயே அமைவது இயல்பு. மலையகத்தைக் கடந்து கைலாசபதி - பாரதி - தகழி சிவசங்கரப்பிள்ளை - மார்க்சின் கோர்க்கி எனப் பார்வை விசாலமடைந்து செல்லும்போது கூட, அந்த ஆளுமைகள் எல்லாம் மலையக விடிவிற்கு இட்டு வரப்படும் எத்தனிப்பாக அமைவன. இது குறுந்தேசியவாதமாய் ஆகிவிடாமல் புரட்சிக்கர பாட்டாளி வர்க்க சர்வதேச உணர்வு சார்ந்ததாக அமைந்துள்ளமை கவனிப்புக்குரியது.

மலையகம் இன்று நாலாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது போலதான் ஆரம்ப முதலாக இருந்து வந்துள்ளதா? இல்லை, புரட்சிகர தேசிய உணர்வு முதல் நிலையில் இருந்து பின்தள்ளப்பட்ட ஒரு வரலாறு மலையகத்திற்கு உண்டு. அது போதியளவு கவனிக்கப்படுவதில்லை. அவ்வாறு வீறு கொண்ட எழுச்சிக்குரியதாக அமைந்த முப்பதுகளின் ஆளுமைகளான நடேசய்யர் - மீனாட்சியம்மாள் தம்பதியரில் முன்னையவர் பெற்ற முக்கியத்துவம் அளவுக்குப் பின்னையவர் கவனிப்பைப் பெறுவதில்லை. வெற்றிகரமான ஆணுக்குப் பின்னால் துணை நின்ற பெண்ணாகப் பார்க்கும் அவலம் காணப்படுகின்றது.

சில விடயங்களில் மீனாட்சியம்மாள் தனது துணைவரையும் விஞ்சிய சாதனைகளுக்குரியவர் என்பதை இந்நூல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

அந்தவகையில், மலையகம் குறித்த சில புதிய பரிமாணங்களை மீனாட்சியம்மாள் முதல் மார்க்சின் கேர்ர்க்கி வரையானோர் பற்றிய பார்வை விசாலிப்புகள் வாயிலாகக் கண்டறிய இந்நூல் வழிகோலும். ஒவ்வொரு கட்டுரையிலும் வெளிப்படையாகவே இத்தலைப்புக்குரிய விளக்கத்தைத் தேடி அல்லற்படத் தேவையில்லை. அவை ஒவ்வொன்றும், முன்னர் குறிப்பிட்டவாறு அவ்வவ்போதைய உந்துதலில் எழுதப்பட்டன. முழுமையாகப் படித்து உச்சரித்து மனதில் மீட்டுருவாக்கம் செய்யும் போது இந்த பொதுநிலை மேற் கிளம்பிவரக் காண இயலும்.

முப்பதுகளில்மலையகஎழுச்சிநிலையில்முதல்தரமாய்இருந்தது எனக் குறிப்பிட்டது தொடர்பில் சில வார்த்தைகளை முன்வைப்பது இங்கு அவசியம். அப்போது தொழிலாளர்களின் எழுச்சியிலும் தேசிய விழிப்புணர்விலும் சிங்கள மக்கள் மலையக மக்களைவிட முன்னிலையில் இல்லையா? இலங்கை தமிழ் தேசிய எழுச்சிக்குரிய வடக்கு - கிழக்கு தமிழர் நிலை மலையகத்துக்குப் பின்தங்கியதாக இருந்ததா? அவ்வாறு தான் என்பதை இதுவரை கவனியாது இருந்தோம் என்பது அதிர்ச்சிக்குரியதே அல்லாமல் பட்டவர்த்தனமான இந்த உண்மையில் ஆச்சிரியம் கொள்ள வேண்டியதில்லை.

சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையில் வடக்கு - கிழக்கு சார்ந்த இலங்கை தமிழ் தேசியம் ஏகாதிபத்தியத்திற்குக் காட்டிக் கொடுக்கும் மனப்பாங்கோடு எழுச்சிகொள்ளத் தொடங்கியதிலிருந்து எண்பதுகளில் போர்க் குணத்துடன் முன்னிலை அடைந்து வளர்ந்தது உண்மை. துப்பாக்கி ஏந்தாத பிரபாகரன் - உமா மகேஸ்வரன் - ஸ்ரீ சபரத்தினங்களான ஜிஜி - செல்வா - அமீர் ஆகியோரின் அடிச்சுவட்டில் துப்பாக்கி ஏந்திய ஜிஜி - அமீர் படிமமான பிரபாகரன் இறுதியில் அவலமான துன்பியல் முடிவுக்கு தமிழ்த் தேசியத்தை இட்டுச் சென்றமை முதல் கோணல் முற்றும் கோணல் வகையறாவுக்குரியது. தனிநபர் தவறுகளுக்கும் அப்பால் அதன் ஏகாதிபத்திய ஐந்தாம் படைக் காட்டிக் கொடுப்புக் குணாம்சத்துடன் தொடர்புடையது அது. இன்றுவரை அந்த சுரத்தேயில்லாமல் பிற்போக்கு நிலைபட்டதாகவே இலங்கைத் தமிழ்த் தேசியம் !

அதற்கு விட்டுக்கொடுப்பு அற்ற எதிர்பார்ப்பைக் காட்டித் தமிழ் இடதுசாரிகள் போராடிய வேளையில் ஒடுக்கப்பட்ட

மக்களின் சாதி தகர்ப்புகளுக்கான கோரிக்கைகளை உள்ளடக்கியதான பண்ணையடிமைத் தகர்ப்புத் தேசியக் கடமையை நிறைவு செய்யும் வரலாற்று பணி கையேற்கப்பட்டது. அதே வேளை தேசிய இனங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவும் போராடி இருக்க வேண்டும் தான் அவ்வாறு போராடவில்லை என்பதாற்றான் தமிழ் தேசியம் பிற்போக்கு நிலையில் வளர்ந்தது என்பதற்கில்லை. ஒடுக்கபட்ட மக்களின் தேசியப் போராட்டத்திற்கு எதிராகத் தமிழ்த் தேசியம் வளர்ந்ததால் அதற்கு எதிரான, தவிர்க்கவியலாத நிலைபாடு எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமை காரணமாகவே சுய நிர்ணய உரிமை குறித்த அவசியமான போராட்டங்களைக் கைவிட்டனர் தமிழ் இடதுசாரிகள்.

இவ்வாறு தமிழ் இனவாதத்திற்கு எதிரான கடுமையான போராட்டத்தைத் தமிழ் இடதுசாரிகள் முன்னெடுத்தபோது சிங்கள இடதுசாரிகள் தமிழ்த் தேசியத்தின் ஏகாதிபத்திய சார்பைத் தாமும் எதிர்பார்ப்பவர்களாய் இருந்தனரேயல்லாமல், வளர்ந்து வந்த சிங்களப் பேரினவாத்திக்கு எதிராக உருப்படியான எந்தவொரு விமர்சனத்தைக் கூட முன்வைக்கத் தவறினர் பின்னர் சிங்கள பேரினவாத்திற்கு எதிராக சரியான வழிமுறையில் போராட எவர் இருப்பார்? இந்தத் தவறு கண்டுகொள்ளப்படாத அளவில் சிங்களத் தொழிலாளர் வர்க்கமும் முற்போக்கு ஜனநாயக தேசிய சக்திகளும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஆரோக்கியமான பல போராட்டங்களில் முன்னேற்றங்களை எட்டிவந்தனர். அவற்றுக்கு எதிராக ஏகாதிபத்தியத்தை ஆதரித்த தமிழ்த் தேசியத்தைக் கண்டறிந்தவாறு தமிழ் இடதுசாரிகள் இலங்கை தேசிய எழுச்சிக்காக போராடுவது தவிர்க்கவியலாததாய் இருந்தது. இவ்வகையில் சிங்கள இடதுசாரிகளிடம் காணப்பட்ட இரு அம்சங்களையும் (ஏகாதிபத்திய எதிர்ப்பிலான வரலாற்றுப் பங்களிப்பும் சிங்களப் பேரினவாத்திற்கு எதிராகப் போராட முன்வரத் தவறும்) கவனம் கொள்ளப்படுவது அவசியம். ஒன்றை வலியுறுத்தும்போது மற்றதைக் காணத் தவறிவிடக் கூடாது.

இவ்வாறு சிங்கள முற்போக்குச் சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்பில் வலுப்பெறும்போதே சிறு தேசிய இனங்களுக்கு எதிராகச் சிங்களப் பேரினவாத சாயல் கொள்வது எனும் இரண்டக நிலை அதன் தொடக்கம் முதலாகவே இருந்து வந்த வரலாற்று நிர்ப்பந்தமாய் இருந்து விட்டது. சிங்கள ஆதிக்க - பிரபுத்துவ சக்தி ஏகாதிபத்திய நலனோடு கூட்டுச் சேர்ந்திருந்தபோது, அதற்கு எதிராகப் போராட வேண்டியிருந்த சிங்களத் தேசிய முதலாளி வர்க்கம் 1915 இல் முஸ்லிம் மக்களுக்கு எதிரான

இனக்கலவரத்தை ஏற்படுத்தியிருந்தது புதிதாக வரலாற்று அரங்கில் தோற்றம் பெற்ற சிங்கள வணிகர்கள் தமக்கான போட்டியாளர்களாக வரலாற்றுப் பராமரியமிக்க முஸ்லீம் வணிகர்களை முகங்கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறே முப்பதுகளில் சிங்களத் தொழிலாளர்கள் துறைமுகத் தொழிலாளர்களாய் நிறைந்திருந்த மலையாளிகளுக்கு எதிராக இனவாத உணர்வூட்டப்படும் நிலை இருந்தது. சுதந்திரம் சாத்தியமான கையோடு மலையகத் தொழிலாளர்களது குடியுரிமை பறிக்கப்பட்டபோது சிங்கள இடதுசாரிகள் உருப்படியாக எந்தப் போராட்டத்தையும் பேரினவாத அரசுக்கு எதிராக மேற்கொள்ள வில்லை.

ஆக, சிங்கள இடதுசாரிகள் பேரினவாதம் மேலாதிக்கம் பெறுவதற்கு ஏதாவதொருவகையில் துணைபோய் உள்ளனர். தமிழ்த் தேசியம் ஏகாதிபத்தியம் சார்பில் முடமாகியுள்ளது. தமிழ் இடதுசாரிகள் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தைக் கவனம் கொள்ள தவறியுள்ளனர். முஸ்லிம் தேசியம் சிங்களப் பேரினவாதத்துடன் கூடிக் குலவும் தவறுக்குட்பட்டது. இவற்றுக்கப்பால் இச்சக்திகள் தமக்கான வரலாற்றுப் பணிகள் பலவற்றை நிறைவு செய்யும் பங்களிப்புகளை நல்கியபோதிலும், இந்த விமர்சனத்திற்குரிய பக்கங்களும் கவனிப்புக்குரியன.

இவற்றோடு ஒப்பிடுகையில், முப்பதுகளில் எழுச்சிக் கொண்ட மலையக தேசியத்திற்கான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த மீனாட்சியம்மாள் - நடேசய்யர் பாரிய தவறேதும் சொல்லவியலாது அளவிற்கு அற்புதமான வரலாற்றுத் தொடக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். தமிழகத்தில் பாரதி தொடக்கி வைத்த இந்திய தேசியம் - தமிழின தேசியம் - சாதிய தகர்ப்பு தேசியம் - பெண் விடுதலை - பூரண பொதுவுடமை என்பன சார்ந்த கருத்தியலை ஏற்று இயங்கியவர்களாக அத்தம்பதியர் திகழ்ந்தனர். இலங்கை பூராவும் அரசதிகாரங்களை கையகப்படுத்திருந்ததால் சிங்களப் பேரினவாதம் பற்றிய புரிதலின்றியிருந்த முகில் நிலை, இலங்கை தமிழ் தேசியம் உருப்படியான அரசியல் அற்றதாக இருந்தது. ஏகாதிபத்திய எதிரப்புடன் வளர்ந்து வரும் சிங்களப் பேரினவாத அச்சுறுத்தலைம் முதன்முதலில் அடையாளம் கண்டு எதிர்ப்புக் குரலை இந்தத் தம்பதியர் எழுப்பியுள்ளனர். இது எவ்வகையிலும் இனவாதமாக மாறிவிடாத வகையில் முற்போக்குக் குணாம்சத்துடன் கையாளப்பட்டமை விதந்துரைக்கப்படத்தக்க அம்சம்.

இவர்களது இந்த வரலாற்றுப் பாத்திரத்தை சிங்கள முற்போக்கு சக்திகள் அன்று ஆதரித்து அரவணைத்து இருந்தனர். பின்னாலேயே, மலையகமே மறந்துவிட்ட இவர்களை மறுகண்டுபிடிப்புச் செய்வதற்கு காரணமாக இருந்தவர் பேராசிரியர் குமாரி ஜெயவர்தனா என்பதனை நன்றியறிதலோடு சாரல் நாடன் குறிப்பிட்டுள்ளார். (இவ்வகையில் "தேச பக்தன் கே. நடேசய்யரை" வரலாற்று அரங்குக்கு மீட்டெடுத்து தந்த சாரல்நாடனும், அதற்குக் காரணமாக அமைந்த குமாரி ஜெயவர்தனாவும் நன்றிக்குரியவர்கள்). ஆயினும் மலையக மக்களுக்கு நியாயம் வழங்கவியலாதவகையில் சிங்கள முற்போக்குச் சக்திகள் முடக்கப்படக் காரணமான வரலாற்று நெருக்கடி நடேசய்யர் தம்பதியினரை காணாமல் ஆக்கிவிட்டது. தனியே பெருந்தோட்டத்துறை தொழிலாளர் என்னும் பண்பு இருந்திருப்பின் இந்த தவறு ஏற்பட்டிருக்காது. எப்போது தமது பண்பாட்டை அழிக்கும் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்னும் அச்சத்தில் அல்லாடும் சிங்கள மனம் மலையக மக்களையும் 'இந்திய' அடையாளத்திலேயே அணுகியது. அதற்கு உரமேற்றுவதற்காக 'இலங்கை - இந்திய காங்கிரசின்' உதயம் அமைந்து இலங்கைத் தேசியத்தின் பகுதியாக மலையகத்தை அடையாளப்படுத்த முனைந்த இந்த தம்பதியர் முயற்சிக்கு இடையூறு இழைத்தது. நேருவின் இந்தப் பிரசன்னத்திற்கு எதிராக 'நாம் இலங்கையர்' எனும் உணர்வில் மீனாட்சியம்மாள் - நடேசய்யர் தம்பதியர் உறுதியாக இருந்தனர்.


அதனை இலங்கை - இந்திய பிற்போக்கு ஆதிக்கக் கும்பல்கள் இல்லாமல் ஆக்கி - நாடற்றவர்களாக்கி - நாடு கடத்திச் சிறுபான்மைத் தேசிய இனத்தில் கடை நிலைக்கு ஆளாக்கி அரை நூற்றாண்டு கடந்தமையினாலேயே எழுபது ஆண்டுகளின் முந்திய முதல்நிலை ஆளுமை மறக்கடிக்கப்பட்டுள்ளது. அது குறித்த விரிவான ஆய்வுகள் வெளிவர வேண்டும். பின்னர் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான அரண் என்ற போர்வையில் மலையக மக்கள் மத்தியில் பிற்போக்கான தொழிற்சங்கத் தலைமைகள் முன்னிலைபெற இயலுமாயிற்று. அதேவேளை போர்க்குணமிக்க இடதுசாரி எழுச்சியும் ஏறத்தாழ சமநிலையில் மலையக வரலாறாக தொடர்ந்துள்ளது.

இவற்றுக்கு அப்பால் ஐம்பதாம் ஆண்டுகளிலிருந்து மூன்று தசாப்தங்களாக பண்பாட்டுத்தளத்தில் இயங்கிய இளஞ்செழியன் தலைமையிலான இ.தி.மு.கவின் பங்களிப்பும் கவனிப்புக்குரியது. சாதியத்தகர்ப்பு - தொழிலாளர் தலைமையிலான பொதுவுடமை எழுச்சி என்பவற்றோடு மலையகத் தமிழினத் தேசிய சுயநிர்ணய உரிமை வெற்றி

கொள்ளல் என்னும் பன்முகப் பங்களிப்புகள் நிறைந்த அந்தப் பணி நுண்ணாய்வுக்குரியது. மீனாட்சியம்மாள், இளஞ்செழியன் ஆகியோரது பங்களிப்புகள் தொடர்பில் புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தும் லெனின் மாதிவானம் இத்தகைய ஆய்வுக் களங்களையும் விரிவுபடுத்தி வெளிக்கொணர்வாரென நம்புவோம். மலையகத்தில் புதிதாக எழுச்சி கொள்ளும் மத்தியதர வர்க்கமும் கிராமச் சமூக உருவாக்க அசைவியக்கமும் அத்தியாவசியமான ஒரு வரலாற்றுக் கட்டம். அதேவேளை எழுபதுகளின் இறுதிவரை மலையக ஆன்மாவாக தொழிலாளி வர்க்க உணர்வு நிலை இயக்கிய ஆரோக்கியமான கண்ணோட்டம் இன்றைய புதிய மத்தியதர வர்க்க எழுத்தாளர்களால் வாலாயப்படுத்த இயலாத துயரம் ஏற்பட்டு வளர்வதும் அவதானிப்புக்குரியதாகிறது. இது குறித்த எச்சரிக்கையை இந்நூல் வலுவாகப் பதிவுசெய்துள்ளது.

இனவாதமும் பிராந்திய - குறுகிய நோக்கும் அற்றதாக மீனாட்சியம்மாள் - நடேசய்யர் - இளஞ்செழியன் ஆகியோர் வெளிப்படுத்திய தொழிலாளர் வர்க்க பலம் சார்ந்த விரிந்து பரந்த ஆளுமை மிக்கதான அந்த வீறுமிக்க காலகட்டக் கண்ணோட்டத்தை மலையகம் மீட்டெடுக்குமா? மத்தியதர அற்பத்தனங்கள் ஒரு பக்கத்தில் ஓடித் தொலையட்டும். தொழிலாளிவர்க்க மக்கள் திரளோடு உறவாடியவாறு எமது உணர்வோட்டத்தைப் புடமிட்டு உருக்கு உறுதிமிக்கதாக உரமூட்டி, எமக்கான மார்க்சிய - லெனினியப் பிரயோகத்தை வளர்த்தெடுக்கும் போது மீண்டும் மலையகம் ஆளுமை மிக்கப் பங்களிப்பை நல்க இயலும்! வரலாறு ஒரு போதும் தேங்கிப் போவதில்லை. மலையக மக்கள் வரலாறு படைப்பதற்கான அடுத்த கட்ட ஆளுமைகளையும் வெளிக்கொணர்வர்!

***



இலங்கை, மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லெனின் மதிவானம் ஈழத்து இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க விமர்சகராவார். இவரது எழுத்துக்கள் மார்க்ஸிய பார்வையில் வரலாற்றையும் பண்பாட்டையும் கண்டு கொள்ளத் தூண்டுபவை. இதுவரை வெளிவந்த இவரது ஆய்வு நூல்கள்:

1. மலேசியத் தமிழரின் சமகால வாழ்வியல் பரிமாணங்கள் (2008)
2. மலையகம் தேசியம் சர்வதேசம் (2010)
3. உலகமயம் பண்பாடு எதிர்ப்பு அரசியல் (2010)
4. பேராசிரியர் கைலாசபதி: சமூகமாற்றத்திற்கான இயங்காற்றல் (2011)

பாக்யா பதிப்பகம்

ISBN 978-955-1805-03-6

9 789551 805036